
அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM
Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com



# தாய் வீடு

THAIVEEDU ஒக்ரோபர் 2008 HOME & LIVING



வீடு வாங்க, விற்க மற்றும் income tax, mortgage சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
HOMELIFE HIGHER STANDARDS
T: 905.201.9977
C: 416.568.4301
SELVA VETTYVEL
Broker of Record
HomeLife Future Realty Inc. Brokerage
205 Eastvale Drive, Markham, ON L3S 4N8



# ஒக்டோபர் 14இல்
# கனடாவின் 40 ஆவது பொதுத் தேர்தல்

கனடாவின் 40ஆவது பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. கனடாவில் 19 பதிவு செய்யப்பட்ட கட்சிகள் உள்ளன. இருப்பினும் என்.டி.பி, லிபரல், கொன்சர்வேட்டிவ், கியூபெக் பிரிவுக் கட்சி மற்றும் கனடிய பசுமைக் கட்சி ஆகிய 5 முதன்மையான கட்சிகளிடையேதான் உண்மையான போட்டி நிலவுகின்றது.

கியூபெக் மகாணத்தில் மட்டுமே கியூபெக் பிரிவுக் கட்சி போட்டியிடுகிறது. கியூபெக்கில் அதிக தொகுதிகள் இருப்பதால் நாடு முழுமைக்குமாக தேர்தல் முடிவுகளைப் பாதிக்கும் வகையில் அந்தக் கட்சியின் தாக்கம் இருக்கிறது.

நாடளாவிய போட்டியாக இருந்தாலும் பிரிட்டிஸ் கொலம்பியா-வில் உள்ள 10 தொகுதிகளிலும் ஒன்ராரியோவில் உள்ள 20 தொகுதிகளிலும் கியூபெக்கில் உள்ள 15 தொகுதிகளிலும் தான் மிக நெருக்கடியான போட்டி நிலவுகிறது. கட்சித் தலைவர்களும் இந்தத் தொகுதிகளையே சுற்றிச் சுற்றி வருகிறார்கள். கடந்த தேர்தலில் இழுபறியில் இருந்த தொகுதி-கள் இவை.

இந்த தொகுதிகளில் ஏற்படும் சிறு வாக்கு மாறுதலும் ஆட்சி யைப் பிடிப்பதில் பலத்த பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் வழக்கம்போலவே ஒன்ராரியோ மாகாணம் நாடு முழுமைக்கும் கவனம் பெறுகிறது.

கடந்த தேர்தலில் கொன்சவேட்டிக் கட்சிக்கு 125 இடங்களும்


3ம் பக்கம் பார்க்க...




தமிழ்ர்களால் Markham & Finch பகுதியில் புதிதாக கட்டப்படவிருக்கும் MN Centre கட்டடத்தின் மாதிரித் தோற்றம் இது.


RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8


THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX
Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI MORTGAGE CANADA


Insuring your life. Ensuring your trust.

Siva Kandiah
Managing General Agent, RBC
416•992•1259
ROYAL BROKERS
Corporation
80 Nashdene Ave, Unit B26 Toronto ON M1V 5E4
Tel: 416•298•4722 Fax: 416•298•4664


PMCI MORTGAGE CANADA
Buying - Selling - Investing
PROPERTY MAX
Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300


இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Markham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

வீடு வாங்க, விற்க, வீட்டுக்கான பெறுமதியை(Appraisal) சட்டபூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள தாமதிக்காது உடனே அழையுங்கள்.
www.chainc.ca
CHAI CANADIAN HOME APPRAISALS INC.
E-mail: chai@chainc.ca
Bus: 905-201-0929
Fax: 905-201-8482
Century 21
Affiliate Realty Inc.
Bus: 416-290-1200
S.K. Bales, CRA, CAR, MVA, FRI, CRES.
416.801.3219 (Cell)



R&S AUTO SALES
HONDA - TOYOTA - GM MINI VANS ON THE SPOT FINANCING
சிறந்த சேவைக்கான பல விருதுகளைப் பெற்ற வாகன விற்பனை முகவர்
Tel: 416.412.3838
Fax: 416.412.1174
Radha


Tel: 416-836-1946, 416-423-5057
40 Crockford Blvd., Scarborough, ON, M1R 3C3
24 hrs Service
SAM
Mobile Mechanic
K.S.TRUCK & CAR TRAILER REPAIR
All Automotive Repairs
Specializing in Mechanical, Body, Electrical Repairs & Wheel Spring


416.200.5470
ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
www.santha.ca
416-200-5470


Kantha Property Management Group Inc.
Personal and Business Loans
Line of Credits
Business Setup Consultancy
1st and 2nd Mortgages
Residential and Commercial Leasing
Investment Properties
Property Management Services
Bad Credit Solutions
Bankruptcy
Consumer Proposals
KPM Group Inc.
T: 416-214-6161
F: 416-465-3535
3015 Kennedy Road, Suite 205, Toronto, ON M1V 1E7
www.KPMInvestment.com, kantha@KPMInvestment.com


வீடு வியாபார ஸ்தாபனம்
வாங்க விற்க
Your #1 Choice
Logan Manikavasagar
Broker
Direct : 416.708.9903
Century 21
Percy Fulton Ltd. Brokerage*
Email : sales@loganhotproperties.com
Kalai Logan
Sales Representative
Direct : 416.697.9903
Buy or Sell Your Properties? Real Estate is My Job...Worry Free for you...


HIGHPOINT LASER
Brand Name Toners Cartridges for Copy Machines
Laser Printers Fax Machines.
brother EPSON DELL hp
LANIER LEXMARK Panasonic IBM
TOSHIBA NEC océ SAMSUNG
PitneyBowes XEROX
Tektronix muratec KYOCERA
SHARP Canon
100 IRONSIDE CRESENT, UNIT #10, TORONTO, ONT M1X 1M9
Tel: 416-297-9994 • Toll Free: 1.877.281-9997 • Fax: 416-297-6113
www.HighPointLaser.ca • email: Sales@HighPointLaser.ca
Lower Cost - 100% Guaranteed - Free Delivery 416-708-9903

## இறுதி யுத்தம்

இறுதி யுத்தம் என்றதின் பெயரால் இலங்கை இனவாத அரசால் இலங்கைத் தமிழர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் தமது வீடுகளையும், ஊரையும் விட்டு அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களுக்கு போதுமான உணவு, நீர், கழிப்பிட வசதிகள் எதுவுமே இல்லை என்று இலங்கையின் அரசாங்க அதிபர்களே குறிப்பிட்டுள்ளார்கள். இலங்கையின் வட பகுதியில் மோதலில் சிக்கியுள்ள மக்களுக்கு உணவு விநியோகத்தை மேற்கொள்வதை குழப்பும் நடவடிக்கை களை சகித்துக்கொள்ளப் போவதில்லையென ஐக்கிய நாடுகளின் உலக உணவுத்திட்டம் கடுமையான தொனியில் எச்சரித்துள்ளது. உலக உணவுத் திட்டத்தின் ஆசியப் பிராந்தியத்திற்கான இயக்குநர் டொனி பன்பரி இதனைத் தெரிவித்துள்ளார்.

இது மட்டுமல்ல, பயங்கரவாதிகளுக்கு எதிரான போர் என்ற குரலோடு, தினமும் விமானத் தாக்குதல்களும், எறிகணைத்தாக்குதல்களும் இலங்கையில் நிகழ்கின்றன. இதனால் பெண்கள், குழந்தைகள் என்றும் அப்பாவித் தமிழர்களின் உயிர்கள் இலங்கை அரசினால் காவு கொள்ளப்படுகின்றது.

இந்த யுத்தத்தை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சார்பாக முன்னேடுக்கும் இலங்கையின் உயர் பாதுகாப்புப் பொறுப்பில் அமர்த்தப்பட்டிருக்கும் இலங்கையின் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா "இலங்கை சிங்களவருக்கே சொந்தமானது, சிறுபான்மை மக்கள் தேவையற்ற கோரிக்கைகளை முன்வைக்கக் கூடாது" என்று இந்த இன ஒழிப்பு நடவடிக்கையின் இடையில் கூறியுள்ளார். இராணுவத் தளபதியின் கருத்துக்கு ஆதரவாக "இலங்கை ஒரு பௌத்த இராஜ்சியம்" என்று இலங்கையின் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா அறிக்கை விடுத்துள்ளார். இவர்களின் 'பொறுப்பு மிக்க' அறிக்கையை அடுத்து பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் அமைச்சர் கேஹலிய கேஹலிய ரம்புக்வெல "பெரும்பான்மை சிறுபான்மை என்ற பகுதிகள் இலங்கையில் இல்லை. எவரும் தேவையற்ற கோரிக்கைகளை முன்வைக்கமுடியாது" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கருத்துக்கள் எல்லாமே இலங்கையில் சிறுபான்மை இனத்திற்கு நீதியான, நேர்மையான உரிமைகள் அரசினால் வழங்கமுடியாது என்பதை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் இன விகிதாசாரத்தை குறைப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டு நடவடிக்கை எடுத்து வருகின்றது. குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தின் புறநகர்ப் பிரதேசங்களில் உள்ள கிராமங்களில் நீண்டகாலமாக சிங்கள குடும்பங்கள் வாழ்ந்து வருவது போன்று வாக்காளர் புத்தகங்களில் பதிவுகள் இடம்பெறுகின்றன. அத்துடன் தமிழ் மக்களின் முன்னைய பதிவுகள் அழிக்கப்படுவதற்கு குடிசன மதிப்பீட்டு திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் சிலர் இரகசியமான முறையில் இந்த திட்டத்தில் ஈடுபட்டு வருவதாக திருகோணமலை தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு இலங்கை அரசின் மூத்த அமைச்சர்கள் துணையாக உள்ளனர். திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களின் அரச செயலகங்களில் பணிபுரியும் மூத்த தமிழ் அதிகாரிகள் சிலர் திட்டமிட்டமுறையில் இடமாற்றப்பட்டுள்ளனர்.

திருகோணமலை சேருவில கிராமத்தில் இருந்து வடமத்திய மாகாணத்தில் உள்ள பொலநறுவ வரை அமைக்கப்பட்டுள்ள புதிய வீதி ஓரமாக சிங்கள குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. கூடுதலாக மாவிலாறு பிரதேசத்தை அண்மித்த பகுதிகளிலேயே சிங்கள குடியேற்றங்கள் இடம்பெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் உட்புறமாக உள்ள சில தமிழ் கிராமங்களை மத்திய வடமத்திய மாகாண சபைகளுடன் இணைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் மற்றுமொரு தகவல் தெரிவிக்கின்றது.

இந்த நிலைமைகளின் மத்தியில் உலகம் எங்கும் வாழும் தமிழர்கள் இலங்கை அரசின் இனஒழிப்பு நடவடிக்கைக்கு எதிராக தம்மால் இயன்ற எதிர்ப்புக் குரலை எழுப்பி வரு கின்றனர். இது போதுமானதல்ல என்பது நமது தாழ்மையான அபிப்பிராயம். தமிழர்கள், தமிழர்களின் கோயில்களில், போராட்டங்களை நடாத்தி, அதை தமிழ் பத்திரிகையில், தமிழ் இணையத்தளங்களில் வெளியிடுவதன் மூலம் தமது உள்ள உணர்வுகளை வெளிக்காட்டுகின்றார்கள். இது ஒருபறம் நடக்க, இலங்கையில் நிகழும் இனப்படுகொலை பற்றிய விபரத்தை உலக நாடுகளில் இருக்கக் கூடிய எல்லா கட்சிகளுக்கும், எல்லா மக்களுக்கும், எல்லா அரசாங்கங்களுக்கும், எல்லா தொழிற்சங்கங்களுக்கும், எல்லா மனித உரிமை அமைப்புகளுக்கும், எல்லா விடுதலை அமைப்புகளுக்கும் எடுத்துச் சொல்லக்கூடியவாறு செயல் படவேண்டும், என்று வீடு பத்திரிகை கேட்டுக் கொள்கின்றது.

III

# ஒக்டோபர் 14ல் கனடா..

1ம் பக்கத் தொடர்ச்சி...

லிபரல் கட்சிக்கு 96 இடங்களும் என்.டி.பி கட்சிக்கு 30 இடங்களும் கியூபெக் பிரிவுக் கட்சிக்கு 49 இடங்களும் கிறீன் கட்சிக்கு ஒரு இடமும் கிடைத்திருந்தன. அனைத்துக் கட்சிகளும் அதிக இருக்கைகளைப் பெற்றுக்கொள்ள அதிக தொகுதிகள் உள்ள மாகாணங்களைக் குறிவைத்து காய் நகர்த்துகின்றன. தேர்தல் வாக்குறுதிகளும் அந்தப் பின்னணியிலேயே அமைந்திருக்கின்றன.

ஆண்டுமுழுதும் தற்போதுவரை வந்து கொண்டிருக்கும் புள்ளிவிவரங்கள் கொன்சர்வேட்டிவ் கட்சியையே முன்னணியில் ஆதரவுடன் இருப்பதாக்கக் காட்டி வருகின்றன. லிபரல் கட்சிக்கான வாக்கு வங்கி சரிந்திருக்கிறது. என்.டி.பி கட்சிக்கான ஆதரவு சிறிது உயர்ந்திருக்கிறது. பசுமைக் கட்சியினர் ஆதரவும் அதிகரித்துள்ளது. ஆனால் லிபரல் என்.டி.பி போன்ற கட்சிகளின் வாக்குகளே பசுமைக் கட்சியின் ஆதரவாக மாறுகிற நிலையும் காணக்கூடியதாக உள்ளது.

கியூபெக்கில் நடந்த ஓர் இடைத்தேர்தலில் என்.டி.பி வென்றது. அதே உற்சாகத்துடன் என.டி.பியினர் மேலும் சில இடங்களைக் குறிவைத்து தேர்தல் பரப்புரைக்கு அதிக செலவு செய்து வருகின்றனர். என்டி.பி கட்சியின் தலைவர் யக் லைற்றன் பற்றி பிற தலைவர்களுடன் ஒப்பீட்டளவில் பொதுவாக ஓர் நற்கருத்து நிலவுகிறதை யும் வாய்ப்பாகப் பயன்படுத்துகிறார்கள்.

கொம்பனிகள் பெரும் நிறுவனங்களின் நிதி வாய்ப்பை மேம்படுத்துவதன் மூலம் நாட்டை மேம்படுத்த கொன்சர்வேட்டிவ் கட்சி நினைக்கிறது. பசுமைக் கட்சியோ இவை அனைத்துமிருப்பினும் இயற்கையை உரியவகையில் கையாள்வதன்மூலம் மேம்பாடு வரும் என்கிறது. லிபரல் கட்சி பணியாளர் மற்றும் சிறு முதலாளிகள் ஆகியோரின் வாழ்வினை மேம்படுத்தும் திட்டங்களைக் கொண்டிருக்கிறது. உழைக்கும் மக்கள் வாழ்க்கையை மேம்படுத்துவதன் மூலம் நாட்டை மேம்படுத்தலாம் என்ற அடிப்படையில் என்.டி.பி கட்சி தேர்தல் வாக்குறுதிகளை வைக்கிறது.

வாக்குறுதிகள் எவையாகவும் இருப்பினும், கருத்துக் கணிப்புக்கள் எவையாகவும், இருப்பினும் தேர்தல் நாளன்று மக்கள் மனதில் எது வந்து இடம்பிடிக்கும் என்பது கணிக்கமுடியாதுதுதான். மேலும் நிலையான ஆதரவாளர்களைவிடவும் அங்குமிங்கும் அல்லாடும் வாக்காளர்களே பெரும்பாலும் வெற்றியை தீர்மானிக்கின்றனர்.

தேர்தல் நாளில் மக்களிடம் பெருத்த மாற்றங்கள் ஏற்பட்ட வரலாறுகளும் உலகம் முழுவதும் உண்டு. தோல்வியடைந்துவிட்டதாக தலையங்கங்கள் எழுதப்பட்டபின்னரும்கூட மக்கள் வாக்கினால் வெற்றியடைந்தவர்தான் அமெரிக்க அதிபராக வந்த ஹரி ரூமன். வாக்களிக்கும் மக்கள் எதுவும் செய்யலாம் என்பதே உண்மை.

குடியுரிமை பெற்ற எல்லா கனேடியர்களுக்கும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை உள்ளது. சிலரின் பெயர்கள் கனடாவின் தேர்தல் ஆணையத்தின் பெயர்ப் பட்டியலில் சேர்க்கப்படாமல் இருக்காலாம். வாக்களிப்பதற்கான அட்டை இதுவரை வராமல் இருந்தால் உடனடியாக 1-800-463-6868 இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு உங்கள் நிலைமை பற்றி தெரியப்படுத்துங்கள். வாக்களிப்பதனால் மட்டுமே பல தீங்கு களைத் தடுக்கமுடியும். வாக்களிப்பது கடைமையும் தேவையுமாகும்.

■ ■ ■


**Publisher & Editor : P.J. Dilipkumar**
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், கருணா, பொன்னையா விவேகானந்தன், ரதன், சுந்தர் சின்னத்தம்பி.

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள் - For More Info : Editor
P.O.Box #63581
Woodside Squarew
1571 Sandhurast Circ.
Toronto, ON. M1V 1V0

Montréal விநியோகம் : சுகுமாரன் சின்னையா
1-514-299-3186

Ottawa விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு
1-613 -276-7253

Tel : 416-646-3422, 416.400.6406
Fax : 416.849.0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com


பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.


#1 TEAM @ PROPERTY/MAX REALTY INC.



PROPERTY MAX
Realty Inc. Realtor
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

New Mortgage, Commercial Mortgage
New Immigrans, Ist, 2nd Mortgage
Re-Financing, New Home Buyers

Search More Properties @
www.realestatebrokerofrecord.info

WE BRING CANADA'S LEASING LENDER'S TO YOU
PMCI
PROPERTY MORTGAGE CANADA INC.

PLEASE MENTION PROPERTY/MAX WHEN ENQUIRING ABOURT PROPERTIES!

# வன்னிப் போர்

## வடக்கைப் பிரிக்குமா அல்லது வடக்கைக் கிழக்குடன் மீண்டும் இணைக்குமா?

- அ. கணபதிப்பிள்ளை -
kanapathipillai@thaiveedu.com

முன்னர் எப்பொழுதும் இல்லாதவாறு வன்னி இலங்கை இராணுவத்தால் முற்றுகையிடப் பட்டுப் போர் உக்கிரமடைந்து கொண்டிருக் கும் தருணத்தில் வன்னி மக்களின் இடப் பெயர்வுகளும் நிகழ்ந்தவண்ணம் இருக்கிறது. விடுதலைப் புலிகளின் வியூகங்களைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன்பாக அவர்கள் பல்வேறு முன்னகர்வுகளையும் தடுத்து நிறுத்த வேண்டியதொரு நிலைமையிலேயே தங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ளும் நிலை மைகள் நாளாந்தம் நிகழ்ந்தவண்ணமுள்ளது.

வன்னி இலங்கையிலிருந்தும் ஏனைய சர்வ-தேச அரசுகளிடமிருந்தும் தனிமைப்படுத்-தப்பட வேண்டும் என்று எண்ணிய இலங்கை அரசாங்கத்துக்கு ஊடகப் பிரச்சாரம் வெற்றியினை ஏற்படுத்திக் கொடுத்திருக்கி-றதா என்பதனையும் அத்தகைய பிரச்சாரங் கள் பல்வேறு வகையிலும் பாதிக்கப்படு-பவர்களிடையே எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தி வருகிறது என்பதிலுமே போரின் வெற்றி தங்கியிருக்கிறது.

வன்னிக் கள நிலைமைகளும் அங்குள்ள மக்களின் அன்றாட அவலங்களும் வெறும் செய்தியாக மட்டும் மக்களிடத்தில் சென்று கொண்டிருக்கிறது என்ற நிலைமை மாறி வரும் இவ்வேளையில் அதன் எதிர்ஒலிகள் தென்னிந்திய அரச, சமூக நிறுவனங்களி-டையே தாக்கத்தினை ஏற்படுத்தத் தொடங்கியருப்பதுவும் அத்தகைய தாக்கம் பரவலாக ஏற்பட்டிருப்பதுவும் வன்னிப் போருக்குப் பின்னால் ஒரு தீர்வுத்திட்டம் வரையப்பட வேண்டும் என்ற தேவையினை வலியுறுத்தும் ஒரு கட்டாயத்துக்கு இலங்கை அரசு உட்படும் சூழ்நிலை உருவாகிவரு-கிறது என்ற உண்மை வெளிப்படையாகிறது.

### வன்னியில் விடுதலைப் புலிகளின் நிலை என்ன?

வன்னியில் விடுதலைப் புலிகள் பலமிழந்து விட்டார்கள். அவர்களின் நடவடிக்கையான பின்வாங்குதல் என்பது என்றுமே தந்திரோபா-யமாகப் பார்க்க முடியாது என்று இலங்கை இராணுவத்தளபதி சரத் பொன்சேகா வன்னி யின் வெற்றி நிச்சயம் என்று கூறிக் கொள்ளுவதும் அதற்கு ஏற்பதாக அடுத்த தேர்தலை நடாத்த அரசாங்கம் ஆயத்தப்-படுத்துவதும் அரசாங்கத்துக்கு ஒரு உத்வேகம் கிட்டியது என்பதனை எடுத்துக் காட்டுகிறது.

மறுபுறமாக இந்தியப் புலனாய்வுத்துறை அதிகாரிகளின் ஆய்வின்படி புலிகள் பலத்-தினையோ மனவலிமையினையோ இழந்து விடவில்லை என்றும் வவுனியாவின் விமானக் கண்காணிப்பு உட்பட்ட இராணுவத் தளத்தின் தாக்குதலும் அதில் வெளிக் கொணரப்பட்ட இந்தியாவின் நேரடி இராணுவ உதவி என்ற உண்மையும் விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தையும் புலனாய்வு தொடர் பான பலத்தையும் தெளிவாகக் காட்டுவதா யும் புலிகளின் மனோபலம் அதிகரித்திருப்-பதாகவும் குறிப்பிடுகிறார்கள்.

சில மேலைத்தேய ஆய்வாளர்களும் இலங்கை ஊடகவியலாளர்களும் பலகாலப் பட்டறிவுகளை மையமாக வைத்து விடுதலைப் புலிகளை அளவீடு செய்து கொண்டிருக்கிறார்கள்.

கடந்த இரண்டு வருடகாலப் போர் தமிழ் ஈழம் பற்றிய தீர்க்கமான முடிவெடுக்கும் காலகட்டத்தினை ஏற்படுத்தி அதன் உச்சத்-தினை எட்டியிருப்பதாகவும் அதற்கு ஏற்ற முறையில் நிகழ்வுகள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கும் ஆய்வாளர்கள் வன்னியில் ஏற்படும் போர் தொடர்பான அரச செய்திக-ளை முன்னிலைப்படுத்தித் தமது ஆய்வுகளை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு பகுதியினரும் ஒருவரை ஒருவர் அழிக்க முயலும் இத்தருணத்தில் அரசாங்கத்தின் கை ஓங்கியிருப்பதாகவும் முன்னர் எப்போது-மில்லாதவாறு குறிப்பாக இந்தியப்படை-களின் நேரடிப் பேரில் ஏற்பட்டது போலன்று இப்பொழுது புலிகள் அரசாங்கப் பொறியினுள் சிக்கிவிட்டதாகக்கூறும் ஆய்வாளர்கள் விடுதலைப் புலிகளுக்கு இருக்கும் ஒரே வழி செய் அல்லது செத்துமடி என்பதே என்று குறிப்பிடுகிறார்கள்.

இரண்டு பக்கப் படை அணிகளின் தரவுகளும் அரசாங்கத்தின் செய்திவாயிலாக வெளிவந் தவையாகும். அதன்படி 2006ல் இருந்து 11 ஆயிரம் விடுதலைப்புலிகள் கொல்லப்பட் டனர் என்றும் 2006ல் அவர்களது பலம் 10 ஆயிரம் என்றும் இப்பொழுது புலிகளின் பலம் இப்பொழுது 4 ஆயிரம் என்றும் இலங்கை இராணுவம் ஆண் பெண் உட்பட 250 000 என்றும் ஒரு விடுதலைப்புலி வீரன் 60 இராணுவத்தினர் என்ற விகிதாசாரத்தில் புலிகளினதும் இராணுவ ஆளணிப்படையின தும் பலம் இருப்பதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

“முதலை தன் இடத்தில் யானையை விடப் பலம்” என்பதும் “பகலில் கூகையைக் காக்கை வெல்லும்” என்பதும் “கிட்லரின் படைகள் பனிக்கால இரஸ்யாவினுள் தோற்றுப்போன தையும்” குறிப்பிடும் இயற்கை வரலாற்றுப் பின்னணிகள் விடுதலைப் புலிகளின் அதிகார ஆதிக்க எல்லைக்குள் இலங்கை இராணுவம் தனது அகண்ட காலைப்பதித்திருக்கிறது என்றும் ஆய்வாளர்கள் தெளிவுபடுத்தியிருக் கிறார்கள். இதனை விடுதலைப்புலிகளின் ஊடகமையங்களும் தெளிவுபடுத்தியிருந்தன.

வன்னிப் பெருநிலப்பரப்பில் ஆயிரக்கணக் கான விமானத் தாக்குதல்கள் நடைபெற்-றிருக்கின்றன. அதில் பொதுமக்கள் அவர்க-ளின் உடமைகள் அரச உடமைகள், விடுத-லைப் புலிகளின் கட்டுமானங்கள் என்பன தாக்கியழிக்கப்பட்டிருந்தன. தெடர்ந்தும் தாக்கி அழிக்கப்பட்டு வருகின்றன.

> “முதலை தன் இடத்தில் யானையை விடப்பலம்” என்பதும் “பகலில் கூகையைக் காக்கை வெல்லும்” என்பதும் “கிட்லரின் படைகள் பனிக்கால இரஸ்யாவினுள் தோற்றுப்போனதையும்” குறிப்பிடும் வரலாற்றுப் பின்னணிகள் விடுதலைப் புலிகளின் அதிகார ஆதிக்க எல்லைக்குள் இலங்கை இராணுவம் தனது அகண்ட காலைப்பதித்திருக்கிறது என்ற அரசாங்கத்திற்கான அபாய அறிவிற்பினை தெளிவுபடுத்துகின்றது.

இந்தியப் படைகள் கனரக ஆயுதங்களை-யும் விமானப் படையினையும் விடுதலைப்-புலிகளுக்கு எதிராகப் பயன்படுத்தவில்லை என்றும் இலங்கை இராணுவம் இரண்டினையும் பயன்படுத்துவதனால் இந்திய இராணுவத்து டன் இலங்கை இராணுவத்தினை ஒப்பிட முடியாது என்றும் போர் மதிப்பீட்டாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இந்திய இராணுவம் தமிழர்களில் ஒருபகுதி-யினரைப் பிரித்துக் கொண்டு மற்றைய பகுதியினரை எளிதில் அடக்கிவிடலாம் என்று நினைத்திருந்தது. ஆனால், அது இணைத்-துக் கொண்டவர்கள் மக்களிடமிருந்து வேறுபட்டதும் மக்களின் ஆதரவைப் பெறா-தவர்களுமான ஒரு கூட்டத்தினர் என்றும் அவர்களுக்காக ஏன் நாம் போராடவேண்டும் என்று அதிகாரிகள் சலித்துக்கொண்டத-னையும் அன்றைய இந்திய இராணுவத்தின் மனப் பின்னடைவாகக் கொள்ள வேண்டும்.

இலங்கை இராணுவத்தில் போர் முகங்களில் தமிழர்களைப் பயன்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்களினால் பிரதேசத்திற்கு இனமாகாத இராணுவத்தினரைப் பயன்படுத்தும் பொழுது ஏற்படும் மனவலிமைக் குறைவானது விடுத-லைப்புலிகளின் பலத்தினை அதிகரிப்பதற்-குக் காரணமாக அமைகிறது.

### வன்னியில் அரசாங்கத்தின் நிலை என்ன?

வன்னியின் வழங்கு தளங்களை வவுனியா-வுடனும் யாழ்ப்பாணத்துடனும் இணைப்பதன் மூலம் இராணுவ நடமாட்டத்தை வன்னியில் அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திடம் பலமாக உள்ளது. ஏ-9 என்ற கண்டி வீதிக்கு மேற்குப் பகுதியினைக் கைப்பற்றுவதன் மூலம் வன்னியின் ஒரு பகுதியை சனநடமாட்டமில்-லாத் தனி இராணுவப் பிரதேசமாக மாற்று வதனை அரசாங்கம் விரும்புகிறது. யாழ்ப்பாணத்திலிருப்பது போன்று ஐந்து குடிமக்களுக்கு ஒரு இராணுவம் என்ற நிலை போன்றில்லாததொரு புதிய வடிவத்தினை ஏற்படுத்துவதன்மூலம் புலிகளை முற்றாகத் தனிமைப்படுத்திவிட முடியும் என்றும் கிழக்கு வன்னிப் பிராந்திய மக்களை தெற்கு நோக்கி நகர்த்திப் பாசறைகளில் பூட்டிவைப் பதன் மூலம் மக்களாதரவினைப் புலிகளிட-மிருந்து பறித்தெடுத்துவிடலாம் எனவும் அரசாங்கம் நம்புகிறது.

இலங்கைப் போர் வரலாற்றில் மேலும் ஐந்து ஆண்டுகளை அரசாங்கத்துக்கு எடுத் துக் கொடுக்கக்கூடிய தேர்தலும் மக்கள் ஆணையும் வன்னியில் இராணுவ வெற்றி யின் மூலம் தான் கிடைத்து விட முடியும் எனும் முற்றாக நம்புகிறது. அதற்குக் கிளி-நொச்சியைக் கைப்பற்றுவது முக்கியமானது என்பதனை அரசு இராணுவத் தலைமைக்கு அறிவுறுத்தியுள்ளமையும் கிளிநொச்சியைக் கைப்பற்ற என்ன விலையினையும் கொடுக்க அரசாங்கம் தயாராகிவிட்டது. அரசாங்கம் பல கட்டங்களாகப் படையினை திரட்டுவதும் புதிய படையினரைத் தளங்களுக்கு அனுப்பு வதும் ஒரு உபாயமாகக் கடைப்பிடித்து வருகிறது.

இந்தியாவின் போர்க்கடன் உதவிகளும் தொழில்நுட்பவியலாளர் உதவிகளும் வியாபார ஒப்பந்தத்தின் விளைவாகக் காட்ட முயலும் இந்தியாவுக்கு இலங்கையும் இந்தியா நேரடி இராணுவ உதவியினைச் செய்யவில்லை என்று சாதிக்க முயன்று கொண்டிருக்கிறது.

இந்தியாவின் இரட்டைவேடத் தன்மையினை இலங்கை பயன்படுத்திக் கொண்டு சீனாவிட மிருந்து கனரக ஆயுதங்களையும் விமானம் வேவு பார்க்கும் கருவிகளையும் பெற்றுக் கொண்டது. பாகிஸ்தானிடமிருந்து ஆயுதக் கொள்வனவு துரிதப்படுத்தப்பட்டிருக்கிறது. தெனனாசியா, கிழக்காசியா, மேற்காசியா மூன்றுமே உதவும் வண்ணம் இலங்கை அரசு உதவிக்கரங்களை ஈரானிலிருந்து சீனா வரை நீட்டிக் கொண்டிருக்கிறது.

ஒரு நாட்டின் கீழ்தான் தீர்வு என்பதும் அது புலிகளை அடக்கியதன் பின்னால்தான்

5ம் பக்கம் பார்க்க...



ஏற்படுத்திக்கொடுக்கப்படும் என்றும் அதற்கு முன்மாதிரியாக கிழக்கு மாகாணசபைத் திகழுகிறது என்றும் மேற்கு நாடுகளுக்கும் இன்று இராணுவ உதவி கோரும் நாடுகளுக்கும் இலங்கை அரசாங்கம் எடுத்துக் காட்டி வருகிறது. அன்று ஆயுதம் எடுத்தவர்களை ஜனநாயகத்துக்குள் இழுத்து வந்து விட்டதாவும் பிரிந்து சென்று புதிய கட்சி தோற்றிவித்த மக்கள் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கைவிடுவதாக உறுதியளித்து விட்டார்கள் என்பதனையும் வெளி உலகத்திற்கு காட்டுவதன் மூலம் தீர்வுத்திட்டம் என்பது புதிதாகத் தேவையற்றது. ஏற்கனவே இருக்கும் மாகாணசபை வடிவம் போதுமானது என்பதனை நிரூபிக்க முனைகின்றது.

## சிங்கள மக்களின் நிலை என்ன?

கடந்த காலங்களில் இலங்கையில் உருவாக்கப்பெற்ற அரசுகள் வெற்றிபெறத்தக்க போரை நடாத்தவில்லை. இராஜபக்ஷவின் அரசுதான் வெற்றிப்போரை நடத்துகிறது என்று சிங்கள மக்கள் எண்ணுகின்றார்கள். ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினால் தொடக்கி வைக்கப்பட்ட ஆயுதப் போரானது இந்திய அமைதிப்படை வருகையால் பிசுபிசுத்துப் போனது என்றும் பிரேமதாச, சந்திரிக்கா போன்றோரது போர் அணுகுமுறை புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு இழுக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட போர் என்றும் அதனால் தான் அத்தகைய போரினை அரசு வெல்லவில்லை என்றும் கருதுகிறார்கள்.

இன்றைய போர் புலிகளை அழித்துவிடுவதற்கான போர் என்றும் பேச்சுவார்த்தைக்கும் சமாதானத்துக்கும் எத்தகைய வாய்ப்பும் கொடுக்கப்படக்கூடாது என்பதனையும் நம்புகிறார்கள்.

போருக்கு ஆதரவில்லாத இருபது சதவீதமான சிங்கள மக்கள் மேற்கு நாடுகளின் ஜனநாயக சித்தாந்தத்தினதும் எதிர்க்கட்சிகளினதும் ஆதரவாளர்கள் என்றும் தெளிவுபடுத்திக் காட்டப்படுகிறார்கள்.
அரசாங்கத்தின் போரின் வெற்றிச் செய்திகளே இலங்கை ஊடகங்களில் தெரியப்படுத்தப்படுவதனால் மக்களின் நம்பிக்கை முழுவதுமாகப் போரின் வெற்றியாகவே தோற்றம்பெறுகிறது. தென் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் சிங்கள மக்களின் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளாகக் காட்டப்படும் மாயையிலிருந்து மக்கள் மீள முடியாமல் இருப்பது தெளிவாகிறது. புலிகள் பற்றிய



பயம் சிங்கள மக்களிடையே இருக்கின்ற பொழுதிலும் கூட இராணுவ வெற்றி தொடர்பான பரப்புரைகள் அவர்களை வேறுவிதமாகச்சிந்திக்கத் தடைசெய்கிறது.

## மேற்குலக நிறுவனங்களின் நிலைப்பாடு என்ன?

வன்னியிலிருந்த பன்னாட்டு உதவி வழங்கு நிறுவனங்கள் யாவும் வன்னியிலிருந்து வெளியேற்றப்படவேண்டும் என்றும் அவர்களுக்கான பாதுகாப்பினை அரசாங்கம் வழங்க முடியாது என்றும் இலங்கையரசாங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து வன்னியை விட்டு ஐ.நா. தொண்டு நிறுவனம் உட்பட உதவி வழங்கும் நிறுவனங்களும் வெளியேறியுள்ளன. அவை வெளியேறும் பொழுது வெளியிட்ட அறிக்கைகள் வன்னியில் ஓர் அவலநிலை தோன்றும் அபாயத்தினைத் தெளிவுபடுத்தியிருந்தன.

சமாதானம் பேச முனைந்த நிறுவனங்களுக்கு இலங்கை அரசின் விளக்கம் நாங்கள் உங்களை ஐம்பது மைல் தூரம் விலகி இருக்கும்படி கேட்டுக்கொண்டோம் என்பதாகவே இருந்தது. அந்த நிறுவனங்கள் ஆபிரிக்காவில் உள்ளது போன்று ஆயிரம் மைல்கள் வெளியேறச் சொன்னதாகக் கூக்குரல் இடுகின்றன அது தவறானது என்று இலங்கை அரசு வாதிடுகிறது.

ஜனாதிபதி ஐ.நா சென்றதன் விளைவாக மீண்டும் வன்னியில் பணியாற்றக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. மேற்குலக நிறுவனங்களின் கட்டாயத்துக்கு இலங்கை செவிசாய்க்க வேண்டிய நிலையினை உருவாக்கியதே அந் நிறுவனங்களின் வெற்றியாகும் ஆனால் போர்நிறுத்தத்திணிப்பைச் செய்யாது அதனை இலங்கை அரசின் கையிலேயே விட்டிருக்கிறது.

மனித உரிமைகள் மீறப்படுவதும் ஆட்கடத்தல் கொலை, சித்திரவதை போன்ற குற்றச்சாட்டுகளை அசட்டை செய்யாத இலங்கை அரசுக்கு அவ்வப்பொழுது அதட்டல்கள் கொடுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் நிறுவனங்களுக்கு அசட்டை செய்யாத இலங்கை அரசு, புலிகள் சர்வதேசப் பயங்கரவாதிகள் என்ற பட்டியலைப் போட்டுவிட்டு நீங்களே புலிகளுக்கு சாதகமாகக் குரல் கொடுக்கிறீர்கள் என்று வாயடைப்புச்செய்துவிடுகிறது. மேற்குலகு கட்டுப்பாடுகளை விதிக்கின்ற பொழுதிலும் கூட அவர்களிடமிருந்து எந்த உதவியினையும் பெறாத ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம் பொருளாதார ஆயுதத் தடைகளிலிருந்து இலங்கை தப்பித்துக் கொள்ளுகிறது என்பதனை மேற்குலகு தெளிவாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் மீது கண்டனங்களைக் குறிப்பிடும் மேற்குலகு அவர்களின் கடந்த கால நடவடிக்கைகளையும் சிறுவர்களைப் படையில் சேர்ப்பதனையும் முன்னிலைப்படுத்தியிருந்தாலும் அதனைக் காரணம் காட்டி அரசாங்கமும் அரச நிறுவனங்களும் மனித உரிமைச் செயற்பாடுகளை மீறுவதை அனுமதிக்க முடியாது என்பதனை ஐ .நா நன்கு தெளிவுபடுத்தியிருந்தமை அவதானிக்கத்தக்கது.

வன்னியில் இருந்த வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்கள் விடுதலைப் புலிகளின் தன்னாட்சி அரசானது முழுமையான நீதி நிர்வாகக் கட்டுக்கோப்புக்குட்பட்டிருந்தமையினைத் தெளிவுபடுத்துவதுடன் புலிகள் இல்லாவிடில் தமிழர்களின் சுதந்திரத்துக்கும் சமத்துவத்துக்கும் உத்தரவாதம் இல்லை என்பதனைத் தெளிவுபடுத்தத் தவறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்களின் நிலைப்பாடு ஏன்ன

தொடர்ந்தும் அகதிகளாக இடம்பெயர்ந்து கொணடிருக்கும் தமிழ்மக்கள் போரில்லாச் சூழலை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள் தலைமுறைகளாகப் போராடிவரும் தமிழர்களின் எதிர்காலம் விடுதலைப்புலிகனின் பலவீனத்தால் பாதிப்புக்குள்ளாகி விடும்.
தமிழர்களுக்கு நீதி கிடைக்காது மீண்டும் ஏமாற்றப் படுவது உறுதி . இதனிடையே வன்னியின் அவலம் பூதாகார வடிவத்தைப் பெற்றிருக்கிறது. சிங்களப் பெரும்பான்மையில் நம்பிக்கை கொள்ளும் நிலை இல்லை என்பதே தமிழர்களின் நிலைப்பாடாக நீண்ட காலமாக இருந்துவருகிறது..

■ ■ ■



# Business Planஇன் அவசியம்!

கனடிய சமுதாய நீரோட்டத்தில் தமிழ் மக்களுக்கும் வியாபாரத் துறைக்கும் இடையேயான தொடர்பு மிகவும் நெருக்கமானது என்பதை யாவரும் அறிவீர்கள். தமிழர்கள் வியாபாரம் செய்யாத துறைகளே இல்லை என்று கூறும் அளவிற்கு முன்னேறியுள்ள எமது சமூகம் வீடு விற்பனை, அடமானக் கடன், காப்புறுதி, கணக்கியல், வாகனம் திருத்துமிடம், வைத்திய நிலையம், சட்ட அலுவலகம், உணவுச்சாலைகள், தொழிற்சாலைகள் என்று பல வகையான துறைகளில் கால்பதித்து முன்னேறி வருகின்றது.

வியாபாரத்துறையை நீண்டகால நோக்கில் அவதானித்து அதன் வளர்ச்சிக்குரிய ஒவ்வொரு விடயத்திலும் அக்கறை காட்டி அதன் மூலம் இலாபத்தை அதிகரிப்பது எந்தவொரு வியாபாரத்துறைக்கும் அவசியமானதொன்றாக இருக்கின்றது.

ஒரு வியாபாரத்துறையின் அபிவிருத்திக்கு அத்திவாரமாகவும் அடிப்படை கோட்பாடாகவும் விளங்குவது Business Plan என்று அழைக்கப்படும் வியாபாரத்திட்டமாகும். ஒரு வியாபாரம் செழிப்பதற்கோ அல்லது பின்தங்குவதற்கோ Business Planஇன் பங்கு அதிகமாக காணப்படுகின்றது. Business Plan இன் அவசியத்தை ஆங்கிலத்தில் உள்ள ஒரு பொதுவான பழமொழி இவ்வாறு கூறுகின்றது.

'It you fail to plan, you have planned to fail'

அதாவது நீங்கள் திட்டமிடத் தவறினால் தோல்வி அடைவதற்கு திட்டமிட்டு விட்டீர்கள் என்றே அர்த்தமாகும்.

இந்த வகையில் மிகவும் முக்கியத்துவம் பெற்ற Business Planஐ வியாபாரத்துறையில் உள்ள எத்தனை பேர் தயாரிக்கின்றார்கள் என்றால் அந்த எண்ணிக்கை மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றது. வியாபாரத் துறை வளர்ச்சியில் இது ஒரு ஆரோக்கியமான விடயமாக கருத முடியாது. அத்துடன் எம் மத்தியில் இடம்பெறும் பல வகையான வியாபாரத் தோல்விகளுக்கும் இது ஒரு முக்கியமான காரணியாகவும் அமைந்து விடுகின்றது.

Business Plan என்றால் என்ன, அது வியாபாரத்திற்கு ஏன் முக்கியமானது, இதை எப்படி தயாரிக்க முடியும் போன்ற சில விடயங்கள் இக்கட்டுரையின் கருப்பொருளாக அமைகின்றது.

### Business Plan என்றால் என்ன?

மிகவும் இலகுவான முறையில் மற்றவர்கள் எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட பூரணமான ஒரு எதிர்கால வியாபாரத் திட்டமாகும் - Documents that describes the future path of a business.

### ஒரு தரமான Business Plan எப்படியான விடயங்களை உள்ளடக்கியிருக்கும்?

- நீங்கள் யார் உங்கள் வியாபாரம் என்ன அது எங்கே அமைந்துள்ளது போன்ற விடயங்கள்
- வியாபார கட்டுமானங்கள் மற்றும் வியாபார கருத்துக்கள் (Business concepts) பற்றிய தரவுகள்
- ஒழுங்குபடுத்தப்பட்ட குறிக்கோள்கள் (Future objective)
- உற்பத்திகள் (Products) அல்லது சேவைகள் பற்றிய விரிவான தகவல்கள்
- தேவையான மூலதனத்தை (Resource) அடையாளப்படுத்தி அவை எப்படி பெறப்படுகின்றன என்பது பற்றிய தரவுகள்
- கடந்த வருடத்தில் பெறப்பட்ட சாதனைகள், சோதனைகள் மற்றும் அதற்குரிய தீர்வுகள் (Corrective actions) பற்றிய விபரங்கள்
- வியாபார முகாமைத்துவ தகவல்கள் (Business management)
- விற்பனைத் திட்டங்கள் மற்றும் Quality control திட்டமிடல்கள்
- தொடர்ச்சியான முன்னேற்றங்கள் (Continuous improvements)
- வரவு செலவு திட்டங்கள்

போன்ற பல உபயோகமான விடயங்களை உள்ளடக்கியதாக ஒரு Business Plan அமைந்திருக்கும். ஒவ்வொரு Business Planம் ஒவ்வொரு வியாபாரத்திற்கு ஏற்றவாறு பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டவையாக இருக்கும்.

### ஒரு வியாபாரத்திற்கு ஏதற்காக Business Plan தேவை?

- நீங்கள் இந்த வியாபாரத் துறையில் எவ்வளவு அக்கறையாக இருக்கின்றீர்கள் என்பதை மற்றவர்களுக்கு தெரியப் படுத்துதல்.
- எதிர்கால வியாபாரத் திட்டங்களை வரிசைப்படுத்துவதன் மூலம் வியாபாரத்தை எப்படி அபிவிருத்தி செய்ய முடியும் என்பதை தெளிவுபடுத்துதல்.
- முதலிட்டாளர்களின் முதலிடுகளை அதிகரித்தல்
- மற்றைய போட்டியாளர்களது வியாபார தந்திரங்களை ஆராய்ந்து ஆக்கபூர்வமான திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
- வாடிக்கையாளர்களின் தேவைகளையும் அவர்களின் எதிர்பார்ப்புகளையும் அறிந்து எதிர்கால திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- சந்தை வியாபாரத் தேவைகளை ஆராய்ந்து புதிய விற்பனைத் திட்டங்களை செயல்படுத்துதல்.
- வருமானத்தை பதிவு செய்து எதிர்கால வரவு செலவு மற்றும் முதலீடுகளை முன்கூட்டியே தீர்மானித்தல்.
- எதிர்கால திட்டங்களுக்கான முதலீடுகளின் அடிப்படைத் தகவல்களை தெரியப்படுத்துதல்.
- பிழையான திட்டங்களுக்கு பணம் செலவிடுவதை தவிர்த்தல்.
- பணியாளர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதற்குரிய திட்டங்களை அமுல்படுத்துதல்.
- சந்தையில் உங்களின் நிலவரத்தை உறுதி செய்வதற்கான வழிமுறைகளை வகுத்தல்.
- எந்தவொரு விடயத்தையும் அளவீடு செய்து (Measuring) அதிகப்படியான பெறுபேறுகளைப் பெறும் திட்டங்களை தயாரித்தல்
- தேவையான பணியாளர்களை எதிர்காலத் திட்டங்களுக்கு பயன்படுத்தும் தீர்மானங்கள் எடுத்தல்
- புதிய வியாபார முயற்சிகளுக்குரிய தெளிவான கருத்துக்களை வெளிப்படுத்துதல்.

போன்ற பலவகையான காரணங்கள் Business Planஇன் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறுகின்றது.

### யார் இந்த Business Planஐ தயாரிப்பது?

ஒரு Business Plan கட்டாயமாக அந்த வியாபாரத்தை நடத்திக்கொண்டிருக்கும் (Management) ஒருவராலோ அல்லது குழுவினராலோ தயாரிக்கப்பட வேண்டும். ஆனால், Consultants, Accountants மற்றும் Business analysts போன்றவர்கள் இதற்கு உறுதுணையாக இருக்க முடியும். அதிகமாக வருடத்திற்கு ஒரு தடவை வெளியிடப்படும் இந்த Business planஐ தயாரிப்பதற்கு குறிப்பிட்ட காலநேரம் என்று எதுவும் கிடையாது. எனவே உங்களிடம் தற்சமயம் Business Plan என்ற ஒன்று இல்லை என்றால் உடனே அதை தயாரிப்பதற்கான வேலையை ஆரம்பித்துவிடுங்கள்.

### எங்கே இருந்து இதை ஆரம்பிக்க வேண்டும்?

- Business plan தயாரிப்பதற்கு முன்னர் ஒரு சில sample business planகளை பார்வையிடுங்கள். பின்வரும் இணையத்தளங்களிலும் இவற்றை நீங்கள் பார்வையிடலாம்:

Interactive Business Planners:
**www.cbsc.org/ibp**
On line Business Plan samples:
**www.bplans.com**
Chartered bank business Plan templates:
**www.royalbank.com**

- உங்கள் எண்ணங்கள் அல்லது கருத்துக்கள் (Objectives), எதிர்கால வாசகர்கள் யார் (Potential readers) மற்றும் Action planகளை அடையாளப்படுத்தி அவற்றை தீர்மானம் (Finalize) செய்யுங்கள்.
- போதுமான அளவு நேரத்தை ஒதுக்கி வைத்துக் கொள்ளுங்கள் - Prepare a time line.
- பின்னர் உங்கள் எதிர்கால வியாபாரத் திட்டங்களை அலசி ஆராய்ந்து அவற்றை ஒழுங்குபடுத்துங்கள் - Organize research information into the business plan components.
- உங்களது திட்டங்களை உங்களைச் சார்ந்தவர்களிடம் கலந்தாலோசனை செய்து அவர்களது அபிப்பிராயங்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

அதன்பின் Business Planஐ எதற்காக தயாரிக்கின்றோம் என்ற பூரண தெளிவுடன் கிடைக்கக்கூடிய சகல தரவுகளையும் பகுப்பாய்வு செய்து உங்கள் தனித்துவமான Business Planஐ தயாரித்துக் கொள்ளுங்கள் அல்லது அதில் தேர்ச்சியுள்ளவர்களிடம் சமர்ப்பித்து தயாரித்து கொள்ளுங்கள். உங்கள் Business planஇல் பின்வரும் விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

- Know your audience
- Use clear vocabulary
- Avoid jargon
- Clearly identify sections
- Quality vs. Quantity
- Know your plan




ராஜ்மோகன் செல்லையா
- ஈட்டுக்கடன் பிரதிநிதி -
rmohan@thaiveedu.com


### எப்படியான அடிப்படை விடயங்கள் ஒரு மாதிரி Business Planல் அடங்கியிருத்தல் வேண்டும்?

1. முழுமையான தொகுப்பு - An Executive Summary which summarizes key points of the business plan and about your business in one or two pages
2. வியாபாரத்தின் கண்ணோட்டம் - An overview which introduces the reader to the business
3. உற்பத்திகள் அல்லது சேவைகள் - A description of the products and services
4. வியாபார சந்தையின் தகவல்கள் - An overview of the industry in which the business will compete
5. வியாபாரத் திட்டமிடல் - A marketing strategy which summarizes the product, promotion, pricing, and distribution strategies of the business
6. பணியாளர்களின் தகவல்கள் - A description of the management and staffs
7. வியாபாரத்தின் Financial தரவுகள் - An implementation plan and a financial plan that includes pro-forma balance sheets, income statements and cash flow statements. A balance sheet compares what your business owns to what it owes. A cash flow statement compares how much money will be coming in to how much you will be spending. An income statement compares your revenues to your expenses to see if you are going to make money.

இது போன்ற பல அடிப்படை விடயங்களை உள்ளடக்கிய Business planகள் பல வகையான அளவுகளில் தயாரிக்கப்பட்டாலும் அனேகமாக இது 10 தொடங்கி 25 பக்கங்களுக்குள்ளேயே அடக்கப்படுகின்றது. இது வியாபாரத்திற்கு வியாபாரம் வேறுபட்டாலும் Business plan என்பது ஒரு தொகுப்பு. எனவே தேவையான விபரங்கள் மட்டுமே அடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உங்கள் தனித்துவமான வியாபாரத்திற்கு பிரத்தியேகமான Business Plan அவசியம் தேவை என்பதில் உறுதியாக இருங்கள்.

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*


Century 21
King's Quay Real Estate Inc. Brokerage
905-940-3428
For All your Real Estate Needs
HomeExpertTeam.com
Tel: 416-496-2625 Fax: 905-940-0293



AMIR RAMALINGAM, B.Sc.
Sales Representative



* 3 Bedroom Town Home
* Practical Layout
* Finished Basement
* Only $ 233,000
* Located at Finch and Pharmacy



PRATHEEP BALASUBRAMANIAM
Broker

# வீட்டு பரிசோதனை

## வீடு வாங்குபவருக்கான வீட்டு பரிசோதனைக்காக உங்களது வீட்டை தயார் செய்வது எப்படி
## HOW TO PREPARE YOUR HOME FOR THE BUYERS HOME INSPECTION




மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -
mahen@thaiveedu.com


பொதுவாக ஒரு வீடு விற்கப்பட்டு அது ஒப்பந்த அடிப்படையில் கைசாத்திடப்பட்டால் அந்த வீட்டினை வாங்குபவர் வீட்டினை ஒரு வீட்டு பரிசோதகரை அழைத்து பரிசோதனை செய்வார். அப் பரிசோதனையின் போது அவ் வீட்டில் இருக்கும் பழுதுகளை கண்டறிவார். அப்படிப்பட்ட பழுதுகளை வீட்டு பரிசோதகர் கண்டறியுமுன் வீட்டு உரிமையாளரான நீங்கள் என்ன செய்யலாம் என்பதினை எடுத்துரைப்பதே இக் கட்டுரையின் நோக்கம். படித்து பயன் பெறுவீர்களாக.

### பொதுவானவை

உங்களது வீடு பற்றிய நிலைமை தொடர்பான அறிக்கையை தயார் செய்ய வேண்டும் என்று உங்கள் வீட்டு விற்பனை முகவர் கோரிக்கை விடுத்தால் அந்த அறிக்கையில் உங்கள் வீட்டில் உள்ள சகல விதமான குறைபாட்டையும் உள்ளடக்க வேண்டியது அவசியம். ஏனெனில் நீங்கள் தயாரித்த அறிக்கை தொடர்பாக வீட்டு பரிசோதகருக்கு ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் அவருக்கு உங்களது வீட்டின் நிலமை பற்றிய நம்பகத் தன்மை கேள்விக்குறியாகும் நிலமை ஏற்படலாம்.

உங்களது வீடு பரிசோதிக்கப்படும் சமயம், உங்கள் சார்பாக உங்களது வீடு விற்பனை முகவர் சமூகமளிப்பது சிறந்த விடயம். இந்த பரிசோதனையின் போது நீங்களும் சமூகமளிக்க விரும்பினால் வீட்டுப் பரிசோதகரது கேள்விகளுக்கு நீங்கள் நேர்மையான பதில்களை வழங்க வேண்டும்.

உங்களது வீட்டில் உள்ள குறைபாடு தொடர்பாக உங்களுக்கு தெரிந்த எவற்றையும் மறைப்பதற்கு முயற்சிக்க வேண்டாம். உங்களது வீட்டின் தரம் தொடர்பாக வீட்டு பரிசோதகரிடம் நீங்கள் எந்த வித கேள்விகளையும் கேட்க வேண்டாம். அது மட்டுமன்றி உங்களது வீட்டைப் பற்றி, பரிசோதகர் கூறும் விமர்சனங்கள் தொடர்பாக அவருடன் எந்தவித விவாதத்திலும் ஈடுபட வேண்டாம்.

வீட்டுப் பரிசோதகரை அவசரப்படுத்த வேண்டாம். உங்கள் வீட்டில் பரிசோதிக்க வேண்டியது அவசியம் என்று அவர் முடிவு செய்யும் சகல பகுதிகளையும் பரிசோதிப்பதற்கு அனுமதிக்கவும், பொதுவாக சராசரியான அளவுடைய ஓர் வீட்டை பரிசோதிப்பதற்கு இரண்டு மணித்தியாலம் தொடக்கம் மூன்று மணித்தியாலம் வரை எடுக்கலாம்.

ஒரு வீட்டைப் பரிசோதனை செய்தல் உங்களது தனிமையை பாதிக்கும் ஓர் விடயம் என வீட்டுப் பரிசோதகர் அறிந்துள்ளார். எனவே அவர் இந்தப் பரிசோதனையை ஒரு தொழில்சார் வல்லுநருக்குரிய (Professional) கண்ணியமான முறையில் நடத்தி முடிப்பதற்கு சகல முயற்சிகளையும் எடுப்பார். இப்பரிசோதனையை ஒரு மகிழ்ச்சிகரமான அனுபவமாக மாற்றுவதற்கு வீட்டுப் பரிசோதகர் உங்களது ஒத்துழைப்பை எதிர் பார்க்கிறார்.

### வெளிப்புறம் (Exterior)

- வெளிப்புறக் கதவுகள் யாவும் இலகுவில் திறக்கக்கூடியதாகவும், சகல கதவுப்பூட்டுக்களும் செயல்படும் தன்மை கொண்டதாகவும் இருக்க வேண்டும்.
- உங்கள் கூரையில் ஏதாவது shingles கிளம்பியோ அல்லது இல்லாமலோ இருந்தால், கூரை வேலை செய்யும் நிறுவனங்களை நாடி Roof Turnup செய்ய முடியும்.
- கராச் (Garage) இருந்தால் முறைப்படி மூடி திறக்கின்றதா? அதன் Safty Sensor வேலை செய்கின்றதா என்பதினை சரி பார்க்கவும்.
- வெளிப்புறத்தை சுத்தப்படுத்தி நீங்கள் வீட்டினை எப்படி பராமரிக்கின்றீர்கள் என்பதினை தெரியபடுத்தி கொள்ளலாம்.
- Gas, Hydro ஆகியவற்றிற்கான Meter இருக்குமிடத்தை பரிசோதகரின் சோதனைக்கு ஏற்றவாறு துப்பரவாக வைத்திருக்கவும்.

### உட்புறம்

உங்கள் வீட்டின் சகல பகுதிகளும் இலகுவில் பார்வையிடக்கூடியதாக இருக்க வேண்டும். குறிப்பாக நிலக் கீழறை (Basement) மேல் முகட்டுப் பகுதி (ATTIC) ஆகியன உங்களது வீட்டின் முகட்டுப் பகுதியினுள் உள்ள தவழும் இடைவெளியினுள் (CRAWL SPACE) ஒரு CLOSET கதவுக்கூடாக செல்ல வேண்டி இருக்குமானால் அந்த கதவைத் திறந்து வைக்க வேண்டும். அத்துடன் அப்பகுதியில் ஏற்கனவே சேமித்து வைக்கப்பட்ட ஆடைகள் மற்றும் சேமிப்புப் பொருட்கள் என்பவற்றை அகற்ற வேண்டும்.

### மின் இணைப்பு (ELECTRICAL)

உங்கள் வீட்டின் மின்சார இணைப்பு கம்பிகளை பரிசோதிப்பதற்கு வீட்டுப் பரிசோதகர் விரும்புவார். எனவே மின்சார கம்பிகளை இலகுவில் அவதானிக்கக் கூடியதாக இந்தக் கம்பிகளைக் கொண்டுள்ள Electric Panelஐ இலகுவில் பரிசோதிக்கக்கூடியதாக அதன் மூடு கதவைத் திறந்து வைக்கவும்.



### Plumbing

Plumbing தொடர்பான இணைப்புக்கள் யாவும் நன்கு செயல்படுகின்றனவா என வீட்டுப் பரிசோதகர் பார்வையிட்டுப் பரிசோதிப்பார். எனவே வீட்டுப் பரிசோதனை நடைபெறுவதற்கு முன்னதாக இது தொடர்பான குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

### வெப்பமூட்டுதலும் குளிர்பதனிடு செய்தலும் (HEATING AND AIR CONDITIONING)

உங்கள் வீட்டில் வெப்பமூட்டுதல், குளிர் பதனிடு செய்தல் தொடர்பான உபகரணங்கள் என்பவை நன்கு செயற்படுகின்றனவா என வீட்டுப் பரிசோதகர் பரிசோதித்துப் பார்ப்பார். உங்களது வீட்டில் எண்ணெயினால் வெப்பமூட்டப்படும் (Oil Furnace) அமைப்பு இருந்தால் தேவையான அளவு எரிபொருள் உள்ளதா என உறுதி செய்து கொள்ளுங்கள். உங்களது வெப்பமூட்டல் அமைப்பு (Furnace) வளியை உட்செலுத்தும் வகையானதாக (Forced air system) இருந் தால், ஆகக் கூடிய அளவு காற்றோட்டம் ஏற்படும் வகையில் காற்று வடிகட்டி (Air Filter) தூய்மையானதாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

■ ■ ■

## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

ஒக்ரோபர் மாதக் குறிப்புகள்

- நன்றி செலுத்தும் நாள் (Thanks Giving Day) ஐப்பசி 13ம் திகதி விடுமுறையை கொண்டாடுவதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.
- ஹலோவீன் (Halloween) ஐப்பசி 31ம் திகதி உடைகள் மற்றும் முகமூடிகளை உங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து திட்டமிடுங்கள். உங்கள் யன்னல்களை அலங்காரப்படுத்துங்கள்
- வீட்டின் புகைபோக்கிகள், காற்று மற்றும் வெளிச்சம் வரும் துவாரங்களை சரிபாருங்கள்.
- உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி குளிரூட்டியையும் கனலடுப்பையும் சுத்திகரியுங்கள்.
- இருட்டுத் திரைச்சேலைகளை (Blinds) கழுவி சுத்திகரியுங்கள்.
- இம் மாத கடைசி வாரத்தில் நேர மாற்றம் இடம்பெறவிருக்கிறது. மணிக்கூடுகளை அதற்கேற்ப சரிசெய்யுங்கள்.
- வீட்டிலுள்ள வெள்ளி, செம்பு, பித்தளை, கிறிஸ்டல் அலங்காரப் பொருட்களை சுத்திகரியுங்கள்.
- பாரமான தளபாடங்களையும் பொருட்களையும் தள்ளி வைத்து அவற்றின் கீழ் உள்ள தூசுகளை vacuum cleaner ஆல் சுத்திகரியுங்கள்.
- படுக்கை மெத்தைகளை சமனானதாக்கி திருப்பிப் போடுங்கள்.
- வாயு வெப்பமேற்றியை பரிசோதியுங்கள். இது நீல நிற சுவாலையாக இருக்க வேண்டும். மஞ்சள் சுவாலை சிறிதளவில் அல்லது ஓரளவேனும் காணப்படாதிருத்தல் நல்லது.
- கராஜ் கதவுகளின் பிணைச்சல்களை சரிபார்த்து எண்ணெயிடவும்.
- புகைபோக்கிகளின் சிம்னிகளில் பறவைக் கூடுகள் மற்றும் ஏனைய தடைகள் காணப்படுகின்றதா என பரிசோதிக்கவும்.
- மென்மையான வருடாந்த பயிரை வீட்டினுள் அல்லது பச்சை வீட்டினுள் இடமாற்றவும்.
- தீந்தையிடப்பட்ட (Painted) சுவர் மற்றும் மேற்பரப்புகளில் ஈரலிப்பு பாதிப்புகள் ஏற்பட்டிருக்கிறதா என பரிசோதிக்கவும்.
- குளிராக்கும் வெப்பமாக்கும் உபகரணத்தின் வெளிப்பகுதியில் இலைகள் மற்றும் ஏனைய கழிவுகள் சேர்ந்திருக்கின்றதா என சரி பாருங்கள்.
- வீட்டிற்கு வெளியே அலங்காரப்படுத்தும் அலங்கார விளக்குகளை குளிர் மற்றும் snow கொட்டுவதற்கு முன்பே இப்பொழுதே தயார் படுத்தினால், குளிருக்குள் நின்று அலங்காரப்படுத்துவதை தவிர்க்கலாம்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா


ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices

உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்



Sales - Service - Installations

Custom Made

| Wood & Vinyl Shutters | Blinds | Draperies |
|---|---|---|
| California Style Shutters | Vertical Blinds | Swags |
| Plantation Style Shutters | Venetian Blinds | Sheers |
| Traditional Style Shutters | Wood Blinds | Valance |
| Arches | Bamboo Shades | Curtains |
| | Roller Shades | And More |
| (We Do Any Colour Of Paint & Stain) | And More | |



Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:
தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

**Gnani & Judy Real Estate**
All Your Real Estate Needs



ஞானேந்திரன் நரசிங்கம்
Sales Representative
CELL: 416.937.8090

ஜூடி ஞானேந்திரன்
Sales Representative
CELL: 416.629.9797

OFFICE: 416.321.6969



## New Tridel Condo in Downtown

**Call for VIP promotion Sales**

Purchase a Tridel-built condo tower suite or loft in one of downtown Toronto's hottest locations in the Entertainment District.

If you buy, sell or lease in any residential or commercial properties from us.

**CHANCE TO WIN**
A Trip to Cuba

**CAPE CHIN**
$66K - $5K DOWN, VTB
8% - 10 YRS OPEN

- 25 acres, some clear land
- 10 minutes from Georgian Bay
- Build & Invest. It's a "WOW" LOT!
- PT LOT 11, CONCESSION 7, EBR – PT 6, NORTH BRUCE PENINSULA



| Markham | Scarborough | Markham | Gas Station For Sale | Scarborough | Scarborough | Oshawa | Oshawa |
|---|---|---|---|---|---|---|---|
| **Middlefield & Denison** | **Brimley & Finch** | **Markham Rd & Steeles Ave** | | **Kennedy & Ellesmere** | **Kennedy & Finch** | **Sports Bar** | **Strip Plaza** |
| • Demand Area Approximately 11 Years Old • Well Maintained 3 Br Two Storey home • Generously Sized Bedrooms • Close to Transit, Temple, Mosque, Park & Schools | • Beautiful Detached 2-Storey Home In Quiet Family Neighbourhood • High Demand Location, Close to all amenities • Lots of Upgrades | • 4 Bedroom Detached Home. • Finished Bsmt with 2 Br and 3Pc Wr. • Luxuriously Upgraded And Dutch Clean. • Close to Evevrything. | • Self-Service Esso Gas Station With Convenience. • Located In A High Traffic Junction. • Volume 3 Million Litres. Store over $360,000 Per Year. | • Great Bungalow in Good Location • Bsmt Finished with Washroom & Sep. Ent. • Many Upgrades In House | • Nice Bungalow In An Excellent Location. • Lot size is 60' x 125' with lots of trees. • Newer Wrooms, kitchen, Furnace and laminate floor. EXCLUSIVE | • Fully equiped with 295 seats • $900,000/Year sales • 4600 Sft with Patio • Financial Available | • Fully leased plaza • Net income $180,000 • 35,000 sft land with 10,000 sft building. |
| $349,000 | $335,000 | $479,900 | $185,000 | $349,000 | $379,900 | $325,000 | $2.2 Million |

வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3
*EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE




- No Money Down Programs
- Credit பிரச்சிளை உள்ளவர்கள் Credit இல்லாதவர்கள் Late Payment, Bankruptcy and R9's - No Problem
- புதிய குடிவரவாளர்களுக்கும், சுய தொழில் வாய்ப்புள்ளவர்களுக்கும் Mortgage ஒழுங்குகள் செய்து தரப்படும்
- New Mortgages, Refinances, Switches - (Switch for free) & Pre - Approval
- தமிழில் இலவச ஆலோசனைகள், கடைசி நிமிடக் கட்டணம் இல்லை
- Fast Approvals & Closings
- 45 வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டி வீதம் ஒழுங்கு செய்து தரப்படும்
- உங்களது வீட்டுக்கே வந்து Mortgage செய்து தரப்படும்
- உங்கள் திருப்தியே எங்கள் வெற்றி

**MORTGAGE**
**MORTGAGE**
**MORTGAGE**

# ராம் கிருஷ்
# RAM KRISH

Senior Mortgage Consultant
The Mortgage Alliance company of Canada
Head Office: 2005 Sheppard Ave. E, Suite 200,
Toronto, ON M2J 5B4
Phone: 416.499.5454, Fax: 416.499.8366



**TEL: 416.526.4996**

NATIONAL BANK OF CANADA · BRIDGEWATER financial services ltd. · FirstLine MORTGAGES · Scotiabank · FIRST NATIONAL · TD · cervus · BMO

digi Media Creations - 416.467.4952

# பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்கள்

## (Cancers in women)



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiogapher -
senthil@thaiveedu.com

கடந்த இதழ்களில் சாதாரண மாதவிலக்குடன் உதிரப் பெருக்கிற்குரிய காரணங்களை ஆராய்ந்தோம். மேலும் பல காரணங்கள் உண்டு. எனினும், அவற்றை விளக்கமாகக் கூறுவதற்கு நீண்ட காலம் எடுக்குமென்பதால், அவசியம் என்று கருதுவதைத் தருவது நன்மையாக இருக்குமெனக் கருதி, இம்முறை பெண்களில் ஏற்படும் புற்றுநோய்கள் பற்றி எழுதுகின்றேன்.

கர்ப்பப்பையின் மாதிரிப் படத்தைக் கவனித்தீர்களாயின் அதில் பல பகுதிகள் இணைந்திருப்பதைக் கவனிப்பீர்கள். ஒரே உறுப்பாகத் தொழிற்பட்டாலும் பல பகுதிகளையும் அடையாளம் காண்பதற்கு இலகுவாக வெவ்வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. யோனி, கர்ப்பப்பைக்கழுத்து, கர்ப்பப்பையும் அதன் நடுவில் உள்ள குழியும், அதனைத் தொடர்ந்து இருபுறமும் உள்ள பலோப்பியன் குழாய்கள், இக்குழாய்களின் விரல்கள்-போன்ற அந்தங்கள் இரண்டையும் மருவியவாறு உள்ள இரு சூலகங்கள் என்பனவற்றை இங்கு குறிப்பிடலாம்.

புற்றுநோய்கலங்கள் சாதாரணமாக உடலில் உள்ள கலங்களை விட அதிவிரைவாகக் கட்டுப்பாடின்றிப் பிரிவடைந்து பெருக்கமடையும் தன்மை கொண்டவை.

### சூலகப் புற்றுநோய் வகைகள் மூன்று

**சூலகத்தின் சுற்றுவிரிமேலணி கலங்களில் ஏற்படுவது. *(EPITHELIAL LAYER)***

- சூலகங்களின் மேற்பரப்பில் ஏற்படுவதால் நேரகாலத்துடன் நோயைக் கண்டறிந்து கொண்டால் சத்திர சிகிச்சை செய்து அகற்றி விடலாம்.

**மூலவுயிர்க்கலங்களில் ஏற்படுவது *(GERMINAL LAYER)***

- எந்த வயதுடைய பெண்களையும் இது தாக்கலாம். இதில் மூன்று உப பிரிவுகள் உண்டு.

**தொடுப்பிழையம் போன்ற விசேடித்த கலங்களில் ஏற்படுவது *(STROMA)***

- ஐம்பது வயதிற்குட்பட்ட பெண்கள் இதனால் கூடுதலாகப் பாதிக்கப்படுவதாகக் கணிப்பீடுகள் கூறுகின்றன. இவ்விசேடித்த கலங்கள் சூலகத்தின் நடுப் பகுதியிலும் சுற்றயலிலும் காணப்படுகின்றன.

### புற்றுநோயை வகைப்படுத்தல்.

வைத்திய நிபுணர்கள் பின்வருமாறு நோயின் தராதரத்தை வகைப்படுத்துவார்கள்.

- முதலில் எந்த வகையான புற்றுநோய் என்று அறிந்துகொள்வர்.
- அடுத்து அதன் தரம் எத்தகையது என்று அறிவர். (Grade)
- மூன்றாவதாகப் புற்றுநோய் சூலகத்தில் மட்டும் உள்ளதா அல்லது அயல் உறுப்புக்களையும் ஊடுருவியுள்ளதா என்பதை அறிவர். (Stages)

### குணங்குறிகள்

- ஒழுங்கற்ற மாதவிலக்கு
- மாதவிலக்கு நின்றபின்பும் உதிரம் படுதல்
- குரலில் மாற்றம் - ஆண்களைப் போன்று தடித்த குரல்
- முகத்தில் முடி வளர்தல்
- இடுப்பு வேதனை
- வயிற்றில் அசௌகரியம்
- வயிறு பருத்துக் கொண்டு வருதல் - வேதனை இருக்காது
- வயிற்றுப் பொருமலுடன் வயிற்றில் வாய்வு குடிகொள்ளல்
- மலசிச்கல் போன்ற உணர்வு அல்லது மலசிச்கல்
- அடிக்கடி களைப்பு ஏற்படுதல்
- பசியின்மை
- வாந்திக்குணம் - சாப்பிட விருப்பமின்மை
- நிறையிழப்பு
- காய்ச்சல்
- அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும் போன்ற உணர்வு.

மேற்கூறிய குணங்கள் எல்லாம் இருக்க வேண்டும் என்பது அர்த்தமல்ல. அதேநேரத்தில் மேற்கூறிய குணங்குறிகள் இருப்பவர்களுக்கு சூலகப் புற்றுநோய் வந்துவிட்டது என்பதும் அர்த்தமாகாது.

மேற்கூறிய குணங்குறிகள் இருப்பது ஒரு எச்சரிக்கை சமிக்ஞை என்று கருதி உடனேயே வைத்திய உதவியை நாடுவதால் நோயை நேரகாலத்துடன் கண்டுபிடிப்பது மட்டுமல்லாமல் சிகிச்சையையும் மிகவும் இலகுவாக்கிக்கொள்ள வழிபிறக்கும். நாட்பட்ட, கவனிக்கப்படாத நோய்கள் முற்றிய பின்பு சிகிச்சை சிக்கலாக அமையும். அத்துடன் வைத்தியர்களால் பெறப்படும் குடும்பச் சரித்திரமும் நோயை நோக்கித் தீர்மானம் எடுப்பதற்கு உதவியாகவும் உந்துகோலாகவும் அமையும்.

> "வயிற்று வேதனையுடன் வயிற்றுப் பொருமல்,
>
> அடிக்கடி
>
> சிறுநீர் கழிக்க வேண்டும் போன்ற உணர்வு,
>
> அதிக களைப்பு என்பன
>
> தொடர்ந்து மூன்று கிழமைகளுக்கு
>
> மேல் இருந்தால் வைத்தியரிடம் சென்று
>
> ஆலோசனை பெறவும்."

### நோய் பற்றிய சரித்திரம்

- குடும்ப அங்கத்தவர் ஒருவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இருத்தல்
- மகப்பேறு அடைவதில் சிரமம் ஏற்பட்டால்
- சிறு வயதில் பூப்பெய்தியிருந்தால்
- பிந்திய வயதுவரை மாதவிலக்கு ஏற்பட்டிருந்தால்
- மார்புப்புற்று, குடல்புற்று, கர்ப்பப்பைப் புற்றுநோய் என்பனவற்றால் அவதியுற்றால்.

### புற்றுநோய் பரவிய நிலைகள்

**நிலை 1:** சூலகங்களில் மாத்திரம் பரவியிருத்தல்

**நிலை 2:** சூலகங்களுடன் இடுப்புப் பகுதியும் பரவியிருத்தல்

**நிலை 3:** சூலகங்கள், இடுப்பு, வயிறு என்பன

### இதயம் மலர்கிறது - 6

**நிலை 4:** சூலகங்கள், இடுப்பு, வயிறு, ஈரல் என்பன

நிலைகள் 1லும், 2லும் குணங்குறிகள் மிகவும் அரிதாகக் காணப்படுவதனால் அநேகமாக 3வது நிலையில் தான் இப்புற்று நோய் கண்டுபிடிக்கப்படுகின்றது.

சூலகப் புற்றுநோய் மிகவும் பாரதூரமானதாகையால் மேற்கூறிய பிரதான குணங் குறிகள் ஒன்றோ, பலவோ மூன்று கிழமைகளுக்கு மேல் தொடர்ந்தும் காணப்பட்டால் வைத்திய உதவியைக் கட்டாயம் நாடுவதன் மூலம் பல சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

### சோதனைகள்

- PAP Test என்று கூறப்படும் சாதாரணமாகச் செய்யப்படும் சோதனை சூலகப் புற்றுநோயைக் கண்டுபிடிக்காது.
- யோனியினூடாகச் செய்யப்படும் ULTRA SOUND சோதனை.
- குருதிப் பரிசோதனைகள் இரண்டு (CA125 ம், LPAம்)
- மலவாசலினூடாகச் செய்யும் நேர்குடல் சோதனையும் நல்லது.

### நோயின் தீவிரம் அறிதல் (PROGNOSIS)

- பெண்ணின் வயது
- உடல் நிலை
- வாழ்க்கைத்தராதரம்
- நோயைக் கண்டுபிடிக்கும் பொழுது அதன் நிலை என்ன, எவ்வளவு தூரம் பரவியுள்ளது (STAGES)
- நோயின் தரம் (GRADE) என்ன...

போன்ற பல காரணங்களை ஆராய்ந்து இதன் தீவிரம் அறியப்படும்.


### சிகிச்சை

நோயின் தீவிரத்தைப் பொறுத்துச் சிகிச்சை அமையும். மருந்துகள், கதிர்வீச்சு, சத்திர சிகிச்சை என்பன மூலம் சிகிச்சைகள் அளிக்கப்படும். சில சமயங்களில் இது ஒரு தொடர் சிகிச்சையாக வாழ்நாள் பூராகவும் செய்ய வேண்டி ஏற்படலாம். இதனால் தான் முளையிலேயே கிள்ளி விடுதல் சாலவும் சிறந்தது. சில சந்தர்ப்பங்களில் சிகிச்சையளிக்கப்பட்ட இடங்களில் அல்லது வேறு இடங்களில் நோய் மறுதலித்து அதற்குரிய சிகிச்சைகள் செய்ய வேண்டிய கட்டங்களும் ஏற்படத்தான் செய்யும். ஆனால் சூலகப் புற்றுநோயுடன், மற்றவர்கள் போல் நீண்டகாலம் வாழ்ந்தவர்களும் உண்டு.

மருந்து சிகிச்சையா, சத்திர சிகிச்சையா, கதிர்வீச்சுச் சிகிச்சையை அல்லது மேற்கூறிய சிகிச்சைகளின் சேர்க்கையா சிறந்தது என்பதை வைத்தியர்கள் நோயாளியுடனோ அல்லது உறவினருடனோ கலந்து விபரிப்பார்கள்.

14ம் பக்கம் பார்க்க...

### கருப்பையின் மாதிரிப் படம்




இடம் 1. கருப்பையின் வெளிப்புறத்தில் கட்டிகள் வளரலாம். இவை வயிற்றுப்பகுதியில் உள்ள உறுப்புக்களை அமுக்கி அதன் மூலம் குணங் குறிகள் ஏற்படலாம்.

இடம் 2. கருப்பையின் நடுத்தசையில் கட்டிகள் உருவானால் கருப்பை மிகவும் தடிப்பமடைந்து கனதியாக இருக்கும்.

இடம் 3. கருப்பையின் உட்புறத்தில் உருவாகும் கட்டிகள் கர்ப்பம் தங்குவதற்கு இடையூறாக இருந்து கர்ப்பச் சிதைவை ஏற்படுத்தலாம்.

எந்த இடமாக இருப்பினும் கட்டியின் பருமன் அதன் தொழிற்பாடு என்பனவற்றைப் பொறுத்து குணங்குறிகள் ஏற்படும். வைத்திய ஆலோசனையை நாடுவது நல்லது.

முதலுதவி கற்பதற்கும் ஆலோசனைகளிற்கும்
**Dr.Kandiah Senthilnathan**
(Registered Medical Officer - SLMC)
Echo-cardiographer - Canada,
First Aid & CPR Instructor
(Certified in Canada)
**647-801-9252, 416-502-9252.**

# எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

**416.438.1688**

Fax: 416.438.1612
2250 Midland Ave., #3
(South of Sheppard)
Unit 3, Scarborough, ON M1P 4R9

RBC Financial Group





**Justin William**
*Broker*
**Cell: 416.803.7344**




**Ravi Raveendran**
*Broker*
**Cell: 416.817.8479**



**Wilton Gnanapragasam**
*Sales Representative*
**Cell: 416.554.4747**




- Well Maintained Condominium
- 2 Bedrm W/Ensuite Washrm
- Larger Corner Unit
- Two Parking Spaces
- Call **Wilton** For Details....




- Good Location
- Ideal family Neighbourhood
- Spacious 3 Bedrooms
- Finished Basement
- Call **Ravi** For Details....




- Spacious Luxury House
- Detached 4 Bedroom House
- Excellent Neighbourhood
- Finished Basement Apartment
- Call **Wilton** For Details....




- Beautiful Detached House
- Excellent Location
- Spacious 4+2 Bedrooms
- Close To Schools & Ttc.
- Call **Ravi** For Details....





- Beautifull Freehold T/House
- 3 Bedrooms & 2 Washrooms
- Finished Walk-Out Basement
- Do Not Miss This
- Call **Ravi** For Details....




- 3 Bedroom Detached House
- Finished Basement W/Entrance
- Laminated Floor Throughout
- Walk To Schools & Transit
- Call **Wilton** For Details....




- 4 Bedroom Detached House
- Hardwood Floor On Main Floor
- Nice Deck At Back Yard
- Professionally Finished Basement
- Call **Justin** For Details....




- 4 bedroom Detached House
- Shows Very Well
- Hardwood On Main Floor
- Convenient & Quiet Location
- Call **Justin** For Details....




- 4 Bedroom Clean House
- Great Location
- Finished Basement
- Harwood Floor On Main Floor
- Call **Wilton** For Details....




- Luxury Condo In Downtown
- One Bedroom Plus Den
- All Appliances Are Included
- Walk To Lakeshore
- Call **Ravi** For Details....




- Detached House In Oakville
- Less Than 5 Years Old
- Approx 3259 Sq Ft
- Premium Corner Lot
- Call **Justin** For Details....




- Busy Convenience Store
- Very Profitable Business
- Lotto Commission $2000/Mth
- Do Not Miss This Opportunity
- Call **Justin** For Details....

**HomeLife GTA Realty Inc., Brokerage*** 1711 McCowan Rd, Suite 206, Scarborough, On. **Office: 416.321.6969**

This is not intend to solicit properties currently listed for sale

*Independently owned and operated

# பயனளிக்கும் முதலீடுகள்



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -
karunagopal@thaiveedu.com

தாய்வீடு வாசகர்களுக்கு மீண்டும் அன்பு கலந்த வணக்கங்கள். இந்த மாதத்திற்கான சஞ்சிகைக்கு கிடைக்கப்பெற்ற தரமான கேள்விகளை ஆராய்வோம்.

**நான் தற்போது வசித்துவரும் வீட்டினை விற்றுவிட்டு சுமார் இரண்டு வருடங்கள் வாடகை வீட்டிற்கு செல்ல எண்ணுகிறேன். இதற்குரிய முக்கிய நோக்கம் வீட்டு சந்தை நிலவரத்தை ஒட்டிய ஓர் பயமே. இதற்கு உங்கள் கருத்து என்ன?**

செ.மோகன் மார்க்கம்

நல்லது மோகன். இதற்குரிய பதிலினை பார்ப்பதற்கு முன்னர், நாட்டின் பொருளாதாரம், வீட்டு சந்தை நிலவரம் எவ்வாறு செல்லும் என்பது திட்டவட்டமாக கூறமுடியாதது. உங்களைப் பொறுத்தவரை, நீங்கள் வீட்டின் விலை வீழ்ச்சியில் நம்பிக்கை உடையவராயின், உங்கள் முடிவு சரியானதே. நிற்க,

நாங்கள் இரண்டு காரணங்கள் கருதி ஓர் வீட்டினை பெற்றுக்கொள்கிறோம். ஒன்று அடிப்படை வதிவிட தேவை. மற்றது பணம் ஈட்டும் நோக்குடன் முதலீடு செய்வது. இதில் முதலாவதான அடிப்படைத் தேவைகள் என்று வரும்போது, நாம் வசிப்பதற்கு நிட்சயம் ஒரு குடியிருப்பு அத்தியவசியமாகிறது. அது மட்டுமன்றி அக்குடியிருப்பினை சார்ந்து பல தேவைகளோ சேவைகளோ இருக்கலாம். உதாரணமாக உங்கள் குழந்தையின் பாடசாலைகள், போக்குவரத்துகள், Daycare வசதிகள் மற்றும் நெருங்கிய உறவுகள் என்று கூறிக்கொண்டே போகலாம். சரி, கீழ் வரும் ஓர் உதாரணத்தினை பார்ப்போம். நீங்கள் ஓர் நான்கு அறைகள் கொண்ட வீட்டின் சொந்தக்காரர் என்று வைத்துக் கொள்வோம். உங்கள் வீட்டின் விலை சுமார் $400,000. அதனை விற்பதற்காக நீங்கள் செலவிடும் தொகை சுமார் $20,000 Mortgage rent சுமார் $6,000 வாடகை வீட்டில் குடி போவதற்கு ஏற்படும் செலவுகள் சுமார் $4,000 இரண்டு வருடம் நீங்கள் செலுத்தப்போகும் வாடகைப் பணத்தில் உங்கள் முதல் சம்பந்தமாக நீங்கள் இழக்கும் தொகை சுமார் $10,000 ஆகும். 10,000 செலவு செய்து வசதிகள் குறைவான வீட்டுக்கு செல்வதற்கு நீங்கள் எண்ணுவது வீட்டு சந்தை நிலவரம் தான் காரணம் எனின், அண்மைய கருத்துக் கணிப்புகளின்படி கடனாவில் வீட்டுச்சந்தை இன்னும் திடமாகவே காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி முன்னைய காலங்களில் அமெரிக்காவில் ஏற்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் கனடாவினை பெரிதும் பாதித்ததுபோல் இனிவரும் காலங்களில் ஏற்படாது என்பதும் ஒரு சாரார் கருத்து. அவ்வாறே எனினும் சுமார் 10% அளவுக்கு விலை வீழ்ச்சியினை வீடு ஏற்குமா என்பதும் ஓர் கேள்வியே. நாம் சமீப காலங்களில் 24.5% வளர்ச்சியினை ஒரு வருடத்தில் அனுபவித்தவர்கள் என்பதனாலேயே தற்போது நிலையான விலையில் தரித்திருக்கும் வீட்டுச் சந்தை கருதி சலனம் அடைகிறோம் என்பது எனது கருத்து. Time will cure என்று கூறுவது போல் காலம் பதில் சொல்லும்.

**“Mortgage penalty” இனை எவ்வாறு அறிந்துகொள்வது. அவை பற்றிய வேறுபட்ட கணக்கீடுகள் காணப்படுவதினால் நுகர்வோர்கள் சுரண்டப்படுவது போன்ற தோரணை காணப்படுகிறது. இதுபற்றி விளக்க முடியுமா?**

கே. கண்ணன், Sourdough.

நீங்கள் கூறியதுபோல் இவ் mortgage penalty இனை கணிப்பிடுவதற்கு என ஓர் திட்டவட்டமான முறைகள் என்பது இல்லை எனலாம். இதற்கு பல காரணங்கள் உண்டு. அதாவது நீங்கள் மோட்கேஜ் பெற்றுக் கொள்ளும் ளேையில் பொருந்திக்கொள்ளும் Terms/Conditions இனைப் பொறுத்து இவை வேறுபட்டுக் காணப்படுகிறது.

உதாரணமாக உங்கள் “Mortgage penalty ஐந்து வருடங்கள் ஓர் வங்கியுடன் வைத்திருப்பதாக பொருந்தியிருப்பின், அது கருதி அவ் வங்கியானது உங்களுக்கு சில சலுகைகளை வழங்கியிருப்பார்கள். அவ் ஐந்துவருட காலத்தில் நீங்கள் அவர்களிடமிருந்து இடைநிறுத்தம் செய்யவேண்டி வந்தால் உங்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் மீளப் பெறப்படும். உங்கள் penalty தொகையின் அளவும் நீங்கள் எவ்வாறான சலுகைகளை பெற்று நுகருகிறீர்கள் என்பதனையும் mortgage பெற்றுக்கொள்ளும் வேளைகளிலேயே அவர்களிடம் தெரிந்து கொள்ளலாம். நீங்கள் உங்கள் வீட்டில் குடியிருக்கப் போகும் கால அளவு தெரிந்தவராயின், (உ-ம் வருடம்) அக்கால எல்லைக்கு மட்டும் “Mortgage பெற்றுக் கொள்வதன் மூலம் இவ்வாறான பிரச்சினைகளை தவிர்கலாம். அல்லது நீங்கள் பெற்றுக் கொள்கின்ற Mortgage Fully open முறை மூலம் காணப்பட்டாலும் இவ்வகை penaltyஇனை தவிர்த்துக் கொள்ளலாம். இருப்பினும் இவ்வகை கடன்களுக்கான வட்டி விகிதம் சாதாரண வீதத்தை விட சற்று அதிகமாகவே காணப்படும். பொதுவாகக் கூறின் Mortgage penaltyஇனை 3 மாத வட்டியின் அளவு என்று கூறலாம். அதாவது நீங்கள் மாதாந்தம் செலுத்தும் வட்டித் தொகையினை மூன்று முறை அதிகரித்து பார்த்து ஓர் அண்ணளவான தொகையினை கணிப்பிடலாம்.

**எனது அயலவர் வீட்டு கூரைக்குள் “றக்கூன்” விலங்கு ஒன்று பல சேதங்களை இழைத்துவிட்டது. நான் வருமுன் காப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்திலுள்ளேன். அதற்கு என்ன யுக்திகள் கையாளலாம்.**

ம. பாமா. மார்க்கம்.

உங்கள் வீட்டுக்கும் கூரைக்கும் இடைப்பட்ட பகுதிகளில் துவாரங்கள் அல்லது அதற்கான தடயங்கள் இருக்கின்றதா என்பதனை அவ்வப்போது பாருங்கள். றக்கூன் வசிப்பதற்கு வசதியாக கருதுவது Attic என்று சொல்லப்படுகின்ற கூரைக்கும் வீட்டுக்கும் இடைப்பட்ட பகுதிகள்தான். தண்ணீர் வந்துசெல்லும் (பீலீகள்) குழாய்களை பற்றி றக்கூன்கள் வீட்டுக்குள் நுழைய முற்படும். மற்றும் chimney ஓரங்கள் என்பவற்றையும் அவதானித்தல் வேண்டும். ஒருவேளை றக்கூன் வீட்டுக்குள் இருப்பதனை நீங்கள் அறிந்தால் அதனைத் துன்புறுத்தவோ அல்லது அவை சென்ற பாதையினை அடைத்துவிடுவதோ நல்லதல்ல. இதனால் நீங்கள் பல தீங்குகளை அனுபவிக்க நேரிடும். அவற்றினை வெளியேற்றுவதற்கு என பல நிறுவனங்கள் உண்டு. அவர்களின் உதவியினை நாடலாம். மீள்காப்பு நடவடிக்கையாக வீட்டு அத்திவாரங்கள் மற்றும் முக்கியமான பகுதிகளை துப்பரவாக வைத்துருப்பது மட்டுமன்றி (Naphthalene ball) பூச்சிமுட்டை என்று நாம் முன்னர் பூச்சிகளிடம் இருந்து ஆடைகளை காப்பதற்கு பயன் படுத்திய உருண்டைகளை ஆங்காங்கு இட்டுவைப்பதன் மூலம் பூச்சிகள் மட்டுமன்றி றக்கூன்களையும் கிட்ட நெருங்காமல் பார்க்கலாம்.

**நான் புதிதாக குடியேறிய வீட்டில் சூடு/குளிர் கட்டுப்பாட்டு கருவியினை சிறந்த முறையில் இலக்குவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை யாது? அனேக சந்தர்ப்பங்களில் வீடு கடும் குளிராகவோ அல்லது சூடாகவோ காணப்படுகின்றது.**

சிவா. R. Scarborough

இது ஓர் பொதுவான பிரச்சினையே. கீழே படத்தில் காணப்படுவது போன்ற இரண்டு விதமான ஆழிகளை இதற்காக பயன்படுத்துகின்றனர். இவை இரண்டுமே தானியங்கி வகையானதாக காணப்படும் அதே வேளை படம் இரண்டில் காணப்படும் வகையானவை (Electronic programmable Thermostats) உங்கள் விருப்பம் போல் ஒரு நாளில் அல்லது கிழமையின் தேவையான அளவு சூட்டினையோ அல்லது குளிரினையோ முன்கூட்டியே பதிவு செய்யக்கூடியது. அது மட்டுமல்லாது அவை தானாகவே கூடிக் குறையும் தன்மை வாய்ந்ததும் கூட.

படம் 1 படம் 2

இவ் இரண்டு வகை ஆழிகளும் பொதுவான

13ம் பக்கம் பார்க்க...

BALACHANDRAN LAW OFFICE

We specialize in:

> Business Law
Purchase, sale, business registration


> Family Law
Divorce, separation agreements

> Immigration Law
Sponsorship, refugee hearings, work permit

> Estate Law
Probates, estate planning

> Real Estate (Commercial/Residential)
Buying and selling property, mortgages

> Last Will, Power of Attorney, Affidavit, etc.




Balachandran Muthaiah, LL.B.
Barrister, Solicitor & Notary Public

சட்டம் சம்பந்தமான சகல தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகத்துடன்
தொடர்பு கொள்ளுங்கள்.
இலவச ஆரம்ப ஆலோசனை!

2401 Eglinton Ave. E.
Suite 300
Toronto, ON M1K 2M5
Tel.: 416 755 5544
Fax: 416 755 5594
Email: balalawoffice@gmail.com

(at southwest corner of Kennedy & Eglinton)



NuTek COMPUTERS
www.nuTechComputer.com

☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair

அனைத்து கணணி திருத்த வேலைகளும்
உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்

416.587.1619
techsupport@nutechcomputer.com

Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional

SALES - SERVICE - UPGRADES



Buy & Sell Residential &
Commercial Properties
1st PRIZE
NEW CAR - 2008 BMW 3 Series
You can win!..
** Some terms and conditions apply
2nd PRIZE
WIN a TRIP for 2 to CUBA
3rd PRIZE
46" flat screen TV
Raj. A. Rasaratnam B.Com.
Sales Representative
416-726-8055
416-299-8570
HOMELIFE
HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently own and operated
1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3
Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963
Buy or sell any property with my help and enter the draw!
Don't miss out on these wonderful prizes!
Mortgage arrangement, Business incorporation
and corporate tax preparation
416-726-8055


குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி
RESP SPECIAL!
இம்மாதம் RESP செய்பவர்களுக்கு
3 விசேட சலுகைகள் உண்டு!
- Start from $25
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
RBC Insurance
Canada Life
Manulife Financial
தனா
மாணிக்கவாசகர்
Broker
Life Insurance
Critical Illness Insurance
Home Equity Line of Credit
Disability Insurance
Mortgage Insurance
RRSP - Start from $25
Loan approval within 24hrs - Bad credit no problem
RESP - Start from $25
(20%-40% Government Grant + 15% Company Bonus)
INSURANCE SERVICE INC.
Cell: 416-728-5772
Business: 416-290-1200

# பயனளிக்கும்...

**11ம் பக்கத் தொடர்ச்சி...**

சில அமசங்களை கொண்டிருக்கும். ஒன்று குளிர்/சூடு தெரிவு செய்யும் பகுதி மற்றயது காற்றாடியினை தொடச்சியாக இயக்குவதா அல்லது தேவையான வேளைகளில் இயக்



குவதா என்பதனை தெரிவு செய்யும் பகுதி.


இவை தவிர்த்து 'Temperature Control Dial' அதாவது உங்களுக்கு போதுமான (விரும்பிய) தட்பநிலையினை தெரிவு செய்யும் பகுதி. வீட்டில் எப்போதும் யாராவது இருக்கின்ற பட்சத்தில் ஓர் தொடர்ச்சியான (சமநிலையான) வெப்பத்தை/குளிரினை பேணுவதற்காக நீங்கள் Temperature Dial பகுதியில் 21C அல்லது சற்று குறைவாகவோ/அதிகமாகவோ தெரிவு செய்தபின்னர் Heal/Cool ஆழியினை முடுக்கி விடலாம். பின்னர் காற்றாடியை Auto பகுதியில் திருப்பிவிடுவதன் மூலம் வீட்டுக்குள் எப்போதும் சமநிலையில் வெப்பம் காணப்படும். அது மட்டுமன்றி இவ்வாறு செய்வது எரிபொருள் சிக்கனத்திற்கும் வழிகோலும்.

**சிறு முதலீடுகள் செய்வதற்கு RRSP மற்றும் RESP தவிர்த்து, பல தனியார் கம்பனிகளும் உண்டு. இவை தவிர்த்து**

**'Real Estate Investment' சார்பாக செய்யக்கூடிய முதலீடுகள் யாவை?**

அல்பேட். S. Brampton

நீண்டகால வைப்புக்கள் எனும்போது Real Estate Investmentகள் எப்போதும் முன்



னோக்கியே நகரக்கூடியவை. இன்றைய காலங்களில் பலர் $5,000 தொடக்கம் $50,000 உட்பட்ட காணிகளில் தமது முதலீடுகளை செய்கிறார்கள். அவைகள் விவசாயம் சம்பந்தமானவையாகவோ அல்லது தரிசு நிலங்களாகவோ இருப்பினும் சுமார் 10-20 வருட காலமளவில் நிட்சமாக நாட்டுப் பொருளாதாரத்தை ஒட்டிய ஓர் வளர்ச்சியில் செல்லும் என்பதில் ஐயமில்லை. மாறாக புதிய புனர்நிர்மாணங்கள் நெருக்கடியாகவுள்ள புறநகர்ப் பகுதிகள் சில எதிர்பார்த்ததை விட அதிக விலையுயர்ச்சியினைக் கொண்டிருக்கின்றது. இவைகளை நாளடைவில் உங்கள் பிள்ளைகளுக்கு மாற்றம் செய்வதன் மூலமும் பல வரிச் சலுகைகளையும் நுகரும் வய்ப்புண்டு. இவை தவிர்த்து ரொறன்ரோ மத்திய பகுதிகளில் புதிதாக நிர்மானிக்கப்படும் Condoக்கள் இன்றும் ஓர் தொடர் வளர்ச்சி அடைந்தவண்ணம் உள்ளது. அவைகளில் நீங்கள் வைப்பிலிடும் முதல், பின்னர் வாடகைப் பணமாகவோ அல்லது விற்பதன் மூலமாகவோ பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறான வைப்புக்களை ஆராயும் போது பொதுவாக கூறுவது போல் 'High Risk High return of low Risk Low return' பதத்தினையும் ஞாபகப்படுத்துதல் அவசியம். அது மட்டுமன்றி நிலத்தில் விதைத்தது முளைக்கும் என்கின்ற சான்றோர் வாக்குக்கினங்க Real Estate Investment ஓர் சிறந்த முதலீட்டு மையமே.

நன்றி நேயர்களே. இன்று உலகின் பல பாகங்களிலும் மக்கள் அவலங்களை அனுபவித்த வண்ணமுள்ளனர். இருப்பினும் நமது சொந்த மண்ணில் அல்லலுறும் மக்களுக்காவது நாம் கைகொடுத்து உதவ வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயம். நாம் ஒவ்வொருவரும் நம்மால் முடிந்ததை செய்வோம்.

■ ■ ■

## பாவித்த ஆடைகள் மற்றும் பொருட்களை தந்துதவுங்கள்

**இடப்பெயர்வுகளும், இன்னல்களும் எல்லைமீறிய துன்ப சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் எம் உறவுகள் தினம் தம்முயிர்களை இழந்த வண்ணம் உள்ளனர். இவ்வாறான இறுதி நெருக்கடிகளில் புலம்பெயர் தமிழர் நாம், நம் கடமைகளையுணர்ந்து எம்மாலானஉதவிகளை நாமாக முன்வந்து செய்ய வேண்டும். அவை பணமாகவோ, பொருளாகவோ அல்லது ஆடைகளாகவோ இருக்கலாம். எம்மவர் மத்தியில் பல சங்கங்கள் மற்றும் துயர் துடைப்பு, புனர் வாழ்வு மையங்கள் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ இவற்றினை மேற்கொள்ளலாம். அவை மட்டுமன்றி மாற்று சமூகத்தினற்குள் ஓர் முற்று முழுதான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு தனிப்பட்டஒவ்வொருவரும் செயலில் குதிக்க வேண்டிய ஓர் இறுக்கமான சூழல் இன்றைய நிலை. நாம் தேர்தல்களை அண்மித்துள்ள காலகட்டத்தில் இதுபோன்ற (VOICE OF TAMILS) காரியங்களை இலகுவாக செயற்படுத்தலாம்.**

**இது தொடர்பாக நீங்கள் பாவித்த ஆடைகள் மற்றும் பொருட்களை (நிறை குறைந்த) தந்துதவ விரும்பினால் கீழ்வரும் முகவரியில் அல்லது தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள். நாம் ஒவ்வொருவரும் நம்மால் முடிந்ததை செய்வோம்**

**CEYLINGO FINANCIAL GROUP**
**203-2929 Laurence Ace East**
**Toronto on MIP 258**

**416-430-0111**



# கர்ப்பப்பை உதிரப்...

9ம் பக்கத் தொடர்ச்சி...

## மருந்துகள்

இவை புற்று நோய்க்கட்டிகளின் வளர்ச்சியை அல்லது பரவுதலைத் தடுத்து அதன் பருமனைச் சுருங்கச் செய்யும். பல வகைப் பட்ட மருந்துகள் உண்டு.

## கதிர்வீச்சு

அதிக சக்தி வாய்ந்த கதிர்களைப் புற்று நோய்க்கட்டிகள் மீது மிகவும் துல்லியமாகப் பாய்ச்சி அவற்றை அழிப்பதுடன், அவற்றின் வளர்ச்சியையும் நிறுத்திவிடலாம். வெளியேயுள்ள ஒரு இயந்திரத்தின் உதவியினால் இக்கதிர்வீச்சு பாய்ச்சப்படுகின்றது. அல்லது கதிர்வீச்சுத்தன்மையுள்ள ஒரு திராவகத்தை வயிற்றினுள் உள்ள சுற்று விரியினுள் குழாய் மூலமாகச் செலுத்தி புற்றுநோய் கட்டியை அண்டிய பகுதியில் விட்டு கலங்கள் தாக்கி அழிக்கப்படுகின்றன

இக்கதிர்வீச்சானது புற்றுநோய்க் கலங்களைத் தாக்கி அழிக்கின்றன. சாதாரண கலங்களும் கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டாலும் அவை தமது பழைய இயல்பான நிலைக்குத் திரும்பி விடுவதனால் கச்சிதமாகப் பாவிக்கப்படும் கதிர்வீச்சு கூடுதலாகப் புற்றுநோய் கலங்களையே அழிக்கின்றன. ஆகவே குறைந்தளவு பாதிப்பே சாதாரண கலங்களுக்கு ஏற்படுகின்றன. சாதாரண கலங்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கு கதிர் வீச்சு அளவின் பிரமாணத்தை அளவாகவும், சிகிச்சைக் காலத்தை இடைவெளிவிட்டும் சிகிச்சை முறையைப் பிரயோகிப்பார்கள்.

## சத்திர சிகிச்சை

புற்றுநோய் எவ்வளவு தூரம் பரவியுள்ளது, முளையிலேயே கிள்ளி எறிந்துவிடலாமா அல்லது ஏனைய சிகிச்சைகளும் பாவிக்க வேண்டுமா என்பது நோயைக் கண்டறிந்த வேளையில் பல பரிசோதனைகளின் பின்பு தீர்மானிக்கப்படும்.

நோய் பரவியுள்ள இடங்களைப் பொறுத்து கர்ப்பப்பை, அதன் கழுத்து, நிணநீர்க்கட்டிகள், அதனைச் சுற்றியுள்ள சுற்று விரிகள் என்பன அகற்றப்பட வேண்டி ஏற்படலாம். சத்திர சிகிச்சையின் பொழுது புற்றுநோய்க்கட்டி முற்றாக அகற்றப்படுதல் வேண்டும். இயலாத பட்சத்தில் எஞ்சியுள்ள சிறுபகுதிகள் கதிர்வீச்சினாலும் மருந்தினாலும் கரைக்கப்படும். முக்கிய உறுப்புக்களுக்குப் பங்கம் ஏற்படாமல் பூரண சிகிச்சைகள் வழங்கப்படும்.

பெண்களில் ஏற்படும் பின்வரும் வியாதியும் சில சமயங்களில் புற்றுநோயை ஏற்படுத்த வல்லது என்பதனால் இந்நோயினையும் இக்கட்டுரையுடன் சேர்த்துள்ளேன்.

## கர்ப்பப்பை உட்படைக்கல வியாதி (ENDOMETRIOSIS)

சாதாரண மாதவிலக்கின் பொழுது கர்ப்பப்பையின் உட்படைக் கலங்கள் மாத விலக்குடன் வெளியே சிந்தப்படுகின்றன என்று முந்திய இதழ்களில் கவனித்தோம். இந்த விசேடித்த கலங்கள் ஒவ்வொருமாதச் சுற்றின் பொழுதும் குழந்தை வளர்வதற்குரிய மேடையாகப் பதப்படுத்தப்பட்டுப் பின்பு குழந்தை தங்கி வளராத பட்சத்தில் மாதவிலக்குடன் உதிர்ந்து விடுகின்றன.

ஏதோ ஒரு காரணத்தால் இவ்விசேடித்த கலங்கள் கர்ப்பப்பையின் உட்படையில் மாத்திரம் உருவாகாமல், கர்ப்பப்பையின் வெளிப்புறத்திலும், பலோப்பியன் குழாய்களிலும், சூலகங்களிலும், சிறுகுடலின் வெளிப்பகுதிகளிலும், இடுப்புப் பகுதியின் உட்புற மேலணிக்கலங்களிலும் திட்டுகளாக உருவாகி விடுகின்றன. சில சமயங்களில் யோனியின் உட்பகுதி, கர்ப்பப்பைக் கழுத்து, சிறுநீர்ப்பை போன்ற பகுதிகளிலும் ஒட்டிக் காணப்படலாம். கர்ப்பப்பைச் சத்திர சிகிச்சைகளின் போது கூட சில சமயங்களில் இவ்விசேடித்த கலங்கள் தற்செயலாக வேற்று இடங்களில் அல்லது சத்திர சிகிச்சைத் தழும்புகளில் இடப்படலாம். அதனால் இக் கலங்கள் அங்கும் பரவி அதற்குரிய குணாதிசயத்தைக் காட்டலாம்.

## குணங்குறிகள்

- இடுப்பு வேதனை – மாதவிலக்கிற்கு முன்பாக ஏற்படும். மாதவிலக்கின் பின்பு குறைந்துவிடும்.
- மலட்டுத்தன்மை
- மலச்சிக்கல் அல்லது வயிற்றோட்டம்
- ஒழுங்கற்ற அல்லது அதிகமான உதிரப் பெருக்கு
- சிறுநீருடன் உதிரம் கழிதல்
- வேறு வேறு இடங்களில் விதைக்கப்பட்ட இத்தகைய கலங்களால் ஏற்படும் உடற் சூழ்நிலை புற்றுநோயையும் அவ்விடத்தில் ஏற்படுத்திவிட வாய்ப்பு உள்ளது.

## எப்படிக் கண்டு பிடிக்கலாம்.

- வைத்திய பரிசோதனை
- ULTRA SOUND / CT SCAN
- LAPAROSCOPY – வயிற்றுப்பகுதியில் சிறுதுளைகள் இட்டு அவற்றினூடாக நுண்ணிய கருவிகளைச் செலுத்தி நேரடியாகவே திசுக்களைப் பார்வையிடுவதுடன் சோதனைக்காகத் தேவைப்படும் சிறு பகுதிகளும் சுரண்டி எடுக்கப்படும்.

## சிகிச்சை

- வைத்தியர்கள் குடும்பக்கட்டுப்பாட்டு வில்லையைப் பாவிப்பார்கள்.
- நோயின் தன்மையைப் பொறுத்து வேறு சிகிச்சைகள் வைத்தியரினால் நிர்ணயிக்கப்படும்.

## கவனிக்க வேண்டியவை என்ன?

வயிற்று வேதனையுடன் வயிற்றுப் பொருமல், அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும் போன்ற உணர்வு, அதிக களைப்பு என்பன தொடர்ந்து மூன்று கிழமைகளுக்கு மேல் இருந்தால் வைத்தியரிடம் சென்று ஆலோசனை பெறவும்.

■ ■ ■

www.inayam.net

உங்கள் நிகழ்வுகளை பார்ப்பதற்கும் பதிவதற்கும்

www.inayam.net

416 400 6406

HOMELIFE FUTURE REALTY

Office: 416-264-0101
Fax: 416-261-1519

262 Markham Road
Toronto, Ontario
M1J 3C5

HOMELIFE HIGHER STANDARDS

Dedicated to...
Making Your Dream Home
A Reality

LOKAN SUNDARAM
Broker
416-450-3984
lokan.homelife@gmail.com






- Commercial Unit
- 1243 Sq.Ft
- Fin.Unit w/Washrm & Office
- Mjr. Development in Progress




- 3 Bedrooms
- 3 Washrooms
- Hardwood Floors Throughout
- Brand New Appliances




- 2 + 1 Bedrooms
- 3 Washrooms
- Fin. Bsmnt w/Sep. Ent
- Close to all Amenities




- 1 + 1 Bedrooms
- 1 Washrooms
- New Appliances
- Fabulous Outdoor View




- 4 Bedrooms
- 2 Washrooms
- Close to all Amenities




- 2 Bedrooms
- 2 Washrooms
- Perfect for First Time Buyers

I'm here to get your mortgage smarter and faster.
உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.

- **Residential**
- **Industrial**
- **Commercial**

**1st, 2nd, 3rd Mortgages Upto 100%...**

**வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்**

**NO FEE FOR RESIDENTIAL MORTGAGES**
- Rate discount up to 3%
- Give me a call for free consultation
- Mortgages without no down payment

**We do the best for you**

நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்

When it comes to finding the Right Mortgage Solution to meet your needs, Please call **ME** befor making any **Decision!!!**

**Our interest rates starts from 0%**
- First-time Buyers
- Renewal
- Refinancing
- Pre-Approval
- Self Employed
- Bankruptcies
- Poor Credit
- New Immigrants
- Debt. Consolidation
- Construction Loans

invis

**After Approval**

# Joy is yours Pride is ours





**அகிலா செந்தில்**
**Akila Senthil**, *AMP*
*Senior Mortgage Consultant,*
*Team Leader, Platinum Award Winner*
*A Challenging Prosperity Long Term Experienced Team Leader*

**Cell: 416.895.4321**
104-5770 Hurontario St., Mississauga, ON L5R 3G5
Fax: 905-283-3339, Web: www.mortgageprincess.ca, E-mail: akilasenthil@invis.ca
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2



# specialize in

**• Storage**
Free of charge for Loading & Unloading

**• Cross Docking**

**• Pallets**
Custom Pallets
New & Used Pallets
We also buy used Pallets

**• Moving**
Also Available
24 ft Truck Rentel With Driver $145
**Call Kiruba**
**416-300-6458**



**GTA Special Rates!!!**
**For Straight Truck.**
**Dock to Dock**
***Direct***
***Rush***
***Sameday***
***TailGate Orders***

**11 years in Business**

**CONTACT: MURALI**
**416.569.4065**
89 Thournmount Dr., Unit 11&12, Scarborough, ON M1B 5V4
Morningside/Sheppard - Next to Home Depot
1 min. from Hwy401
fax: 416.724.8417, e-mail: emk4u@hotmail.com

emk ENTERPRISES INC
LOGISTIC & TRANSPORTATION


வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...
வீடு வாங்க விற்க அல்லது அது சம்பந்தமான விபரங்களுக்கும் குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ் செய்யவும் நட்புடன் அழையுங்கள்....
$179,900
Brimley / Finch
$419,000
Countryside / Sunny Meadow
4 Bedrooms 3 Washroom
Separate Entrance
$125,000
Warden/ Eglinton
Sale of Business
Automotive
$244,900
Hurontario/Strathave
2 Bedrooms 2 Washroom
$189,000
Keele & Finch
3 Bedrooms 2 Washroom
$399,000
Kingston Rd & Chapman
4 + 1 Bedrooms 4 Washroom
$382,900
Islington & Rutherford
3 Bedrooms 4 Washroom
Finished Basement
$325,000
McCowan & Kinston
3+1 Bedrooms 3 Washroom
$389,900
Manse / Lawrence
4+2 Bedrooms
3 Washroom
$529,900
Whites Rd & Kingston Rd
4 Bedrooms 3 Washroom
Sep Entrance to Basement
$229,900
Neilson &McLevin
3+1 Bedrooms 4 Washroom
Finished Basement
$279,900
Birchmount & 401
3+1 Bedrooms 2 Washroom
Finished Basement W / O
$299,900
Medowale & Sheppard
3 Bedrooms 3 Washroom
Finished Basement
Ravi Logarajah B.Sc
Tharsi Rajenthiram B.B.A
*Sales Representative
Call : 416-843-7474
HOME LIFE
HIGHER STANDARDS
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
*Independently Owned and Operated, Realtor
BUS: 416-298-3200 / FAX: 416-298-3440


இயற்கை மூலிகையின் உதவியுடன் உங்கள் கேசத்தை பராமரியுங்கள்!
The ERVAMATIN™ HAIR LOTION
உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஔடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்புவும் கிடைக்கிறது.
Ervamatin POWER
Loção Capilar Natural
SHAMPOO
Ervamatin
OPIBRA
Dreamron HENNA
Treated Natural Henna
இப்போது ஐரோப்பா எங்கும் விற்பனையாகிறது!
இயற்கை மூலிகையிலான தலை முடி மை
இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.
The Ervamatin Hair Lotion
Provides effective and fast therapy for hair loss
And its treatment ensures excellent therapeutic results.
Recommended as a treatment for
Hair loss, hair regeneration, dandruff, alopecia,
Thin hair, baldness, fragile and dry hair.
Amazon Health Care
BBB ACCREDITED BUSINESS
SABONA & Gift
Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)

# கழிவுப் பொருட்களை அகற்றுவதில் ஏற்பட இருக்கும் பாரிய மாற்றம்

## Garbage is Changing

### வீடும் விடியலும் - 32


வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -
vela@thaiveedu.com




கடந்த இரு மாதக் கட்டுரைகளில் குறிப்பிட்டதற்கிணங்க ரொறொன்றோ மாநகரசபை அமுல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களில் கழிவுப் பொருட்களை அகற்றுவதில் ஏற்பட இருக்கும் மாற்றமும் மிகக் காத்திரமானது.

இதுவரை காலமும் இலைமறை காயாக இருந்த கழிவுப் பொருட்களை அகற்றும் கட்டணம் நவம்பர் மாதம் 1ந் திகதியில் இருந்து ஒவ்வொரு வீட்டு உரிமையாளர் களிடமிருந்தும் வெளிப்படையாக அறவிடப்பட இருக்கின்றது என்பது பலரும் அறிந்ததே. சற்று விபரமாகக் கூறுவதானால் கடந்த காலங்களில் வருடா வருடம் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக ஒவ்வொரு வீட்டு உமையாளருக்குமுரிய வருடாந்த சொத்து வரியில் (Property tax) $209.00 டொலர்கள்




உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த நடைமுறையில் மாற்றம் கொண்டுவரப்படுகின்றது. அதாவது மிகக் குறைந்தளவான கழிவுப் பொருட்களை வெளியேற்றும் வீட்டு உரிமையாளர்களுக்கு வருடாந்தம் 10 டொலர்கள் மீளளிக்கப்பட இருக்கும் அதே வேளை மிக அதிகளவு கழிவுப் பொருட்களை வெளியேற்றும் வீட்டுரிமையாளர்களிடமிருந்து வருடாந்தம் $190 டொலர்கள் வரை மேலதிகக் கட்டணமாக அறவிடப்பட இருக்கிறது. பாவிக்கப்படும் கழிவுப் பொருட்களுக்கான கொள்கலன்களின் அளவுகளைப் பொறுத்து செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தின் அளவு ($10.00), $39.00, $133.00, $199.00 என வேறுபட்டதாக இருக்கும்.

நாங்கள் தெரிவு செய்யும் கொள்கலன்களின் அளவுகளின் அடிப்படையிலேயே இக் கட்டணங்கள் அறவிடப்பட இருக்கின்றன. இக் கொள்கலன்களை 4 வேறுபட்ட அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம். கொள்கலன்களின் அளவுகள் கட்டணங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்படுகின்றது.






எமது தேவைக்கேற்ற விதத்தில் சரியான அளவு கொண்ட கொள்கலன்களைத் தெரிவு செய்ய வேண்டியது ஒவ்வொரு வீட்டுரிமையாளர்களினதும் கடமையாகும். ஊதாரணமாக ஸ்காபரோ நகரத்திற்கு கடந்த ஏப்ரல் மாதம் 25ம் திகதியுடன் இக்கொள்கலன்களுக்கு விண்ணப்பிக்கும் காலக்கெடு முடிந்தாலும் வீட்டுரிமையாளர்களின் நன்மை கருதி ஆகஸ்ட் மாதம் 25ந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. தொலைபேசி மூலமோ தபால் மூலமோ அல்லது Web Site மூலமோ விண்ணப்பித்ததற்கு அமைவாக அவர்களுக்குரிய அளவுகளில் கொள்கலன்கள் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுவிட்டது. விண்ணப்பிக்கத் தவறியவர்கள் அனைவருக்கும் 11/2 பை கொள்ளக்கூடிய நடுத்தரக் கொள்கலன்கள் ஒக்டோபர் மாதத்தில் விநியோகிக்கப்பட இருக்கின்றன. 4 மாவட்டங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கும் ரொரொன்ரோ மாநகரசபையின் சேவைப் பகுதிகளுக்கான விண்ணப்பிக்க வேண்டிய காலக்கெடுவும் கொள்கலன் விநியோக காலப்பகுதியும் ஏப்ரல் முதல் அக்டோபர் வரை வேறுபட்டதாக இருக்கின்றது. நீங்கள் பெற்றுக்கொண்ட கொள்கலன் கள் பெரிதாகிவிட்டது என நீங்கள் கருதினால் அதனைச் சிறிய அளவிற்கு மாற்றுவதற்கு எந்தவிதக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது. ஆனால், சிறிய கொள்கலனில் இருந்து பெரிய கொள்கலனுக்கு மாற்ற விரும்பினால் 20 டொலர்களைக் கட்டணமாகச் செலுத்த வேண்டியிருக்கும். முடிந்த அளவு வீட்டுரிமையாளர்கள் வெளியேற்றும் கழிவுப் பொருட்களின் அளவினை குறைத்து 70%மான கழிவுப் பொருடக்ளைத் திசை திருப்புவதே மாநகரசபையின் குறிக்கோளாக இருக்கின்றது என்பது இதிலிருந்து தெளிவாகப் புலனாகும்.

கழிவுப் பொருட்களை அகற்றும் நாளில் எந்தவித மாற்றமும் இருக்காது. வழமை போல இரண்டு வாரத்திற்கு ஒருமுறை கழிவுப் பொருட்கள் அகற்றப்படும்.

### மேலதிக கழிவுப் பொருட்கள்

வழமைக்கு மாறாக மேலதிக கழிவுப் பொருட்களை அகற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அதற்கும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கும் மேலதிகக் கட்டணம் செலுத்த வேண்டி இருக்கும். அதாவது கொள்கலன்கள் விநியோகிக்கப் படும் போது அதனுடன் சேர்த்து 5 கழிவுப் பைகளுக்கான நறுக்குகள் (TAGS) இலவசமாக வழங்கப்படும். ஆனால் அவற்றை 2009ம் ஆண்டு டிசம்பர் முடிவதற்கிடையில் பாவித்தல் வேண்டும். மேலதிக நறுக்குகள் தேவைப்படுமிடத்து $3.10 டொலர்களை மாநகர சபையிடம் செலுத்தி அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். 2008 நவம்பர் 1ம் திகதிக்குப் பின்னர் இத்தகைய உத்தியோக பூர்வ நறுக்குடன் வைக்கப்படும் கழிவுப்பைகள் மட்டுமே அகற்றப்படும்.

எவ்வளவு குறைவாக கழிவுப் பொருட்களை அகற்ற முற்படுகிறோமோ அவ்வளவு குறைவாக அதற்கான செலவும் இருக்கும். எனவே திட்டமிட்ட வகையில் முறைப்படி நீலக் கொள்கலன்களில் போட வேண்டிய பொருட்களை நீலக் கொள்கலனில் போடுவதை ஒவ்வொருவரும் நடைமுறைப்படுத்த வேண்டும். ஆய்வுகளின் படி மிள்பாவனைப் பொருட்கள் உரிய முறைப்படி நீலக் கொள் கலனில் போடப்படாது கழிவுப் பொருட்களுடன் சேர்க்கப்படுவதால் அதனைக் கையாள மாநகரசபைக்கு அதிகளவு செலவு ஏற்படுகின்றது என்பது தெரிய வந்திருக்கின்றது. மீள்பாவனைப் பொருட்கள் எவ்வளவு அளவு கூடினாலும் அவை இலவசமாகவே அகற்றப் படும். அத்துடன் பச்சைக் கொள்கலன் களில் போடப்படும் பொருட்களும் வாராந்தம் இலவசமாகவே அகற்றப்படும். எனவே வீட்டுரிமையாளர்கள் முறையாக நீலக் கொள்கலன்களையும் பச்சைக் கொள்கலன்களையும் பாவித்தால் அதன் மூலம் கழிவுப் பொருட்களின் அளவினைக் குறைத்து வருடாந்தம் அதனை அகற்றுவதற்காகச் செலவிடும் கட்டணத்தையும் குறைக்க வாய்ப்பு இருக்கின்றது.

மேலதிக தகவல்களுக்கு **416-392- 2467**

### உங்கள் புதிய கழிவுகலத்தைப் பயன்படுத்தும் விதம்

உங்களுக்கு ஊர்திப்பாதை இருந்தால், உங்கள் கழிவுகலத்தை ஊர்திப்பாதையில்

18ம் பக்கம் பார்க்க...







# கழிவுப் பொருட்களை...

17ம் பக்கத் தொடர்ச்சி...

வைக்கவும். இல்லாவிட்டால், தெருவோர நடைபாதை விளிம்பில், நடைபாதைக்குத் தடங்கல் விளைவிப்பதை இயன்றளவு குறைத்து வைக்கவும். அதனை எங்கே வைத்தாலும், மூடி வைக்கவும். உங்கள் பச்சைக் கலத்திலிருந்து ஆகக் குறைந்தது அரை மீட்டர் (கிட்டத்தட்ட 2 அடி) தள்ளி கழிவுகலத்தை வைக்கவும். கைபிடியும் சில்லும் உங்கள் வீட்டை நோக்கும் வண்ணம் அதனை நிலைநிறுத்தவும்.



### உங்கள் கழிவுகலத்தைப் பயன்படுத்தும் விதம்

- உங்கள் புதிய கழிவுகலம் கிடைத்த கையோடு அதன் வெண் முகவரிக் கீற்றில் உங்கள் வீட்டு இலக்கத்தைப் பொறிக்கவும்.
- புதிய கழிவுகலத்தை உடனடியாகப் பயன்படுத்தத் தொடங்கவும். பழைய கலத்தை வேறு தேவைகளுக்கு ஒதுக்கி வைக்கவும். அதற்கு இரு கைபிடிகள் இருந்தால், அதனை வெளிப்புறக் கழிவு கலமாகப் பயன்படுத்தவும்.
- உங்கள் கழிவு வகைகளை ஒரு பிளாஸ்திக் பையிலிட்டு கழிவுகலத்தினுள் இடலாம். அதற்கென விசேடமான பை எதனையும் பயன்படுத்த வேண்டியதில்லை. நீங்கள் விரும்பினால், கொள்வனவுப் பைகளை மீளப் பயன்படுத்தலாம் அல்லது (கழிவு வகைகளுக்கான பச்சைப் பை போன்ற) பெரிய பிளாஸ்திக் பை எதனையும் பயன்படுத்தலாம்.
- உங்கள் கழிவுகலத்தில் இட்டுவைக்கப் படும் கழிவு வகைகளே அகற்றப்படும். தற்போதைக்கு உங்கள் மேலதிக கழிவுப் பைகளை கழிவுகலத்தின் அருகில் வைக்கலாம். ஆனால் 2008 நவம்பர் 1ம் திகதிக்குப் பின்னர் அதற்கென மாநகரம் வழங்கும் பைவிபர நறுக்கினைப் பயன் படுத்த வேண்டும்.
- உங்கள் கழிவு வகைகள் வழமையாக அகற்றப்படும் நாளில் காலை 7 மணிக்கு முன்னதாக உங்கள் கழிவுகலத்தை தெருவோரத்தில் வைக்கவும்.
- உங்கள் கழிவுகலத்துக்கு விசைநாடா, கயிறு வகைகளை நீங்கள் இட்டிருந்தால், அவை கழிவு வகைகள் அகற்றப்படுவதற்கு முன்னர் முற்றாக அகற்றப்பட வேண்டும்.
- கழிவு வகைகள் அகற்றப்படும் நாளில் உங்கள் கழிவுகலத்தை தெருவோரத்தில் நகர்த்தி வைக்கவும். உங்களுக்கு ஊர்திப்பாதை இருந்தால், உங்கள் கழிவு கலத்தை ஊர்திப்பாதையில் வைக்கவும். இல்லாவிட்டால், தெருவோர நடைபாதை விளிம்பில், நடைபாதைக்குத் தடங்கல் விளைவிப்பதை இயன்றளவு குறைத்து வைக்கவும். கழிவுகலத்தை எங்கே வைத்தாலும், அதனை மூடி வைக்கவும். அதன் கைபிடியும் சில்லும் உங்கள் வீட்டை நோக்கும் வண்ணம் அதனை நிலைநிறுத்தவும்.
- உங்கள் பச்சைக் கலத்திலிருந்து அரை மீட்டர் (கிட்டத்தட்ட 2அடி) தள்ளி, மேலே மூன்று மீட்டர் (10அடி) வெற்றுவெளி விட்டு, உங்கள் கழிவுகலத்தை வைக்கவும்.
- (தளபாடம், மெத்தை, சுருள்வில் மெத்தைக்கூடு போன்ற) உருப்படிகளை நீங்கள் தொடர்ந்தும் உங்கள் கழிவு கலத்தின் அருகில் இட்டு வைக்கலாம். அவை புறம்பாக அகற்றப்படும். அதற்கு நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.
- குளிர்ப் பருவத்தில் துப்புரவான இடத்தில் உங்கள் கழிவுகலத்தை வைக்க முயலவும். கழிவு வகைகளை அகற்றும் பணியாளர்கள் அதே இடத்தில் கழிவுகலத்தை இட்டுச் செல்வார்கள்.

உங்கள் மீள்பாவனைப் பொருட்கள் அனைத்தையும் நீலக் கலத்திலும், (மரக்கறி, பழ வகைக் கழிவுகள், துடைப்புத் தாள்வகைகள், காப்பிக்கழிவு போன்ற) சேதனக் கழிவுகள் அனைத்தையும் பச்சைக் கலத்திலும் இடுவது முக்கியம் என்பதை நினைவில் வைத்திருக்கவும். அதன்படி உங்கள் வீட்டுக் கழிவு வகைகள் மூன்றிலொரு பங்கிலும் குறைந்த தொகை உங்கள் புதிய நீலக்கலத்தைச் சென்றடையும். உங்கள் நீலக்கலத்தையும், பச்சைக்கலத்தையும் சென்றடையும் கழிவுகள் எவை என்பது உங்களுக்கு நிச்சயமாகத் தெரியாவிட்டால், உங்கள் கழிவகற்றல் நாட்காட்டியில் அல்லது **www.toronto.ca/recycle** என்னும் இணையத்தளத்தில் பார்த்து, அல்லது 416-338-2010 என்னும் தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தி வேண்டிய விபரங்களை அறிந்துகொள்ளலாம். 2008 நவம்பர் 1ம் திகதி வரை கழிவுகலத்துக்கு அருகில் வைக்கப்படும் மேலதிக கழிவுப் பைகள் அகற்றப்படும். நவம்பர் 1ம் திகதிக்குப் பின்னர், மாநகரம் வழங்கும் பைவிபர நறுக்குடன் கூடிய மேலதிக கழிவுப் பைகள் மட்டுமே அகற்றப்படும். 2009 மார்கழி மாதம் காலாவதியாகும் ஐந்து இலவச பைவிபர நறுக்குகள் இந்த இலையுதிர்ப் பருவத்தில் ஒவ்வொரு வீட்டுக்கும் கடித மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலதிக பைவிபர நறுக்குகளுக்கு கட்டணம் செலுத்த வேண்டும். விபரங்களுக்கு கீழ் வரும் இணையத்தளத்தை நாடவும்:
**www.toronto.ca/target70.**

■ ■ ■


# Tutoring

**Grade 1- 7 : English, Math, Science & Social Studies**
**Grade 8- 10: English & Math**

## அஞ்ஜலீன் ஜீவா திசைராஜா
**B.A (Hons),M.Sc,Ph.D**

## (647) 291 1357
**(Kennedy & Ellesmere அருகாமையில்)**





# Buying or Selling Homes
## Selling Commission , As Low As 1%
# Call Nada

**Nada.G.Nadarajah B.V.Sc**
**Sales Representative**

**Cell: 416 – 616 – 8751**
**Bus: 416 – 293 – 5093**

HomeLife Metro Realty
Inc. Brokerage
**Platinum Award Winner**
**Ontario Emerald Club Member**




**McCOWAN/MAJOR MAC**
Detached/2-Storey
4 Bedrooms - 3 Washrooms
2 Yrs. Old | 2947 sq. ft




**CHURCH/KINGSTON RD.**
Condo. Apt
1 Bedrooms - 1 Washrooms
Open Balcony, Great View!




**McCOWAN/FINCH**
Condo Apartment
2 Bedrooms - 2 Washrooms




**HIGH VIEW/WHITES**
Detached 2-Storey
5+1 Bedrooms - 3 Washrooms
Approx. 3122 Sqft.




**CORONATION/MANSE**
Detached Back-Split
4 Bedrooms - 3 Washrooms
2 Kitchens




**MIDDLEFIELD/FINCH**
Condo Apartment
2+1 Bedrooms - 3 Washrooms
Open Balcony, 2 Yrs. Old!

NEW LISTING



**MIDLAND/EGLINTON**
Sale of Business
Beauty Salon




**DON MILLS/OVERLEA**
Condo Townhouse
2-Storey
4 Bedroom - 2 Washrooms

# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க



புத்தம் புது வாகனத்தை வெல்லுங்கள் WIN



$329.900
Kipling & Steeles
3 Bedrooms 3 Washroom



$448.900
Western & Rutherford
3 Bedrooms 3 Washroom
All Wood Floor




$319.888
Sheppard & Markham
3 Bedrooms 4 Washroom
Finised Basement



*Some conditions may apply

**ULTRAMAR GAS STATION WITH 5 BEDROOM HOUSE & GARAGE**
**$499.000**

**GAS STATION WITH CONV. + LOTTO 649 + WAREHOUSE +GARAGE**
**WEST END OF TORONTO**
**$845.000**



$162.500
Weston & Sheppard
2 Bedrooms 2 Washroom




$339.900
Torbram / Boviard
4 Bedrooms 3 Washroom
Hardwood Floor

மேலும் பல வீடுகளும்,
விற்பனை நிலையங்களும்
விற்பனைக்குண்டு.

நம்பிக்கை நேர்மை நட்பான சேவைக்கும் அழையுங்கள்

Win a brand New TOYOTA - fj - CRUISER

Century 21
Affiliate Realty Inc.
Brokerage
208 - 80 Corporate Drive, Toronto, Ontario M1H 3G5
Bus: 416-290-1200
Fax: 416-290-1900

# சத்தி மருதப்பா
Sales Representative
(முழுநேர வீடு விற்பனை முகவர்)

# 416-816-1500

"இளமையில் சோம்பேறி
முதுமையில் வறுமை"

brightsun print - 416-845-6565



# நிம்மதியான வாழ்வுக்கு நிரந்தரத்தீர்வு காப்புறுதி ஒன்றே...

ஆமாம் உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமான ஒரு காப்புறுதி நிறுவனத்தில்
உங்கள் குடும்பத்திற்குரிய அனைத்துக் காப்புறுதி ஒப்பந்தங்களையும்
ஒழுங்காக அமைத்துத் தருவதே எனது சேவை....

# சியாமளா ரட்ணசபாபதி

RBC
Manulife Financial
Canada Life

COMMUNITY
FINANCIAL SERVICE GROUP INC.
2100 Ellesmere Road, Unit 105, Scarborough, Ontario M1H 3B7



# LIFE INSURANCE

## Shiamala Ratnasabapathy
Life Insurance Broker

## Dir : 416.414.2374

# முதியோர் துஷ்பிரயோகம் (Elder Abuse)

வயது முதிர்ந்தோரின் சர்வதேச தினமானது (International Day of Olderr Persons) ஒக்டோபர் 1 ஆம் திகதி அனுசரிக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே.

முதியவர்கள் விடயத்தில் கனடாவின் சிறப்பான பங்களிப்புக்களின் காரணமாக, உலக முதியோர் துஷ்பிரயோக விழிப்புணர்வு நாளுக்கான (ஜுன் 15) (World Elder Abuse Awareness Day 2008) சர்வதேச மாநாடு நடைபெறும் இடமாக ஒட்டாவா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இவ் விழிப்புணர்வு பிரச்சாரம் வயது முதிர்ந்தோரின் சர்வதேச தினத்தில் (ஒக்டோபர் 1, 2008) ஆரம்பித்து வைக்கப்பட்டது. முதியவர்களுக்கெதிரான உடலியல், நிதி, உளவியல் மற்றும் பாலியல் துன்புறுத்தலுக்கெதிராக போராடுவதற்கு உதவுமுகமான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக இந்த விழிப்புணர்வு பிரச்சாரம் அமைந்தது.

இதனை விட முதியவர்களின் நலன் தொடர்பான அரசாங்கத்தின் அண்மைக்கால செயற்பாடுகள் மற்றும் மாற்றங்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

குறைந்த வருமானமுள்ள வயது முதிர்ந்தவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தில் அதிகமானவற்றை தாமே வைத்திருப்பதை உறுதிப்படுத்தும் பல்வேறு வழிமுறைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. உத்தரவாதப்படுத்தப்பட்ட வருமான சேர்க்கையில் (Guaranteed Income Supplement) இருந்ததான விதிவிலக்குகளில் ஏற்பட்ட அண்மைக்கால மாற்றங்களின் மூலம் உழைக்கும் குறைந்த வருமானமுள்ள வயது முதிர்ந்தவர்கள் பயனடைவர். இம்மாற்றங்கள் ஜுலை 1, 2008 இல் இருந்து அமுலுக்கு வந்துள்ளது.

முதியவர்களின் நலன் மற்றும் வாழ்க்கைத் தரம் தொடர்பான எல்லா விடயங்களிலும் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுமுகமாக தாபிக்கப்பட்ட தேசிய முதியோர் சபை (National Seniors Council) ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ளது. இச்சபையானது இரண்டு முக்கிய விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்துள்ளது. அவையாவன:

- முதியோர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக போராடலும், விழிப்புணர்வை ஏற்படுத்தலும்
- குறைந்த வருமானமுள்ள முதியவர்களுக்கு குறிப்பாக தனியாக வாழும் பெண்களுக்கு ஆதரவு கொடுக்கும் வழிமுறைகளை கண்டறிதல்

New Horizons for Seniors Program –NHSP ஆனது முதியோர் தமது சமூகங்களில் சிறப்பான பங்காளராகவும் நல்ல வாழ்க்கைத் தரத்தின் மூலம் பயன்பெறுவதையும் உறுதி செய்கின்றது. 2007 இல் NHSP, முதியோர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வை அதிகரித்துள்ளதுடன் முதியவர்களுக்கான சமூக கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களின் தரத்தை உயர்த்தலுக்கான மூலதன உதவியை வழங்குகின்றது.

இதன்மூலம் மார்ச் 2008 இல் முதியவர்களின் செயற்திட்டங்களையும் நடவடிக்கைகளையும் தொடர்வதற்கு தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் வசதிகளுக்கான நிதி உதவியினை 800 நிறுவனங்கள் பெற்றுள்ளன.



ஜீவா திசைராஜா
jeeva@thaiveedu.com

வயது செல்லச் செல்ல முதியவர்களும் குழந்தைகளாகவே மாறிவிடுகின்றனர். உடலியல் ரீதியில் எதற்கும் இயலாது போகும் போது அவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் சந்தர்ப்பங்களும் அதிகமாகவே காணப்படுகின்றன.

அண்மையில் திருமணம் செய்த 79 வயது எட்மண்டனைச் சேர்ந்த ஆண் ஒருவர் தாம் வாழ்நாள் முழுவதும் சேர்த்த பணத்தினை 50 வயது மனைவியிடம் பறிகொடுத்தார்.

அவரது நம்பிக்கை அல்லது எதிர்பார்ப்பு பொய்த்துப் போவதினால் அவருக்கு ஆபத்து அல்லது மனத்துயரம் ஏற்படல் எல்லா உறவு முறையினுள்ளும் ஏற்படலாம். வயது முதிர்ந்தோர் துஷ்பிரயோகம் வீடுகளில், அல்லது ஏனைய வாழிட அமைப்புகளில் அல்லது அவரது சமூகத்திலும் நடைபெறலாம். ஒன்ராறியோவில் 4% இற்கும் 10% இற்கும் இடைப்பட்ட வயது முதிர்ந்தவர்கள் ஏதோ ஒருவகையான துஷ்பிரயோகத்தை அனுபவிக்கிறார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.



உளரீதியாகக் களைப்படைந்த நொவாஸ்கோஷியாவைச் சோர்ந்த 53 வயது பராமரிப்பாளர் தனது 98 வயது தாயை உடலியல் ரீதியாக துன்புறுத்தினார்.

குவிபெக்கில் முதியவர் ஒருவரின் வீட்டினைத் துப்பரவு செய்ய வந்த பராமரிப்பாளர் ஒருவர் அநேக திருட்டுகளுக்காக குற்றம் சாட்டப்பட்டார்.

அல்பேட்டாவைச் சேர்ந்த 89 வயது பெண் ஒருவருக்கு வேண்டுமென்றே அளவுக்கதிகமான மருந்துகள் கொடுக்கப்பட்டதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இத்தகைய பல செய்திகளை நீங்கள் பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி மூலமாக அறிந்திருப்பீர்கள். முதியவர்கள் துன்புறுத்தப்படும் இது போன்ற சம்பவங்கள் கனடாவின் எல்லாப் பகுதியிலும் நடைபெறத் தான் செய்கின்றன.

முதியோர் துஷ்பிரயோகம் (Elder/ Older Adults) எனும்போது, "ஓர் வயது முதிர்ந்தவர் (Senior) ஒருவரின் உடல் நலத்தை அல்லது அவரது நல்லாரோக்கியத்தை பாதிக்கும் செயல்கள் அல்லது அவர்களைப் போதியளவு பராமரிக்காது விடல்" என வரையறுக்கப்படும். உலக சுகாதார அமையமானது, வயது முதிர்ந்தோரின் துஷ்பிரயோகத்தை, "மீண்டும் மீண்டும் ஏற்படும் செயல்" எனக் கூறுகிறது. வயது முதிர்ந்தோர் துஷ்பிரயோகம் செய்யப்படுவதினால்

## முதியோர் துஷ்பிரயோக வகைகள் (Types) அறிகுறிகள் (Symptoms) ஆபத்தான காரணிகள் மற்றும் தடுக்கும் வழிகள்

ஒவ்வொரு வருடமும், வடஅமெரிக்காவில் பல்லாயிரக்கணக்கான முதியோர் தமது சொந்த இல்லங்களில் கூட துஷ்பிரயோகங்கட்கு உட்படுகின்றனா. ஓர் அலட்சியமான அல்லது பொறுமையற்ற ஓர் பராமரிப்பாளரால் உடலியல் ரீதியாக அல்லது உணர்வு பூர்வமாக அல்லது பணரீதியாக (Financially) முதியோர் துஷ்பிரயோகத்திற்கு உட்படலாம். முதியோர் துஷ்பிரயோகத்திற்கான அறிகுறிகளை அறிந்து கொள்வதுடன், ஓர் துஷ்பிரயோகத்திற்குட்படும் வயது முதிர்ந்தநபருக்கு உதவியாக எவ்வாறு நடந்து கொள்வது என்பதை அறிந்து கொள்வதன் மூலம் நீங்கள் வயது முதிர்ந்தவருக்கு உதவுவது மட்டுமன்றி, எதிர்காலத்திலும் முதியோர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளவும் முடியும்.

நீங்கள் நன்கு பழகும் ஓர் முதியவரை அவதானிக்கும்போது அவராலேயே காரணம் கூற முடியாத காயங்கள் காணப்படின் அல்லது அவர் எதையும் தெளிவாக கூறமுடியாத ஆழ்ந்த யோசனையில் இருப்பாராயின் ஏதோ ஒரு விதத்தில் அவர் துஷ்பிரயோகத் திற்கு உட்பட்டிருக்கிறார் என நீங்கள் சந்தேகிக்கலாம். உடலியல்ரீதியாக முதியோர் பலவீனமடையும்போது, துன்புறுத்தலைத் தாங்குவதற்கு ஏற்ற பெலனற்றவர்களாவதுடன், திருப்பித் தாக்கும் வலிமையும் அற்றவர்களாகின்றனர். அவர்களால் முன்பு போல் நன்றாக பார்க்கவோ அல்லது கேட்கவோ அல்லது சிந்திக்கவோ முடியாததாவதுடன் மனச்சாட்சியற்ற மனிதர்கள் அவர் களது பலவீனத்தை பயன்படுத்தவும் இடம் கொடுத்து விடுகிறார்கள். முதியோரின் மனநலமின்மை அல்லது உடல் நலமின்மை யானது அவர்களைச் சுற்றி வாழ்பவர்கட்கு ஓர் சோதனைக் களமாகவே அமைந்து விடுகிறது.

ஒவ்வொருவருடமும் அரைமில்லியனுக்கும் மேற்பட்ட முதியோர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிவிக்கப்படுகின்றபோதிலும் மில்லியன் கணக்கான துஷ்பிரயோக சந்தர்ப்பங்கள் அறிவிக்கப்படாமலேயே போகின்றன.

கூடுதலான வயது முதிர்ந்தோர் துஷ்பிரயோகமானது அவர்கள் வாழும் வீடுகளிலேயே நடைபெறுகின்றது. அதிகமாக அவர்களது வளர்ந்த பிள்ளைகள் (Adult Children), ஏனைய குடும்ப அங்கத்தவர்களான பேரப் பிள்ளைகள் அல்லது துணைவரால் இத் துஷ்பிரயோகங்கள் ஏற்படுகின்றன. நீண்ட காலமாக பராமரிப்பை வழங்கக் கூடிய நிறுவன அமைப்புகளிலும் முதியோர் துஷ்பிரயோகங்கட்கு உட்படலாம்.

### முதியோர் துஷ்பிரயோக வகைகள்

வயது முதிர்ந்தோரின் துஷ்பிரயோகமானது அநேக வடிவங்களை எடுக்கக் கூடியது. உதாரணமாக அச்சுறுத்தல் (Threats), பயமுறுத்தல் (Intimidation), அலட்சியம் செய்தல் (Neglect), பணத்தை தந்திரமாக அபகரித்தல் (Financial Chicanery) போன்றவற்றை இதனுள் அடக்கலாம்.

### வயதுமுதிர்ந்தோர் துஷ்பிரயோகத்திற்கான அறிகுறிகள்

முதலில் வயது முதிர்ந்தோர் துஷ்பிரயோகத்தின் அறிகுறிகளை உங்களால் இனங்காண முடியாதிருக்கும் அல்லது அவற்றைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ள மாட்டீர்கள். அவை வயது முதிர்ந்தோரின் பலவீனத்தால் ஏற்படும் அறிகுறியாக அல்லது அறிவு மழுங்குதலின் (Dementia) அறிகுறியாக தோன்றலாம். உண்மையில் முதியோரின் அநேகமான அறிகுறிகள் அறிவு மழுங்குதலின் அறிகுறிகளால் மறைக்கப்படலாம். ஆனால் பராமரிப்பாளர் இவ்வாறு கூறுகிறார் என்பதற்காக நீங்கள் அவற்றினை கவனிக்காது அலட்சியப்படுத்தல் கூடாது.

### துஷ்பிரயோகத்தின் பொதுவான அறிகுறிகள் (General signs of abuse)

பின்வருவன முதியோர் துஷ்பிரயோகம் நடைபெறுகிறது என்பதற்கான எச்சரிக்கை அறிகுறிகளாகும்.

பராமரிப்பாளருக்கும் வயது முதிர்ந்த நபருக்கும் இடையிலான தொடர்ந்தேர்ச்சியான பிரச்சனைகளும் வாதப் பிரதி வாதங்களும்

முதியவரின் ஆளுமைத் தன்மையில் அல்லது நடத்தையில் ஏற்படும் மாற்றம்

**முதியோர் துஷ்பிரயோகம் பற்றி நீங்கள் சந்தேகித்தால், ஆனால் அது பற்றி நிச்சயமற்றிருந்தால் பின் வரும் உடலியல்ரீதியான மற்றும் நடத்தைசார் அறிகுறிகள் இருக்கின்றனவா என்று கவனியுங்கள்.**

சில குறிப்பிட்ட வகையான துஷ்பிரயோகங்களின் அறிகுறிகள் பின்வருமாறு

### உடலியல் துஷ்பிரயோகம்

- காரணம் கூறமுடியாத காயங்கள், உராய்வுக் காயங்கள், வீக்கம் அல்லது தழும்புகள் குறிப்பாக உடலின் இரு பக்கங்களிலும் காணப்படல்
- உடைந்த எலும்புகள் (Broken bones), எலும்பு இடம் மாறியிருத்தல் (dislocations), சுளுக்கு (Sprains)
- மருந்து அளவுக்கதிகமாக கொடுத்திருத்தல் (drug overdose) அல்லது மருந்துகளை ஒழுங்காக கொடுக்காதிருத்தல்
- பார்வைக்காக போடும் கண்ணாடி உடைந்திருத்தல்
- கயிற்றால் உடலில் இறுக்கிய அடையாளங்கள். உதாரணமாக: மணிக்கட்டு களில் அடையாளம் இருத்தல்
- முதியோரைத் தனியாக பார்ப்பதற்கு பராமரிப்பாளர் உங்களுக்கு அனுமதி கொடுக்க மறுத்தல்

### உணர்வுரீதியான துஷ்பிரயோகம் (Emotional Abuse)

- உணர்வுபூர்வமான அல்லது உளவியல் துஷ்பிரயோகம் எனும்போது வயது முதிர்ந்தோருக்கு உணர்வுரீதியான மன நோவு அல்லது கவலையை ஏற்படுத்து முகமாக பேசுவது அல்லது நடத்து வதைக் கருதும்.
- வாய்மூலமாக முதியோரின் உணர்வுகளை பாதிப்பதனுள்
- கூச்சலிடுவது அல்லது அச்சுறுத்தல் மூலமாக அவர்களை பயமுறுத்தல்
- அவர்களை அவமானப்படுத்தி தாழ்வு படுத்திக் கதைத்தல்
- எப்போதும் குற்றஞ்சாட்டல், அல்லது பலிக்கடாவாக்கல் போன்றன அடங்கும்
- வாய்மொழி மூலமல்லாது ஏனைய விதங்

26ம் பக்கம் பார்க்க...


# வாழ்கை சுவர்க்கமாவது இனிய இல்லமொன்றில்...

## Elaguppllai (Mike) Srinathan B.Sc


**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**




**Hwy 89/2nd Line**




**$204,500**
**Vacant Land**
117 Acre Parcel Of Land Close To Shelburne On Paved Road To Build Your Dream Home

**Brimley/Ellesmere**




**$279,000**
Detached Bungalow, Bed rooms 3+1, Washrooms 2, Perfect Home For Upgrading Walk-Out Basement

**Salem/Bayly**



**$283,900**
Detached 2 story, Bed rooms 3, Washrooms 3, This Home Is Ideal For Raising A Young Family.

**Sale Of Business**




**$299,000 forsale**
Sale Of Business Without Property Gas Stations Excellent Location.Self-Serve Petro Canada Gas Station With Convenience Store

**Chinguacousy/Sandalwood**



**$224,921**
Detached 2 Story, , Bedrooms 3, Washrooms 3 , Main Floor Access To Garage Seperated Finished Bsmt Side Door.

**Lawrence/Brimley**



**$299,900**
Row Twnhouse 2 Story, , Bedrooms 3+1 , Washrooms 2 , Convenient Location. Walk To Schools, Shopping, Park, Ttc At Your Door

**Middlefield/Denison**




**$329,000**
Link 2 Story, Bed rooms 3+1, Washrooms 3

**Brisdale/Fairhill**



**$338,900**
Detached 2 Story, Bed rooms 3 Washrooms 3, Fully Upgraded Home, Large Private Yard With Custom Deck

**Finch & Morningside**



**$349,900**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3 Immaculate Detached Brick Home With Many Upgrades Upgraded Kitchen

**Passmore/Markham**



**$354,900**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 2 Walk To Ttc, Park, School. Close To Temple, Mosque, Church, And Shopping.

**Mccowan.Dennison**




**$359,900**
Link 2 Story, Bedrooms 4+2 Washrooms 4,Preferred Location, Bsmt Apt With Separate Entry, Potential Income From Bsmt Apt

**Markham/Steeles**




**$389,500**
Detached 2 Storys, Bed rooms 4, Washrooms 3, Fabulous Bright And Spacious Home In Demand Area, Walk-Out Balcony

**Markham / Denison**




**$399,800**
Detached 2 Story, Bedrooms 3+1, Washrooms 4, Fully Upgraded Home, Upgraded Bathrooms,Large Profesionally Done Basement

**Steeles & Staines**



**$399,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Home Within Steps To Thomas Wells Public School & Ttc 2 Car Garage

**Markham Rd / 16th**



**$439,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, Approx 2345 Sq Ft Built By Yorkwoods Home, 5 Years Old All Brick Home Upgraded

**Markham/Highglen**




**$455,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 4, Gorgeous 8 Year New Home 2,320 Sq Ft Close Schools, Community Centre, 407, Ttc, Yrt.

**Markham Road & 14th Ave**



**$462,000**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Large Family Rooms With Wall To Wall Windows, Eatra Large Kitchen With Breakfast

**Steeles & Staines**




**$1,850,000 for sale**
Sale Of Business Without Property Gas Stations Re-Built From Full-Serve To Self-Serve ment Petro Canada Gas Station

**9Th Line / 16Th Ave**



**$309,000**
Bed rooms 3 3Br Cornell Community,Excellent Mattamy Open Concept Design,Eat In Kitchen & Bkft Bar,Huge Maste/l Closet.

**Mccowan / Denison**




**$369,900**
Link 2 Story, Bedrooms 3+2 Washrooms 4,Fin.Bsmt W/4th & 5th Bdrm. Rec.Rm. Kitchen & 4Pc Wrm.

**Middlefiled/Highglen**




**$379900**
Link 2 Story, Bed rooms 3, Washrooms 2 Freshly Painted, Walk To Schools And Other Amenities.

**Mccowan / Denison**



**$389,900**
Link 2 Story, Bed rooms 3, Washrooms 4 Finished Basement Apartment With Sepatate Entrance Clean House.

**Markham Rd/Denison**



**$393,000**
Link 2 story, Bed rooms 3+1 Washrooms 4 Finished Basement With Income Potential.Close To Canadian

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# கடமை

இன்னுமொரு பனிக்காலம் கதவைத் தட்டு கிறது. இன்னும் சில தினங்கள் சென்றால் குளர் துவங்கிவிடும். நாம் பிறந்த மண் எவ்வளவு இனிமையானது. வருடம் 365 தினமும் இதமான காலநிலை. அதைவிட்டு ஏன் இந்த பனிக்குளிர் மிக்க நாட்டுக்கு வந்தோம் என நீங்கள் சிந்தித்துப் பார்த்தீர் கள் என்றால், அங்கு எமக்கு உரிமைகள் மறுக்கப்பட்டு அடிமைகளாக்கப்பட்டமையே என தெரியும்.

இந்த கௌரவமான வாழ்வுக்கு உரிமை பெற நாம் கொடுத்த தியாகம் கொஞ்சமா? உறவுகளைப் பிரிந்தோம், பிறந்த மண்ணைப் பிரிந்தோம் எதற்காக உரிமைக்காக. அதாவது மனிதனாக வாழும் உரிமைக்காக. ஒருவனை அவன் பிறந்த மண்ணிலிருந்து பிரிக்கலாம். ஆனால் பிறந்த மண்ணை அவனிலிருந்து பிரிக்கமுடியாது என்பதற்கு தமிழர்களாகிய நாங்கள் தான் எடுத்துக் காட்டு.

எதற்காகப் பிரிக்க முடியாததை பிரிக்கக் கூடாததை பிரிந்து வந்தோமோ அந்தப் பொருளை நாங்கள் பெற்றும் பயனடையவில்லை என்றால் எவ்வளவு வேதனையானது? ஆம் நாம் அப்படிப் பெற்ற உரிமையை பாவிக்கிறோமா? என்றால் இல்லை. என்றே எண்ணத் தோன்றுகிறது. ஒரு ஜனநாயக நாட்டில் உரிமைகள் தேர்தல் காலங்களில் போடும் வாக்குகளில் தான் தங்கியுள்ளது. எம்மில் பலரும் அரசியல் விழிப்பில்லாதவராயுள்ளோம். எந்தக் கட்சி வந்தால் என்ன என்று பாராமுகமாக இருப்பதால் வரும் விளைவு எம்மை வலுவில்லாத ஒரு சமூகமாக எண்ண வைக்கிறது.

இறைவா! எமக்கு மீண்டும் வாழ்வுகொடு என்று ஆண்டவனைத் தொழுவதற்கு ஆட்டு மந்தைபோல் கூட்டம் கூட்டமாய் செல்லும் நம்மவர் வாக்குச் சாலையைத் திரும்பியும் பார்க்க மறுக்கிறார்கள். சென்ற தேர்தலில் தமிழர்கள் 17% மாணவர்களே வாக்களித்துள்ளார்கள் எனக் கணித்துள்ளார்கள். இது நாட்டின் வாக்களித்தவர்கள் விகிதத்தில் பாதிக்கும் குறைவானவர்களே. இப்படி நம்மர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமையால் எம்மை அரசியல்வாதிகள் கணக் கெடுக்காமல் இருப்பதில் வியப்பேதுமில்லை. எனவே, இவ்வருடம் அனைவரும் தமது உரிமையை நிலைநிறுத்துங்கள். நிச்சயமாக வாக்களிக்கத்தவறாதீர்கள். குறைந்தபட்சம் யாருக்கு வாக்குத் தருவது எனத் தெரியா விட்டால், வெறும் வாக்குகளைப் போட்டு விட்டு வாருங்கள். அப்படிச்செய்வதால் நீங்கள் வாக்குப் பதிவுசெய்துள்ளீர்கள் எனக் கணிக்கப்படுவதால் உங்களுக்கு உங்கள் இனத்துக்குச் சார்பாக அரசியல்வாதிகள் செயற்படுவார்கள்.

எனது மனதில் பட்ட பாரதியின் வாக்கினை இங்கு தருவேன்

"தண்ணீர்விட் டோவளர்த்தோம்? சர்வேசா இப்பயிரைக்
கண்ணீராட்காத்தோம் கருகத்திருவுளமோ?"

ஆம், இந்த உரிமையை கருகவிடாமல் காக்கும் கடமையை நீங்கள் செய்ய வேண்டுகிறேன்.

■ ■ ■


## உங்கள் வாக்கு! உங்கள் குரல்!

## Your Vote ! Your Voice !



வாக்கு எங்கள் உரிமை.
வாக்களிப்பது எங்கள் கடமை.
புலத்தில் எம் பலத்தை வெளிப்படுத்த
இதுவே சிறந்த வழி.

**தேர்தல் நாள் X**

**செவ்வாய்க்கிழமை, ஒக்டோபர் 14ம் திகதி**
காலை 9:30 தொடக்கம் மாலை இரவு 9:30 மணிவரை




**மூன்று தினங்கள் முற்கூட்டிய வாக்களிப்பு செய்யமுடியும்**

வெள்ளிக்கிழமை, ஒக்டோபர் 3ம் திகதி
பகல் 12:00 தொடக்கம் இரவு 8:00 மணிவரை

சனிக்கிழமை, ஒக்டோபர் 4ம் திகதி
பகல் 12:00 தொடக்கம் இரவு 8:00 மணிவரை

திங்கட்கிழமை, ஒக்டோபர் 6ம் திகதி
பகல் 12:00 தொடக்கம் இரவு 8:00 மணிவரை

வாக்களிக்கும் வேளையில்:
உங்கள் வாக்காளர் அட்டை அல்லது, மற்றும்
அடையாள அட்டை (வீட்டு முகவரியுடன் கூடியது) வைத்திருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு:
416.240.0078
http://www.canadiantamilcongress.ca/Election2008.htm

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
*"The unified voice of Canadian Tamils"*

# Unique Financial & Business Solutions Inc.

One Stop for all Your Financial Needs

We Offer
- FREE Mortgage Consultation
- Residential & Commercial
- Business Loan & Personal Loan
- Real Property Marketing
- Life Insurance
- All Accounting and Bookkeeping services

## COMMERCIAL MORTGAGE



# $100,000

# லைவ் இன்சூரன்ஸ்

## TERM LIFE INSURANCE

## மாதம் $12.42 மட்டுமே

புகை பிடிக்காத 35 வயது ஆணுக்கு, 10 வருட தவணைக் காப்புறுதி

**உங்களுக்கான மாதக்கட்டணத்தை அறிய அழையுங்கள்...**



Unity Life of Canada

RBC Insurance

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

**KEN KIRUPA**
Life Insurance Broker
759 Warden Ave., Toronto, ON

**கென் கிருபா**
காப்புறுதி முகவர்
**416 294 9322**

E&OE

# LIFE INSURANCE •RESP • NON MEDICAL INSURANCE



- **ஆயுட்காப்புறுதி**
  10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்
- **வயோதிபர்களுக்கான காப்புறுதி**
  மருத்துவ பரிசோதனை எதுவும் இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.
- **கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
  காப்புறுதித் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது கட்டிய பணம் முழுவதும் திரும்பப் பெறலாம்.
- **குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்**
  20% அரச மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15% சலுகையும் வழங்கப்படும்.
- **ஈட்டுக்கடன் காப்புறுதி**
  Mortgage Insurance

Apex Creations - 416-297-0707

**வசந்த் விநாயகமூர்த்தி**
காப்புறுதி முகவர்

**647-885-3012**
**www.vasanth.adstamil.com**



## ACCOUNTING & TAX

**Queen & Jameson**
10 MacDonell Ave.

**Pharamcy & Finch**
2525 Pharmacy Ave.

LILAND INSURANCE INC.

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

759 Warden Ave. Toronto, ON. M1L 4B5 Tel : 416-759-5453 ext. 362

## அழகிய பூஞ்செடிகள்

# யெறெனியம் (Geranium)



சந்திரசேகரி
segari@thaiveedu.com

### அறிமுகம்

யெறெனியம் (Geranium), யெறெனியேசியே குடும்பத்தைச் (Family Geraniaceae) சார்ந்தது. குடுப்பத்தில் ஏறக்குறைய 7-10 பேரினங்களும் 700க்கு மேலான சிற்றினங்களும் காணப்படும். பூக்கள் பெரிதான கொத்துக்களாகவும் எல்லோரையும் நன்கு கவரக் கூடியதாகவும் இருப்பதால் கரையோரங்களில் வீட்டுச் செடிகளாகவோ, சாடிகளில் வளர்க்கும் செடிகளாகவோ, அல்லது தொங்கும் சாடிகளில் வளர்க்கும் செடிகளாகவோ பயன்படுத்த முடிகின்றன.

### காணப்படும் இடங்கள்

இது தென்ஆபிரிக்காவில் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், ஐரோப்பநாடுகளில் 16ம் நூற்றாண்டு அளவில் வளர்க்கப்பட்டன. தற்போது எல்லாப் பிரதேசங்களிலும் அழகுதரும் செடியாக உண்டாக்கப்படுகின்றன.

### வளர்க்கும் முறைகள்

யெறெனியம் (Geranium), எனும் இனங்கள் நீண்டகாலம் வாழும் செடியாக வருடா வருடம் மிகச்சுலபமாக எமது வீட்டுத்தோட்-



டத்தை அழகுபடுத்துகின்றன. இவை வித்துக்கள் அல்லது வெட்டுத்துண்டுகள் மூலம் உண்டாக்கப்படும். அநேகமானோர் செடிகள் வளர்க்கும் இடங்களிலிருந்து சிறிய செடிகளாக வாங்கி, பூஞ்சாடிகளிலோ அல்லது பாத்திகளிலோ நட்டுவிடுவதுண்டு. அதிகமாக, செடி வளர்வதற்கு சாதாரண சூரிய ஒளியும் அளவான பசளையும் போதுமானது. யெறெனியம் செடி, போதுமான சூரியஒளியை, ஏறக்குறைய 70 பாகை Fஐ விரும்பும். மேலதிக வளர்ச்சிக்கும் செடியின் ஆரோக்கியத்திற்கும் கலவையுரம் அடிக்கடி சேர்க்கப்பட வேண்டும். வெட்டுத்துண்டுகள் மூலம் செடியை உண்டாக்க வேண்டுமாகில் 3-4அங். நீளத்தில் புதிய வளர்ச்சிகளிலிருந்து வெட்டுத்துண்டுகளை எடுத்து ஈரமான பசளை மண்ணில் ஊன்ற வேண்டும். ஈரமாக பசளை இருக்கும்போது வேர்கள் வைத்து வளர்ச்சி ஆரம்பமாகும். திரவ நிலையில் பசளை உரம் 20-20-20 அல்லது 15-30-15 போடுவது நல்லதாக இருக்கும்.

### பூக்கள் நறுமணம் வாய்ந்தவையா?

பூவின் வாசனையைப்பற்றி குறைவாகக் கருதுவதை நாம் அறிவோம். இதை எடுத்து விளக்க, நிலத்தின் உப்புத்தன்மை, பராமரிப்புக் குறைவு, தூசுபடிந்த சூரியவொளி ஆகியவை நறுமணத்தை குறைவாக்கின்றது என்பதை ஆதாரமாகக் காட்டுகின்றனர் ஆனால், அநேகமான இனங்கள் எலுமிச்சை,



வனிலா, மின்ற், றோஸ், பீச் போன்ற நல்ல வாசனையுள்ள நறுமணங்களைத் தருவதாக இருப்பதாலேயே அன்னையர் தினம் போன்ற பல தினங்களில் அன்பளிப்பாகச் சிறிய யெறெனியச் செடியை பலரும் எடுத்துச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது பூக்கள் வெள்ளை, சிவப்பு, செம்மஞ்சள் ஆகிய நிறங்களில் காணப்படும். பூக்கள் பொதுவாகச் சீரானவை, ஒரே அமைப்புடையவை, இரு பாலுறுப்புகளுடைவை. அல்லி வட்டம், புல்லிவட்டம் ஒவ்வொன்றும் ஐந்து சோணைகளையுடையவை. அல்லிகள் சுயாதீன மானவை. புல்லிகள் சேர்ந்திருக்கும். மகரந்தக்கேசரங்கள் இருவட்டங்களில் ஒவ்வொன்றும் ஐந்து கேசரங்களையுடையவையாக இருக்கும். சூலகம் ஐந்து சூல்களையுடையவை. மகரந்தச்சேர்க்கை பூச்சிகளால் நடைபெறும்.

### பூச்சிகளின் தாக்கம்

செடியின் வளர்ச்சியில் மிகமிக அனுகூலமாக இருப்பது பூச்சிகளின் தாக்கம் குறைவாக இருப்பது. கிருமிநாசினி தெளிப்பது பொருத்தமாக இருக்கமாட்டாது. Mildew சில சமயங்களில் வளர்ச்சியின் பிற்பகுதியில் தாக்கலாம். இவ்வேளை தண்டின் அடிமட்டத்தில் செடியை வெட்டிவிடவும். அப்போது, செடியானது சில வாரங்களில் புதிய வளர்ச்சியை ஏற்படுத்தும். பூந்தோட்டத்தில் இச செடியை வளர்ப்பது செலவற்றதாக இருக்கும்.

### யெறெனியச் செடியின் பருவகாலக் காட்சி

நீண்ட காலப் பருவம் எனக்குறிக்கும்போது, ஊதா நிறப் பூக்களையுடைய செடிகள், இலைகளைப் பச்சையாகவும், நீண்டநாட்கள் அல்லது மாதங்கள் பூக்களைத்தந்து பொலிவுடன் விளங்குகின்றன். பூந்தோட்டத்தின் கரையோரப்பகுதிகளின் முற்புறங்கள் மலர்ந்திருப்பது மனதைக் கவரும் அழகுதரும் காட்சியாகும். எனவே, இச்செடியை, 2008 ஆண்டின் நீண்டகாலவாழ்வுள்ள செடியாக பிரகடனப்படுத்தி இருக்கிறார்கள்.

### யெறெனியச் செடிகளின் சில முக்கிய இனங்கள்



பிறித்தானியதேசத்தில், 16ம் நூற்றறாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டவை. இவற்றில் சில வற்றை இங்கு பார்ப்போம்.

**Geranium ‘Ann folkand’:**

கோடைகாலத்தில் நல்ல கறுப்பு நிறக்கண் உடைய, மயந்தா நிறப் பூக்களையும் மஞ்சட்பச்சை நிற இலைகளையும் கொண்டு பொலிவுடன் காட்சியளிப்பதால், Royal Horticultural Society, Britain, இதற்கு “Award of Garden Merit” வழங்கியுள்ளது.

**Geranium Johnson’s Blue :**

பொதுவாகப் பிரசித்தபெற்றதாக ஆரம்ப வெப்பகாலந் தொட்டு இலையுதிர் காலம் வரை இளநீலநிறப் பூக்களையும், மிக மெல்லிய பிரிவுகளில் இலைகளையும் கொண்டு காணப்படும்.

**Geranium phaeum :**

இது ‘mour ning widow ’ எனப்படும். இலை

## - வீட்டுத் தோட்டம் - 8

யுதிர்கால பிற்பகுதியிலும், வெப்பகால முற் பகுதியிலும், கடும் மயந்தா நிறப் பூக்களையும், வெள்ளைநிற ஓரங்களையுடைய இலைகளையும் கொண்டு காணப்படும்.

**Geranium pretense :**

இது ‘ wild meadow ’ எனப்படும். சூரியஒளி கூடிய இடங்களில் வெப்பகாலத்தில் 3அடி உயரத்தில் கரையோரங்களில வளர்க்கப்படும்.

**Geranium psilostemn :**

இது ஒரு அதிதிறமான கவரக்கூடிய இனமாகும். இதற்கு நன்கு பசளை தேவை. 3அடி உயரத்தில் வளர்ந்து, கறுப்பு நிறக்கண்களையுடைய மயந்தா நிறப்பூக்களைக் கொண்டு காணப்படும்.

■ ■ ■

## Family Punicaceae
## மாதுளமரம்

**Botanical Name : Punica granatum (Eng.Name: Pomegranate)**



மாதுளமரம், ஈரானிலிருந்து வடஇந்தியாவில் கிமாலயாஸ் வரை நிலைகொண்டிருந்த இனம் உதாரணமாக **Punica granatum,** தற்போது இந்தியாவின் பல பாகங்களிலும், இலங்கை, மலேசியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளிலும், மெடிற்றரேனியன் பகுதிகளிலும் சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்த மரமாக நன்கு வளர்க்கப்படுகின்றது. இப்போது பொதுவாக வெப்பமான எல்லாப் பிரதேசங்களிலும் வளரக்கூடியதாக இருக்கின்றது.

எல்லா மரமும், 15-20அடி உயரமாக நன்கு கிளைகளைவிட்டு சிவப்பு, இளஞ்சிவப்பு நிறப் பெரிய பூக்களையுடையதாக காணப்படும். சில மரங்கள் நிறையப் பழங்களை தருகின்றன. அழகுடைய சிவப்பு, மஞ்சள் நிற 2-5 அங்குல பருமனான பழங்கள், சாறுகொண்ட சதைப்பற்றுள்ள வித்துக்களையுடையதாகக் காணப்படும். இச் சதைப்பற்றுள்ள பாகம் உண்பதற்கு இனிமையாகவிருக்கும். இதிலிருந்து எடுக்கும் சாறு குளிர்மையான பானமாக அமைகின்றது. சதைகளகற்றப்பட்ட வித்துக்கள் உலரவைத்து, சமையலில் சட்னி, குழம்பு தயாரிக்கும்போது அமிலத் தன்மையை உண்டாக்குவதற்காக பயன்படுத்தப்படும். ருசியளிக்கும் தயாரிப்புகளில் மாதுளம்பழச்சதை உபயோகிக்கப்படும். விற்றமின் பி5 உண்டு. பழயூஸ் ஒரு Antioxidant Super power ஆகவும் ஆண்களில் சிறுநீரகச்சுரப்பி, சிறுகுடற்சுரப்பி போன்றவற்றை தூண்டுவதாகவும், சிறுநீரகபுற்றுநோய், நுரையீரல் புற்றுநோய், வாதம் போன்றவற்றிற்கும், இயத்திற்கு குருதி கூடுதலாக செல்வதற்கும், முதியோர் இளமையாக இருப்பதற்கும் பலனளிக்கும்.

III

# முதியோர் துஷ்பிரயோகம்...

20ம் பக்கத் தொடர்ச்சி...

களில் முதியோரை உளவியல் ரீதியாக துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தலானது,

- வயது முதிர்ந்த நபரை அலட்சியப் படுத்துதல்
- வயது முதிர்ந்தோர் நண்பர்களுடன் அல்லது ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் இருந்து தனிமைப்படுத்தல்
- தொல்லைப்படுத்தல்

### பாலியல் துஷ்பிரயோகம் (Sexual abuse)

வயது முதிர்ந்தோரின் அனுமதியில்லாமல் அவருடன் பாலியல்ரீதியாக தொடர்பு கொள்ளுதல், இந்த தொடர்பில் உடலியல் ரீதியான பாலியல் நடவடிக்கைகள் மட்டுமல்லாது ஆபாச பொருட்களைக் காட்டுதல், பாலியல் நடவடிக்கைகளைப் பார்க்கும்படி கட்டாயப்படுத்தல் அல்லது வயது முதிர்ந்தோரை உடைகளைக் களையும்படி கட்டாயப்படுத்தல் கூட பாலியல் துஷ்பிரயோகமாகவே கருதப்படும்.

### முதியவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுகிறார் என சந்தேகிப்பதற்கான அறிகுறிகள் பின்வருமாறு:

- மார்பகம் அல்லது பிறப்புறுப்புகளில் உராய்வுக் காயங்கள்
- காரணம் கூறமுடியாத பாலியல் நோய்கள் அல்லது பாலியல் தொற்றுநோய்கள்
- காரணம் கூறமுடியாதபடி இனப்பெருக்க உறுப்புகளிலிருந்து அல்லது குதத்தில் இருந்து இரத்தம் வழிதல்
- உள்ளாடைகள் கிழிக்கப்பட்டிருத்தல் அல்லது இரத்தக்கறை படிந்திருத்தல்

### பராமரிப்பாளர்களால் அலட்சியப்படுத்தப்படல் அல்லது கைவிடப்படுதல் (Neglect or abandonment by caregivers)

வயது முதிர்ந்தோரை அலட்சியப்படுத்தல், பராமரிப்பாளரின் கடமையை நிறைவேற்றுவதில் இருந்து தவறுதல் போன்றவை இதில் அடங்கும். இது வேண்டுமென்றோ அல்லது தெரியாத்தனமாகவோ செய்யப்படலாம். இதனால் ஏற்படும் விளைவுகளை பின்வரும் அறிகுறிகள் மூலம் அறியலாம்.

- அசாதாரணமான நிறை இழப்பு, போஷாக்கற்றிருத்தல், உடலின் நீர்த்தன்மை குறைதல் (Dehydration)
- குணமாக்கப்படாத உடலியல் பிரச்சனைகள் குறிப்பாக படுக்கைப் புண் போன்றன.
- சுகாதாரமற்ற வாழ்க்கை நிலைமைகள், அழுக்கு, பூச்சிகள் நிறைந்த அறை, கறைபடிந்த படுக்கை விரிப்புகளும் உடுப்புகளும்
- அழுக்காக அல்லது குளிக்க வார்க்கப்படாமல் விடப்படல்
- வானிலைக்குப் பொருத்தமான உடை அணியாதிருத்தல்
- பாதுகாப்பற்ற வாழிட நிலைமைகள் (போதுமான வெப்பம் அல்லது குழாய் நீர்வசதிகள் இல்லாதிருத்தல்), பாதுகாப்பான மின்சார வயர் இணைப்புகள், தீ அபாய பாதுகாப்புகள் இல்லாதிருத்தல்)
- ஓர் பொது இடத்தில் முதியவர் இருக்கும் போது அவரை பாதுகாப்பாக கவனியாது விடல்

### நிதி தொடர்பான துஷ்பிரயோகம் (Financial exploitation)

ஓர் பராமரிப்பாளரால் அல்லது வெளியிலிருந்து ஒருவரால் பணம் தொடர்பாக ஏமாற்றுதல் இதனுள் அடங்கும். பழிபாவங்கட்கு அஞ்சாத ஒரு மனச்சாட்சியற்ற பராமரிப்பாளர் முதியவரைப் பராமரிக்கும்போது:

- வயது முதிர்ந்தோரின் வங்கிக் கணக்கில் இருந்து கணிசமானளவு பணம் மீள் பெறப்பட்டிருத்தல் (Withdrawals).
- முதியவரின் நிதி நிலைமையில் திடீரென மாற்றங்கள் ஏற்படல்
- வயது முதிர்ந்தவரின் தனிப்பட்ட காசோலைகள், கடன் அட்டைகள் (Credit cards) அல்லது வங்கிக் கணக்குகளை தவறாகப் பயன்படுத்தலாம்.



- பணத்தை அல்லது வருமான காசோலைகளை அல்லது வீட்டிலுள்ள பொருட்களை களவாடல்
- முதியவரின் உயிலில் அல்லது சொத்தினை பாதுகாக்கும் சட்ட உரிமை மற்றும் காப்புறுதி போன்றவற்றில் சந்தேகத்திற்கிடமான மாற்றங்கள்
- முதியவரிடம் கட்டணங்கள் செலுத்தக் கூடியளவிற்கு பணம் இருந்த போதும் மருத்துவ பராமரிப்பின்றி இருத்தல், கட்டணங்கட்கு பணம் செலுத்தாதிருத்தல்
- முதியவர் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருக்கும்போது அவரது ATM அட்டையின் மூலமாக பணம் எடுக்கப்பட்டிருத்தல்
- வயது முதிர்ந்தோரின் கையெழுத்தினை தாமே வைத்து பணம் பெறல் (Forge the elder's signature)
- அடையாளத் திருட்டில் (Identity theft) ஈடுபடல்

போன்றவற்றைச் செய்யலாம்.

### வயது முதிர்ந்தோரைக் குறிவைத்து ஏமாற்றி வாழ்க்கை நடத்துவோரும் முதியோர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடலாம்.

- வயது முதிர்ந்தோர் ஒருவர் 'பரிசு' ஒன்றை வென்றிருப்பதாகவும் ஆனால் அதனைப் பெற்றுக் கொள்வதற்கு பணத்தைச் செலுத்த வேண்டும் என்னும் அறிவித்தல்கள்
- பொய்யான தர்ம தாபனங்கள் (Phoney charities)
- பணத்தை முதலீடு செய்யலாம் என ஏமாற்றும் நிறுவனங்கள் (Investment fraud)

### உடல்நலப் பராமரிப்பு ஏமாற்றும் துஷ்பிரயோகமும் (Healthcare fraud & Abuse)

தொழில் ஒழுக்க நெறியற்ற வைத்தியர்கள், தாதிமார், வைத்தியசாலை ஊழியர்கள், ஏனைய நிபுணத்துவம் வாய்ந்த பராமரிப்பு வழங்குவோர் ஆகியோரால் இது ஏற்படுகின்றது. முதியோர் தொடர்பான உடல்நல பராமரிப்பு ஏமாற்று மற்றும் துஷ்பிரயோகத்திற்கான உதாரணங்கள் பின்வருமாறு:

- உடல்நல பராமரிப்பு வழங்காமல் அதற்காக கட்டணம் அறவிடுவது
- மருத்துவ பராமரிப்பு அல்லது சேவைகளுக்காக அதிக பணம் அறவிடப்படல் அல்லது இரட்டைக் கட்டணம் விதித்தல்
- அளவுக்கதிகமாக மருந்து கொடுத்தல் அல்லது அளவிற்கு குறைவாக மருந்து கொடுத்தல்
- சுகவீனங்களுக்கு அல்லது ஏனைய மருத்துவரீதியான நிலைமைகட்கு பொய்யான சிகிச்சை முறைகளைக் கூறுதல்
- பராமரிப்பு வசதியில் பிரச்சனைகள் இருத்தல். அதாவது: நன்கு பயிற்றப்படாத, நன்கு சம்பளம் கொடுக்கப்படாத அல்லது பற்றாக்குறையான ஊழியர்கள் பராமரிப்பாளராக இருத்தல்
- முதியவர் வாழும் அறை நெருக்கமாக இருத்தல்
- பராமரிப்பு தொடர்பான வினாக்கட்கு போதுமான விடைகள் கொடுக்கப்படாமல் இருத்தல்

ஓர் வயது முதிர்ந்தோருக்கு அநேக தேவைகள் இருக்கும்போது, மற்றும் அவரது வயது காரணமாக அவர் மற்றவர்களில் அதிகமாக தங்கியிருக்கும் போதும் ஓர் வயது முதிர்ந்தவரை பராமரிப்பது கடினமானதாகும். முதியவரின் தேவைகளைக் கவனிக்கும் சந்தர்ப்பங்களிலும் துஷ்பிரயோகம் நடைபெறும் சாத்தியக் கூறுகள் அதிகம் உள்ளன.

### பராமரிப்பாளர்களிடையே முதியோர் துஷ்பிரயோகம் நடைபெறக் கூடிய ஆபத்தான காரணிகள் (Risk factors) காணப்படல்

அநேகமான பராமரிப்பாளர்கள் பயிற்றப்படாதவர்களாக இருக்கின்றனர். வாழ்க்கைத் துணைவர்கள், வளர்ந்த பிள்ளைகள், ஏனைய உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர்; முதியவரைப் பராமரிப்பது அவர்களுக்கு திருப்தி தருவதாகவும் சந்தோஷமாக இருப்பதாகவும் உணர்கிறார்கள். ஆனால் முதியவரின் உடல் ஆரோக்கிய நிலைமைகள் மோசமான நிலையை அடையும்போது அவரது தேவைகளும் அவரைப் பராமரிக்க வேண்டிய பொறுப்புகளும் அளவுக்கதிகமாக அழுத்தம் மிகுந்ததாக (Extremely stressful) மாறிவிடுகிறது. முதியவரை பராமரிப்பதனால் ஏற்படும் மன அழுத்தங்கள் பராமரிப்பாளருக்கு மன மற்றும் உடல் ஆரோக்கிய பிரச்சனைகளை ஏற்படுத்துவதால் பராமரிப்பாளர் மிகவும் களைத்துப் போன நிலைமைக்கு உட்படுவதுடன் பொறுமையற்றவராகவும், தமது பொறுப்பில் இருக்கும் முதியவருக்கு வார்த்தைகளால் சாட்டையடி கொடுப்பதினையும் தவிர்க்க முடியாதவராகிறார்.

முதியவருக்கு பலர் பராமரிப்பை வழங்கக் கூடியவர்களாக இருந்த போதும் அவர்களிடமிருந்து ஆதரவு கிடைக்காத நிலைமையில்; தான் ஒருவரே முதியவரைப் பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது என எண்ணும் பராமரிப்பாளருக்கு மன அழுத்தம் (Depression) கூடுகிறது. அத்துடன் முதியவரைப் பராமரிப்பதன் மூலம் உளவியல் ரீதியாக திருப்திப்படக் கூடிய பாராட்டு எதுவும் கிடையாமல் முதியவரைப் பராமரித்தல் பராமரிப்பாளருக்கு சுமை கூடியதாக தோன்றலாம்.

நிறுவனரீதியான அமைப்புகளில் கடமையாற்றும் பராமரிப்பாளருக்குக் கூட மன அழுத்தங்கள் அதிகரிப்பதனால் முதியோர் துஷ்பிரயோகம் நடைபெறக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. முதியோர் பராமரிப்பு இல்லங்களில் இருக்கும் ஊழியர்களும் போதிய பயிற்சி இல்லாமல் அளவுக்கதிகமான பொறுப்புக்கள் இருந்தால், முதியோர் துஷ்பிரயோகம் நடைபெறக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு.

அநேகமான சந்தர்ப்பங்களில், முதியவர் துஷ்பிரயோகங்கள் உண்மையாக இருந்தாலும் அவை வேண்டுமென்றே செய்யப்பட்டதாக இல்லாமல் இருக்கலாம். பராமரிப்பாளர் வேண்டுமென்றே தமது பராமரிப்பில் இருக்கும் முதியவரின் தேவைகளை அலட்சியம் செய்யவோ அல்லது அவர்களை நோக்கி கூச்சலிடவோ செய்வதில்லை.

■ ■ ■

Law Office
T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)
உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)
Off: 416 • 266 • 6154
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677
2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3


INVESTMENT
opportunity in
Toronto
Downtown
Exclusivly VIP Broker Event
• 2 min. walk to SkyDome, CN Tower
• Brand NEW Condo
• Saving upto $15,000.00*
• Free Locker
• Occupancy in 2011
• CALL ME BEFORE 6th of October
ராஜீவ்
கோணேஸ்வரன்
Broker
416.568.1078
LEADING AGENT OF
RE/MAX®
Executive Realty Inc. (1996) Brokerage,
1225 Kennedy Road, Suite 200, Toronto, ON M1P 4Y1 Tel: 416.285.8555
*some condition apply
*not intended to solicit buyer and seller currently
*transactions completed where either buyer or seller represented.
*Available until October 6th only

# இதயம் ஒரு கோவில்

இராஜசேகர் ஆத்தியப்பன்
rajasegar@thaiveedu.com



**டாக்கடர், எனது தந்தையின் வயது 56. அவர் அடிக்கடி தனக்கு இதய நோய் இருப்பதாகக் கூறி வருகின்றார். எங்களுக்குப் பயமாக இருக்கின்றது. இதய நோய் என்றால் என்னவென்று விவரிக்க வேண்டுகின்றேன்.**

நான் இங்கு குறிப்பிடும் அறிகுறிகள் ஏதேனும் உங்கள் அப்பாவிடம் காணப்படுகின்றதா?
நெஞ்சுவலி

- மூச்சு வாங்குதல் (நடக்கும் போது)
- உடல் நீல நிறமாக மாறுதல்
- அடிக்கடி களைப்படைதல்
- அடிக்கடி மயக்கம்
- நெஞ்சில் கோழை கட்டுதல்
- இருமினால் இரத்தம் வருதல்
- தூக்கமின்மை
- தொடர் இருமல்

அதிக உழைப்பு, அலைச்சல், உடற்பயிற்சி கூட இதய நோயை உண்டுபண்ணலாம். அதிக உணவு, குளிர், கண் விழிப்பு போன்ற காரணங்களாலும் இதயம் தாக்கப்படலாம். கோபம், கவலை, பயம், பீதி, விரக்தி, காமம் போன்ற உணர்ச்சிகளால் தாக்கப்பட்டாலும் இதயம் பலவீனமடையலாம்.

எதுவாக இருந்தாலும், நவீன மருத்துவத்தில் அவருடைய இரத்த அழுத்தம், ECG போன்ற பரிசோதனைகளின் மூலம் திட்ட வட்டமாகத் தெரிந்து கொள்வதுதான் நல்லது.

### இதய நோயாளிகள் தவிர்க்க வேண்டிய உணவு வகைகள் எவை?

பாலாடைக்கட்டி, வெண்ணெய், உருழைக் கிழங்கு, ஐஸ்கிரீம், சாக்லேட், குளிர்பானங்கள், ஊறுகாய், எண்ணெயில் பொறித்த உணவு வகைகள், வடை, பஜ்ஜி போன்ற சிறு உணவு வகைகள் தவிர்க்கப்பட வேண்டியவை.

கீழ்க்கண்ட உணவுவகைகளைத் தாராளமாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

வெங்காயம், பூண்டு, கீரைவகைகள், தக்காளி, வெள்ளரி, வாழைத்தண்டு, வாழைப்பூ, சுண்டைக்காய், கத்தரி, வெண்டை, புடலை, பீட்ரூட், முள்ளங்கி, முருங்கை, பாகற்காய், கீரைவகைகள், ஆப்பிள், மாதுளை, வாழைப் பழம், பப்பாளி, அன்னாசி, கொய்யா, பளுபெர்ரி, Black Berry, நாவல், நெல்லி போன்ற பழவகைகளைத் தாராளமாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு முறையும் சாப்பிட்டபின் தவறாமல் ஓய்வு எடுக்க வேண்டும். படிக்கட்டுக்கள் ஏறுவதைத் தவிர்க்க வேண்டும். உணவில் உப்பைப் பாதியாகக் குறைக்க வேண்டும். நொறுக்குத் தீனி (Snacks) கூடாது. வயிறு நிறைய சாப்பிடக் கூடாது. மிகப் பாரமான பொருட்களைத் தூக்கக் கூடாது. அதிகாலையில் நடைபயிற்சி செய்வது அவசியம். மனி அமைதி, தியானம் போன்றவை நல்லது.

சீரகம், சோம்பு, கருஞ்சீரகம் இம்மூன்றையும் சம அளவு எடுத்து லேசாக வறுத்து விட்டு எலுமிச்சை பழம் சாற்றில் ஊறவைத்து, வெயிலில் காயவைக்கவும். பின்பு பொடி செய்து வைத்துக் கொண்டு காலை, மாலை இருவேளையும் 3 கிராம் அளவு சாப்பிட்டு வெந்நீர் குடித்து வந்தால் படபடப்பு, நெஞ்சுவலி, இரத்த அழுத்தம், மயக்கம், சோர்வு போன்ற பிரச்சினைகள் தீரும்.

முருங்கை இலைச் சாறு எடுத்து, தேன், மிளகுத் தூள் இரண்டையும் சேர்த்து சாப்பிட்டு வந்தால் இரத்த அழுத்தம் சீராகும் - இதயம் நலமாகும்.

வல்லாரை, மிளகு, சீரகம், பூண்டு ஆகியவற்றை சேர்த்து சூப் செய்து சாப்பிட்டால் இரத்த அழுத்தம் சீராகும். கொழுப்பு கரையும் நரம்பு மண்டலம் பலப்படும் - இதய நோய்கள் அனைத்தும் தீரும். மூளை அபாரமாகச் செயல்படும்.

புதினாச் சாறு, எலுமிச்சைச் சாறு இரண்டையும் சம அளவு எடுத்து பனங்கற்கண்டு கலந்து காய்ச்சிக் குடித்தால் வாய்வுப் பிரச்சினைகள் நீங்கி நெஞ்சுவலி சரியாகும்.

## மருத்துவக் கேள்வி - பதில்

### மயக்கம் அடிக்கடி ஏற்படும் இதய நோயாளிகளுக்கு மூலிகை மருத்துவம் என்ன?

கொத்தமல்லி இலையுடன் சம அளவு இஞ்சி சேர்த்து அரைத்து, அதில் அரை தேக்கரண்டி அளவு எடுத்து காலை, மாலை இரு வேளை சாப்பிட்டால் மயக்கம், வாந்தி தலைச்சுற்றல் நெஞ்சு படபடப்பு போன்றவை தீரும்.

ரோஜாப்பூ குல்கந்து சூட்டைத் தணித்து, கொழுப்பைக் கரைக்கும். இதய நோயாளிகளுக்கு ஏற்ற மருந்து இது.

உழுந்து, மிளகு, சீரகம், மஞ்சள் சேர்த்து கஞ்சியாகக் குடித்தால் நல்லது. வாரம் ஒருமுறை இவ்வாறு செய்யலாம். தேற்றான் கொட்டை லேகியம் இதயம் வலுவடைய உதவி செய்யும்.

குடிப்பழக்கம் (மது அருந்துதல்) புகைப் பழக்கம், காபி அதிகமாகக் குடித்தல் போன்றவற்றை உடனடியாக விட்டுவிட வேண்டும்.

### அதிக இரத்த அழுத்தம் குணமாக,

அகத்திக்கீரை சூப், அத்திப்பிஞ்சு சமையல், அரச இலை கஷாயம் போன்றவை இரத்த அழுத்தத்திலிருந்து விடுபட உதவும்.

### குறைந்த இரத்த அழுத்தம் குணமாக,

முருங்கைக் கீரை சூப், வெள்ளைப்பூண்டு பாலில் வேகவைத்தது, மருதம்பட்டைக் கஷாயம் இவைகளை எடுத்துக்கொள்ளுதல் நல்லது.

இதயம் சுருங்கி விரிய தேவையான சுவாசப்பயிற்சி மிகவும் அவசியம். SA Mode சரியாக வேலை செய்யாவிட்டால் Pace maker பொருத்த வேண்டி வரும்.

இதய உறை (Peri cardium) நீரினால் நிறைந்தாலும் ஆபத்துதான். இதனால் சில பேருக்கு இதய உறையை அறுவைச் சிகிச்சை மூலம் நீக்கி விடுவதும் உண்டு.

கொலஸ்ட்ரால் அதிகம் உள்ளவர்கள் தினசரி காலை வெறும் வயிற்றில் கொத்த மல்லி இலையை ஒரு கைப்பிடி அளவு சாப்பிட்டு வருதல் நலம்.

Hemp oil அல்லது Flaxseed oil எடுப்பது நலம். அப்படி எடுக்கும் போது Aspirin போன்ற மருந்து வகைகளைத் தவிர்ப்பது நல்லது.

Say no to junk food & Junk thoughts. Say yes to refined thoughts & fiber food.


கடைகளில் கிடைக்கும் நார்ச்சத்துள்ள உணவுப் பொருட்களை வாங்கி உபயோகியுங்கள். Refined oil உபயோகிக்க வேண்டாம். Gold press oil என்று கேட்டு வாங்குங்கள். நல்லெண்ணெய், ஒலிவ் எண்ணெய் திராச்சை விதை எண்ணெய் ஆகிய மூன்றும் நல்லது.

(Processed food) செயற்கை முறையில் தயாரிக்கப்பட்டவை மிகக் கேடு விளைவிக்கும். ஆவியில் அவித்த சமையல் வகைகள் நல்லது. உதாரணமாக புட்டு, இடியப்பம், இட்லி போன்றவை.

இதயம் ஒரு கோவில் நன்றாகப் பராமரிக்கும் வரை

வளமுடன் வாழ்க, நலமுடன் வாழ்க.

■ ■ ■

Arthritis
முழங்கால், தோல்பட்டை, கைவிரல்களில்
திருகு வலியா? விரைவில் குணமடையலாம்
Blood pressure - Hyper Tension
அமைதியான ஆட்கொல்லி
SILINT KILLER
இரத்த அழுத்தமா
நல்ல சுகமடைய இயற்கை மூலிகை மருத்துவம்

canada 416 - 995 -0416
India -91-9362728808

கை, கால் வலிப்பு நோயா?
திக்குவாய், ஞாபகசக்தி குறைவு, Dementia
மூளை வளர்ச்சி குறைவு - Autism
Alzimer, நடுக்குவாதம் - Parkinson
போன்ற நோய்களுக்கு
ஆயுர்வேதம்

மருத்துவ ஆலோசனை
பெற அழையுங்கள்
416-995-0416

உங்கள் குழந்தைகளின் உறுதியான எதிர்காலத்திற்கான முதலீடு



## HERITAGE EDUCATION FUNDS

Save towards your child's post-secondary education and find out how the government can help you pay for it.

- With a Heritage Education Funds RESP How much can you comfortably save?
- Want to start building your child's future today?
- 40 years of RESP expertise helping families from coast to coast.
- Start Early, Invest often, Stay invested.
- Start saving now and plan for your child's future possibilities.

**We are also hiring sales representatives that are self motivated and are capable of building their own business.**

HERITAGE Educational Foundation

**Thaya Balan**
(Agency Director)
**416.831.4725**



digi





அமைதியான வாழ்க்கைக்கு ஓர் அருமையான தீர்வு காப்புறுதி

**Life Insurance • Critical Insurance • Long Term Coverage • Disability Insurance**
**Final Expenses • Dental & Hospital Expenses • Travel Insurance**

All your Insurance Needs

digi



**Thaya Balan**
Licensed Insurance Broker
Dir: **416.831.4725**
**Morning Star Financial Service**
5050 Dufferin St., Suite 218, Toronto, ON M3H 5T5
Tel: 416.661.9155 ext. 340

IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
MEDAVIE BLUE CROSS
TRANSAMERICA REINSURANCE
Canada Life
Manulife Financial
RBC Insurance


வீடு, வியாபாரம் வாங்க, விற்க....
20 வருடங்களாக இத்துறையில் முன்னணியில்
அனுபவம்! அறிவு!! திறமை!!! பொறுமை!!!
KARU'S ROYAL TEAM
Top 10 TEAM in CANADA
THE CHAIRMAN'S CLUB NATIONAL Award Winner 2003–2007
Top 1% in Canada
Karu Kandiah FRI.CRES.,
Real Estate Broker
Real Estate துறையில் ஈடுபட்டு வெற்றி காணவிரும்புகிறீர்களா?
அழையுங்கள்..... கரு கந்தையா 416-284-5555
Kennedy/Eglinton
$329,900
3+2 Bedrooms, 2 Washrooms Totally Renovated Main Floor! Ready To Move In! Great Investment Property.
Midland/Finch
$279,900
Well Maintained Industrial/ Commercial Condo In A Great Convenient Location, New Paint In Office & Floor Area
Ellesmere/Birchmount
$199,800
1+1 Bedrooms, 1 Washroom Mondeo Spring Condo, 3 Yrs New! Neutral Decor, Spectacular View
Altona & Twyn Rivers
$749,900
5+1 Bedrooms, 6 Washrooms Updated & Sparkles Top To Bottom! Eat-In Gourmet Kitchen Beautifully Updated
Mccowan/Sheppard
$194,900
2 Bedrooms, 2 Washrooms Beautiful Penthouse, New Neutral Colour Paint Refinished Kitchen Cabinets
Vaughan
$739,000
4 Bedrooms, 4 Washrooms Brand New Home - Rosehaven's 'Villa Madama' Model In Vellor Village
Eglinton/Mccowan
$229,900
3 Bedrooms, 3 Washrooms One Of The 8 Unit Townhouse In Demand Location, Huge Comb Liv/Din Room
Markham/Lawrence
$334,900
3+2 Bedrooms, 2 Washrooms All Brick, Renovated Bungalow On A Quiet Family Area. Backing On To Densgrove Park
Morningside/Sth Coronation
$349,000
3+2 Bedrooms, 2 Washrooms Whole House Updated Top To Bottom. Great Investment All New Windows Thru-Out
Markham/ Mclevin
$314,900
3+1 Bedrooms, 2 Washrooms Absolutely Gorgeous Home! Hardwood & Ceramic Floors. Separate Entrance
Finch/Staines
$464,900
4+1 Bedrooms, 4 Washrooms Just Like A Model Home, A Must See! Approx $75,000 In Upgrades
9th & 16th
$364,900
3+1 Bedrooms, 3 Washrooms Well Loved Family Home On A Corner Lot**Lots Of Light**Many Upgrades Over The Last 4 Yrs
Richmond Hill
$549,900
4 Bedrooms, 2 Washrooms Shows Like A Model, On Quiet Safe Crescent. Walk To School, 9' Ceilings
Mccowan/Dennison
$359,000
4+2 Bedrooms, 4 Washrooms Separate Entry To Bsmt, Potential Income From Bsmt Apt. Price For Quick Sale
Lawrence/Park
$199,000
3 Bedrooms, 2 Washrooms Well Kept Building With Library Exercise And Party Room. Large Bedrooms
Brampton
$549,900
5 Bedrooms, 4 Washrooms Approx. 3340 Sq.Ft Home Less Than 2 Yrs In A Highly Desirable Location. Double Door Entry
Brampton
$349,900
3+1 Bedrooms, 4 Washrooms Ideal Detached Home For First Time Buyers. Finished Basement With Separate Entrance
Mississauga
$299,000
3+2 Bedrooms, 2 Washrooms Good Location. Close To Ttc, Hwy 427 & Shopping. Walk-Out Basement Apt
Stouffville
$449,900
4 Bedrooms, 3 Washrooms Tastefully Upgraded. Walk-Out To Balcony From Living Room
Neilson/Mclevin
$153,000
2 Bedrooms, 2 Washrooms Spacious Two Bedrooms + Enclosed Balcony Unit. Laminate Thru-Out, New Paint Thru-Out.
ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
DIR: 416 284 5555
Bus: 416-284-4751(24 Hrs)
Toll Free: 1-888-766-4456
E-Mail: karusroyalteam@yahoo.ca
Visit: www.royalteamonline.com
880 Ellesmere Rd, Suite 203, Toronto

# வீடு விற்கப்படாவிட்டால் என்ன செய்வது?


அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -
skbales@thaiveedu.com




நீங்கள் உங்களது வீட்டை விற்பதற்குப் போட்ட பின்பு ஒரு Offer ஏனும் வராதுவிட்டால் அடுத்ததாக என்ன செய்யலாம். கூடுதலாக ஒரு Offer ஏனும் வராவிட்டால் உடனடியாக Marketல் இருந்து எடுப்பதே சிறந்தது. காரணம் நீண்டகாலம் Marketல் விற்கப்படாமல் இருக்கும் வீடுகள் குறித்து, வீடு வாங்க இருப்பவர்களது மனதில் ஒரு கசப்பான எண்ணத்தை ஏற்படுத்தலாம். நீண்டகாலம் என்றால் எவ்வளவு காலம் எனக் கேள்வி எழலாம். சாதாரணமாக Busy ஆன Marketல் ஒரு மாதத்திற்கு மேல் வீடு விற்கப்படாமல் இருந்தால் அது கூடிய காலமாகவும், Busy குறைந்த காலத்தில் ஆறுமாதத்திற்கு மேல் Marketல் இருந்தால் நீண்டகாலம் எனவும் கருத்திற் கொள்ளலாம். ஆகவே நாம் ஒரு வீட்டை விற்கப் போகும் முன்பே சில Improvementsஐச் செய்வதால் வீட்டைக் கூடிய காலம் Marketல் இருக்காமல் செய்வதற்குச் சந்தர்ப்பங்கள் உண்டு.

முதலாவதாக நாம் எமது வீட்டின் உற்புறத்தையும் வெளிப்புறத்தையும் Video எடுத்து அதை நாம் பார்ப்பதன் மூலம் வீட்டில் உள்ள குறைகள் என்ன என்பதை கண்டறிய முடியும். அதாவது வீட்டின் வெளிப்பகுதி புற்பகுதிகள் பின்பு அதில் உள்ள Weedsஅல்லது பூந்தோட்டம் ஆகியன நாம் ஒரு வீடு வாங்குபவராக இருந்தால் எவ்வாறு எமது கண்ணுக்குத் தோன்றுகின்றது என அறிந்து கொள்ளலாம். அதே போல் உட்பகுதியில் நெருக்கமாக இருக்கின்றதா எனவும் வீட்டில் உள்ள Furniture's வீட்டின் அறைகளின் அமைப்பிற்கு ஏற்றவாறு உள்ளதா எனவும் அத்துடன் வீடு நல்ல சுத்தமாக இருப்பதுவும் அவசியம். நாம் எவ்வாறு வீட்டை வைத்துள்ளோம் என்பதைப் பொறுத்தே வாங்குபவர்கள் நாம் அந்த வீட்டை எவ்வாறு பராமரித்திருப்போம் என அறிந்து கொள்வார்கள்.

இரண்டாவதாக வீடு விற்கப்படாமல் இருந்தால் Listing Priceஜத் திரும்பவும் ஆராய்ந்து கொள்வது நல்லது. நீங்கள் விற்கப்போட்ட பின்பு Marketல் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். குறிப்பாக Busyஆன காலத்தில் வீடு




ஒரு மாதத்திற்கு மேல் விற்கப்படாமல் இருந்தால் வீடு over Priceஆக இருக்கலாம். அப்படியான நேரத்தில் Market Price ஐ விடச் சிறிதளவு குறைத்து போடுவதால் வீட்டை விரைவாக விற்க முடியும். அத்துடன் Open House போடும் போது Week night ஆக இருந்தால் Week endல் வர முடியாதவர்களது attentionஐ எடுப்பதோடு, Week nightல் கூடுதலாக Open House இல்லாமல் இருப்பதால் கூடியளவு buyers வருவதற்குச் சந்தர்ப்பம் உண்டு.

மூன்றாவதாக open House நேரத்திலோ அல்லது Showing நேரத்திலோ ஏதாவது சாப்பிடுவதற்கு அல்லது குடிப்பதற்கோ இருந்தால் வீடு பார்க்க வருபவர்கள் தங்களது Partner உடனோ அல்லது Agent உடனோ வரும்போது ஆறுதலாகக் கதைத்துப் பார்த்துச் செல்லச் சந்தர்ப்பங்கள் உண்டு.

நான்காவதாக வீட்டைக் காட்டிய பின்பு buyers agents உடன் தொடர்பு கொண்டு அவர்களதும், அவர்களது Clients இனதும் Feed Back ஐ எடுப்பதல் நாம் முடிந்தளவு ஏதாவது பிழை இருந்தால் நிவர்த்தி செய்ய முடியும்.

ஐந்தாவதாக வீட்டின் Color எப்பொழுதும் neutral colorஆக இருத்தல் அவசியம்.

அடுத்ததாக எந்த offer வந்தாலும் அதை உடனடியாக மறுப்புத் தெரிவிக்காமல் எப்படியாக அந்த offer உடன் வேலை செய்யலாம் எனப்பார்க்க வேண்டும். வீடு விக்கப் போகும் போதே உங்களுக்குள் எந்த விலை திருப்தியாக இருக்கும் எனப்பார்த்துக் கொள்வதால் offer வரும்போது நாம் அதற்குத் தயாராக இருக்கலாம். அதேநேரத்தில் நாட்கள் செல்லச் செல்ல அப்போதைய Marketற்கு ஏற்றவாறு நாம் எமது கடைசி விலையை மாற்றிக் கொள்ளுதல் அவசியம். இப்படியான முயற்சிகளை செய்தும் வீடு விற்கப்படாமல் இருந்தால் வீட்டை Marketல் இருந்து எடுத்துப் பின்பு Selling Season எனக் கூறப்படும் காலங்களில் அதாவது April to June அல்லது September to January எனப் பார்த்து மீண்டும் Marketல் போடுவது நல்லது.

வீடு விற்கும் நீங்கள் வயோதிபர்களாக இருந்து அதேநேரத்தில் உங்களுக்கு பணத் தேவைக்காக வீட்டை விற்கின்றீர்களாக இருந்தால் reverse Mortgageஐ எடுத்து உங்களது தேவையைப் பூர்த்தி செய்யலாம். காரணம் reverse Mortgageல் எடுத்த பணம் நீங்கள் வீட்டை விற்றபின்போ அல்லது இறப்பு ஏற்பட்டால் மாத்திரமே திரும்பச் செலுத்த வேண்டி ஏற்படும். ஆகவே reverse mortgage மூலமாக உங்களது தேவையைப் பூர்த்தி செய்த பின்பு சரியான நேரத்தில் வீட்டை விற்கலாம். அதேநேரத்தில் வேறு காரணங்களுக்காக வீட்டை விற்பவர்கள், உதாரணமாக வேறு இடத்தில் வேலை கிடைத்துச் செல்பவர்களுக்கு வீட்டை வாடகைக்கு விடலாம்.

ஆகவே வீடு விற்கப்படவில்லை என நாம் அவசரப்படாமல் காலத்திற்கு ஏற்றவாறு நாம் தான் நமது நடவடிக்கைகளை மாற்றிச் செயல்பட வேண்டும்.

■ ■ ■


## சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில்
முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 9000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 90க்கும் மேலான துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) .
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services).
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 275,000 வரை காப்புறுதி

## - சக்திவேல் -

தொலைபேசி: 416.706.3530, 905.428.9299, 905.763.8912

Fax: 905.428.9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**
வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!



## வீடு வாங்க விற்க




Sutton

**Alen Sivasambu**
Sales Representative



**Please Call Alen :**
**905-822-5000**
Fax: 905-822-5617

alen@sutton.com

## சீனா அமெரிக்கா

# தற்போதைய உலக நிதி நிலவரம்

மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -
maran@thaiveedu.com



கடந்த வாரம் அமெரிக்க ஜனாதிபதி புஷ் அவர்கள் சீன ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு அமெரிக்காவில் உள்ளாகி இருக்கும் நிதிப் பிரச்சினைகள் பற்றிப் பேசும் போது அமெரிக்க ஜனாதிபதி சீனத் தலைவரிடம் உதவி கேட்கவில்லை. புஷ் ஒரு தற்பெருமை கொண்டவர். அமெரிக்கா ஒரு தற்பெருமை கொண்ட நாடு. அத்துடன் இப்போதும் உலக பணச் சந்தையில் மத்தியில் இருப்பதாக பெருமை கொள்ளும் ஒரு நாடு. ஆனால், உலகின் நிதிச் செல்வாக்கு மேற்கிலிருந்து கிழக்காக நகர்வதை நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. அமெரிக்காவில் முக்கிய பல நிதி நிறுவனங்கள் அமைந்திருப்பதால் உலக நிதி நிறுவனங்களின் இதயம் என வர்ணிக்கப்படும் Wall Streetஇல் தற்போது பெரிய பிரளயம். கடந்த ஆண்டு Billions என பணம் பண்ணிய நிறுவனங்களின் விலாசத்தில் இன்று 'வாடகைக்கு' என்ற அறிவிப்பு. உலகம் பொறாமைப் படக்கூடிய நிலையில் இருந்த அமெரிக்க பொருளாதாரம் இன்று ஒரு பின்னடைவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

ஆனால், இந்த நேரத்தில் சீனப் பொருளாதாரம் ஆண்டுக்கு 10% அளவில் வளர்ந்து கொண்டிருக்கிறது. பல விற்பன்னர்களும் அமெரிக்கப் பொருளாதாரப் பின்னடைவால் இது பாதிக்கப்படப் போவதில்லை எனத் தெரிவிக்கிறார்கள்.

அமெரிக்காவின் பாரிய முதலீட்டு வங்கிகள் Bear Stearns Lehman Brothers பூமியின் முகத்தில் இருந்து மறைந்து விட்டன. சீனாவின் முதன்மை வங்கிகள் எல்லாம் ஆரோக்கியமான Balance Sheet உடன் நல்ல Cash Reserves உடன் இருக்கின்றன. Wall Streetஇல் நடந்த குழப்பங்களால் இந்த வங்கிகள் எதுவும் பாதிக்கப்படவில்லை.

Industrial and Commercial Bank of China தற்போது உலகிலேயே பெரிய வங்கியாகும். முதல் பத்துப் பெரிய வங்கிகளுள் மூன்று சீன வங்கிகள் ஆகும்.

ஆனால், முதல் 10 பெரிய வங்கிகளுள் நாலு அமெரிக்க வங்கிகள் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது அமெரிக்க அரசினால் கருதப்பட்டு வரும் 700 Billion மீட்புத் திட்டத்தின் பின் அமெரிக்காவிற்கு 700 Billion கடன் இருக்கும். வரவு செலவுத் திட்டத்தில் ஆண்டு தொகை எப்போதையும் விட அதிகரிக்கும். அடுத்த ஆண்டு இந்த 700 Billion தொகை 1 Trillionஆக மாறக்கூடும்.

ஆனால், சீனாவோ 1.8 Trillion வெளி நாட்டு செலாவணியை வைத்திருக்கிறது. அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது அதனுடைய கடனும் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையும் கணக்கில் எடுக்கத் தேவையில்லை. இதனால் முன்னெப்போதும் இல்லாத வகையில் அமெரிக்காவிற்கு சீனாவின் உதவி தேவை. கடந்த சில வருடங்களாக சீனா அமெரிக்காவிற்கு பணம் கொடுத்து உதவி வந்தது. அமெரிக்காவின் முதலீடுகளை வாங்கியது. அமெரிக்க அரசின் முறிகளை வாங்கியதன் மூலம் அமெரிக்க அரசின் துண்டு விழும் தொகையை நிரப்ப உதவி செய்தது. இதனால் வட்டி வீதங்களை குறைவாக அமெரிக்க நாணய பெறுமதி கூடவாகவும் இருந்தது. இதனால் அமெரிக்க நுகர்வோர் சீனாவில் செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்களை வாங்கி மகிழ்ந்தார்கள். இதனால் அமெரிக்க மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது.

இந்த Wall Street பிரச்சினையால் அமெரிக்கா முன்னொருபோதும் இல்லாதது போல் சீனாவில் தங்கியுள்ளது. மூன்று வருடங்களுக்கு சீன நிறுவனம் என்று அமெரிக்க நிறுவனமான Unocal Corpஐ வாங்க முயற்சித்த போது அதனைத் தடுத்து நிறுத்த அமெரிக்க காங்கிரசுக்கு இயலுமாக இருந்தது. இது சீனாவின் முகத்தில் அடித்தது போலாகும்.

இன்று சறுக்கும் Wall Street நிறுவனங்கள் கூறு போட்டு சீன முதலீட்டாளர்களுக்கு விற்கப்படுகின்றன. Wall Street இப்போது ஒரு பழைய கார் கடைபோல வந்துவிட்டது.

சீனாவின் சீன முதலீட்டு கூட்டுத்தாபனங்கள் அமெரிக்காவில் உள்ள முதலீடுகளை அதிகரிக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. தற்போது சீனாவின் பணம் பெரிய பாதகமாக அமெரிக்கர்களுக்கு தெரியவில்லை. இது பாரியதொரு மாற்றமாகும்.

1998 ருசியாவின் நாணய பெறுமதி வீழ்ச்சி 1990களில் ஆசிய நாணய பெறுமதி வீழ்ச்சி, 1994இல் மெக்சிக்கோ நாணய வீழ்ச்சி போன்ற சந்தர்ப்பங்களில் உதவிக்கு கை கொடுத்தது. மெரிக்காவும் அதனுடைய கூட்டாளிகளும் தான். ஆனால், தற்போது Wall Streetக்கு உதவி தேவை.

ஆசியரிடம் உதவி கேட்கும் அளவிற்கு ஜனாதிபதி புஷ் இறங்கி வந்ததாகத் தெரியவில்லை. அப்படி அவர் கேட்டாலும் ஆசிய நாடுகள் கொஞ்சம் தூரத்திலேயே நிறபதாக முடிவு செய்துள்ளதாகத்தான் தெரிகிறது.


அப்படி சீனா கொஞ்சம் தூரத்தில் நின்றாலும் அதனுடைய செல்வாக்கு தெளிவாகத் தெரியத் தொடங்கியுள்ளது.

ஆனால், அவர்கள் எட்டத்திலேயே நிற்பதற்குக் காரணம் Wall Streetஇல் நடந்த பெரும் வீழ்ச்சி கண்டு அவர்கள் அச்சம் அடைந்துள்ளார்கள். கடந்த மாதம் நடந்த நிகழ்வுகளால் பாதிக்கப்பட்டது Wall Street மட்டுமல்ல மொத்தமாக அமெரிக்க முதலாளித்துவமும் கூடத்தான். அமெரிக்கா உலகில் எந்தவிதமான பிரச்சினைக்கும் முந்திக் கொண்டு ஆலோசனை சொல்வது வழக்கம். அமெரிக்க அரசியல்வாதிகள் பலரும் பறந்து சென்று உலகத் தலைநகர்களில் விரிவுரைகள் வழங்குவது வழக்கம். ஆனால், இவற்றைக் கேட்பதற்கோ நம்புவதற்கோ இனி மேல் ஆட்கள் இருக்கமாட்டார்கள்.

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**


***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***



# வீடு வாங்க, விற்க, வாடகைக்கு...

## For all your Real Estate Investment Needs...

KARU'S ROYAL TEAM
Top 10 TEAM Across CANADA




முழு நேர வீடு
விற்பனை பிரதிநிதி....

Bus: 416-284-4751
(24 Hrs.Pager)

**Ashok Ragupathy** B.COM
Sales Representative
**Cell: 647-401-9203**
Office: 416 298 3200
E-Mail: ashokragupathy@yahoo.ca

MLS REALTOR®
ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

**BRAND NEW CONDO**

Finch & Middlefield சந்திக்கருகாமையில் புதிய Condo




**$217,000**



Years New! , Bright Unit With 2Bdrms+Den
2 Washrooms & 2 Parking Spots
Great Location, Close To 401/407,
Schools, Parks And Walking Distance
To All Amenities. New Gta Square Mall.

No-11, ST Lawrence Road
Wellawatta Colombo -6.


**Condo For SALE!**




**Wellawatte, Colombo**

2 Bedrooms, 2 Washrooms
Large Living & Dining Room
Separate open to Sky Balcony
& Separate Balcony
24 Units Condo, 3rd Floor
Approx. 910 Sq.ft
Sri Ayappan temple ,
Sri Meenadhchi Amman Temple

**Kennedy/Eglinton**




**$329,900**
3+2 Bedrooms, 2 Washrooms
Totally Renovated Main Floor!
Ready To Move In!
Great Investment Property.

**Midland/Finch**




**$279,900**
Well Maintained Industrial/
Commercial Condo In A Great
Convenient Location, New Paint
In Office & Floor Area

**Ellesmere/Birchmount**




**$199,800**
1+1 Bedrooms, 1 Washroom
Mondeo Spring Condo,
3 Yrs New! Neutral Decor,
Spectacular View

**Vaughan**




**$739,000**
4 Bedrooms, 4 Washrooms
Brand New Home - Rose-
haven's 'Villa Madama' Model
In Vellor Village

**Eglinton/Mccowan**



**$229,900**
3 Bedrooms, 3 Washrooms
One Of The 8 Unit Townhouse
In Demand Location, Huge
Comb Liv/Din Room

**Markham/Lawrence**



**$334,900**
3+2 Bedrooms, 2 Washrooms
All Brick, Renovated Bungalow
On A Quiet Family Area.
Backing On To Densgrove Park

**Morningside/Sth Coronation**



**$349,000**
3+2 Bedrooms, 2 Washrooms
Whole House Updated Top To
Bottom. Great Investment
All New Windows Thru-Out

**Markham/ Mclevin**



**$314,900**
3+1 Bedrooms, 2 Washrooms
Absolutely Gorgeous Home!
Hardwood & Ceramic Floors.
Separate Entrance

**880 Ellesmere Road, Suite 203, Toronto, M1P 2W6**

# Shan Thayaparan



Sales Repesentative

**To Sell or Buy Call**

## "Shan's Home Team"

**Dir: 416.567.7675 / Bus: 416.321.6969**

**Web:www.shan123.com E-mail: shan123@rogers.com**

"FREE MARKET EVALUATION"

"FLEXIBLE COMMISSION"

Your peace of mind is our goal.....

**HomeLife GTA Realty Inc. Brokerage**

206 - 1711 McCowan Rd., Scarborough, ON. M1SS 3Y3

Not intended to solicit properties currently listed for sale or buyers under contract






# Looking for.......

- Mortgages
- Refinancing
- 2nd Mortgages
- Business Loans

## Call 416-826-7426

**Your call will be answered**




**Call Now**
**416-826-7426**

# Are you a Landlord?
# Looking for good tenants?
# Don't worry...............

**We will help you to find good tenants.**

**We Do...**

- MLS Listing of your property
- Credit, Reference & Employment Check
- Post dated Cheques for a year
- Your Peace of Mind for a One month Rent.

**அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்**

# வாகன காப்புறுதியின் சுருக்கமான குறிப்புகள்

**தகவல் தொடர் - 22**

சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -
sivapunch@thaiveedu.com

**வாகன காப்புறுதியில் அடிப்படையில், சட்ட ரீதியாக, கண்டிப்பாக பெற்று வைத்திருக்க வேண்டிய நான்கு நட்ட ஈட்டு பிரிவுகளும் *(Basic Auto Insurance Converges).* அதில் இருந்து கிடைக்கும் இழப்பீடுகளும் எவை என்று அறிந்து கொண்டீர்களா? அவையாவன பின்வருமாறு:**

## மூன்றாம் நபர் பொறுப்பு காப்புறுதி *(Third Party Liability Insurance Coverages)*

- நாம் வசிக்கும் ஒன்ராறியோ மாகாணத்தில் சட்டப்படி குறைந்தது இரண்டு இலட்சம் டொலர் வரை வாகனம் ஓட்டும் ஒருவர் இப் பொறுப்பு காப்புறுதி பிரிவு ஒப்பந்தம்செய்து வைத்திருத்தல் வேண்டும்
- வைத்திருக்கும் தொகை என்பது எவ்வளவோ அவ்வளவு தொகைக்குள் மட்டுமே பாதிப்பு நிலையில் பாதிக்கப்பட்ட மூன்றாம் நபருக்கு பகிர்ந்து வழங்கப்படும்
- ஒப்பந்தத்திற்கு மேற்பட்ட தொகைக்கு மேல் விபத்தில் பாதிக்கப்பட்ட இன்னொருவருக்கு நட்ட ஈடு வழங்க வேண்டும் என நீதிமன்ற தீர்ப்பு வந்தால் காப்புறுதி கம்பனி (According to Absolutely Liability Law) அதனை கொடுத்து தீர்த்து விட்டு சட்டப்படி தங்களிடம் இருந்து அறவிடும். உதாரணமாக இரண்டு இலட்சம் டொலருக்கு மட்டும் இம் மூன்றாம் நபர் பொறுப்பு காப்புறுதி வைத்திருக்கும் ஒருவர் இன்னொருவருக்கு உருவாக்கிய பாதிப்பு மூன்று இலட்சம் டொலர் என்றால், மேலதிக ஒரு இலட்சத்தினையும் சேர்த்து மேலதிகமாக கம்பனி பாதிக்கப்பட்டவருக்கு கொடுத்து தீர்த்து விட்டு சட்ட ரீதியாக தங்களிடமிருந்து அறவிடும். எனவே தான் இவ் ஒப்பந்த தொகையினை அதிகமாக ஒப்பந்தத்தில் மேலதிக பணம் கொடுத்து பெற்று வைத்திருக்குமாறு அறிவுரை வழங்கப்படுவதுண்டு

## பின்வரும் பாதிப்புகளுக்கு இப் பிரிவில் இருந்து நட்ட ஈடு கிடைக்கும்

இங்கு தங்களின் தப்பு என்பது இன்னொருவருக்கு பாதிப்பு ஏற்படும்போது, பாதிக்கப்பட்ட ஏனையோருக்கு இப் பிரிவு கை கொடுக்கின்றது.

- **ஏனையோருக்கு விபத்தில் ஏற்படும் உடல் காயங்களுக்கான நட்ட ஈடுகள்**
- **ஏனையோருக்கு விபத்தில் ஏற்படும் உயிர் இழப்பு நட்ட ஈடுகள்**
- **ஏனையோரின் வாகனங்கள், உடமைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள்**
- **விபத்தில் தங்கள் தவறினால் ஏனையோருக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக மதிப்பீடு செய்யும் செலவுகள், இவ் விபத்து தொடர்பாக புலனாய்வுக்காக விசேட நிபுணர்களை அழைத்தால் அதற்குரிய செலவுகள்**
- **விபத்தில் பாதிக்கப்பட்ட மூன்றாம் நபர்கள் ஏதாவது நியாயத்தினை மீறி தங்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்திருந்தால், அதில் தங்கள் நியாயத்திற்காக வாதாட ஒழுங்கு செய்யும் வக்கீலின் செலவுகள்**
- **தங்களுக்கு எதிராக பாதிக்கப்பட்டவர் வழக்கு தாக்குதல் செய்து, அதில் அவருக்கு சாதகமாக தீர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டவர் தாம் செலவழித்த வழக்கு செலவினை பாதிப்பினை உருவாக்கியவரிடம் இருந்து அறவிட முயற்சிக்கலாம். நீதிமன்றத்தினால் மதிப்பிடப்பட்டு தீர்ப்பு வழங்கும் செலவினை தங்கள் காப்புறுதி ஒப்பந்தத்தில் இப் பிரிவில் இருந்து கொடுத்து தீர்க்கப்படும்**
- **மேற்குறிப்பிடப்பட்ட நீதிமன்றத்தினால் மதிப்பிடப்பட்ட செலவு தொகைக்கு வட்டி செலுத்த வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டால் இத் தொகையினையும் ஒப்பந்தத்தில் உள்ள இப் பிரிவில் இருந்து கொடுத்து தீர்க்கப்படும்**
- **விபத்தில் உடல் காயமடைந்த மூன்றாம் நபருக்கு உடனடி மருத்துவ செலவுக்கு பணம் செலவழித்திருந்தால் அதனையும் இப்பிரிவில் இருந்து மீள் பெறலாம்.**



## விபத்தில் வாகன சாரதிக்கு ஏற்படும் உடல் காயங்களுக்கு நட்ட ஈடுகள் *(Accident Benefits)*

விபத்தின்போது உடல் காயமடைந்தவர் தத்தமது காப்புறுதி கம்பனிகளில் இருந்து ஒப்பந்தத்தில் உள்ள வரையறையினுள் (According to the Statutory Accident Benefits) நட்ட ஈடு பெறுதல் வேண்டும். விபத்தில் தப்பு என்பது தங்கள் பக்கம் இல்லாது இருந்து, உடல் காயம் என்பதும் நிரந்தரமாக ஒரு எல்லைக்கு மேல் வாழ்வினை பாதிக்கும் நிலையில் இருந்தால் தப்புக்குரியவரின் காப்புறுதி கம்பனிக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்து மேலதிக பெருந் தொகையினை பாதிக்கப்பட்டவர்கள் நட்ட ஈடாக பெற முடியும்.

- **வருமான இழப்பீட்டு நிவாரணம் *(Income Replacement)* தேறிய மாத வருமானத்தில் *80%* வரை பெறலாம்**
- **வருமானமில்லாதவருக்கு வழங்கும் சிறு நிவாரணம் *(Non – Earner's Benefit)* விபத்து நடந்து 26 கிழமைக்கு பின்பு கிழமைக்கு *$185* வரை வழங்குவார்கள்**
- **பராமரிப்பவர் சலுகை *(Care giver benefit)* ஒரு குழந்தையின் பராமரிப்புக்கு *$250*இலிருந்து மேலதிகமான குழந்தைக்கு ஒவ்வொன்றும் *$50* என கிழமைக்கு வழங்குவார்கள்**

## மருத்துவ, புனர்வாழ்வு தாதிகள், பராமரிப்பு செலவுகள் (Medical, Rehabilitation and Attendant Care benefits)

இதில் பல்வேறு வகையான செலவுகளுக்குரிய நிவாரணம் அடங்கும்

ஏனைய செலவுகளுக்குரிய நட்ட ஈடுகள் (Payment of other expenses)

- **பரிசோதனை செலவுகள் *(Cost of Examination)***
- **உடுப்புகள், கண்ணாடி, காது கேட்கும் கருவி, விபத்தின்போது பாதிக்கப்பட்டால் அதற்குரிய செலவுகள் *(Damage to clothing, Glasses, Hearing Aid etc)***
- **தங்கியிருக்கும் வீடு, பராமரிப்பு செலவுகள் *(House keeping and Home Maintenance Expenses)***
- **கல்விச் செலவுகள் *(Educational Expenses)***
- **பார்க்க, உதவ வருபவர்களின் செலவுகள் *(Expenses of visitors)***
- **மரண வீட்டு செலவுகள் *(Death & Funeral Expenses)* கணவன் அல்லது மனைவிக்கு *$25,000*உம் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் *$10,000* வரையும் வழங்கப்படும்.**

## வாகன காப்புறுதி இல்லாதவருடன் விபத்து ஏற்படும் போது நட்டஈடு *(Un insured coverage)*

இந் நிலையில் உள்ளவரை இரு வகையாக பிரிக்கலாம்

- வாகன காப்புறுதி இல்லாதவர் ஆனால் அடையாளம் காணப்பட்டவர் (Uninsured & Identified)
- வாகன காப்புறுதி இல்லாதவர். ஆனால் அடையாளம் காணப்படாதவர்(Uninsured & Unidentified)

விபத்தில் தங்களில் தப்பு எதுவுமே இல்லாது, தப்பினை உருவாக்கிய மற்றவர் காப்புறுதி இல்லாதவராக இருந்து, அவரது அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டால் அதாவது வாகன லைசென்ஸ் இலக்கத்தினை குறித்து வழங்கினால், தங்களுக்குரிய இழப்பீடுகளை கம்பனி எதுவித செலவும் தங்களுக்கு இல்லாது (அதாவது மாத கட்டு பணம் பின்னர் அதிகரிக்காது) தந்து தீர்த்து விட்டு பின்னர் பாதிப்பினை உருவாக்கியவரிடம் இருந்து சட்டப்படி அறவிட்டுக் கொள்ளும்.

ஆனால் சில நேரங்களில் பாதிப்பினை உருவாக்கியவர் தப்பி ஓடி விட்டால், அதாவது அவரது அடையாளம் தெரியவில்லையானால், தங்களின் வாகனத்திற்கு ஏற்பட்ட இழப்பீடுகளுக்கு இப் பிரிவில் இருந்து நட்ட ஈடு பெற முடியாது. உடல் காயங்கள்

36ம் பக்கம் பார்க்க...

காப்புறுதி சம்பந்தமான தேவைகளுக்கும்
ஆலோசனைகளுக்கும்
சிவ.பஞ்சலிங்கம்
B. Com,
Licensed Insurance Broker
416.321.0999

# வாகன காப்புறுதியின் சுருக்கமான...

35ம் பக்கத் தொடர்ச்சி...

ஏற்பட்டால் மட்டும் அதற்குரிய பிரிவில் இருந்து நட்ட ஈடு பெறலாம். வாகனத்திற்கு ஏற்பட்ட இழப்பிற்கு மேலதிக மோதல் பிரிவு (Collision Coverage) இருந்தால், அதில் இருந்து நட்ட ஈடு பெறலாம். ஆனால் இப் பிரிவில் இருந்து நட்டஈடு பெறும்போது அது கட்டுப் பணத்தினை பின்னர் அதிகரிக்கச் செய்யும்.

ஒவ்வொருவரும் தங்களுக்குரிய இழப்பீடு-களை தங்கள், தங்கள் கம்பனிகளில் இருந்தே மனுச் செய்து பெறலாம். தங்களின் கம்பனி தங்களுக்கு நட்ட ஈடு வழங்கிய பின்னர் மற்ற சாரதிகளின் வாகன கம்பனி யுடன் தங்களுக்குள் விபத்தில் சரி, பிழை என்பது எந்த விதத்தில் நடந்ததோ, அந்த நியாயப்படி பரிமாறிக் கொள்ளுவார்கள். இங்கு காப்புறுதி இல்லாதவரின் நிலமை அதோ கதிதான்!. விபத்தில் எதுவிதமான நட்ட ஈடும் பெற முடியாது. காப்புறுதியில்-லாது பிடிபடும் போது பாதிப்பு கொஞ்ச நஞ்சமல்ல. காப்புறுதியில்லாது வாகனம் செலுத்தியதற்கு தண்டனை குறைந்தது ஐயாயிரம் டொலராகும். இக் குற்றம் பதிவில் இருக்கும்போது அது பின்னர் நேர்மையாக காப்புறுதி செய்யப் போகும்போது விலை யினை பாதிக்கும். எதுவிதமான நட்ட ஈடும் பெறமுடியாது. ஆனால் காப்புறுதி இல்லாது வாகனம் செலுத்தி உடல் காயமுற்றால் மட்டும் பின்வரும் அரச நிறுவனத்திலிருந்து ஒருசிறு நட்ட ஈடு பெறலாம். ஆனால் அது திருப்பி கொடுக்கப்பட வேண்டிய நட்ட ஈடு ஆகும். விபத்தில் வேறு ஒரு இடத்திலும் நட்ட ஈடு பெற வழி ஏதும் இல்லாத நிலை யில் மட்டுமே இந்த இடத்தினை அணுகலாம்.

விலாசம்
**Financial Services Commission of Ontario**
**"Motor Vehicle Accident Claims Fund"**
**5160, Yonge St**
**P.O.BoX 85, 16th Floor**
**Toronto,ON**
**M2N 6L9**

**Phone:**
**1-800-268-7188**
**அல்லது**
**(416)- 250-1422**

## தங்களில் தப்பு ஏதும் இல்லாது தங்களின் வாகனத்திற்கு ஏற் படும் இழப்புகள் *(Direct Property Compensation-No Fault Coverage)*

விபத்தில் தங்களின் பக்கம் தப்பு இல்லை யாயின் தங்களுடைய வாகனத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு தங்கள் கம்பனியி-னால் நேரடியாக நட்ட ஈடு வழங்கும் பிரிவு இது ஆகும். நட்ட ஈடு வழங்கலின் பின்பு தப்புக்கு உரியவரின் காப்புறுதி கம்பனியி-டம் இருந்து கொடுத்த நட்ட ஈட்டினை தங்கள் கம்பனி அறவிட்டுக் கொள்ளும். இதனை செலவில்லாத நட்ட ஈடு பிரிவு என குறிப்பிடப்படுவதுண்டு. அதாவது இதில் நட்ட ஈடு பெறுவதால் கட்டு பணம் பின்னர் அதி-கரிக்காது

**வாகனங்களின் விபத்துகள் நடை பெறும் போது, குறிப்பிடப்பட்ட விபத்து ஒன்றில் பிழை, சரி என்பது எந்த பக்கம் என்பதனை ஒன்றாறியோ மாகாணத்தின் "விபத்தில் சரி பிழை தீர்மானிக்கும் சட்டத்தின்" *(Accident fault determination rules & regulation)* அடிப்படையில் விபத்து என்பது என்ன மாதிரி நடந்தது என்பதனை வைத்து முடிவு செய்யப்படும்.**

**இதில் விபத்தில் சில நேரம் *50%* இற்கு *50%* என்ற அடிப்படையில் இரு வாகனங்களுக்கு இடையில் தப்பு என்பதில் முடிவு பண்ணுவதுண்டு. சில நேரங்களில் சரி, பிழை எந்த பக்கம் என தீர்மானிக்க முடியாத நிலைமை வரும்போதும் *50%* இற்கு *50%* என காப்புறுதி கம்பனிகள் முடிவு பண்ணுவது வழமையாகும். இந்த சந்தர்ப்பத்தில் பாதிப்பினைத் திருத் தும் போது வாகனத்திற்கு ஏற்பட்ட செலவில் *50%*மே நட்ட ஈடாகக் கொடுக்கப்படும். மிகுதி *50%*மும் சொந்த பணத்தில் இருந்து திருத்த வேலைகளுக்காக செலவழிக்க வேண்டும். அல்லது மற்ற பிரிவில் இருந்து *(Collision Coverage)* நட்ட ஈடு பெறுதல் வேண்டும். இப்பிரிவில் இரு-ந்து மிகுதி *50%* பெறும்போது மாத கட்டு பணத்தினை பின்னர் பாதிக் கலாம்.**

**இச் செலவில்லாத நட்ட ஈட்டு பிரிவிலும் 'தங்கள் கொடுப்பனவு' *(deductible)* என ஒரு *$500* அல்லது *$1000* குறிப்பிடப்பட்டிருந்தால், அதனை கழித்துக் கொண்டே மிகுதி தொகை நட்ட ஈடாக வழங்கப்படும்.**

**இது தவிர மேலதிகமாக விரும்பி னால் பணம் கொடுத்து பெற்று வைத் திருக்கும் பிரிவுகள் பின்வருவன ஆகும்.**

## மேலதிக நட்டஈட்டு பிரிவுகள் (Optional Coverages)

- குறிப்பிடப்பட்ட சில ஆபத்துகளினால் வரும் இழப்புகள் (Specified Perils)
- தங்களின் தப்பினால் உருவான மோதல் களில் தங்கள் வாகனத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்குரிய நட்ட ஈடு பிரிவுகள் (Collission or upset)
- மோதல், விபத்து என எதுவும் இல்லாது தரித்து நிற்கும் இடங்களில் வரும் பல் வேறு வகையான ஆபத்துக்களினால் வாகனத்திற்கு ஏற்படும் பாதிப்புக்கள் (Comprehensive)
- எல்லா வகையான ஆபத்துகளினால் வரும் இழப்புகள் (All Perils)

இப் பிரிவுகளில் இருந்து நட்ட ஈடு கோரலி லும் 'தங்கள் கொடுப்பனவு' (Deductible) என $500 அல்லது $1000 பெயர் குறிப்பிடப் பட்டு இருந்தால் அதனை கழித்துக்கொண்டே வழங்குவார்கள்.

பொதுவாக இங்கு குறிப்பிடப்படும் 'தங்க ளின் கொடுப்பனவு கழிவுகள்' என்ற தொகை ஒப்பந்தத்தில் அதிகமாக இருந்தால் காப் புறுதிக்குரிய மாத கட்டுப் பணம் குறைவாக இருக்கும். மறுதலையாக இது குறைவாக இருந்தால் கட்டுப் பணம் அதிகமாக இருக்-கும். இங்கு இதனை தீர்மானிக்க வேண்டியது தாங்களே ஆகும்.

மேலதிகமாக பெற்று வைத்திருக்கும் நட்ட ஈட்ட பிரிவுகளில் விரும்பினால் விபத்து நடந்த காலங்களில் தற்காலிகமாக வாடகை கார் பெற்று வைத்திருக்கும் செலவுகளை ஈடு செய்யும் பிரிவு (Temporary Substitute Automobile), சேர்ந்து போகும் பிரயாணிக-ளின் விசேட நட்ட ஈடு (Passengers Coverage) என சில பிரிவுகளை சேர்த்துக் கொள்ளலாம்.

ஏதாவது வர்த்தக நோக்கத்திற்காக வாகனம் உபயோகிக்கப்பட்டால் மேலதிக சரத்து (Endorsement) அதிக பணம் கொடுத்து பெற்று வைத்திருத்தல் வேண்டும்..

■ ■ ■


FREE EVALUATION
FOR YOUR HOME!
Mortgage Arrangements

BUY / SELL
HOME
BUSINESSES
AND
INDUSTRIAL
LAND
PROPERTIES

CALL
KANAGA



Kanaga Sinnathamby
Real Estate Salesperson
Direct: 416-844-0565
HOMELIFE FUTURE REALTY
Office: 416-264-0101
Fax: 416-261-1519
262 Markham Road
Toronto, Ontario
M1J 3C5

RENT
LEASE
RESIDENTIAL
AND
COMMERCIAL
PROPERTIES

CALL
KANAGA

# உங்கள் வீட்டுக்கடன் வியாபாரக்கடனிற்கு என்னை அழையுங்கள்

**MORTGAGE RATES**

| Variable | Prime - 1.00% |
|---|---|
| Fixed | Call me |

**MORTGAGE**

1st & 2nd Mortgages

New Immigrants / Self Employed / 0% Down

Refinance / Equity Line of Credit / Renewal

**BUSINESS**

Commercial Mortgage

Business Loan upto One Million

Line of Credit / Personal Line of Credit



**Kethes Sivasubramaniyam**

Mortgage Consultant

**Cell : 416.873.5780**

ViaFinancial Services Inc.

Our Office : 5200 Finch Ave. E, Suite 304, Scarborough, ON. M1S 4Z5

RBC | BMO Bank of Montreal | TD Canada Trust | Scotiabank

# வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

**KETVAR**

**TAX & ACCOUNTING**

304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
**Tel : 416-548-8005** Fax : 416-548-8006
Email : ketvar@gmail.com

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice

Tax Problems?
Penalties?
Haven't Filed?
We can help you...

# சாரதிப் பரீட்சை

**செந்தூரன் புனிதவேல்**
- காப்புறுதி முகவர் -

எனது நண்பன் சுந்தரம் (உண்மைப் பெயரல்ல) ஒரு சாரதிப் பரிசோதகராக பதவியேற்றபோது நான் கேட்ட முதல் கேள்வி, ஒரு நாளைக்கு எனது வாகனச் செலுத்தல் எப்படி என்பதே. அதற்கு அவன் கொடுத்த பதில் 'கட்டாயம் பெயில் மாக்ஸ்தான் என்றான்' பலத்த வாக்குவாதத்திற்கு பின் ஒரு நாள் 'டிரைவிங் டெஸ்ட்' இற்கு செல்வதாக முடிவு செய்தோம். நான் கடந்த பதினைந்து வருடமாக வாகனம் செலுத்துகின்றேன். ஒரு இரு டிக்கட் எடுத்தாலும் ஒரு போதும் விபத்தில் மாட்டுப்படவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வாகன செலுத்தல் பரிசோதனையை செய்தோம். அந்த அனுபவத்தை இங்கு நான் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். காரணம் நான் மட்டுமல்ல நாம் எல்லோருமே இந்தமாதிரி காலப்போக்கில் மாறுகின்றோம்.

வாகனத்தில் ஏறும்போதே அந்தரம். சொன்னான் சாரதிப்பரீட்சையின் நோக்கம் விபத்துக்களை தவிப்பதுவே என்று. மேலும் 82 தவறுகள் நாம் வாகனம் செலுத்துகையில் செய்யலாம் எனவும், ஒவ்வொரு தவறுக்கும் மூன்று முதல் பத்து புள்ளிவரை இழக்க முடியும் எனவும் 45 புள்ளிகள் பெற்றால் அவர் பரீட்சையில் தவறிவிட்டதாக கணிக்கப்படுவார் என தெரிவித்தான். மிகப் பாரதூரமான தவறுகள், உதாரணமாக சிவப்பு விளக்குக்கூடாக வகனம் செலுத்துவது போன்ற பாரிய தவறுகள் செய்யும் வேளைகளில் உடனே பரீட்சையில் தவறிவிடுவார்கள் என்றும் கூறினான்.

சரி நான் செலுத்தும் போது முதல் 'STOP' வந்தவுடன் வாகனத்தை முற்றாக நிறுத்தி விட்டு மெதுவாக செலுத்த இருபக்கமும் தெரியும் இடத்திற்கு வாகனத்தை கொண்டு வந்தபோது சுந்தரம் 'பிரச்சினையில்லாத வேளை வலது பக்கம் திரும்பு' என்றான்.

உடனே மனது பிரச்சினை இல்லாதவேளை எப்போ என்று சிந்தித்தது. சுந்தரம் பல சந்தர்ப்பங்களில் சைக்கிளில் வருபவர்கள் வந்து அடிபடுவார்கள் என்று ஒரு துப்புக் கொடுக்க உடனே தோள்களுக்கு மேலாக வலது பக்கம் யாராவது சைக்கிளில் வருகிறார்களா என்று பார்த்தேன். இங்கு இப்படியான விபத்துக்கள் டொரன்டோவில் மிகச்சாதாரணம் என்பதை நினைவில் கொள்வதவசியம்.

வலதுபக்கம் திரும்பி வலதுபக்கத்தால் பெருஞ்சாலையை நோக்கி செலுத்தினேன். இங்கு வீதிவிளக்குகள் இருந்தபடியால் இடதுபக்கத்தில் வாகனம் வராதாகையால் வலது தோள்களின் மேல் பார்த்துவிட்டு திரும்பினேன். உடனே சுந்தரம் தன் கையில் இருந்த தாளில் கிறுக்கினான்.

அடுத்த அரை கி.மீற்றருக்கிடையில் இடது பக்கத்திற்கு வாகனத்தை பெருஞ்சாலையில் கொண்டு செல்ல வேண்டும். தலையை 360 பாகை திருப்பாது குறையாக திரும்பிப் பார்த்து செலுத்தினேன். சந்திகளில் நிற்பாட்டுகையில் நாம் செய்யும் பெரிய பிழை சில்லுகளை இடது பக்கம் திருப்பி நிறுத்துவது. பின்னர். வந்த வாகனம் இடித்தால் உங்கள் வாகனம் தள்ளப்பட்டு எதிர்வரும் வாகனத்தின் பாதையில் உங்கள் வாகனம் சென்று பெரும் விபத்தை ஏற்படுத்தும்.

அடுத்தமுறை வலதுபக்கம் திருப்புகையில் கவனமாக திரும்பிப்பார்த்து பிழையில்லாது திருபினேன். அந்த பாதை சரியாக கீழ் நோக்கிச் சென்றது. நண்பன் (சுந்தரம்) பக்கத்தில் எடுத்து நிற்பாட்டச் சொன்னான்.



நான் தோள்களுக்கு மேலாக அவதானித்து கண்ணாடிகளை கவனித்து மெதுவாக பக்க வாட்டில் செலுத்தி சில்லுகளை உள்நோக்கி நிறுத்தினேன். நிறுத்தும் பிறேக்கைப் போட்டு கியரையும் பார்க்கிங்கில் விட்டு நிற்பாட்டினேன். இம்முறை வென்றுவிட்டேன்.

மீண்டும் வாகனத்தைச் செலுத்துகையில் ஒரு Stop Sign வந்தது. வழக்கமாக வாகனத்தை இருபக்கமும் பார்க்கக்கூடிய இடத்துக்குச் செலுத்தி நிறுத்தினேன். ஆனால், இன்று Stop சைனில் நிறுத்தி பின் மெதுவாக முன்செலுத்தினேன்.

எதிரே ஒரு பாடசாலை தெரிந்தது. அதில் வேகக்கட்டுப்பாடு ஏதும் இல்லாததால் கவனமாக 50கி.மீட்டர் வேகத்தில் வாகனத்தைச் செலுத்தினேன். இதைத் தொடர்ந்து இன்னுமொரு பாடசாலைப் பகுதிக்கு வேகக்கட்டுப்பாடு அறிவிக்கப்பட்டதால் அவதானமாக 30 கி.மீட்டர் செலுத்தினேன்.

அருகில் இருந்த நண்பன் சுந்தரம் சொன்னான் வேகம் தான் வாகன விபத்துக்களில் மரணத்துக்கு முக்கிய காரணி என்று. வேகங்கள்....... 80இற்கு மேல் செல்கையில் கூடும் வேளைகளில் மரணம் இரட்டிப்பு விகிதம் அதிகரிக்கும் என்று.

கடைசி சில நிமிடங்களாக பரிச்சார்த்திகர் சுந்தரம் கொண்டு வந்த தாளில் ஒன்றும் கிறுக்காதபடியால் சற்று ஆறுதலாக வாகனத்தை செலுத்த துவங்கிய வேளையில் சற்று நெருக்கடி கூடிய வீதியில் வாகனத்தை பாதையோரம் நிறுத்தி பின் மெதுவாக பின்னெடுக்கச் சொன்னான். நானும் ஒவ்வொரு கண்ணாடியையும் மாறி மாறி பார்த்து மெதுவாக பின் எடுத்தேன்.

சரி இனி முன்னுக்கு போகவும் என்றான். நான் நிம்மதிப் பெருமூச்சுடன் முன்னுக் கெடுத்தேன். உடனே அவனுடைய பேனா கிறுக்கியது. இடது தோல்களுக்கு மேலாக பார்க்கவில்லை.

அடுத்து வீடுகள் நிறைந்த வீதி. எனக்கு விளங்கிவிட்டது. கட்டாயம் சமாந்திரமாக (Parallel Parking) நிறுத்த வரப்போகிறது என்று. இப்போதெல்லாம் இதை தவிர்த்து நான் முயன்று அங்காடிகளில் (Malls) தான் பொருட்கள் வாங்குவது என்றாலும், வாகனத்தை அருகில் நிறுத்தி பின்னால் நகர்த்தி இடையில் நிற்பாட்டினேன். வாகனம் நேராக வராவிட்டாலும் ஒன்றிலையும் தட்டாம நின்றது. கீழே இறங்கி பார்த்த சுந்தரம் பரவாயில்லை சற்று சொத்தியாக நிற்பாட்டினாலும் 30 செ. மீற்றரிட்கும் குறைய இடம் தான் உள்ளது. என்றான் எனக்கோ இறங்கி ஆடலாம் போலிருந்தது. நான் சைன்ஸ் எடுத்ததற்கு இதுவே முதன்முறையாக சரியாக Parallel Parking செய்துள்ளேன்.

இனி நீங்கள் ஆரம்பித்த பரிசோதனை நிலைமை மோனிங் சைட் செப்பட் அவனியுவுக்கு செலுத்தினோம். எனது மனதுக்குள் நினைத்துக் கொண்டேன், சிலவேளை நான் சித்தியடையக்கூடம் என்று. மெதுவாக வாகனத்தை வெளியிலெடுத்து கவனமாக செலுத்தி நிறுத்துமிடத்தில் சிக்னலைப் போட்டு காரை நிறுத்தினேன்.

சுந்தரம் சுறுசுறுப்பாக நான் இழந்த புள்ளிகளை கூட்டிவிட்டு 'மச்சான் நீ பாஸ். ஆனால், எடுக்கக்கூடிய ஆகக்கூடின தவறுப்புள்ளிகளை கொண்டுள்ளாய். மயிரிழையில் Pass பண்ணிவிட்டாய் என்றான்.

'டேய் என்னென்னத்துக்கடா புள்ளி இழந்தேன் என கேட்டேன்' அப்படியே பாஸ் பண்ணின சந்தோஷசத்துடன் சுந்தரத்தை நோக்கி வாடா வீட்டுக்குப்போய் கொண்டாடுவோம் என்று காரை இழுத்தேன்.

நான் ஒரு பக்கமும் பார்க்காமல் வாகனத்தை எடுத்ததை கவனித்த சுந்தரம் 'இதில் ஆறு புள்ளிகள் இழந்திருக்கிறாய்' என்றபோது எனது உற்சாகம் எல்லாம் பறந்து போய் விட்டது.

நாங்கள் வாகனம் செலுத்தும் போது Cell phone கதைத்துக்கொண்டு செய்யும் பிழைகள் அநேகம். மேலும் "ரிம்கொட்டன்" கோப்பியை கையில் பலன்ஸ் செய்து கொண்டு ஒருகையால் சார்க்கஸ் செய்வதில் ஏற்படும் தவறுகள் ஏராளம்.

வாகனம் செலுத்துவது எவ்வளவு பொறுப்பான விடயம் என்று இப்போதுதான் புரிந்தது. உங்களுக்கும் புரிந்திருக்கும் என்று நம்புகிறேன். கவனமாக வாகனத்தை செலுத்துங்கள். உங்கள் பேரப்பிள்ளையின் Gradation பார்க்க வேண்டுமல்லவா?

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*


## Tution Classes

(at McCowan and Dennison)

From JK to Grade 8

- Math
- English
- Science
- Art
- Homework Help (Any Subject)
- Preparation for the Next Grade
- Computer Subjects




1 to 1 or Group classes

Please call 905-554-2496

# வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க



**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416-880-8585**

**Home Life**
GTA Realty Inc., Brokerage*
206 - 1711 McCowan Road
Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969
Fax: 416-321-6963



Convenience
weekly sales $12000,plus loto commission,
asking only 119,000



Convenience
weekly sales $11000- $3000 ,plus loto,Canada postal service,prolator courier, grey hound bus tickets.
Asking 149,9000



**Conin laundry :**
Very Busy Well Establish & Unattended, Coin Laundromat In High Density residential asking only $229,000.00



Industrial warehouse
10,000sq feet
$1250000



Store W/Apt/Office , Excellent Business Opportunity: 3 Newly Reno'd Apts,Variety Store & 'Cash' Store.All Rented Except convenience store asking only $379,000.00



Corner Location In The Town Main Street,Adjacent To Golf Course, Best Farmland In The Area. Asking
**$1,680,000**



Industrial Building In Scarborough
asking **$2,925,000**



Vana Shanmuganathan
Sales Representative
416-833-2925




Mahendran Muthukumaru
Sales Representative
416-302-1994




Shanthy Vinayagamoorthy
Sales Representative
416-939-2288

**Hwy 7/Humber College**




2+1 Bedroom 2Washroom
2 Parking Spaces
**$214,000 For Sale**

**Humber College Blvd**



3+1 Bedroom 3Washroom
Apartment Sep Entrance
**$324,900 For Sale**

**Hwy 27 / Finch**



3 Bedroom 4 Washroom
Finished Basement
**$389,900 For Sale**


**Meadowvale/Ellesmere**



4+2 Bedroom 4Washroom
Finished Basement
**$449,900 For Sale**

## வீடு வாங்க விற்க

**Rexdale/ Hwy 27**



4 Bedroom 3 Washroom
Close To Schools, Malls
**$489,000 For Sale**

**Neilson/Mclevin**




3+1 Bedroom 3Washroom
Finished Basement
**$314,900 For Sale**

**HOME LIFE**
GTA /REALTY INC., BROKERAGE*

206-1711 MCCOWAN ROAD
SCARBOROUGH, ON, M1S 3YS

BUS: 416-321-6969
FAX: 416-321-6963

**McCowan & Steeles**



3+1 Bedroom 4 Washroom
Kitchens 2 / Fin W/O
Walk To Ttc, School, & Park
**$355,900 For Sale**

*BEST SERVICES *LOW COMMISSION *LOW RATES MORTGAGES *HOME INSPECTIONS *LAWYERS

**BUY YOUR DREAM HOUSE OR SELL YOUR PROPERTY QUICKLY FOR THE BEST PRICE**

# கேள்விஞானம் மட்டும் இருந்தால் இசையில் சாதிக்க முடியுமா?

V. அஜித்
- இசையமைப்பாளர் -
ajith@thaiveedu.com



தாய்வீடு வாசகர்களுடன் மீண்டும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இசையுடன் சம்பந்தப்பட்ட பல வித்தியாசமான தகவல்களை அவ்வப்போது வழங்கிவருகிறேன். அந்த வகையில் இம்முறை கேள்வி ஞானம் பற்றிய சில தகவல்களை பகிர்ந்து கொள்கிறேன். முறையான இசை ஞானத்துக்கும் கேள்விஞானத்துக்கும் இடையில் ஒரு மிகப்பெரிய இடைவெளி உள்ளதென்பது நாம் பலரும் அறிந்த உண்மை. இன்னும் சொல்லப்போனால் இவை இரண்டும் இரு வேறு உலகங்கள் என்றால் அது மிகையாகாது. இவை ஒருபுறம் இருக்க முதலில் கேள்விஞானம் என்றால் என்ன என்பதை சற்று விரிவாகப் பார்ப்போம்.

யாரிடமும் இசையைக் கற்றுக்கொள்ளாமல் தானாகவே இயல்பாக ஒரு இசைக்கருவியை வாசிக்கவோ அல்லது பாடல்களை இனிமையாகப் பாடவோ அல்லது இசைபற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளவோ தெரிந்து கொண்ட ஒருவரிடம் உள்ள ஞானம் தான் கேள்விஞானம் ஆகும். மாறாக இசையில் சாதனை படைக்கவோ அல்லது சாதிக்கவோ அல்லது இசையைக் கற்றுக்கொடுக்கவோ இந்தக் கேள்விஞானம் ஒருபோதும் போதுமானதாகிவிட முடியாது. எந்தக் கேள்வி ஞானமுள்ள கலைஞனிடமும் தான் முறையாக இசையைக்கற்கவில்லையே என்ற ஏக்கம் எப்போதும் இருக்கத்தான் செய்கிறது. தன்னிடமுள்ள திறமையை அறிந்து பின் கேள்விஞானத்திலிருந்து முறையான இசையைக்கற்று மிகப்பெரிய சாதனை படைத்த கலைஞர்களையும் நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். கேள்விஞானம் உள்ளவர்கள் தங்கள் தேவையை அறிந்து அதற்க்கேற்ற குருவிடம் பயின்றால் நிட்சயமாக இசையில் ஒரு புரட்சியையே உண்டாக்கலாம். உதாரணமாக நல்ல குரல் வளமுள்ள பாடகர் ஒருவர் அதிகம் பயிற்சியில்லாமலே கடின-



மான பாடல்களையும் மிகவும் இலகுவாகப் பாடும் திறணைக் கொண்டிருப்பர். இப்படியான கலைஞர்களுக்கு பாடும்போது கவனிக்க வேண்டிய உத்திகளைச் சொல்லிக்கொடுப்பதற்கு ஒரு குரு இருந்தால் மட்டும் போதுமானது. இது வாத்தியக்கலைஞர்களுக்கும் பொருந்தும்.

ஒரு இசைக்குடும்பத்தில் பிறக்கின்ற குழந்தையிடம் இசைஞானம் இருப்பது ஒன்றும் அபூர்வம் அல்ல. மாறாக இசையுடன் சம்பந்தமில்லாத குடும்பத்தில் பிறக்கும் குழந்தையிடம் இசைஞானம் இருந்தால் அது நிட்சயம் அபூர்வம் தான். அப்படி ஞானமுள்ள குழந்தையை இனம் கண்டு முறைப்படி இசையைக் கற்பிப்பதுதான் பெற்றோரின் தலையாய கடமையாகும். இசையை நன்கு ரசிக்கத்தெரிந்த குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கும் இசைஞானம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. ஒரு குழந்தைக்கு இசையில் நாட்டம் உள்ளதா இல்லையா என்பதை ஒரு வயதிலேயே அறிந்து கொள்ளலாம். சில குழந்தைகள் பாடல்களைக் கேட்கும் போதே தாளத்துக்கு ஏற்ப ஆட்டம் போடத் தொடங்கிவிடுவார்கள். இன்னும் சில குழந்தைகளுக்கு பாடல் இல்லாமல் உணவு உட்கொள்வது கூட கடினமாகும். ரசனை என்பது ஒருவருக்கு இன்னொருவர் சொல்லி வருவது அல்ல. அது பிறப்பிலேயே ஒவ்வொருவருக்கும் அமைந்து விடுகிறது. ஒரு கலைஞனை இனம் காண்பதற்கும் அவனது திறமையை புரிந்துகொள்வதற்கும் இந்த ரசனை தான் முக்கிய கருவாகும். இசை என்பது இயல்பாகவே ஒருவருக்கு அமைந்தால் நிட்சயமாக சாதிக்க முடியும்.

தற்போது வெளிநாடுகளில் வாழும் நம் ஈழத்தமிழர்கள் கலை சம்பந்தமான விடயங்களில் தமது பிள்ளைகளை மிகவும் ஊக்குவித்து வருகின்றனர். அதற்கு சாட்சியாக நாம் அடிக்கடி நிகழும் கலைநிகழ்ச்சிகளைச் சொல்லலாம். முன்பு ஒரு காலத்தில் நமது பெற்றோர்கள் தமது பிள்ளைகளை வெறும் படிப்பில் மட்டுமே ஊக்குவித்து வந்தார்கள். தற்போது இன்னும் ஒருபடி தாண்டி தமது பிள்ளைகள் கலையிலும் சாதனை படைக்க வேண்டும் என முயன்று வருவதை நாம் காண்கிறோம். இது நமது சமுதாயத்தில் தோன்றியுள்ள ஒரு மாபெரும் மாற்றமாகும். இன்னும் சொல்வதாயின் பயனுள்ள ஒரு முயற்சியாகும். எத்தனையோ பெற்றோர்கள் பிள்ளைகளின் எதிர்கால கலை வளர்ச்சிக்காக தமது பொன்னான நேரத்தையும் செலவு செய்கின்றனர். ஆகவே முறையான கலையை வளர்க்க முறைப்படி முயற்சி செய்வது மிகவும் அவசியம். கேள்விஞானம் என்பது கலைப்பயணத்தின் முதல்ப்படி என்பது மிகவும் பொருந்தும்.

கேள்விஞானம் உள்ளவர்கள் எந்தச்சந்தர்ப்பத்திலும் முறையான இசையைக்கற்க வாய்ப்புக்கள் உள்ளன. இப்போது இருக்கும் நவீன Internet வசதிகளுடன் வீட்டில் இருந்தபடியே Online மூலம் இசையைக்கற்கலாம். இதற்கு வயது ஒரு தடையாக ஒருபோதும் அமையாது. இசை என்பது வயது எல்லையைத் தாண்டிய மகத்தான ஒரு கலையாகும்.

■ ■ ■



# முகவரி காட்டும் முகவர்களாய் நாங்கள், வீடு வாங்க விற்க அழையுங்கள்



HIGHER STANDARDS

**HomeLife/Future Realty Inc., Brokerage***

262 Markham Road, Scarborough, Ontario M1J 3C5

**Bus.: 416.264.0101 Fax : 416.261.1519**

*Independently Owned and Operated, REALTOR

Not Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract.

**www.realhouse.ca**



## Thamil Suberamaniam (Selvan)

Sales Representative

**Direct : 416.358.6200**

Email : thamilrealtor@gmail.com

## Mugunthan Nadarajah

Sales Representative

**Direct : 416.276.8025**

Email : homelifemugunthan@gmail.com

**Hwy7 & 9th Line**



**$384,900**

**3 Bedrooms, 3 Washroom**

Very Demand Location!!...
New House
2 Bedrooms,
Kitchen, Living & Washroom..
Close To 407, School & Go Train
& Amenities, Parks Around the
Corner.

**Kennedy & Denison**



**$464,900**

**4+2 Bedrooms, 5 Washroom**

Entrance to Garage from inside, Landsxaping W/Rock Gdn. 4 Car Pking Drwy, Interlock Wkwy & Patio Stone All Around the house.

**Hwy 7 / 9th Lane**



**$329,900**

**3 Bedrooms, 3 Washroom**

Ultra High Ceiling in Basement
Fully Fenced Yard
Close to Shopping
School & Park.

**Hwy 50 & Edenezer**



**$345,500**

**3 Bedrooms, 3 Washroom**

High Demand Location!!...
1530 Sq Ft/ Semi
Hardwood Floor

**9th Lane & 16th Ave**



**$439,900**

**4 Bedrooms, 3 Washroom**

Great Neighbourhood,
Very Clean & Bright, Big Deck,
Granite Counter Top,
Close to School,
Park & Shoppings

**McCowan / Steeles**



**$359,900**

**4 Bedrooms, 3 Washroom**

Beautiful Home With 1 Bed Room Bsmt
Apartment With Separate Entrance,
Upgrade Enclosed Porch,
Private Fenced Deep Lot,
Main Floor Family Room,
Double Driveway Can Park 4 Cars,
Walking Distance To Ttc,
Move In Condition.

**Morningside & Ellesmer**



**$109,000**

**2+1 Bedrooms, 2 Washroom**

Closes To U Of T (Scarb Campus)
& Centennial College, Shopping,
Hospital And Hwy 401.
This Is Like Town House
On The Main Floor(Ground).

**Steeles / Staines**



**$489,900**

**4 Bedrooms, 3 Washroom**

Very Very Demand Location**
Lots Of Upgraded Thru-Out**
4 BR House With Front Stone Exterior**
Upgraded Kitchen Cabinets**
Hardwood Floor, Granite Foyer With
R/Iron** 9' Ft Ceiling ** Close To School,
Park, Shopping & Ttc.

**Markham & Nashdene**




**Commercial & Office Condo for Very Good Price**

**Markham / Nashdene**



**$128,900**

**Commercial Unite**

**980 Sq Ft**

Apex Creations - 416-297-0707

**Make the Right Move, at the Right Time, with the Right Professional**

# தலைமைத்துவப் பயிற்சியின் அவசியம்!


ராகுலன்
- Accountant -
ragulan@thaiveedu.com

முன்னைநாள் அமெரிக்க ஜனாதிபதி Harry Truman எங்கே தலைமைத்துவம் இல்லையோ அங்கே சமுதாயம் அசையாது ஒரு நிழல் படம் போல் நின்றுவிடுகிறது. ஆனால், தலைமைத்துவத்துடன் திறமைவாய்ந்த தலைவர்களின் கீழ் அபிவிருத்தியுடன் கூடிய முன்னேற்றம் நடக்கும் என்றார்.

இயற்கை வர்த்தகர்களும், தொழிலதிபர்களும் தலைமைத்துவத்தை கொண்டிருப்பர். ஆனால் சிறிய வர்த்தக நிறுவனங்களை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்ல சில வித்தியாசமான திறமைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆகவே எப்படிப்பட்ட பயிற்ச்சி உங்களுக்கு தேவையானது என்று அறிந்து கொள்வதற்கு நீங்கள் உங்கள் வர்த்தகத்தை எடுத்துச் செல்ல இருக்கும் திசை பற்றி தெளிவாக இருக்க வேண்டும். இது உங்களது குடும்ப வர்த்தகம். உங்களது வாழ்வுக்கான வருமானத்தைத் தந்தால் போதுமானது என்று நீங்கள் நினைத்தால் அதில் ஒன்றும் தவறில்லை. ஆனால், அடுத்த மட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என நினைத்தால் எந்த மட்டத்திற்கு எப்படி போவது என்பதை திட்டமிடும் போது தலைமைத்துவ பயிற்சியும் முக்கியமானது.

சிறிய வர்த்தகங்களை வளர்த்து பெரிய வர்த்தகர்களாக மாறியவர்கள் மிகவும் நிறையச் சிந்திப்பவர்கள். அவர்கள் விடயங்களை பகுப்பாய்வு செய்து நுணுக்கமான திட்டமிடலைச் செய்வதுடன் அந்தத் திட்டங்களை அமுல்படுத்துவதிலும் வல்லவர்கள்.

ஒரு வர்த்தகத்தை நடத்துவதால் சிந்திக்க நேரமின்றி இருக்கும் உங்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி மிகவும் உதவும்.

இந்த நாளில் உங்களை பற்றி நீங்களே ஆய்வு செய்து நேர்மையாக முடிவுகளை எடுத்தால் எப்படிப்பட்ட பயிற்சிகள் உங்களுக்கு தேவை என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம். ஆனால், இது ஒரு மனநோய் அல்லது உளவியல் ஆய்வு என்று எண்ணிவிடக் கூடாது.

அந்த தலைமைத்துவ பயிற்சியில் முக்கியமானது தற்போது இருக்கக்கூடிய தலைமைத்துவ, தொடர்பு சாதன வகைகள் பற்றி அறிந்து கொள்வதாகும். கூடுதலாக இந்த தொழில் அதிபர்கள் ஒரு தொலைநோக்குடன் சிந்திக்கக்கூடிய சிந்தனையாளர்கள். நவீன எண்ணங்களை வேகத்துடன் அணுகக்கூடியவர்கள். ஆனால், அவர்களுக்கு எழுத்து வேலைகளில் திறமை இருக்காது. வரிப்பத்திரங்களை நிரப்புவது அவர்களுக்கு சிம்ம சொப்பனம். அதனால் இந்த இடைவெளிகளை நிரப்ப ஆட்களை வைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுக்கு இது தடையாக இருக்கும்.

இது போலவே இந்தத் தலைமைத்துவப் பயிற்சி உங்கள் தொழிலின் உள் அடிப்படைகளை ஆய்ந்து இடைவேளியில்லாமல் ஒரு வலிமையான குழுவை அமைக்க உதவும். உங்களுக்கு வேலை செய்யும் குழு கட்டுப்பாட்டுடன் ஒற்றுமையுடன் இயங்குவது அவசியம்.

உண்மையிலேயே ஒரு தொழிலதிபருக்கு இருக்கக்கூடிய சவால்; எல்லாவற்றையும் தானே செய்ய முடியாமல் இருப்பதே. ஆகவே அவர்கள் சரியானவர்களை அடையாளம் கண்டு சரியான வகையில் பொறுப்புக்களை பகிர்ந்தளித்து அவர்களை சரியான முறையில் ஊக்குவித்து வழிநடத்திச் செல்ல வேண்டும்.

ஆனால் எப்படி வழிநடத்திச் செல்ல வேண்டும்? கடந்த காலங்கள் போல ஒரு அரசர் போல இராச்சியத்தை நடத்தினால் தலைவரின் சொந்த எண்ணங்களை வைத்துக் கொண்டு வேகமாக முன்னேறிச் செல்ல முடியும். ஆனால், 21ம் நூற்றாண்டில் இந்த பழைமை வாத தலைத்துவத்தைவிட வேறு அணுகுமுறை தேவை.

ஊழியர்கள் மீதான கட்டுப்பாடுகள் அதிகரித்த சூழ்நிலை அவர்களுடைய சொந்த ஆலோசனைகள் உங்கள் வியாபாரத்திற்கு பங்களிப்பதை இல்லாமல் செய்துவிடும். இந்த நூற்றாண்டில் வியாபாரங்களுக்கிடையில் போட்டி மிக நெருக்கமானதாகும். இப்போட்டிகளில் வெற்றியடைய புதிய எண்ணக்கருத்துக்கள் முன்வரக்கூடியதாக இருக்க வேண்டும்.

இதனால் ஒரு தலைத்துவப் பயிற்சி உங்களுக்கு எப்படி மற்றவர்களிடம் இருந்து திறமைகளை வெளிக்கொணர்ந்து அந்த எண்ணங்களை பாவிப்பதை ஊக்குவிப்பது? அவர்களது பங்களிப்புக்கு அவர்களை உரிமை கொள்ளச் செய்வது போன்றவற்றிற்கு உதவும் கனடாவைப் போன்ற பல்லின, பல்கலாச்சார மக்கள் வாழும் நாட்டில் அது பற்றிய அறிவும் முக்கியமானது. வித்தியாசமான எண்ணங்களைக் கொண்ட ஒவ்வொருவராலும் ஊக்குவித்து அவர்களிடம் இருக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வரவும் இந்தக் கல்வி உதவும்.

மிகத் திறமையான தலைவர்கள் தம்மிடம் வேலை செய்பவர்களின் திறமைகளை தமது தொழிலில் ஒரு முதலீடு போல பாவித்து அவர்களது சொந்தச் செயல்களின் விளைவுகளை குறித்து அவர்களை பாராட்ட வேண்டும். மேலிருந்து கீழ் நோக்கி மட்டுமே செல்லும் கட்டளைப்பாதை முறை 1988இலே அழிந்துவிட்டது. ஆனால், தற்போதும் சிலர் இதே முறையை பாவித்து வருகிறார்கள். அவர்கள் இதே விதமாக பழகி விட்டதால் அதை அவர்கள் மாற்றமுடியாது இருக்கிறார்கள்.

தற்கால சனத்தொகை படிப்பின் படியும் தற்போது காணப்படும் திறமை வாய்ந்த வேலையாட்கள் இன்மை, காரணமாகவும் ஒவ்வொரு வர்த்தக தலைவர்களும் திறமை வாய்ந்தவர்களை வைத்திருக்கவும் அவர்கள் முன்னேறி தங்களது வாழ்வு இலக்குகளை அடையவும் ஏதுவாக இருக்க வேண்டும். இது ஒரு தலைமைத்துவத்தில் ஆரம்பிக்கிறது.

கட்டுப்பாடு நிறைந்த ஆளுமையால் நடத்துதல் என்பது தற்போது குறைவடைகிறது. அல்லது இல்லாமல் போகிறது. தற்போதைய இளம் தலைமுறையினர் இந்த முறைமைக்கு ஒத்துவரப் போவதில்லை. அவர்களை வழி நடத்துபவராக அவரது முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு அதை அபிவிருத்தி செய்பவராக அவர்கள் உங்களைப் பார்க்க வேண்டும்.

உண்மையில் ஒரு தலைவர் கௌரவமான முறையில் நடக்கவும் கதைக்கவும் தெரிந்தவராக இருப்பர். இந்த தலைமைத்துவத் தகுதிகள் உங்களுடைய தொழில் மூலமான இலக்குகளை அடைய உதவும்.

■ ■ ■

Special of this Month

Condo for Sale

(Midland & Eglinton)

Seller will paint your color and change Carpet to Laminate.

Most convenience Location in Scarborough.



921 Midland Ave

One bedroom

Don't Miss Out.

- •Schools & Park
- •24 Hrs TTC at your Door
- •One car Parking
- •And More...

416-399-8093

HomeLife/ Future Realty Inc., Brokerage
262 Markham Road, Scarborough, ON M1J 3C5
Tel: 416.264.0101 Cell: 416.399.8093
Fax: 416.261.1519 nvpiraba@hotmail.com



No need Elevator
Why are you renting, when you can own!

PIRABAA NALLATHAMBY
Sales Representative

# எண்ணித்துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு.

## உங்கள் கடன் பிரச்சினைகளை தீர்க்கும் போது அதனால் உருவாகும் நன்மை தீமைகளை சரியாக அறிந்துள்ளிர்களா?

## நீங்கள் எடுக்கும் நடவடிக்கையால்

- எதிர்காலத்தில் உங்கள் பிள்ளைகளின் கல்விக்கோ, அவர்களின் தொழில்துறைக்கோ பாதிப்புக்கள் வருமென எண்ணுகிறீர்களா?
- நீங்கள் ஒரு புதிய வேலைக்கு செல்லும்போதோ அல்லது வேறு வேலைக்கு மாறும்போதோ பிரச்சினைகள் வருமென்று எண்ணுகிறீர்களா?
- எதிர்காலத்தில் ஸ்பொன்சர் செய்யும் போது ஏதாவது பிரச்சினைகள் வருமென எண்ணுகிறீர்களா?
- உங்கள் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுமென எண்ணுகிறீர்களா?

இவைபோன்ற பல கேள்விகளுக்கு சரியான பதில்களை அறந்துகொள்ள இத்துறையில் பலவருட கால அனுபவமுள்ள பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களின் கடன் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்த

CRCanada

அழையுங்கள்

சங்கர் அல்லது கிறிஸ்

Having Difficulty Repaying Your Student Loan? New Rule Changes Can Help

## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் கட்டவேண்டிய கடன் தொகையிலிருந்து 15%-20%த்தை மட்டும் தவணை முறையில் கட்டிமுடிக்கலாம்.



T.SHANKAR
Director

# CRCanada

Credit Reform Canada

*Judgement in your favour!*

885 Progress Ave, Unit - 202, Scarborough.

CRCanada

**416-264-1010**

# Your life.
# Your career.
# *Your call.*

If you're looking for a career that offers the potential for financial success and have the drive, discipline, energy, and self-confidence to run your own business, then consider becoming a Sun Life Financial advisor. Contact us to learn more about this rewarding career opportunity.



**Chandran Rasalingam**
Sales Manager
Bus 416-412-0401 ext 305
Cell 416-909-0400
Fax 416-412-1438
gnanachandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

Sun Life Financial

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2008.



To get the key
for the future!!!
வீடு வாங்க விற்க, வியாபார நிலையங்களில் முதலீடுகள் செய்ய...
RE/MAX
Karuna Gopalapillai
Broker
Office: 416.321.2228
Direct: 416.830.8520
RE/MAX Vision Realty Inc., Brokerage
1-2210 Markham Road
Toronto, ON M1B 5V6
Toronto
Detached
Meadowvale & Sheppard
4 Bedroom, 3 Washroom
$419,900
Toronto
Detached
Brimely/Lawrence
4 Bedroom, 3 Washroom
$339,900
Toronto
Detached
Port Union/Sheppard
4 Bedroom, 3 Washroom
$379,900
Ajax
Detached
Taunton & Salem
4 Bedroom, 4 Washroom
$393,000
Ajax
Detached
Rossland/Audley
4 Bedroom, 3 Washroom
$394,000
Markham
Detached
9th Line/14th Ave
4 Bedroom, 3 Washroom
$309,900
Markham
Detached
Markham/Highglen
4 Bedroom, 4 Washroom
$455,000
Markham
Detached
9 Line Bypass&14 Ave
4 Bedroom, 3 Washroom
$383,900
Markham
Detached
Markham/14th Ave.
4 Bedroom, 3 Washroom
$479,900
Markham
Detached
Denison/Markham
4+1 Bedroom, 4 Washroom
$479,900
E & OE




Centum Vision Mortgage Inc.
☑ Residential Mortgage
☑ Commercial Mortgage
☑ Equity Loan & Line of Credit
WANTED
New & Experience Agents
WE PROVIDE:
☑ Training
☑ Support
☑ Better Split
☑ Convenient Locations
☑ Franchise Opportunities*
(*only for Brokers)
416.830.8520
2929 Lawrence Avenue East, Suite 203
Scarborough, ON M1P 2S9

www.Uproperties.ca



ROYAL LEPAGE
Credit Valley Real Estate
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKERAGE

Bus: (905) 793 - 5000
Fax: (905) 793 - 5020

Uthayan Nadarajah
Broker

Buy or Sell with me and get
Free Gas Card for One year
(Limitation Apply)

Call me @: 416-727-9945

- Residencial/Commercial/Invetments
- Hotels/Motels for sale
- Waterfront cottage properties from $ 89,000
- High Return Investment Properties Available

THE INSTITUTE for LUXURY HOME MARKETING
MEMBER

A MEMBER OF
Commercial Division
Toronto Real Estate Board
www.trebcommercial.com

#106 - 44 Peel Centre Drive
Brampton, ON L6T 4B5

# எங்கள் காயங்களும் வெறுமைகளும் வேறுவிதமானவை:

## இளங்கோவின் 'நாடற்றவனின் குறிப்புகள்' கவிதை நூலை முன்வைத்து...



தேவகாந்தன்
devakanthan@thaiveedu.com

சமீபத்தில் வெளிவந்த இளம் கவிஞர்களின் ஆக்கங்களில் புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தின், குறிப்பாக கவிதைத் துறையின், எதிர்காலச் செல்நெறியைச் சுட்டிக்காட்டும் கூறுகள் புலப்பட ஆரம்பித்திருப்பதை ஒரு தீவிர வாசகர் எதிர்கண்டிருக்க முடியும். அவ்வாறான ஆக்கங்களில் இளங்கோவின் 'நாடற்றவனின் குறிப்புகள்' தொகுப்பை ஒரு முக்கிய வரவாக நான் காண்கிறேன்.

'நாடற்றவனின் குறிப்புகள்' எல்லா கவிதைத் தொகுப்புகளையும் போலவே மோசமானது, சுமாரானது, நல்லது, மிகநல்லது என்ற பகுப்புகளுள் அடங்கக்கூடிய விதமாக அமைந்து, 53 கவிதைகளைக் கொண்டிருக்கிற நூல்தான். ஆனாலும் இது அழுத்தமாகக் காட்டிச் செல்லும் புதிய செல்நெறியால் கவனம் மிகப்பெறுகிறது. புலம்பெயர்ந்தோர் கவிதை தன் மரபோடு, தன் புதிய புலத்தின் கவிதைத் தன்மையை உணர்கிறதும், உள்வாங்குகிறதுமான கால கட்டமொன்று இயல்பில் இப்போது உருவாகிக்கொண்டிருக்கிறதை இத் தொகுப்பில் முக்கியமாகக் காணக்கிடந்தது.

சென்ற நூற்றாண்டின் அந்திமம் வரை ஈழத்துப் புலம்பெயர்ந்த கவிஞர்களின் பாடுபொருள் பெரும்பாலும் தம் இழந்த மண்ணும், வாழ்வும், கலாச்சாரமும் சார்ந்ததாகவே இருந்திருக்கிறது. எகிப்திலிருந்து இஸ்ரவேலரின் மறுதிரும்புகையின் போதான துயர்களைப் போன்றதோடுகூட இவர்களுக்கு ஒரு திரும்புகை இருந்துவிடாது என்பதை அரசியல் வலிதாய் உணர்த்தி நிற்கையில், இன்று மண்ணும் வாழ்வும் கலாச்சாரமும் பற்றிய ஏக்கம் அவற்றை இழந்ததனாலாய துயரங்களை வைத்துப் பார்க்கையில் இவர்கள் கவிதைகளில் பின்தள்ளப்பட்டிருப்பதாகவே சொல்லக் கூடியதாய் இருக்கிறது. இன்று புலம் பெயர்ந்தோர் சந்திக்கும் பிரச்சினைகள், அவர்களே அதைப் பிரச்சினையென உணராதபோதிலும், புலம்பெயர்ந்ததினாலான மூலத்திலிருந்து கிளர்ந்திருப்பவை என்பதை சமூக அக்கறையாளரால் எளிதில் உணரமுடியும். அதனால் இந்த பழையனவற்றின் இழப்பும், புதிய புலத்தின் உழல்வும், ஒரு நவ கலாச்சாரக் கலப்பினால் அவைபற்றிய உணர்வும் கூடியோ குறைந்தோ அவர்கள் படைப்புக்களில் அழுத்தமாவதை தவிர்க்கவே முடியாதிருக்கும்தான். இச் செல்நெறியின் ஆகக் கூடிய உதாரணமாகும் தொகுப்புகளில் முதன்மையானது 'நாடற்றவனின் குறிப்புகள்' என்பதைச் சொல்ல எனக்குத் தயக்கமில்லை.

சேரன், வ.ஐ.ச.ஜெயபாலன், சண்முகம் சிவலிங்கம், சு.வில்வரத்தினம், ஔவை போன்றவர்களுடைய கவிதைகளின் பாடுபொருளைவிட, கி.பி.அரவிந்தன், பா.அ.ஜயகரன், திருமாவளவன், செழியன் போன்றோரினதை விடவுமே, இளங்கோ, தான்யா, பிரதீபா, தமிழ்நதி ஆகிய புதிய தலைமுறையினரின் பாடுபொருள் வித்தியாசமானது. இன்னும் சரியாகச் சொல்லப்போனால் முன்னையவர்களினதைவிட விரிவானது. ஒருபொருளிலிருந்து இன்னொரு பொருளாய் சூக்கும மாற்றமுற்றது. பெண்ணிலை வாதக் கருத்துக்களும், புகலிடத்தின் அவலங்களும், பல்வேறு சமூகங்களின் இதுபோன்ற துயரங்களின் அவதானிப்பும், அதனாலேயே இப் பொதுத் துயரத்துக்கு மூலாதாரம் கண்டு ஒன்றிணையும் எத்தனிப்பும் இவர்களின் கவிதைகளில் விரவிக் கிடக்கின்றன. தமிழ்ச் சமூகமென்ற ஒற்றைத் தடத்திலிருந்து விலகி உலகமளாவ எத்தனிப்பது.

புகலிட அவலங்கள் அனாதியானவை. விவிலியம் இது குறித்த முதலாவது பதிவின் சாட்சியமெனக் கூறமுடியும். சங்ககாலத்துப் பாணர் பாடினிகளின் பாடல்களில் தெரிவது இதுபோன்ற துயரத்தின் ஒரு சாயல்தான். அப் பகுதிக்கு புதிதாக வந்த பாணன்தான் அவன். முதல்நாளிரவு அவன் ஓர் இல்லிலிருந்து பாடியிருக்கிறான். அதைச் சுட்டும் விதத்திலேயே அவன் ஒரு பெண்ணால் அவமானப்படுத்தப்படுவதாக ஒரு சங்கப் பாடல் உண்டு. அதன் கருத்து இது: 'நேற்றிரவு ஒரு சத்தம் எழுந்துகொண்டிருந்தது எங்கிருந்தோ. அதைக் கேட்ட என் அன்னை பேய் கத்துகிறது என்றாள். என் தங்கையோ, நாய் குரைக்கிறது என்றாள். நான்தான் நீ பாடுகிறாய் என்று சொன்னேன்.'

'பேயென்றாள் அன்னைதான்'பேதை என் தங்கையும்'நாயென்றாள், நீயென்றேன் நான்' என்று வருவதான அடிகள் கலித்தொகையில் உள்ளதாக ஞாபகம்.

இதைவிட ஒரு பாடும் பரதேசியை அவமானப்படுத்தும் வார்த்தைகள் இருக்கமுடியுமா? தமிழ்ப் பரப்பில் அலைந்துழல்வின் மேலான அவலத்தின் முதல் பதிவாக இதைக் கொள்ள முடியும்.

அலைந்துழல்வு சங்கமளாவிய பழைமை எனினும் இன்றைய புதுமையும்தான். புதுமையற்ற பழைய அனுபவங்களில் புதுமையைக் காண்பதே கவிதை அல்லது இலக்கியத்தின் நோக்கம் என்று 'வ்லோவ்ஸ்கி சொல்லிய வாசகங்களை வைத்து நோக்குகையில் இந்த உண்மை இன்னும் உறுதிப்படும். ஆனாலும் இது தனிப்பட்ட படைப்பாளியின் ஆக்கத் திறனின் அம்சமாகவும் இருக்கிறது என்பதும் உண்மையே. அதை இளங்கோவின் கவிதைகளினூடாக அலசலாம்.




காதலில் காமத்தையும், காமத்தில் காதலையும் பிரிவறக் காணும் திணைக் காலத்திலிருந்து உருவான தமிழ் மரபு, முதன்முறையாக தெளிவான வேறுபாடுகளுடன் இளங்கோவின் கவிதைகளில் காட்டப்படுகிறது.

'நினைவுகளின் செட்டையைக் கழற்றிவிட்டு
இறகுகளின் மிருதுவான போர்வைக்குள்
நடுநடுங்கிக்கிடப்படி விரகமெழும்
உறைபனிக் காலம்

நேற்று நடந்தவையெதுவும்
என்னைப் பாதிக்காதெனும் திமிருடன்
கொஞ்சம் கொச்சைத் தமிழும்
அதிகம் ஆங்கிலமும்
நாவில் சுழலும் அன்புத் தோழியுடன்
மரபுகளைச் சிதைத்தபடி
கலவியும் கிறங்கலுமாய்
கழிகிறது வாழ்வு'
என்பதிலும்,

'குடித்துக் கிறங்கி
உனையணைத்த பின்னிரா வேளையில்'
என்பதிலும்,
'உடல்கள் உராய்ந்து
ஆசைத்தீ கனன்றெரிந்த
மாலைப்பொழுதொன்றின் பிற்பாடு'

என்பதிலும் தெரிவது காமம்பற்றிய அனுபவப் பகிர்வுகளே. அவை காதலோடு பின்னமற்றவையாய் மயங்கவைக்கப்படவில்லை இங்கே. அது ஒரு வித்தியாசமான இலக்கியப் பிரிவாகவே தன்னை வெளிப்படுத்தும்.

பாலைத் திணையின் ஒழுக்கம் பிரிதல் ஆகும். கணவன் வாழ்வின் ஆதாரமான பொருள் தேடச் செல்லுதலை மய்யமாய்க் கொண்டு இது வரையறைபட்டது. இதில் பெண் கணவன் சொல்லிச்சென்ற காலம் வரை காத்திருத்தலே பெருவழக்கு. சில வேளை பெண்டிரும் உடன்செல்லுதல் உண்டு. இதை உடன்போக்குப் பாலையெனக் கூறுகிறது திணைப் பகுப்பு. அதுபோல் இளங்கோ காட்டும் பிரிவை 'உடன்பாட்டுப் பிரிவு' என வகை செய்யலாம்போலப் படுகிறது. காதலனும் காதலியும் தம் உறவு கைகூடப் போவதில்லையெனத் தெரிந்து பிரிவை மிக்க இயல்பானதுபோல் கொண்டு தம் உறவை அறுத்து அகல்வர். தமிழ்க் கவிதைப் பரப்பில் இந்தத் துறை புலம் பெயர் கவிதையின் பாடுபொருளாக அமைவதைக் கவனிக்கவேண்டும். நிலைபேறுள்ள தனி மனிதர்களின் ஒழுக்கவியலாக இது இல்லை. அலைந்துழல்வோரின் ஒரு கூறாகவே இதைக் காணமுடிகிறது.

'இனியென்ன
எதிரெதிர்த் திசைகளில் எம்
பயணமும்
தற்செயலாய்ச் சந்திக்கையில்
சின்னதாய்ச் சிரிப்பும்

இவைபோதும் எனக்கும்
உனக்கும்'

என்ற வரிகளும்,

'நாளைக்குப் பயணம்
கனடாவிற்கெனக் கூறி
பார்வையைத் தூரத்தில்
தொலைத்த பொழுதில்
நெருங்கிவந்து இதழ்
பதித்தகன்றாய்

நான் நிசப்தமாயினேன்
நின்ற புள்ளியில்
நீயோ நடந்துசென்றாய்
திரும்பிப் பாராது
இனி நிலைப்பதற்கு
உறவெதுவும்
இல்லாமற்போல்'

என்ற வரிகள் இடம்பெறும் 'பனையும் அரசமரமும்' என்ற ஒரு முழுக் கவிதையுமே இந்த நவஅறத்தைத்தான் சொல்கின்றன.

தொகுப்பில் உள்ள 2000, 2001, 2002ஆம் ஆண்டுகளுக்கான கவிதைகளில்தான் இத்தகைய போக்கினைக் காணக்கிடக்கின்றது என்பதையும் இங்கே மனங்கொள்ள வேண்டும். ஆனால் 2005, 2006ஆம் ஆண்டுகளுக்கான கவிதைகள் தம்தொனியை சடுதியில் மாற்றத் தொடங்கிவிடுகின்றன.

2002க்குப் பின் 2003, 2004ஆம் ஆண்டுகளின் கவிதைகளைக் காணாதிருக்கும் இத் தொகுப்பில் 2005உம், 2006உம் ஊருக்குத் திரும்பிவிடும் மனம் ஆங்குள்ள வதைபாடுகளைப் பாடத் தொடங்கிவிடுகிறது. இவை 'எங்கள் காயங்களும் வலிகளும் வித்தியாசமானவை'யென ஆணித்தரமாய் நிறுவுபவை. நினைவுகள் வலியை ஏற்படுத்தும். எவருக்கும் இயல்பானது இந்நிலைமை. ஆனால் மரணத்தை ஏங்குமளவுக்கு இந் நினைவுகள் வதையாவது இளங்கோவின் கவிதைகளில் உள்ள விசேஷம். மதுவிலும், மாதர்களிலும் தம் வலிகளை மறந்து திரிந்த கவிஞர்கள் இருக்கிறார்கள். மரண வலி-கொண்டு மறைந்தவர்கள் இருக்கிறார்கள். ஆனாலும் இளங்கோ சொல்லும் முறையானது இதில் தனித்துவமானது. வாழ்தலின் நியதியோடு மரணத்தை ஏங்கும் வதை இது.

'தடயங்களின்றி
இந்த ஆண்டு, இப்படி இறப்பு
இன்னபிற குறிப்புகளின்றி
பெயரறியா வனாந்தரத்தில்
கொண்டாட விரும்பகின்றேன்
எனது மரணத்தை'
என்றும்,
'தேவதைகளைக் கொன்ற
சாத்தான்கள் நுழைந்த திசை
வெளுக்கத் தொடங்கையில் மட்டும்
மறக்க முடிவதில்லை
இது
தற்கொலை செய்வதற்குரிய
தருணம் என்பதை'

என்றும் கூறும் வரிகள் மரணத்தை யாசிக்கும் வலி படர்ந்திருப்பதன் அடையாளங்கள்.

மேலும், 'சாத்தானின் காற்று' நள்ளிரவைச் சிலுவையில்அறைய' 'அதிர்கிறது பாவஞ் செய்தவர்களின் வீட்டு யன்னல்கள்', 'மதுக் குவளையின் விளிம்பிலமர்ந்த' 'எலுமிச்சையாய்' 'நிலவு மிதக்குமோர் பொழுதில்' போன்ற வரிகளில் இந்தத் தலைமுறைக் கேயுரித்தான புதிய உவமானங்கள் மின்னுகின்றன.

மட்டுமில்லை. 2005, 2006ஆம் ஆண்டுக் கவிதைகளே கவிதைத் தரம் கூடியவையுமாகும். மொழியின் அதியுயர்ந்த சாத்தியப் பாட்டை இளங்கோ அளவில் அவை அடைந்துள்ளதோடு, உத்திவகையாகவும் மேனிலை கொண்டிருக்கின்றன. அதே வாழ்விலும் சூழ்நிலையிலும் வாழ்ந்துகொண்டுதான் இந்த வகையான பின்நவீனத்துவ உத்திகளுள் ஒருவரால் பிரவேசிக்கமுடியும். 'கரையொதுங்கும் புறாவின் சிறகுகள்', 'ஆழப் புதையுண்ட வேர்கள்' போன்ற கவிதைகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இத் தொகுப்பில் குறைகளே இல்லாமலில்லை. ஆனாலும் அதை வேறுவிதமாகக் கூறலாமென எண்ணுகின்றேன்.

ஒரு தொகுப்பில் பல உணர்வுகளும் கொண்ட கவிதைகள் இடம்பெறலாம். ஆனாலும் அந்த உணர்வுகள் ஒரே கவிதையில் புலப்பாடடையும்போது விகற்பமாய்த் தோன்றும். பூவுக்குள் புரட்சி தோன்றுவது போல, அறச் சீற்றம் கொள்ளும் தருணத்தில் புணர்ச்சி விழைவு சுண்டத் தொடங்கிவிடுகிறது இளங்கோவின் கவிதைகளில்.

இதற்கு படைப்பாளியின் மனம் அந்தக் கணத்திலேனும் நிறுதிட்டம் கொள்ளாதிருப்பதைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். இது அனுபவக் குறைவாக, இலக்கற்ற சிந்தனைத் தொகுப்புள்ள வெறும் வாசிப்பு மனம் கொண்டதாக மட்டுமே இனங்காணப்படும். அந்தக் குறையை இப் படைப்பாளி கொண்டிருந்ததை தொகுப்பைப் பன்முறை வாசித்த வேளையிலும் என்னால் உணர முடிந்திருந்தது. இது முக்கியமாகச் சீர்செய்யப்பட வேண்டிய ஒரு குறைபாடாக எனக்குத் தெரிகிறது. அதுவரை இன்னும் சிறந்த கவிதைகளை நாம் இளங்கோவிடத்தில் எதிர்பார்ப்பதில் ஞாயமில்லை.

■ ■ ■

# பிளாஸ்ரிக் பொருட்பாவனையும் பின்விளைவுகளும்

சிவாஜினி பாலராஜன்
sivajini@thaiveedu.com



இன்று நமது அன்றாடப் பயன்பாட்டில் பிளாஸ்ரிக் பொருட்கள் அதிக செல்வாக்குப் பெற்றுள்ளன. சொல்லப் போனால் இதன் காரணமாகவே பிளாஸ்ரிக் பொருட்களின் தயாரிப்புகளும் அதிகரித்துக் கொண்டு போகின்றன. மறு பயன்பாடற்ற (Non-Recyclable) பிளாஸ்ரிக் பொருட்களால் சுற்றுச் சூழலுக்கு பெருங்கேடு ஏற்பட்டு வருவதாக சுற்றுச் சூழலியலாளர்கள் கருத்து தெரிவித்து வருகின்றார்கள். பிளாஸ்ரிக் பொருட்கள் சுற்றுச் சூழலை மாசுபடுத்துவதுடன் நின்றுவிடவில்லை. மனித சுகாதாரத்தையும் பாதிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. நாளாந்தம் எங்கள் வீட்டிலும் சரி வெளியிலும் சரி பிளாஸ்டிக் பொருட்கள் தண்ணீர் போத்தலாக குழந்தைகளின் பால்போத்தலாக ஏன் பல வீடுகளில் சாப்பாட்டை சேகரித்து குளிரூட்டியில் வைக்கும் பாத்திரமாகவும் அதன் பின் அதுவே சாப்பாட்டை சூடாக்கும் பாத்திரமாகவும் இப்படி பல்வேறு வடிவங்களில் வலம் வருகின்றது. அதுமட்டுமல்ல வைத்தியத் துறையில் கூட குருதி சேகரித்து வைக்கும் பையாக மருந்து கொள்கலன்களாக இவ்வாறு பல தேவை கட்டு பலவிதமாக பாவிக்கப்பட்டு வருகிறது.

தற்காலத்தில் பிளாஸ்ரிக் என்பது சூளை அச்சில் வார்த்து வெப்பம் மற்றும் அமுக்கம் என்பவற்றை பாவித்து பல்வகையான பொருட்களைத் தயாரிக்க உதவும் வழவழப்புத் தன்மையான பொருளைக் குறிக்கும். இதற்கு சாயம் பூசி பல்வேறு நிறங்களையும் அளிக்க முடியும். உலோகத்துடன் ஒப்பிடும் போது குறைந்த எடை கொண்டது மட்டுமல்ல காற்று மற்றும் நீரால் பாதிக்கப்படமாட்டாது அல்லது துருப்பிடிக்காது எனலாம். நெருப்பினால் அழியாத ஒரு வகை பிளாஸ்டிக் கூட இப்போ ஓரளவு பாவனையிலுண்டு. சில பிளாஸ்டிக்குகள் நெகிழ்ச்சி உடையவை சில மென்மையானவை இன்னும் சில மிகவும் உறுதியானவை. இவற்றின் சிறப்புத் தன்மையினால் மின்சாரத் துறையில் கூட இவை உபயோகிக்கப் படுகின்றன.

### பிளாஸ்ரிக்கின் வரலாறும் வளர்ச்சியும்

Cellulose Nitrate என்ற முதல் இரசாயனவியல் பிளாஸ்ரிக் 1862ம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில் அலெக்சாண்டர் பாக்ஸ் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் வர்த்தகப் பெயர் பார்க்கென்சைன் (Parkesine) ஆகும். இந்த பார்க்கென்சைன் செலுலோசிலிருந்து தயாரிக்கப்பட்டது. இந்த வகையான பிளாஸ்ரிக்கை தயாரிப்பதும் கையாள்வதும் அந்தக் காலத்தில் கடினமாகவும் ஆபத்தானதாகவும் இருந்தது.

1868ல் அமெரிக்காவைச் சேர்ந்த John Wesley Hyatt என்பவர் பருத்தியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட pyroxilin, நைத்திரிக்கமிலம், கற்பூரம் ஆகியவை கொண்ட கலவை மூலம் தயாரித்த செலுலோயிட்டை அறிமுகப்படுத்தினார். இது அந்த காலகட்டத்தில் மக்களது நன்மதிப்பைப் பெற்றிருந்தது. அத்துடன் பல்வைத்தியத் துறையில் Dental Plate இனைத் தயாரிப்பதற்கும் ஆண்களின் சட்டைகளின் காலருக்கு (Shirt Collar) விறைப்புத் தன்மையினைக் கொடுப்பதற்கும் பாவிக்கப்பட்டது. பின்னர் 1870ல் Baumann என்பவரால் Polyvinyl chloride (PVC) கண்டுபிடிக்கப்பட்டது. இன்றும் இது தண்ணீர் குழாய்களாக (plumping) பாவிக்கப் படுகிறது. அடுத்து 1930ல் அமெரிக்காவைச் சேர்ந்த Du Pont நிறுவனத்தினால் நைலானும் 1935ல் ICI நிறுவனத்தினால் போலி எத்தலீனும் அறிமுகப்படுத்தப்பட்டது. இது உலகப் போரின்போது ரேடார் (radar) தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. ABS என்ற பிளாஸ்ரிக்கும் உலகப்போருக்காகத் தயாரிக்கப்பட்டது.



1950களில் கண்டுபிடிக்கப்பட்ட பொலிகாபனேற் என்னும் ஒருவகைப் பிளாஸ்ரிக் இறுவட்டுகள் தயாரிக்கவும் Teflon என்பது ஒட்டாத அல்லது அடிப்பிடிக்காத சமையல் பாத்திரங்கள் (non-stick cooking utencils) தயாரிக்கவும் பயன்படுகின்றது. 1954ல் இத்தாலிய இரசாயனவியல் நிபுணரான (chemist) Giulio Natta போலிபுரொப்பலீனை கண்டுபிடித்தார். இவ்வாறு பிளாஸ்ரிக் வளரத் தொடங்கி இன்றுவரை புதுப்புது வகைகளாக அறிமுகமாகிக்கொண்டே இருக்கிறது. பலர் போட்டி போட்டுக்கொண்டு புதிய கண்டுபிடிப்புக்களில் முனைந்துள்ளனர். அத்துடன் பழைய கண்டுபிடிப்புகள் கூட மெருகூட்டப்பட்டு அல்லது சிறு சிறு மாற்றங்கட்கு உட்படுத்தப்பட்டு மரம், கண்ணாடி ஆகியவற்றை மாற்றீடு செய்யும் அளவிற்கு வளர்ந்துள்ளது. பிளாஸ்ரிக் பயன்பாடு பல்கிப் பெருகிவிட்டதால் இக்காலத்தை பிளாஸ்ரிக் காலம் என்று சொன்னால் மிகையாகாது.

### பிளாஸ்ரிக் வகைப்படுத்தல்

பல விதமான பிளாஸ்ரிக் வகைகள் உண்டு. இவை மறு பயன்பாட்டின் (recycling) அடிப்படையில் பாகுபடுத்தப்படுகின்றன. வெவ்வேறு வகையான பிளாஸ்ரிக்குகள் வெவ்வேறு வெப்பநிலையில் உருகும் என்பதனால் அவற்றிற்கு வித்தியாசமான பண்புகள் உண்டு. பிளாஸ்ரிக் செய்யும் தொழிற்சாலைகள் ஒவ்வொருவகை பிளாஸ்ரிக்கிற்கும் வித்தியாசமான குறியீடுகள் வைத்திருக்கிறார்கள். இவை ரெசின் அடையாள குறியீடுகள் (Resin Identification Code) எனப்படும். இந்த வகையான குறியீடுகள் பிளாஸ்ரிக் பொருளில் பொறிக்கப்பட வேண்டும். இக் குறியீட்டு முறை Society of the Plastic Industry Of Americaவினால் 1988ல் ஆரம்பிக்கப்பட்டது. குறியீட்டு முறை இருப்பினும் எல்லா பிளாஸ்ரிக் தயாரிப்பாளர்களும் இக் குறியீட்டு முறையினை பாவிப்பதாக தெரியவில்லை. இந்தக் குறியீட்டினைத் தெரிந்து கொண்டே பாவனையாளர்கள் இவற்றை அந்தந்த தேவைக்கேற்ப பாவிக்க வேண்டும். அதுமட்டுமல்ல இதனடிப்படையிலேயே பிளாஸ்ரிக் பொருட்கள் மறுபயன்பாட்டிற்காக உருக்கி எடுக்கப்படும்.

பிளாஸ்ரிக்குகள் முக்கியமாக ஏழு வகையாகப் பிரிக்கப்பட்டு அவற்றிற்கு வெவ்வேறு பெயர்களும் குறியீடுகளும் கொடுத்து பாகுபடுத்தப்பட்டுள்ளன. பொதுவாக இந்தக் குறியீட்டைப் பார்க்கும் போது அனைத்து மக்களுக்கும் தெரியும் இது மறுபயன்பாட்டிற்கான குறியீடு. இருப்பினும் பொதுமக்கள் இந்த குறியீட்டின் மத்தியில் இருக்கும் எண்களை கருத்திற்கொள்ள வேண்டும்.

### 1 PETE
### (Polyethylene terephthalate)

ஒளி புகவிடக் கூடிய நிறமுள்ளவையாக அல்லது நிறமற்றவையாக இருக்கலாம். இவற்றிலிருந்து Antimony Trioxide கசியும். இந்தப் பொருள் சுவாச சம்பந்தமான நோய்களையும் தோல் அரிப்பு, பெண்களுக்கு கருச்சிதைவு என்பவற்றையும் உருவாக்கும். உட்கொள்ளும் பானம் நீண்ட நாட்களுக்கு இவ்வாறான கொள்கலன்களில் இருப்பின் வெளிவிடப்படும் இரசாயனப் பதார்த்தத்தின் செறிவு கூடுதலாக இருக்கும். இதனால் தீங்கின் விளைவும் அதிகமாக இருக்கும். புற்றுநோயையும் தூண்டலாம் என நம்பப்படுகின்றது. இவை ஒற்றைப் பாவனைக்கு மட்டும் உகந்தவை. அதாவது ஒரேயொரு முறை மட்டும் பாவிக்கலாம். அதன் பின் கழித்துவிட வேண்டும். இது பெரும்பான்மையாக (recycle) மறுபயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்படும் இனமாகும். தண்ணீர் போத்தல்களின் அடியில் சிறு மடிப்புகள் போன்று மேடுபள்ளம் (dimple) இருக்கும். ஆனால் வாயு அடைக்கப்பட்ட பானங்கள் (fizzy drinks) உள்ள போத்தலின் அடிப்பக்கம் பூ போன்ற உருவில் மேடுபள்ளம் மிகவும் பெரிதாக இருக்கும். இவை அமுக்கத்தை (pressure) தாங்குவதற்காக உருவாக்கப்பட்டவை.

குளிர் பானங்கள், மதுபான வகைகள், சமையல் எண்ணெய், நிலக்கடலை வெண்ணெய் (Peanut Butter) கழிவறை சுத்தம் செய்யும் சவர்க்காரவகைகள் (toiletres) அழகு சாதனப் பொருட்கள் (cosmetics) என்பவற்றின் கொள்கலன்கள் இவற்றினால் ஆனவை.

சாதாரணமாக பாவனையிலுள்ள தண்ணீர்ப் போத்தல்களில் மறுபயன்பாட்டுக் குறியினுள் ஒன்று என்ற எண்தான் இருக்கும். அவை ஒரு தரப் பாவனைக்கு மட்டும் செய்யப்பட்டவை. ஆனால் எங்களில் பலர் அந்தப் போத்தலில் உள்ள தண்ணீர் முடிந்த பின் அதனை மீண்டும் நீர் நிரப்பி பாவிப்பதுண்டு. அதுமட்டுமல்ல எங்களில் பலர் தண்ணீர் போத்தல்களை வாங்கி எங்களுடைய வாகனங்களுக்குள்ளேயே பல நாள் விடுவதும் உண்டு. சில சமயங்களில் போத்தலைத் திறந்து கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டு மூடி வைத்து விடுவோம். சில நாட்களின் பின்னரோ அல்லது ஒரு வாரத்தின் பின்னரோ மீண்டும் தண்ணீர் தேவைப்படும் போது குடிப்பதுண்டு. எங்கள் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் இவ்வாறான பழக்கங்களை நாம் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

### 2 HDPE
### (High-density Polyethylene)

ஒளி புகவிடக்கூடியனவாக (clear) அல்லது ஒளிபுகவிட (opaque) முடியாதனவாக இருக்கலாம். மடித்தால் உடையாது. இவ்வகையான பிளாஸ்டிக்கினால் ஏற்படும் தீமை முழுமையாக அறியப்படாததால் இது ஓரளவிற்கு பாதுகாப்பானதாக கருதப்படுகின்றது. இவை அழுத்தங்களை தாங்காது என்பதால் இவற்றுள் வாயு அடைக்கப்பட்ட பானங்கள் இருப்பதில்லை. அத்துடன் போத்தலின் அடிப்பக்கம் தட்டையாகவே இருக்கும்.

பால், தண்ணீர், பழரசச்சாறு, தயிர் ஆகியவற்றின் கொள்கலனகள் இவற்றினால் ஆனவை.

### 3 PVC
### (Polyvinylchloride)

இவ்வகையான பிளாஸ்ரிக்குகள் தடிப்பானவையாகவும் உறுதியானவையாகவும் காணப்படும். இவற்றிலிருந்து கசியும் இரசாயனப் பொருளான Di(2-ethylhexyl) phthalate (DEHP) என்பது புற்றுநோயைத் தூண்டக் கூடியதும் ஈரல், சிறுநீரகமல, எலும்பு ஆகியவற்றின் உற்பத்திக்கு எதிரான தொழிற்பாடுகளைத் தூண்டக் கூடியதுமாக இருக்கும். இவ்வகையான பிளாஸ்ரிக்குகள் பாவனையாளருக்கு மட்டும் தீங்கு விளைவிப்பவை அல்ல. தயாரிக்கும் போது கூட இவை மிகுந்த கவனத்துடன் தயாரிக்கப்பட வேண்டியவை. இவற்றை தயாரிக்கும் போது பாவிக்கப்படும் இரசாயனப் பொருட்களான vinyl chloride monomer (VCM), and ethylene dichloride (EDC) சுற்றுச் சூழலை மாசுபடுத்தக் கூடியவை. அத்துடன் இவற்றிற்கு கூடுதலான Toxic additives சேர்க்கப்பட வேண்டும். இவ்வாறு சேர்க்கப்படும் Toxic additives பின்னர் பாவனையின் போது வெளிவிடப்படும். சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விளையாட்டுப் பொருட்களில் PVC இருந்தமையால் அவை தடைசெய்யப்பட்டது நாங்கள் அறிந்ததே.

குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்கள் மெல்லிய கண்ணாடி சாப்பாடு சுற்றும் கடதாசிகள் (cling wrap) மருந்துகள் அடைத்து வைக்கும் ரியூப் குளியலறை திரைச்சீலை போன்றவற்றிற்கு பாவிக்கப்படும்.

### 4 LDPE
### (Low-density Polyethylene)

இது அடர்த்தி குறைந்த வளைந்து கொடுக்கக் கூடிய மெல்லிய அழுத்தமான பிளாஸ்ரிக். இவ்வகையான பிளாஸ்ரிக்குகள் இரண்டு விதமான தொழிலை செய்கின்றன. அதாவது இது பிளாஸ்டிக்காக தொழிற்படும் அதே நேரத்தில் fiber ஆகவும் தொழிற்படும்.

52ம் பக்கம் பார்க்க...

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail:thaiveedu@gmail.com
Fax: 416-849-0594
Tel: 416-646-3422

# CENTUM

## Rapid Mortgages Inc.

Licensed by the Financial Services Commission of Ontario # 10158

# Our Rates are Still LOW!!!

## Lock your rates NOW!

# 5 Year FIXED Rate :

# 4.99%

Good credit history and income proof required for all offers

## CENTUM Rapid Mortgages Inc.

Financial Services Commission of Ontario Brokerage License # 10156

211-80 Nashdene Rd, TOR, ON, M1V 5E4

WWW.CENTUM.CA/RAPIDMORTGAGES

Call ***Thaya PK Kandiah*** BAS, ABR®


**Principal Mortgage Broker**

Financial Services Commission of Ontario Broker License # M08001083

**Cell: 416.716.8707** **Bus: 416.644.3555**

Interest rates are subject to change without notice. Qualification based on individual credit worthiness and income. Some other conditions may apply, call for details. Qualified deals must close within 30 Days of initial application.


FREE
தகவல்
2009
இலவசம்
இலவசம்
இலவசம்
இலவசம்
THAKAVAL BUSINESS DIRECTORY 2009
2009 தகவல் வர்த்தகக் கைநூலில் உங்கள் விளம்பரங்கள் முற்றிலும் இலவசமாக இடம்பெற இன்றே தொடர்புகொள்ளுங்கள்.
உங்கள் வர்த்தக விளம்பரங்கள் குறைந்த செலவில் பல வடிவங்களில் வெளிவர அழைங்கள்.
Four Ways to Browse Your Ad
Regular Directory
Pocket Size Directory
Website
PDA (Personal Digital Assistant)
FREE Advertisement Size: 11cm x 5.5cm
FULL PAGE:
- Color: $300
- B/W: $150
- Both: $400
- 2 Color & 2 B/W = $750
Thakaval Business Directory
230-55 Nugget Ave.
Scarborough ON
M1S 3L1
Tel: 416-361-0482
Fax: 416-361-0482
info@thakaval.ca
www.thakaval.ca
இறுதி திகதி:
OCTOBER 31, 2008






வி. கந்தவனம்
kanthavanam@thaiveedu.com

## எழுத்தாளர் சுதந்திரம்

கனடாவில் ஒரு பத்திரிகை, கனடியப் பிரதமர் றோனி அவர்களை மடையன் என்று திட்டி எழுதி இருந்தது. பிரதமர் மல்றோனி அதனைப் பொருட்படுத்தவில்லை. அவர் எழுத்துச் சுதந்திரத்துக்கு மதிப்புக் கொடுப்பவர்.

மேல் நாடுகளில் எழுத்தாளர்களுக்கு இருக்கும் சுதந்திரம், சுதந்திரக் கீழை நாடுகள் பலவற்றில் இல்லாதது கவலைக்குரியது.

ஈழத்தில் தமிழ் எழுத்தாளர், தமது அநுபவங்களை முக்கியமாக அரசியல் உணர்ச்சிகளை, எழுத முடியாத நிலை இன்னமும் தொடர்கின்றது. ஏன்? தமிழர்களின் சுதந்திர உணர்வை ஆதரித்துச் சிங்கள எழுத்தாளர்களே எழுதத் தயங்குகிறார்கள்.

எழுத்தாளர், ஒரு சுதந்திரப் பறவை. அவரின் இறகுகளை வெட்டுதல், இலக்கியத்தின் இதயத்தை வெட்டுவதற்குச் சமமானது.

இலக்கிய வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகையில், மொழி வளர்ச்சியும் தடைப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையில் சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் அவர் செய்ய வேண்டிய கடமை-களும் கட்டுப்படுத்தப் படுகின்றன.

எழுத்தாளரின் சுதந்திரத்தில் தலையிடுவோர், எழுத்தாளர் தமது சுதந்திரத்தைத் துர்ப்பிர-யோகஞ் செய்கின்றனர் எனக் குற்றஞ் சாட்டுகின்றனர். இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகாது தமது எழுத்துக் கலையின் பெருமையைப் பேணும் பொறுப்பு, இன்றைய எழுத்தாளருக்குப் பெரும் பிரச்சனையாகிக் கொண்டு வருகின்றது,

எழுத்து, சக்தி வாய்ந்தது; எழுதுகோல் வாளினும் வலியது என்பர். ஆயின், எழுதுபவர் வாள்மீது நடப்பதை ஒத்த கவனத்துடன் எழுதுதல் வேண்டும். பிறர் உள்ளங்களைப் புண்படுத்துவதற்கும் ஓர் எல்லை உண்டு. இந்த எல்லையை மீறுகையில் எழுத்துச் சுதந்திரத்துக்கே யன்றி எழுதுபவரின் உயிருக்கே ஆபத்து ஏற்படுகின்றது.

Satanic Verses என்ற நூல், இஸ்லாமிய உலகை இழிவு படுத்துவதாகக் கருதி, அதன் ஆசிரியர் சல்மான் ருஷ்டி அவர்களைக் கொல்லப் போவதாக, ஈரான் பகிரங்கமாக அறி-வித்திருக்கின்றது. ருஷ்டி இப்பொழுது தலைமறைவாக வாழ்ந்து வருகின்றார்.

கனடாவில், ஒரு தமிழ் எழுத்தாளரைத் தமிழர் சிலர் தாக்கி இருக்கின்றார்கள். இன்னும் ஒருவர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கின்றார். இது குறித்த கவலை, 19.06.1993ல் ரொறன்ரோ மாநகரத்தில் நடைபெற்ற, கனடாத் தமிழ் எழுத்தாளர் இணைய அமைப்புக் கூட்டத்திலும் எதிர் ஒலித்தது.

கருத்து முரண்பாடுகளைத் தாங்கிக் கொள்வதும் அவற்றுக்கு நாகரிகமான முறையில் மறுப்புத் தெரிவிப்பதும் கருத்துச் சுதந்திரத்துக்கு மதிப்புக் கொடுக்கும் நாடுகளில் நிலவி வரும் பண்புடைமையாகும். எனினும், எல்லோரும் அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல இருப்பார்கள் என்று எழுத்தாளர் எதிர்பார்க்கலாகாது. எழுத்தாளருக்கு ஆக்கமும் கேடும் அவர் எழுதும் எழுத்தால் வருவதால், எழுத்தில் தவறில்லாமல் பார்த்துக் கொள்ளுதல் அவர் பொறுப்பாகின்றது.

வலியறிந்து, காலம் இடம் பொருள் நிலை அறிந்து, எழுதுபவர், கலை தெரிந்து வினையாடுவார்.

## வாசகர் தகைமை

வாசகர் இன்றி எழுத்தாளர் இல்லை. வாசகர் படித்துச் சுவைக்காத படைப்புக்கள் வெறும் எழுத்துக் குவியல்களே. எழுத்தாளரின் பெயரும் புகழும் வாசகர் அவரது எழுத்துக்குக் கொடுக்கும் மதிப்பைப் பொறுத்தது.

சில எழுத்தாளருக்கு வாசகர் தொகை அதிகமாக இருக்கும்; சிலருக்குக் குறைவாக இருக்கும். தொகையை வைத்துக் கொண்டு எழுத்தாளரின் ஆக்கத்தின் தரத்தை எடைபோட முடியாது. தொகையிலும் வாசகரின் தகைமையே முக்கியமானது.

ஆக்க இலக்கியப் படைப்புக்களைச் சுவைப்பதற்கு வாசகர்களுக்கும் சில அடிப்படைத் தகைமைகள் இருத்தல் வேண்டும். ஆழமான அறிவு மிகுந்தவரின் இரசனைக்கும் அற்ப அறிவுடையோரின் இரசனைக்கும் நிறைய வேறுபாடு உண்டு.

கிறிக்கெற் விளையாட்டின் விதிமுறைகளை அறியாதவர், அதனை முறையாக இரசிக்க மாட்டார்கள். அதுபோலவே இலக்கியத்தின் இயல்புகளை அறியாதவர், இலக்கியப் படைப்புக்களைச் செவ்வனே சுவைத்துப் படிக்க மாட்டார்கள்.

வாசகரின் இரசனைத் திறனை நன்கு அறிந்துகொண்டு, அதற்கேற்ப எழுத்தாளர் பலர் எழுதுவதுண்டு. மாறாக, தமது கொள்கைக்கும் பாணிக்கும் தகுந்தவாறு வாசகர்களை வளைத்தெடுக்கும் எழுத்தாளரும் உளர்.

வாசகர்களின் இரசனைத் திறன் மட்டமாக இருப்பினும், அவர்களது தரத்துக்குத் தக எழுத்தாளர் இறங்கி எழுதுதல் வேண்டும் என்கின்ற வாதத்தில் எனக்கு உடன்பாடில்லை. அப்படித்தான் இறங்கி எழுதினாலும், படிப்படியாக வாசகர்களது இரசனைத் திறனை வளர்த்தெடுக்க வேண்டியது எழுத்தாளரின் கடமை என்றே கருதுகின்றேன்.

மட்டமான இரசனை என்று நான் கருதுவது, சாதாரண மனித இச்சைகள் பற்றிய இரசனை-யை. மனிதனிடத்தில் இருக்கும் மிருகத் தனங்களை வளர்ப்பது எழுத்தாளரின் நோக்கமாக இருத்தலாகாது.

வாசகர் விரும்புவதை வழங்குதலிலும், வாசகரின் தேவைகளை வழங்குபவரே இலட்சிய எழுத்தாளர். மனிதத்துவத்தையும் உயர்ந்த இலட்சியங்களையும் போற்றும் எழுத்துகளே நின்று நிலைக்க வல்லன. நல்ல இயல்புகள் சார்ந்த இரசனையே இலக்கிய இரசனையாகும்.

ஈழத் தமிழர் மத்தியில் தரமான எழுத்தாளர் பலரும் இருந்தும் வாசகர் தொகை குறைவாக இருப்பது கவலைக்குரியதொன்று. பொதுவாகவே வாசிப்புப் பழக்கம், ஈழத்துத் தமிழ் மக்களிடம் குறைவு. வாசிப்புப் பழக்கம் உள்ளவர்களும் வாசகசாலை அல்லது நூல்நிலைய மட்டத்தில் நின்று விடுகின்றனர். பணம் கொடுத்து வாங்கிப் படிக்கும் அளவுக்கு ஆர்வம் வளரவில்லை. மேலைநாடுகளில் இலவயமாகத் தமிழ்ப் பத்திரிகைகள் பல விநியோகிக்கப் படுகின்றன. அவற்றின் பெயர்களைத்தானும் அறியாத தமிழர் நூற்றுக்கணக்கில் உள்ளனர்.

நம்மவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் குறைவாக உள்ளமைக்குரிய காரணங்கள் பல. அவற்றுள் மூன்று பிரதானமானவை:

பாடசாலை நிலையிலும் குடும்பச் சூழலிலும் வாசிப்புப் பழக்கத்துக்கு முக்கியத்துவம் கொடாமை.
விற்பனையைத் தூண்டவல்ல போதிய பிரசாரங்கள் செய்யாமை.
கவர்ச்சியான முறையில் நூல்களை வெளியிடும் நிறுவனங்கள்/வசதிகள் இல்லாமை.

## எழுத்தாளர் மன்றங்கள்

தமிழ்நாட்டில் இலக்கியக் கலைக்கு நல்ல ஆதரவு இருக்கின்றது. இலக்கியத் தரம் வாய்ந்த ஏடுகள் அங்கு வெளியாகின்றன. எழுத்தாளர்களுக்குப் பல வாய்ப்புகளும் வசதிகளும் உள்ளன. கொள்கைப் போக்குகளும் போட்டிகளும் இருப்பின் திறமைக்கு மதிப்பளிக்கப் படுகின்றது.

ஈழம், மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வாழும் தமிழ் எழுத்தாளர்கள், பல இடர்ப்பாடுகளுக்கிடையில் கலையை வளர்க்க வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். குறைவான குடித்தொகை, சிறிதான வாசகர் வட்டம், தமிழ்நாட்டு எழுத்தாளர்களின் ஆதிக்கம், படைப்புகளை ஏற்றுமதி செய்யக்கூடிய தாபனங்கள் இன்மை, இந்தியாவின் இறக்குமதிக் கட்டுப்பாடு என்பன இவர்களுக்கு இருக்கும் முட்டுக்கட்டைகள்.

மற்றுமொரு குறைபாடு, எழுத்தாளர் மத்தியில் ஒற்றுமை இன்மை. இலக்கிய ஆர்வம்மிக்க, சிறுதொகை வாசகர்களும் போட்டி பூசல்களால் குறுகிய வட்டங்களுக்குள் வலம்வர வேண்டியவர்களாகின்றனர். நற்போக்கு, முற்போக்கு, பண்டித வர்க்கம், பாமர வர்க்கம் என எழுத்தாளர் கச்சை கட்டியும் உள்ளனர். கொள்கைப் பூசல்களால் தரமான இலக்கியங்கள் இனங்காணப் படவில்லை. இலக்கியத் திறனாய்வுகளும் கலங்கிய குட்டைகளாயின.

நிலைமை இப்பொழுது மாற்றம் பெற்று எல்லாப் போக்குகளும் ஒரு குடைக்கீழ் இணையத் தலைப்படும் செய்தி இன்பம் தருகின்றது.

இதுபோலவே மேலைநாடுகளில் உள்ள தமிழ் எழுத்தாளர்களும் ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து உருப்படியான இலக்கியப் பணிகளில் ஈடுபடுவார்களாயின் புகுந்த நாடுகளிலும் தமிழ் பொலிந்து விளங்கும்.

கனடாவில் உள்ள ரொறன்ரோ மாநகரத்தில் 19.06.1993ல் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் ஒன்று அமைக்கப் பட்டது. இணையம் செய்யத்தக்க இலக்கிய முயற்சிகளாகப் பின்வருவன முன்வைக்கப்பட்டன.

- ஆக்க இலக்கியங்களை வெளியிடல்.
- ஆய்வுகள், கருத்தரங்கங்கள் நடத்தல்.
- நூல்களைச் சுத்தப் படுத்தல்.
- இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்தல்.
- மூதறிஞர்களைக் கௌரவித்தல்.
- இலக்கிய விழாக்கள் எடுத்தல்.
- பிறநாடுகளில் உள்ள தமிழ் எழுத்தாளர் மன்றங்களுடன் இணைந்து உலகளாவிய முறையில் தமிழை வளர்க்கும் முயற்சிகளில் ஈடுபடல்.

எழுத்துக் கலையை இளந்தமிழ் எழுத்தாளர்கள் முறையாகக் கற்க, தகுந்த வாய்ப்புக்கள் இல்லாமை ஒரு குறை. மேலைநாடுகளில் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும், எழுத்துக்கலை ஒரு பாடமாகக் கற்பிக்கப் பட்டு வருகின்றது. தமிழ்நாடு மற்றும் ஈழத்துப் பல்கலைக் கழகங்களில் எழுத்துக் கலைப் பயிற்சி வகுப்புகள் தொடங்க வேண்டும்.

வெளிநாடுகளில், எழுத்தாளர் மன்றங்கள் எழுத்துக் கலையில் வகுப்புகள் நடத்துதலையும், தமது நோக்கங்களில் ஒன்றாகக் கொள்ளின், இளம் எழுத்தாளரிடமிருந்து தரமான ஆக்க இலக்கியப் படைப்புக்களை எதிர்பார்க் முடியும்.

■ ■ ■



# பிளாஸ்ரிக் பொருட்பாவனை...

48ம் பக்கத் தொடர்ச்சி...

குப்பை போடும் பை (garbage bag) சமையல் சாப்பாட்டுச் சாமான் வாங்கும் பை போன்றவை இப்படியான பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்டது.

### PP (Polypropylene)

ஒளி புகவிடக்கூடியனவாக (clear) அல்லது ஒளிபுகவிட முடியாதனவாக (opaque) இருக்கலாம். இதன் உருகுநிலை அதிகமானதால் இது மிகவும் பிரசித்தி பெற்றதாகும்.

கூடுதலாக போத்தல் மூடிகள், உறிஞ்சு குழாய் (drinking straw), தயிர் கொள்கலங்கள் போன்றவை இவ்வகைப் பிளாஸ்ரிக்கினால் செய்யப் படுகின்றன. பொதுவாக மறுபயன்பாட்டு நிறுவனங்கள் (recycling centers) இவற்றை எடுப்பதில்லை.

### PS (Polystyrene)

ஒளி புகவிடக்கூடியனவாக (clear) அல்லது ஒளிபுகவிட (opaque) முடியாதனவாக இருக்கலாம். இது அடர்த்தி கூடிய வலிமையான பிளாஸ்ரிக் ஆகும்.

கூடுதலாக பொருட்களை உடையாது பாது காப்பாக சுற்றுவதற்கு (packaging) அல்லது மூடுவதற்கு பாவிக்கப்படும். சூடான பானம் அருந்தும் பாத்திரங்களும் கோப்பைகளும் (cups, plates, bowls, cutlery, meat and poultry tray) செய்வதற்கும் இவ்வகை பிளாஸ்ரிக் உபயோகப்படுத்தப் படுகின்றது. சூடான உணவை இதனுள் போடலாம் எனினும் இதனை நுண்கதிர் அடுப்புகளில் (microwave oven) சூடாக்குவதை தவிர்க்க வேண்டும்.

### PC (Polycarbonate)
### பிளாஸ்டிக் கலவை (Mix of plastics)

இவ்வகைப் பிளாஸ்ரிக்குகளுக்கு தனித்தன்மை இருப்பதில்லை. ஏனெனில் இவை பல விதமான வகைகளைச் சேர்த்து தயாரிக்கப்பட்டது. ஒரு நிறுவனம் 1ம் 3ம் 4ம் வகையுடன் Bisphenol A (BPA) கலந்து செய்யலாம். இன்னொரு நிறுவனம் 2ம் 3ம் 4ம் வகையுடன் Bisphenol A (BPA) கலந்து செய்யலாம். எது கலக்க வேண்டும் என்று கட்டுப்பாடு இல்லை. தேவைக்கேற்ப கலக்கலாம். ஒரே நிறுவனமே வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு வகையினை கலந்துவிட்டு 7 என்று பெயரிடலாம்.

பொலிகாபனேற் பிளாஸ்டிக்குகளைளையும் Epoxy resinஐயும் தயாரிப்பதற்கென வருடத்தில் 6 மில்லியன் இறாத்தலிலும் பார்க்க கூடுதலான Bisphenol A (BPA) என்னும் இரசாயனப் பொருள் தயாரிக்கப்படுகின்றது. Epoxy resin என்பது தகரத்தில் அடைத்த உணவு வகை அல்லது பானவகைகளை அடைக்க பயன்படும் ஒரு வழுவழுப்புத்தன்மையான கடதாசி போன்ற பிளாஸ்ரிக் பொருள்.

இங்குதான் எங்களுக்கு பிரச்சனையே ஆரம்பித்தது. இவ்வாறு பலவகையான பிளாஸ்ரிக்குகளும் Bisphenol Aயும் சேர்த்து தயாரிக்கப்பட்ட பொருட்கள் தான் குழந்தைகளின் பால்போத்தல்கள் (feeding bottles), விளையாட்டு வீரர்கள் மற்றும் பலர் பாவிக்கும் உரத்த தண்ணீர்ப் போத்தல்கள்.

இவை கொஞ்சம் கொஞ்சமாக இந்த BPAஐ கசிய விடுவதாக சுகாதார நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர். இவ்வாறு இவை மனித உடலுள் போகும் போது உடலில் பிறப்புரிமையியல் மாற்றங்களை ஏற்படுத்துவதாக ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. எங்களுக்கு தெரியும் பொதுவாக மனிதனுக்கு கேடு விளைவிக்கும் இரசாயனப்பொருள் ஆராய்ச்சிக்கு எலிகள் கூடுதலாக பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு எலிகளைப் பயன்படுத்தி மேற்கொண்ட பரிசோதனைகளின் விளைவே இக் கண்டுபிடிப்பாகும். கருச்சிதைவு, குழந்தையின் வளர்ச்சிக் குறைவு, வளர்ந்த குழந்தையில் பருவமடைதல் பிற்போதல் அல்லது பருவமடையாமலேயே இருத்தல் (puberty), அளவுக்கதிகமான உடல் வளர்ச்சி (obesity) ஆகிய குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதுமட்டுமல்ல புற்றுநோய் சர்க்கரை வியாதி என்பவற்றிற்கு தூண்டுகோலாய் அமைவதாயும் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த BPA ஈஸ்ட்ரஜன் ஓமோன் போல் தொழிற்பட்டு உடலிலுள்ள கலங்களின் தொழிற்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதால் புற்றுநோய் ஏற்படச் செய்கிறது.

வயதுவந்தவர்களை விட குழந்தைகளின் குருதியில் இவை கூடுதலாக காணப்படுவதாயும் அதற்கு காரணம் அவர்களது பால் போத்தல்கள் பால்மா அடைத்து வரும் கொள்கலன்களின் மேலுள்ள மெல்லிய lacquer lining அத்துடன் அவர்கள் எடுத்து வாயில் வைக்கும் பொருட்கள்.

அடுத்து சூடான பொருட்களை இவ்வாறான பிளாஸ்ரிக்குகளில் இடும் பொழுது ஏற்படும் கசிவு குளிரான பொருட்களை இடும்போது ஏற்படும் கசிவிலும் பார்க்க கூடுதலாக இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதாவது ஒருமணித்தியாலத்திற்கு இந்த BPA கசிவு சாதாரணமாக அறைவெப்பநிலையில் உள்ள போது 0.2 இலிருந்து 0.8 nanograms. ஆனால் சூடான பொருளை இடும்போது அது கிட்டத்தட்ட 15 - 55 மடங்கு அதிகமாக கசிவதாக அவதானிக்கப்பட்டு இருக்கிறது.

உலகில் முதல் நாடாக முன்னின்று கனடா இவ்வகையான பிளாஸ்ரிக்கை தடை செய்திருக்கிறது. இதற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குமுகமாகவும் பொது மக்களின் நலன் கருதியும் கனடாவின் மிகப் பெரிய முக்கிய நிறுவனங்களான Hudson's Bay, Canadian Tire, விளையாட்டு பொருட்கள் விநியோக நிறுவனமான Forzani Group Limited, மூன்றும் BPA வேதியியல் பொருளைக் கொண்ட பிளாஸ்ரிக்கினாலான குழந்தைகளின் பால் போத்தல்களையும் தண்ணீர் போத்தல்களையும் தாங்கள் இனி மேல் விற்பனை செய்யப்போவதில்லை என்றும் கையிருப்பில் இருப்பவற்றை அகற்றி விடுவதாயும் கூறி இருக்கின்றன. இந்த Forzani Group Limited இன் நிர்வாகத்தின் கீழ் கனடாவில் Sport Check, Athlete's World, Coast Mountain உட்பட கிட்டத்தட்ட ஐந்நூறு விற்பனை நிலையங்கள் உண்டு. Hudson's Bay நிர்வாகத்தின் கீழ் Bay, Zellers, Home Outfitters போன்றவையும் Canadian Tire நிர்வாகத்தின் கீழ் Mark's Works Warehouse, Part Source போன்றவையும் உண்டு. இவை அனைத்தும் சென்ற ஏப்ரல் மாதத்திலிருந்து இரசாயனப் பொருளைக் கொண்ட பிளாஸ்டிக்குகளை விற்பனையிலிருந்து விலக்கிக் கொண்டு வருகின்றன.

நாங்களும் பாவிப்பது சுலபம் கையாள்வது சுலபம் என்ற எண்ணங்களை கைவிட்டு பழையபடி கண்ணாடிப் பாத்திரங்களுக்கும் கண்ணாடி பால்போத்தில்களுக்கும் மாறி எங்கள் குழந்தைகளின் நலத்தையும் எங்கள் நலத்தையும் காத்திடுவோம்.

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*





# கடன் தொல்லைகளிலிருந்து விடுபட்டு புதிய வாழ்வு திரும்ப ஓர் அரிய சந்தர்ப்பம்

## NEW LIFE FRESH START

- கடன் 80% குறைய நடவடிக்கை
  **Reduce your debts upto 80%**
- கடனுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
  **Stop all interest on your debts**
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்கள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
  **Stop collection calls, legal action & garnishments**
- உங்கள் சொத்துக்கள் பாதுகாக்கப்படும்
  **Protect all your assets**
- மாதாந்த ரீதியில் எலங்லாக்கடனையும் தீர்க்க வசதி செய்தல்
  **Make one monthly payment to all of your creditors**
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
  **Give you solutions with out bankruptcy**

digi Media

## Suren Sornalingam

Government Certified Insolvency Counsellor

Tel: **416.264.1272**

Fax: 416.332.0914
E-mail: suren@crc4u.com
web: www.crc4u.com



crc

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON
M1P 4X4

# ஆரோக்கியம் நிறைந்த அறிவுள்ள பிள்ளையைப் பெற...

-துசிதா பத்மநாதன்-
thusitha@thaiveedu.com

“இளமையிற் கல்வி சிலையில் எழுத்து” என்பது முதுமொழி. இது முதுமொழியாக இருப்பினும் முத்தான மொழியே. இம்மொழியில் ‘இளமையிற் கல்வி’ எங்கிருந்து ஆரம்பிக்கின்றது என்பதே கேள்வி?

ஆரோக்கியம் நிறைந்த அறிவுள்ள பிள்ளைகளைப் பெற்றுவிட்டால்..வேறென்ன வேண்டும் பெற்றோர்க்கு? அபிராமி அந்தாதி கூறும் பதினாறு செல்வங்களில் ஒன்றாக “தவறாத சந்தானமும்” என நன்மக்கற் பேற்றைக் கூறுகின்றது. ஆரோக்கியமுள்ள அறிவு நிறைந்த குழந்தைகள் ஒரு நாட்டின் செல்வங்கள்! தூண்கள்! நாற்றுகள்! அவை அந்த இனத்திற்கும், நாட்டிற்கும் நல் அறுபடையைக் கொடுக்க வல்லவர்கள்.

“ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்,
களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.”

என்கிறது புறநானூறு. இங்கு தாயின் தலையாய கடமையாகக் கூறப்படுவது யாதெனின் குழந்தையைப் பெற்றெடுத்துக் கொடுப்பதாகும். பிள்ளையைப் பெற்றெடுப்பது என்பது, பத்து மாதங்கள் வரை தாயின் கர்ப்பத்தில் இருக்கும் குழந்தை, உரிய முறையிற் கவனிக்கப்பட்டு, ஆரோக்கியமுள்ள குழந்தையாகப் பெற்றெடுப்பதாகும். பின் அக்குழந்தைக்கு அறிவூட்டி, அறிவுடையோனாக அந்நாட்டிற்கு அளிப்பது தந்தையின் கடனாகின்றது. பெற்றோராகிய நாம் இக்கடமைகளை எப்படி பூரணமாகச் செயற்படுத்தலாம் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்காகும்.

சரி. பெற்றோர்களாகிய எமக்கு இன்று பிள்ளைகள் குறித்திருக்கும் எமது மனநிலை என்னவென்று பார்ப்போம். சில பெற்றோர்க்குப் பிள்ளைகளால் எந்த சிக்கல்களும் இல்லை. அப்படியென்றால் சிக்கல்களுடன் இருப்பவர்கள் எப்படியான சிக்கல்களுடன் உள்ளனர் என்று பார்ப்போம்.

சில பெற்றோர் தம் பிள்ளைகள், பிற பிள்ளைகளைவிடக் கெட்டித்தனமாக இல்லை; பிள்ளைகள் கல்வியில் அக்கறை செலுத்துகிறார்களில்லை; சரியான குழப்படியாக இருக்கிறார்கள்; அதிக துடிதுடிப்பாக உள்ளார்கள் அமைதியாக இருக்கிறார்கள் வெட்கம் பிடித்தவர்களாக இருக்கிறார்கள் கிரகிக்கும் திறன் குறைவு; ஒன்றிலும் ஆர்வமில்லை; ஈடுபாடில்லை; நாம் அந்த வகுப்பு இந்த வகுப்பு என்று விடுகிறோம் ஒன்றும் பயனில்லை எனப் பல முறைப்பாடுகளுடனும், எரிச்சலுடனும், விரக்தியுடனும் குழந்தைகளின் செயற்பாடு பற்றிய விமர்சனங்களுடன் உளர். இச்சிக்கல்கள் குறித்துக் காலத்துக்குக் காலம் குழந்தைகள் பற்றிய கற்றல், பல அறிவியல் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. செய்யப்பட்டும் வருகின்றன. அப்படியிருந்தும் சில கேள்விகளுக்குப் பதில் சூனியமாகவே உள்ளன.

மேற்கூறப்பட்ட காரணிகளுக்குக் காரணம் முற்றும் முழுதாகக் குழந்தைகளா? பெற்றோர்களா? சூழலா? ஆரோக்கியமுள்ள புத்தி கூர்மையான குழந்தை என்பது, தனியே குழந்தையைச் சார்ந்த விடயமா? என்ற கேள்விகளுக்குப் பதில்காண முனைந்து ஆணிவேரைத் தேடிச் சென்றோமானால், நாம் பல விடயங்களை அறிந்துகொள்ளலாம்.

குழந்தை இப்பூமியில் அவதரிக்க முன்பு குழந்தையின் ஆரோக்கியம் என்பது அதன் பெற்றோர், பெற்றோரின் பரம்பரையையே பெரும்பாலும் சார்ந்துள்ளது. இன்றைய அறிவியல் உலகில் அறிவியலுக்கும் அப்பாற்பட்டு அறியமுடியாத புதிர்களும் இருக்கத்தான் செய்கின்றன. மனிதனையும் மீறிய ஒரு சக்தி இயங்குகின்றது என்பதை நாம் அத்தருணம் உணர்கின்றோம். அப்படி என்றால், “எல்லாம் அவன் செயல். நடப்பது நடக்கட்டும்” என்று விட்டுவிடலாமா? இங்கேதான் வள்ளுவர் வந்து நிற்கின்றார்.

“தெய்வத்தான் ஆகாது எனினும்
முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.”

(குறள்: 619)

ஆகவே, ஆரோக்கியமான குழந்தையைப் பெறப் பெற்றோர்களாகிய நாம் எம்மால் இயன்ற முயற்சிகளைக் கூடியளவு செய்யலாம். அந்தவகையில், கருவுற்றிருக்கும் பெண், தான் கருவுற்றிருக்கும் காலத்தில் எப்படி நடந்து கொள்கிறார் என்பதிலே, குழந்தையின் ஆரோக்கியம் பெரும்பங்கு வகிக்கின்றது என்பதை நான் முழுமையாக நம்புகின்றேன்.

வளர்ச்சியடைந்த இந்நாட்டில் எம்மைச் சுற்றிப் பல வசதிகள், வளங்கள் உள்ளன. அவற்றை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். குறிப்பாக முதற் குழந்தையைப் பெற்றெடுக்கும் தாய்மார் தாம் கருவுற்றிருக்கும் காலத்திலும் குழந்தை பெற்றபின்னரும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை அறிந்துகொள்ள இக் கட்டுரை நன்கு உதவியாக இருக்கும் என நம்புகின்றேன்.

ஒரு பெண்ணின் வாழ்க்கையில் கருத்தரித்த காலகட்டம்தான் மிக மகிழ்ச்சியான காலம். இருப்பினும் உள்ளார்ந்து ஒரு படபடப்பு, எரிச்சல், எதிர்பார்ப்பு, பயம், திகைப்பு, இனம்புரியாத புதிய உணர்வுகள், உடலில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படுகின்றன. பல பெண்கள் தனது உடல் உறுப்புக்களில் குறிப்பாகப் பெண் உறுப்பு, மார்பகம், வயிறு ஆகியவற்றில் ஏற்படும் உடலியல் மாற்றங்களில் தனக்கிருக்கும் ஐயப்பாடுகளைப் பிறரிடம் கேட்டுத் தீர்த்துக் கொள்ளத் தயங்குவர். “இப்படிக் கேட்டால் ஏதும் நினைப்பார்களோ....?, இது எனக்கு மட்டும் ஏற்படும் மாற்றங்களா அல்லது எல்லோருக்கும் இப்படி இருக்குமா?” எனப் பல கேள்விகளாற் குழம்புவர். வைத்தியரிடம் கேட்பதற்குச் சிலர் தயங்குவர். சிலர் வெளிப்படையாகப் பேசுவர். அப்படியே கேட்டாலும், வைத்தியர்களும் வரிக்குவரி விளக்கி அவர்களுக்கான ஐயங்களை முழுமையாகத் தீர்ப்பார்களா?

> ❝ கருவுற்றிருக்கும் காலத்தில் மருத்துவரின் அனுமதியின்றி எந்தவிதமான மருந்துகளையும் (Advil உட்பட) உட்கொள்ளக் கூடாது. நாம் எடுக்கும் மருந்துகள் சிசுவுக்குச் சிக்கல்களையோ, பக்கவிளைவுகளையோ ஏற்படுத்தலாம். ஆகவே, எப்பொழுதும் மருத்துவரின் ஆலோசனைகளைப் பெறவேண்டும். ❞

கருத்தரித்ததில் இருந்து ஏற்படும் உடலியல் மாற்றங்கள் எப்படிப் பட்டவை? ஏன் ஏற்படுகின்றன?, வயிற்றில் குழந்தையின் படிவளர்ச்சிகளை தெரிந்து கொண்டால், கர்ப்பகாலம் களிப்பாகவும் ஆர்வமாகவும் இருக்கும். கருவுற்றிருக்கும் தாயின் இன்ப, துன்பங்களைப் பொறுத்தே அக்குழந்தையின் குணங்கள் அமைகின்றன எனக் கூறுவர். ஆகவே, மனக்கவலைகளை விடுத்து மகிழ்ச்சியாக இருப்போம்.

கருவுற்றிருந்த காலத்தில், எமது வைத்தியரிடமிருந்து கர்ப்பிணிப் பெண்கள் பற்றிய நூல்கள், இணையத்தளங்கள் ஆகியவற்றின் பெயர்களைக் கேட்டறிந்து நூல்நிலையத்தில் அவற்றைப் பெற்று வாசிக்கவேண்டும். வெள்ளை இனமக்களிடையே குழந்தை பெறுமுன் “Parenting Course”, கர்ப்ப கால உணவுமுறைகளைத் தெரிந்து கொள்ள “Nutrition Class” ஆகிய வகுப்புகளைக் கணவன், மனைவி இருவரும் இணைந்து கற்றுக் கொள்கின்றனர். உயர் பாடசாலைகளிலும் இக்கற்கைநெறிகள் உள்ளன. எமது சமூகத்தில் ஒரு சிலரே இத்தகைய கற்கைநெறிகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.

பொதுவாக முதற்குழந்தை என்றால், வைத்தியர்கள் கணவன்-மனைவி இருவரையும் வகுப்பிற்குச் செலும்படி பரிந்துரைப்பர். நிச்சயமாக அந்த வகுப்பிற்குச் சென்றால் உணவுமுறைகள், கர்ப்பிணிப் பெண்கள் நாளும் செய்யவேண்டிய உடற்பயிற்சிகள், கர்ப்ப காலத்தில் உடலுறவு கொள்ளும் முறைகள், பிரசவநேரத்தில் வயிற்றுவலியைக் கட்டுப்படுத்தும் முறைகள், தாய்ப்பாலூட்டும் முறை, குழந்தை பிறந்த பின் குழந்தையைப் பராமரிக்கும் முறைகள் போன்ற ஏராளமான விடயங்களைக் கற்றுக் கொள்ளலாம். இவ்வகுப்பானது முதற் குழந்தையைச் சுமக்கும் தாய்க்குப் பயத்தை நீக்கித் தன்னம்பிக்கையை அளிக்கவல்லதாக அமையும்.

## கருத்தரிப்பிற்கு முன்

நீங்கள் குழந்தை பெறுவது என்று தீர்மானித்து விட்டால், உங்கள் குடும்ப வைத்தியரிடம் சென்று உங்கள் விருப்பைக் கூறினால், நீங்கள் பரிசோதனைகள் ஏதும் செய்ய வேண்டி இருப்பின் அவற்றை முற்கூட்டியே செய்துகொள்வர். உடலுறவில் ஈடுபடும் பெண்கள் நிச்சயமாக ஆண்டுக்கு ஒரு முறை ‘Pop Test’ செய்துகொள்ள வேண்டியது அவசியம். நீங்கள் ஓர் ஆண்டுக்குள் இப்பரிசோதனை செய்யவில்லை எனின் கருத்தரிக்கு முன் இப்பரிசோதனையைச் செய்துகொள்வது நன்று. வைத்தியரின் ஆலோசனையின் பின் குருதிப் பரிசோதனை செய்து, உங்கள் உடலுக்குத் தேவையான சத்துக்கள் ஏதும் போதாமல் இருப்பின் அதற்கு நீங்கள் தொடரவேண்டிய மருத்துவ முறைகள், உணவு முறைகளைக் கேட்டறியலாம். வைத்தியரின் ஆலோசனையைக் கேட்ட பின் கருத்தரிப்பதற்குப் 10 வாரங்களுக்கு முன்னிருந்து பல்வகையான உயிர்ச் சத்துக்கள் நிறைந்த “Materna”ஐ எடுத்துக் கொள்ளலாம். இவ்வாறு முற்கூட்டியே நாம் நடந்துகொண்டால், ஆரோக்கியமான சிசு கருத்தரிக்கும்.

## கருத்தரிப்பின் பின்

கருத்தரிப்பை வைத்தியரிடம் உறுதிசெய்து கொண்ட பின், நீங்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும், எத்தகைய உணவுகளை உட்கொள்ள வேண்டும் எனக் கேட்டறிந்து கொள்ளல் மிக அவசியம். கொடுக்கப்படும் தவணைகளில் சென்று உடற் பரிசோதனை செய்து, குழந்தையின் வளர்ச்சிபற்றித் தெரிந்து கொள்ளல் வேண்டும். கர்ப்ப காலத்தில் இரத்தப்போக்கு (Bleeding), வயிற்றுவலி(Stomach pain) ஏதும் இருப்பின் உடனடியாக வைத்தியரின் கவனத்திற்குக் கொண்டுசெல்லல் அவசியம்.

கருவுற்றிருக்கும் காலத்தில் போதுமான காய்கறிகள், பழங்கள், சிவப்பு இறைச்சி வகைகள், பால், போதுமான தண்ணீர் ஆகிய வற்றை உட்கொண்டால், தாயும் சேயும் ஆரோக்கியமாக இருப்பார்கள். பழச்சாறு (juice) அதிகம் குடிப்பதால் சீனிச்சத்துக் கூடுவதற்கான வாய்ப்புண்டு. பொதுவாகவே கர்ப்பகாலத்தில் சீனி அளவு(Sugar Level), இரத்த அழுத்த(Blood Pressure) அளவுகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. இவை அதிகரிப்பதும் தாய்க்கும் சரி, சேய்க்கும் சரி நல்லதன்று. ஆகவே, போதியளவு தண்ணீர், பார்ளி அரசி அவித்தநீர் உட்கொள்வது சாலச் சிறந்தது. இவை உடல் வீக்கத்தையும் கட்டுப்படுத்தவல்லன. கர்ப்ப காலத்தில் ‘caffeine’ நிறைந்த குடிபானங்களை, உணவுகளை முற்றாகத் தவிர்ப்பது நன்று. கர்ப்பிணிப் பெண்கள், தாய்ப்பாலூட்டும் தாய்மார் புகைத்தல், மது அருந்துதல் அறவே கூடாது. அதுமட்டுமன்றி அதிக வாசனைகொண்ட வாசனைத் திரவியங்களைப் (Perfumes) பூசுவதை நிறுத்தலாம். அவை குழந்தைக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியவை என

55ம் பக்கம் பார்க்க...

உங்கள் நிகழ்வுகளை பார்ப்பதற்கும் பதிவதற்கும்

**www.inayam.net**

416 400 6406

புதிய ஆய்வுகள் கூறுகின்றன.

எப்பொழுதும் உடலைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். காலை, மாலை இருநேரமும் குளித்தல், பெண் உறுப்பை அவ்வப்போது கழுவுதல் மூலமும். கிருமிகள் குழந்தையைத் தாக்கும் வாய்ப்புக்களைத் தவிர்க்கலாம். இறுக்கமான ஆடைகளை அணியாமல், கர்ப்பிணிப் பெண்களுக்கென சிறப்பாகத் தயாரித்த ஆடைகளை (உள்ளாடைகள் உட்பட) அணியலாம்.

பாரங்கள் தூக்கி வேலை செய்யாது, சாதாரண வேலைகள் செய்யலாம். ஆனால், வைத்தியர் எந்த வேலையும் செய்யாது கட்டிலில் இருந்து ஓய்வு பெறும்படி பரிந்துரைப்பின் அவ்வாறே நடந்து கொள்ளல் அவசியம். வயிற்றில் கரு வளர, வளர நெஞ்சரிப்பு, சப்பாடு சமிபாடடையாமை, மலச்சிக்கல் போன்ற சிக்கல்கள் ஏற்படும். இதற்குக் காரணம், கர்ப்பப்பை வளரும்போது, வயிற்றை அழுத்தி, உணவு செல்லும் குழாயைக் குருக்குகிறது. வயிற்றில் அமிலமும் அதிகமாக உற்பத்தியாகுவதால் நெஞ்சரிப்பு ஏற்படுகிறது. கர்ப்பப்பை குடல்கள் மீது அழுத்துவதால், உணவின் போக்கு குறைகிறது. வைட்டமின் மற்றும் இரும்புச் சத்து அதிகமாக உட்கொள்வதால் மலச்சிக்கல் ஏற்படுகின்றது. அதிக காரமுள்ள, எண்ணொய் கலந்த உணவைத் தவிர்ப்பதன் மூலமும், இரவு உணவை நேரத்திற்கு உட்கொள்வதாலும், நார்ச்சத்துக் கூடிய உணவுகளை உட்கொள்வதாலும் இச்சிக்கல்களைச் சற்றுக் குறைக்கலாம். ஒரேயடியாக நிறைய உணவை உட்கொள்ளாது, உணவைப் பிரித்துக் கொஞ்சங் கொஞ்சமாக அடிக்கடிச் சாப்பிட்டால் உணவு சமிபாடடைவதற்கு எளிதாக இருக்கும்.

மாதங்கள் கூடக் கூட நன்கு நடந்தும், வகுப்பிற் காட்டிக்கொடுக்கும் எளிதான உடற்பயிற்சிகளைச் (வைத்தியரின் ஆலோசனைப்படி) செய்து வந்தால், பிரசவத்தில் அதிகம் சிக்கல்கள் ஏற்படாது. காலைச் சூரிய ஒலி உடலில் படும்படி உலாவி வந்தால் Vitamin D குழந்தைக்கும் நன்கு கிடைக்கும்.

முதல் மூன்று மாதங்கள் வரை குமட்டல், வாந்தி, தலைச்சுற்று, வயிற்றைப் பிரட்டல், காலைத் தூக்கம், தலையிடி போன்றன காணப்படுவது இயல்பே. பலருக்கு மூன்று மாதங்களின் பின் இவை முற்றாக நின்றுவிடும். சிலருக்குக் குழந்தை பெறும் காலம் வரை தொடரும். இவை ஒவ்வொரு பெண்களின் உடல் நிலையைப் பொறுத்து வேறுபடலாம். அதிகமான பெண்கள் உடற் சோர்வை உணருகிறார்கள். இதற்குக் காரணம் உங்கள் குழந்தைக்கு வடிவம் கொடுக்க உங்கள் உடல் அதிக அளவு சக்தியைப் பயன்படுத்துகின்றது. கருவுற்றிருக்கும் காலத்தில் மருத்துவரின் அனுமதியின்றி எந்தவிதமான மருந்துகளையும் (Advil உட்பட) உட்கொள்ளக் கூடாது. நாம் எடுக்கும் மருந்துகள் சிசுவுக்குச் சிக்கல்களையோ, பக்கவிளைவுகளையோ ஏற்படுத்தலாம். ஆகவே, எப்பொழுதும் மருத்துவரின் ஆலோசனைகளைப் பெறவேண்டும்.

நான்கு மாதங்களில் குழந்தையின் அசைவு யாரோ லேசாகக் குத்துவதைப் போல் தாயால் உணர முடியும். உணவுக்கான ஏக்கம் இதில் எழும். பிரசவ காலம் வரை குழந்தையின் துடிப்பை நாளும் அவதானிக்க வேண்டும். குழந்தை துடிக்கவில்லை என்பதை உணர்ந்தால், உடனடியாக மருத்துவமனையுடன் தொடர்புகொண்டு அறிவிக்கவேண்டும். முதலில் குழந்தை முற்றாகத் துடிக்கவில்லை என்பதை நன்கு உறுதி செய்யவேண்டும். சற்று நேரம் மல்லாக்காகப் படுத்திருத்தல் அல்லது குளிரான நீர்/பால் அருந்துவதன் மூலம் குழந்தையின் துடிப்பை உடனடியாக உணரமுடியும். கர்ப்பிணிப் பெண்கள் தமது உடல் நிறையைக் கவனிக்க வேண்டும். கருவுற்றிருக்கும் காலத்தில் உடல் நிறை குறைந்து சென்றால், வைத்தியரின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு செல்ல வேண்டும்.

குழந்தை வயிற்றில் வளர, வளர அடிக்கடிச் சிறுநீர் கழிப்பீர்கள். கர்ப்பப்பை வளர்ந்து, சிறுநீரகப் பையை அழுத்துவதால் அடிக்கடிச் சிறுநீர் கழிக்கவேண்டி நேரிடுகிறது. இப்படி அடிக்கடி நேரிடுவதால், சிலர் எரிச்சற்பட்டுக் கொள்வர். அவ்வாறு உணராமல் எனது குழந்தை பூரணமாக வளர்ந்து வருகின்றது விரைவில் இவ்வுலகிற்கு வரப் போகிறது என்பதை நினைத்துப் பார்த்தால் பூரிப்பாகத் தான் இருக்கும். கருவுற்றிருக்கும் காலத்தில் எந்தத் துன்பங்களையும் இன்பமாக எடுத்துக்கொண்டால், உங்கள் ஆரோக்கியத்துக்கு மட்டுமல்ல குழந்தையின் ஆரோக்கியத்துக்கும் நன்மையே பயக்கும்.

கர்ப்பிணிப் பெண்கள் மகிழ்ச்சியான சூழலில் இருந்தால், வயிற்றில் இருக்கும் குழந்தையும் மகிழ்ச்சியாக இருக்கும். தாயின் உணர்வுகளைக் குழந்தையால் உணரமுடியும். கருத்தரித்து ஆறு மாதங்களின் பின் வயிற்றில் இருக்கும் குழந்தையால் தாய் பேசுவதை உணரமுடியும். தாயிருக்கும் சூழலில் இருந்து வரும் ஒலிகளையும் குழந்தையால் உணர முடியும். ஆகவே, ஆறு மாதங்களின் பின் தாய் தன்னுடைய குழந்தையுடன் பேசலாம், பாடலாம். நல்ல இசைகளைக் கேட்கலாம். நல்ல உரைகளைக் கேட்கலாம். நற்காரியங்களைச் செய்யலாம். நேரம் கிடைக்கும் வேளைகளில் நல்ல விடயங்களை வாசிக்கலாம். வாசிக்கும் பொழுது குழந்தைக்குக் கேட்கும் வண்ணம் வாய்விட்டு வாசிக்க வேண்டும். இதுவே, உங்கள் குழந்தையின் கல்விக்கு நீங்கள் போடும் அத்திவாரம். இதுவே நான் முன் குறிப்பிட்ட இளமைக் கல்வியின் ஆரம்பம். மகாபாரதத்தில் அருச்சுணனின் மகனான அபிமன்யு, தாயின் கருவில் இருந்த காலத்தில், கிருஷ்ணர் குருசேத்திரப் போர் பற்றியும் அப்போரில் அபிமன்யுவின் பங்குபற்றியும் தாய் சுபத்திராவுக்குக் கூறியபோது போரின் முக்கிய கட்டத்தைக் கூறிக்கொண்டிருந்த வேளை, சுப்பத்திரா தூங்கிவிட்டதாகவும் அவற்றையெல்லாம் அபிமன்யு தாயின் கருவில் இருந்து கேட்டுப் பின் அப்படியே நடந்து கொண்டதாகவும் தாய் தூங்கியதால் அபிமன்யு போரில் தனது உயிரைக் காக்க முடியாது போனதாகவும் புராணம் கூறுகின்றது. ஆனால், அறிவியல் ஆய்வுகள் இன்று இக்கருத்தை ஒப்புக்கொள்கின்றன.

குழந்தை வளர, வளர முதுகு வலி, நரம்பு முடிச்சு (varicose) ஆகியவற்றாற் பெரும்பாலான பெண்கள் அவஸ்தைப் படுவதைக் காணலம். தூங்கும் வேளைகளில் இடப்பக்கமாகச் சரிந்து படுப்பத்தால் வயிற்றுப் பாரத்தை முள் எலும்பில் பொறுக்க மாட்டீர்கள். ஆகையால் முதுகு வலியைக் குறைக்கலாம். அதேநேரத்தில் குழந்தைக்கு இரத்த ஓட்டமும் சீராக இருக்கும்.

கால் நரம்பு முடிச்சைக் (varicose) குறைப்பதற்கு ஒரேயடியாக நீண்ட நேரம் நிற்காமலும் ஒரேயடியாக நீண்ட நேரம் இருக்காமலும் அவ்வப்போது நடந்துதிரிந்து உடல் முழுவதும் சீரான இரத்த ஓட்டத்திற்கு வழி சமைத்துக் கொடுத்தால் இச்சிக்கலைக் குறைக்கலாம். இவை குறித்து மேலதிக தகவல்களை விளக்கமாக நீங்கள் குடும்ப வைத்தியர் மூலமாகவும், நூல்கள் மூலமாகவும் அறிந்துகொள்ளலாம்.

நீங்கள் பிரசவகாலத்தை நெருங்கும் வேளையில் அதாவது 37-38 கிழமைகளின் பின் நகப்பூச்சுக்கள், எளிதாக அகற்ற முடியாத நகைகள் அணிதல் போன்றவற்றைத் தவிர்த்தல் நன்று. பிரசவநேரம் எப்படி அமையும் என்பதைத் உறுதியாகக் கூற முடியாது. உங்களுக்குச் சிக்கலான பிரசவம் நேர்ந்தால், அவ்வேளைகளில் இவை தொந்தரவை மட்டுமல்ல ஆபத்தையும் விளைவிக்கலாம். நீங்கள் பிரசவ காலத்தை நெருங்கி விட்டால் அதாவது 37 கிழமைகளின் பின் பன்னீர்குட ஒழுக்கு, இரத்தப் போக்கு, வயிற்று வலி ஏதும் இருப்பின் நீங்கள் பிரசவத்திற்குத் தயாராகிவிட்டீர்கள் என்பதைக் கவனத்திற் கொண்டு மருத்துவமனைக்கு அறிவித்துப் பின் அவர்களின் அலோசனையின் கீழ் நடந்துகொள்ளலாம்.

உங்களுடைய கற்பகாலத்தில் அசாதாரணமான அறிகுறிகள் இருப்பின் உடன் உங்கள் மருத்துவமனையுடன் தொடர்புகொள்ளவும்.

■ ■ ■



# பிரிக்க முடியுமா?

## குமார் புனிதவேல் பக்கம்

kpunithavel@thaiveedu.com

சாந்தி அந்த வைத்தியசாலை கட்டிலில் படுத்தபடி முகட்டைப் பார்த்தாள். ஓய்ந்திருந்த அந்த உடலில் ஓய்வில்லாமல் எண்ண அலைகள் அலைமோதிய வண்ணமிருந்தது. அவளுடைய வயிற்றில் ஒரு அவயத்தில் புண்ணாகிவிட்டதாம். அது தனது உடலில் இருப்பதே அவளுக்குத் தெரியாது. அதை எடுத்து விட்டால் அவள் இழப்பது ஒன்றுமில்லையே. எனவே வைத்தியரிடம் ‘‘டாக்டர் ஏதோ பெயர் சொன்னீர்களே அதனை வெட்டி எடுத்துவிடுங்களேன். பெயர்தெரியாத அவயம் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன? என்று சொல்ல, அவரும் அம்மா அந்த அவயத்தை போகவிட்டால் அதனுடன் உங்கள் உயிரும் போய்விடும். அதுதான் அதை ரிப்பயர் செய்து வைக்க முயல்கிறேன்’’ என்றார்.

இப்படி வைத்தியசாலையில் படுத்திருப்பது சாந்திக்குப் புது அனுபவமல்ல. கடைசி ஆறு மாதத்தில் மூன்று முறை வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு திரும்பியுள்ளாள். ஒவ்வொரு முறையும் உயிருடன் திரும்பமாட்டாள் என்று சொன்னார்கள். ஆனால் அவள் இயமனுக்கு நாமம் போட்டுவிட்டு வீட்டிற்கு சுகமாகத் திரும்பிவிட்டாள். இந்த முறை அவள் மனம் ஏனோ திரும்பமாட்டோமோ என்று சஞ்சலப்பட்டது.

அவள் மன அலைகளை ஓய வைப்பதற்கு என்றே வந்ததுபோல் மெதுவாகக் கதவை திறந்து கொண்டு சாந்தியின் மகன் அருள் உள்ளே வந்தான். ஏக புத்திரன் வயிற்றில் இருக்கையில் இறந்துபோன கணவன் அருள்சோதியின் ஞாபகமாக தனது மகனுக்கு அருள் எனப்பெயர் வைத்திருந்தாள் சாந்தி.

கனடாவுக்கு வந்து ஒரு வருடத்தில் பிறந்த அருள் Single mother ஆகா அவனை சாந்தி படிக்கவைத்து வாழ்க்கைப் போராட்டத்தை நடத்தினாள். அருள் படித்து நல்ல நிறுவனத்தில் உயர்ந்த பதவியும் பெற்று நல்ல நிலையில் இருந்தான். வங்கியில் டெல்லராக வேலைசெய்து ஓய்வுபெற்ற சாந்தி அவனுடன்தான் வசித்து வந்தாள்.

உள்ளே வந்த அருள் ‘‘அம்மா எப்படி இருக்கிறது’’ என்று பரிவோடு கேட்டான். சாந்தியும் ‘‘ஏனோ தம்பி இந்த முறை நான் திரும்பமாட்டேன் என்று மனம் சொல்கிறது’’ என்று சொன்னாள். ‘‘அப்படி எல்லாம் கதைக்கக் கூடாது நீங்கள் சுகமாக திரும்பி வருவீர்கள் என்று அவள் வலது கையைப் பிடித்தான் அருள்.

தன்னை விட்டால் அவனுக்கு யாருமில்லை. ஒத்தையாக பிறந்தவன் காதலித்துக் கல்யாணம் செய்தவன் இன்று தனிமரமாக இருக்கிறான். அவன் காதலி சுமதி மனைவியாகி இருவருடங்களுக்குள் அவனுடன் கோபித்துக்கொண்டு தனியாக தன் வாழ்க்கையை நடத்துகின்றாள். கனடா மண்ணின் வல்லமை போலும் சுமதி அருளைத் தூக்கி எறிந்துவிட்டுச் சென்று விட்டாள். அவர்கள் ஏன் பிரிந்தார்கள் என்பது எல்லாருக்கும் புதிராகவே இருந்தது.

சாந்தி அருளிடம் ‘‘அருள் வெளியே யார் யார் வந்து உள்ளார்கள்? என்று கேட்க, அவன் ‘‘சுமதியும் யோகா மாமியும் பபா மாமாவும் வந்திருக்கிறார்கள்’’ என்று பதிலளித்தான்.

யோகாவும், பபாவும் சாந்தியின் சகோதரர்கள் சுமதிக்கு யார் தெரிவித்தார்களோ தெரியாது அவளும் வந்திருக்கிறாள். எல்லாரும் கூடுவது, கூடிவிட்டு ஏவிப் பிரியத்தான் என்று சாந்தி சொன்னாள்.

அவர்கள் என்ன சொல்கிறார்கள்? எனக்கு யாரையும் பார்க்கவிருப்பமில்லை என்று சொல்லு அருள். இல்லை நான் தூங்குவதாகச் சொல்லிவிடு. அவர்கள் போய்விட்டு நாளைக்கு வரட்டும்’’ என்று சாந்தி சொல்ல



அவனும் வெளியே செல்லப்போனான்.

அவனைப் பின்னால் அழைத்து அருள் கதவைக் கொஞ்சம் திறந்து வைத்துவிட்டுப் போ என்று சாந்தி சொன்னாள்.

வெளியே வந்த அருளை எல்லாரும் இலையான் பழத்தை மொய்ப்பது போல் மொய்த்தார்கள். ஒரே வேளையில் எல்லாரும் எப்படி இருக்கிறா? கதைக்கிறாவா? என்று கேட்க அருள் அவர்களுக்கு ஏற்ற பதிலைச் சொன்னான்.

வெளியே கதைப்பது கதவிடுக்கூடாக சாந்திக்குத் தெளிவாகக் கேட்டது. சாந்தியின் சகோதரி யோகா ‘‘சடங்குகள் எல்லாம் உடனே செய்யப் போகிறார்களா அல்லது அவுஸ்திரேலியாவிலிருந்து சின்னத்தம்பி (இளைய சகோதரன்) மாமா வரும்வரை வைக்கிறயோசனையோ?’’ என்று கேட்டாள். ‘‘இன்று இரவுக்குள் முடிந்துவிடும் என்று டாக்டர் சொல்லியுள்ளார் என்பதை மறக்க வேண்டாம்.’’

அருள் நம்பிக்கை குறைந்த நம்பிக்கையுடன் அம்மா சுகமாகி வந்துவிடுவா எனப் பிரகடனப்படுத்தினான். ஆனால், அவனுக்கு நம்பிக்கைஇல்லை அவ மீண்டும் வீடு வருவா என்று. சுமதி தான் வீடு திரும்புவதாகக் கூறிவிட்டு உடனே வெளிக்கிட்டு விட்டாள். அவளுக்கு யார் செய்தி சொன்னது என்று அறிய அருளுக்கு ஆவலாய்த் தான் இருந்தது. ஆனால் துணிவு வரவில்லை. சுமதி என்ன சொல்வாள் என்ற அச்சம். ஒருவரையும் முகத்தில் பார்க்காமல் வெளியே சென்று விட்டாள். மாமா, மாமி இருவரிடமும் கதைத்து அவர்களை அனுப்பிவிட்டு தாயார் படுத்திருந்த அறைக்கு அருள் திரும்பி வந்தான்.

அறைக்குள் இருந்தபடி வெளியே நடப்பதைக் கேட்டுக்கொண்டு இருந்த சாந்தியின் மனம் கடந்த காலத்தை அசைபோட்டது. சுமதியும் அருளும் காதலித்துத் திருமணம் செய்தவர்கள். இருவரும் மிக்க அன்பாக இருந்தார்கள். வீடு ஒரே கலகலப்பாக இருந்தது.

ஒருநாள் சாந்தி, தன் மகனுக்கு இதுதான் பிடிக்கும் என்ற போது சுமதி ‘‘மாமி அவர் தனது கணவர்’’ என்று மிக மென்மையாகக் கூறிவிட்டுச் சிறு புன்னகை செய்தாள். நான் அவனுக்காக எவ்வளவு கஷ்டப்பட்டேன் என்று உனக்குத் தெரியுமா? என்று சாந்தி திரும்பிக் கேட்டாள். அப்படி என்ன கஷ்டப்பட்டீர்கள் என்று கேட்க அவளைப் பெறுவதற்கு உயிர்போய் மீண்டது. ஆனால் இன்னொரு முறை வேண்டுமானால் நான் அந்த வேதனைக்குள்ளால் அருளுக்காக சென்றுவர தயாராயுள்ளேன் என்று சாந்தி பதில் சொன்னாள்.

மாமியின் பதிலைக்கேட்ட சுமதி தனது வழமையான மென்சிரிப்பு அகன்றாள்.

இன்னொரு முறை சாந்தி மருமகளிடம் எப்போ பிள்ளை பெற்றுக் கொள்ளப் போகிறீர்கள் என்று கேட்டதற்கு இப்போ என்ன அவசரம் என்று பதில் வந்தது. வீட்டில் ஒரு குழந்தை இருப்பது போல் வராது என்று சாந்தி சொல்ல அப்படி என்றால் ஒரு குழந்தையைத் தத்து எடுப்பதுதானே என்று கூறினாள். சாந்தி விடாப்பிடியாக எப்படிக் குழந்தை வந்தாலும் ~~சொந்தக்~~ குழுந்தை போல் வருமா என்றாள். அதற்குச் சுமதி ஒருவிதமாக வியப்புடன் மாமியாரைப் பார்த்துவிட்டு நகர்ந்தாள்.

இந்த சம்பாஷனைக்குப் பிறகு ஓரிருநாட்களில் சுமதி வீட்டைவிட்டு வெளியேறினாள். ஒருவித வாதங்களோ, வார்த்தைப் பரிமாற்றங்களோ இடம்பெறவில்லை. ஒரு நாள் காலை வேலைக்குச் சென்றாள். மத்தியானம் வழக்கறிஞரிடமிருந்து ஒரு Phone Call வந்தது. அவள் உடுப்புகளைக் குறிப்பிட்ட விலாசத் திற்கு அனுப்பும்படி.

மகனிடம் சாந்தி என்ன நடந்தது என்று கேட்டாள். அவன் ஒன்றுமில்லை, அவளுக்கு இங்கு இருக்கப்பிடிக்கவில்லை என்றான். என்ன நீ கவலை இல்லாமல் இருக்கிறாய் என்றபோது, அம்மா எனக்குக் கவலைதான் அதற்காக என்ன செய்ய, அவளாக மனம் மாறிவருவரை அவள் மனதை நான் மாற்ற முடியாது என்றான்.

எண்ண அலைகள் சுனாமியாக அடிக்க களைத்துப்போய் கண்களை மூடினாள் சாந்தி. அந்தவேளைதான் அருள் உள்ளே வந்தான். மெதுவாக தாயின் கைகளை வருடி அம்மா என்று ஆதங்கத்தோடு அழைத்தான். மெதுவாகக் கண்களைத் துறந்து சாந்தி ‘‘அவர்கள் போய்விட்டார்களா?’’ என்று கேட்டாள். ‘‘சுமதி மட்டும் திரும்பிச் சென்று விட்டாள். நாளை காலை வந்து பார்ப்பதாகச் சொன்னாள். மற்றவர்கள் உங்களைப் பார்த்துவிட்டுத் தான் திரும்புவதாகச் சொன்னார்கள் என்றான்.

‘‘நான் விடிவதற்குள் போய்விடமாட்டேன்’’ என்றாள். அம்மா அப்படி எல்லாம் சொல்லாதீர்கள். நீங்கள் சுகமாகி திரும்புவீர்கள். திரும்ப வேண்டும் என்றான். எல்லாரும் அப்படி நினைக்கவில்லையே என்றாள் சாந்தி. ‘வெளியே கதைத்தது எல்லாம் கேட்டுக்கொண்டா இருந்தீர்கள்? என்று வினாவ சாந்தி ‘‘ஆமாம் எல்லாம் கேட்டது. நான் களைத்து படுத்திருப்பதாகச் சொல்லு. நாளை காலை பார்க்கலாம் என்று. உன்னிடம் சுமதியின் தொலைபேசி எண் இருக்கிறதல்லவா? நான் அவளைப் பார்க்க வேண்டும் என்று கூப்பிடு அவள் வருவாள்.

மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு அறைக்குள்ளே நார்ஸ் வந்தாள். சாந்தி கண் அயர்ந்திருந்தாள். உள்ளே வந்த நார்ஸ் சுமதியை உள்ளே வரவிட்டாள். நேரம் சென்றுவிட்ட படியால் நார்ஸ் நோக்கி சுமதி ‘‘தாங்... அவர் விருப்பத்திற்கு எதிராக ஒரு வினாடியும் நிற்கமாட்டேன். அவர் அழைத்ததால் தான் வந்தேன்’’ என்று சொன்னாள்.

நார்ஸ் வெளியேறியதும் ‘‘அருள் எப்படி இருக்கிறீர்கள்’’ என்று ஒரு வாஞ்சையான பார்வையுடன் கேட்டாள். களைத்துப்போயிருந்த அருள் ஒரு சோக புன்னகையுடன் ‘‘இருக்கிறேன்’’ என்றான்.

58ம் பக்கம் பார்க்க...

GP
TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)

For Your Business We
- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable

உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்பட்டாமல்
சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்

416.203.0344




Cell tel Mobility
CELL TEL MOBILITY
For all your cellphone and accessory needs...
11 th Anniversary Sale !!!
We sell new & used cellphones, Pagers and accessories for:
ROGERS WIRELESS, FIDO,
TELUS MOBILITY, BELL MOBILITY
Anniversary Sale !!!
Geunine Leather Case
From $1.99
Reg. $19.99
Coupon valid only between August 1st to August 31st.
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.
Anniversary Sale !!!
Hands free
From $1.99
Reg. $29.99
Coupon valid only between August 1st to August 31st.
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.
Anniversary Sale !!!
Smart car charger
From $1.99
Reg. $39.99
Coupon valid only between August 1st to August 31st.
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.
GSM UNLOCK
Call Toll free:- 1.877.312.5123
SHOP ONLINE @ www.celltelmobility.com
CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER
NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG
HTC,BLACKBERRY,iPHONE,
Display,Antenna Replacement and all other
Repairs (Software & Hardware).
2637 Eglinton Ave. East,
Eglinton Ave/Midland Rd
416.266.6818
220 - 5990 16th Avenue
16th Avenue/ Markham Rd
905.201.4859
5C - 2950 Birchmount Rd
Birchmount / Finch Ave
416.495.7776

# NetCom College

Where minds are challenged to a great future...

**Registered and Approved as a Private Career College Under the Private Career Colleges Act.**

- International Students Welcome
- EI Students Could receive Free Diploma / Certification If Qualified



- Microsoft Technology Courses
- Accounting
- Programming
- VoIP
- Cisco Education
- LINUX
- MS Office
- Wireless Technologies
- Dataware Technologies
- A+ / Network+ / Security +

**Special Summer 2008 Computer Classes**

**Only 7 Students per Class**

**Register NOW**

We are introducing...
Microsoft Exchange 2007
Microsoft SQL 2005
Microsoft windows server 2008
Ethical Hacker

**authorized Exam centers for**

PEARSON VUE AUTHORIZED TEST CENTER
Authorised PROMETRIC TESTING CENTRE

1200, Markham Rd, Suite # 525,
Scarborough, ON,
M1H 3C3, Canada

Tel: **416.438.3737**

www.netcomcollege.com
info@netcomcollege.com


# பிரிக்க முடியுமா?..

**56ம் பக்கத் தொடர்ச்சி...**

ஆள் அரவம் கேட்ட சாந்தி மெல்லக் கண் களைத் திறந்து சாந்தி சுமதியை நோக்கி னாள். அப்படியே மாறாமல் கன்னத்தில் குழிவிழும் புன்னகையுடன் சுமதி மாமியைப் பார்த்து “எப்படி இருக்கிறீர்கள் அம்மா? நீங்கள் வரச்சொன்னதாக அருள் சொன்னார்” என்றாள்.

“நன்றி சுமதி, உன்னைப் பார்த்தது எனக்குப் பெரிய சந்தோஷம். அருள் மிகவும் அமைதி இழந்து தவித்தான். ஆனால் சுமதியோ கவனி-யாததுபோல் சாந்தியைப் பார்த்து நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டாள்.

நான் இருக்கிறன். இன்று இரவுக்குள் நான் இறந்து விடவேண்டும் என்று எல்லாரும் சொல்கிறார்கள்.” சுமதி சிரித்துவிட்டு அப்படி செய்யும் யோசனை உங்களுக்கு இல்லை தானே”? என்றாள்.

கட்டிலில் எழும்பி இருந்தபடி “உனக்கு எப்படித் தெரியும்” என்று சாந்தி கேட்டாள். சுமதி, சாந்தி சாய்ந்து இருக்க ஒரு தலை யணையை வைத்தபடி “எனக்குப் பலவிட யங்கள் தெரியும். உங்கள் சகோதரர்கள் எப்படி செத்தவீடு செய்யவேண்டும் என்று திட்டம் போட்டுவிட்டார்கள் அல்லவா? அதுவும் எனக்குத் தெரியும்” என்று சொன்னாள். பின் மெதுவாகச் சாந்தியின் காலடியில் அமர்ந்தபடி சுமதி “அருள் நீங்கள் இன்னும் கல்யாண வீட்டு மோதிரத்தைக் கழட்ட வில்லைப்போல் இருக்கிறது.” என்று கூறியபடி தனது பையைத் துளாவினாள். “நான் எனது தாலிக்கொடியையே கழட்டி-விட்டேன். ஆ இதோ இருக்கிறது. நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள் என்று அருளிடம் கொடுத்தாள்.

“எனக்கு வேண்டாம் நீயே வைத்துக்கொள்” என்று மறுத்தான். “தேவை இல்லாவிட்டால் காரியமில்லை, இதைக் கையில் வைத்தி-ருங்கள். நான் உங்கள் கால்சட்டைப்பை யில் உங்கள் டைப்பிஸ்ட் எழுதிய கவிதை யை லோன்றிக்குப் போடும்போது கண்டு எடுத்து வாசித்தேன். அதை சொல்லும் துணிவு எனக்கு இருக்கவில்லை. இப்போ சொல்வது உங்களைக் காட்டிக் கொடுப்-பதற்கல்ல, அம்மாவிடம் என் சந்தேகத்தைக் கேட்பதற்கு. எனக்கு அம்மா இல்லை. சென்று நான் செய்வது சரியா என்று கேட்க, ஆனால் இன்று கேட்காவிட்டால் இனிக்கேட்க முடியாதல்லவா? அதனால் தான் கேட்டேன்” என்றாள்.

“சுமதி, சுமதி அருள் பிறப்பதற்கு முன் நடந்தது” என்று அழத்தொடங்கினாள் சாந்தி. அம்மா நீங்கள் பலவீனமாய் இருக்-கிறீர்கள். இப்போ ஒன்றும் பேசவேண்டாம்” டாக்டரிடம் படுப்பதற்கு ஏதும் தரச் சொல்கி றேன்” என்று அருள் எழும்பினான். உடனே சுமதி நில்லுங்கள் ஒரு பெண் எப்பொழுதும் அழுவதற்குச் சக்தியுடையவளாயிருப்பாள் என்பதுமல்லாமல் அழுவதில் அவள் சக்தி யைப் பெறுபவளாயுமிருப்பாள். எனவே, அவவை அழவிடுங்கள் அது அவவுக்கு அசுர பலத்தைத் தரும்” என்று சொன்னாள்.

சாந்தி “அருள் நீ நினைக்கிறாயா இந்த ஊசிகளும் மருந்துகளும் தான் சுகமாக்கு-கிறது என்று. அதற்கு மேலாக நெஞ்சில் அடைந்துகிடக்கும் அழுக்குகளை வெளி-யேற்றினால் பலநோய்கள் குணமாகும். சுமதி இந்தத் தலையைக் கொஞ்சம் உயர்த்-திவிடு” என்று கூறினாள்.

“சுமதி அப்போ நான் இளமையாய் இருந் தேன். இளமைக்குரிய பொறுமை, பொறுமை யின்மை இரண்டுமே நிறைய இருந்தது. சுமதி அமைதியும் ஆழமானவள். நீ ஆழ்ந்த அமைதியும் அதிலும் ஆழமானவள். அருளி ற்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கவில்லை. அது சரியில்லை.

“உண்மைதான்” என்று சுமதி ஒத்துக் கொண்டாள். என்னால் அவரை மன்னிக்க முடியவில்லை. அமைதியாய் இருக்கவும் முடியவில்லை. அது அருள் உன் அப்பாவை காரைஓட்டி அடிப்படச் செய்தது. அவர் விபத்து அவர் தவறால் நடந்ததல்ல என் தவறால் நடந்தது. அந்த தவறுக்காக வாழ் நாள் முழுவதும் வேதனையை அனுபவிக்-கிறேன்.” என்று கூறி சில நிமிடம் மௌன-மாய் இருந்தாள். பின் “சுமதி சண்டை பிடிப்பதற்கு இருவர் வேண்டுவதுபோல், மன்னிப்பதற்கும் இருவர் வேண்டும். என்னால் அவரை மன்னிக்க முடியவில்லை. அவரால் என்னை மன்னிக்க முடியவில்லை. அவர் வாழ்வை முடித்துக் கொண்டார். நான் வாழ்ந்து வேதனைப் பட்டேன்” என்று கூறி னாள் சாந்தி. அங்கு ஒருவருக்கு ஒருவர் மௌனம் எனும் மொழியில் பேசிக் கொண்டார்கள். மீண்டும் மௌனத்தைக் கலைத்தது சாந்தி தான்.

“நீங்கள் இருவருமே ஒருவரை ஒருவர் பிரிந்திருந்து தண்டிக்கிறீர்கள். அருள் நீ சுமதியைத் தனித்து இருக்க அனுமதித்தாய். ஆம், நீதான் அனுமதித்தாய். அவளுக்கு அதுதான் வேண்டுமென்றால் அப்படியே இருக்கட்டும் என்று சமாதானம் மனதுக்குச் செய்து கொண்டாய். அவளைத் தண்டிப்ப-தாக நீ எண்ணிக்கொண்டாய். சுமதி நீ ரோஷக்காரி. மனிதனின் முட்டாள் தனத்தை மன்னிக்க நீ ஏற்கவில்லை. சுமதி ஆண்கள் பெண்களிலும் வித்தியாசமானவர்கள். அவன் உடற் கூற்றில் ஏதோ ஒன்று உரு மாறும், பெண்ணால் வசியப்படுத்தும் வேளையில். அது எந்தப் பெண்ணாகவும் இருக்கலாம். அது அவனால் தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால், அது அவன் இதயமோ, ஆண்மா-வோ அல்ல. அவன் கட்டுக்கடங்காத உடலுறுப்பு மட்டுமே!” நெடிய சொற்பொளி-வுக்குப் பின் களைத்துச் சாந்தி கட்டிலில் சாய்ந்து கண்களை மூடிக்கொணடாள். இருவருமே பயந்துவிட்டார்கள் அவள் உயிர் பிரிந்துவிட்டதா என்று.

திடீர் என்று கண்களைத் திறந்து “அருள் அந்தத் தாலியைச் சுமதியின் கழுத்தில் அணி” என்று சொன்னாள். இருவருமே எழுந்து நின்று கட்டளைக்கு அடிபணிந்தார் கள். இருவர் கண்களும் பனித்திருந்தன.

“அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்
ஆர்வலர்
புண்கண்ணீர் பூசல் தரும்.”

“நான் எப்படியோ சாகத்தான் வேண்டும். ஆனால் இன்று சாகமாட்டேன். எல்லா உறவினர்களுக்கும் சொல்லி விடுங்கள். இந்தமுறையும் சாந்தி இயமனுக்கு நாமம் போட்டுவிட்டாள் என்று. நான் அழுக்குகள் எல்லாம் துப்பரவாக்கி விட்டபடியால் கொஞ்சம் ஆறுதலாய் முப்பத்தொரு வருடத்-திற்குப் பின் படுக்கப் போகிறேன். நீங்களும் உங்கள் வீட்டிற்குத் திரும்புங்கள்” என்றாள்.

இருவரும் சாந்தியின் நெற்றியில் முத்தமிட்டு விட்டுத் திரும்பியபோது அருள் தனது வலது கரத்தை நீட்டியபோது சுமதி வலிந்துபற்றிக் கொண்டாள். இப்போது அவர்கள் கரம் பற்றயது அனுபவமுதிர்ச்சியில் ஏற்பட்ட அன்பின் பற்றல். அது இனிப் பிரியாது. இறைவனாலும் கூடப் பிரிக்கமுடியாது.

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*


TAMIL STAR RADIO
NewMarket முதல் Buffalo வரையும்
Kitchener முதல் Cobourg வரையும்
துல்லியமாக வானலையிலும் இணையம் மூலம் உலகெங்கிலும்
TAMILSTAR
No Limits
168 மணி நேர தமிழ் வானொலி
வாரம் 168 மணி நேரமும் தமிழ் ஒலிக்கிறது
சிரிக்க, சிந்திக்க, சினக்க....
885 Progress ave., Suite 316,
Scarborough, ON M1H 3G3
Tel: 416.438.STAR (7827)
Fax: 416.438.7855
www.tamilstar.fm
info@tamilstar.fm

# Magnificent India

**EXPERIENCE INDIA LIKE NEVER BEFORE WITH OUR AWESOME NEW TOURS.**

## Manasarover Yatra



Kathmandu – Kodari – Zangmu – Nyalam – Saga – horpa – Manasorover – Dharchen – Mt.Kailash – Dehraphuk – Zuthulphuk – Dolmala

**16 Days / 17 Nights**

## North Indian Experience

Delhi – Mandawa – Bikaner – Khimsar – Jaisalmer – Jodhpur – Deogarh – Ranakpur – Udaipur – Pushkar – Ranthambore – Bharatpur – Agra – Jhansi – Khajuraho – Khajuraho – Varanasi – Delhi



**21 Days / 20 Nights**

## Romantic Kerala

Munnar (Houseboat) - Alleppey - Kovalam



**6 Days / 5 Nights**

## Southern Heritage



Cochin (Houseboat) - Thekkady - Madurai - Tanjore - Rameshwaram - Kannayakumari - Kovalam

**12 Days / 11 Nights**

## Best of Kerala



Cochin – Munnar – Thekkady – Kumarakom (Houseboat) – Kovalam – Kanyakumari

**10 Days / 9 Nights**

## Exotic Kerala

Cochin – Munnar – Thekkady – Kumarakom (Houseboat) – Cochin



**21 Days / 20 Nights**

## Temples of South India

Chennai - Chidambaram - Kanchipuram - Kerala - Madurai - Palani - Rameshwaram - Thanjavur - Tiruchi - Tiruchendur - Tirupathi



**21 Days / 20 Nights**

## The Sacred Ganges



Delhi – Mathura – Agra – Allahabad – Varanasi – Delhi

**12 Days / 11 Nights**

For tour packages and more information contact us or vist our website.

# SERANDIB TRAVEL

IATA TICO 50012691

**Toll Free: 1-888-207-0902** www.serandibtravel.com

| Toronto: 416-750-0009 | Mississauga: 905-564-7564 | Montreal: 514-448-1389 | Calgary: 403-770-9647 |
|---|---|---|---|
| 2075 Lawrence Ave East<br>Suite 202 | 1332 Khalsa Drive (@ Dixie & Derry)<br>Unit 3 | 1410 Rue Guy<br>Unit 10 | Vancouver: 604-625-0495 |

BMK

# வீடு வாங்குதல்... எப்படி ஆரம்பிப்பது?



மங்கா அருணாசலம்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -
manga@thaiveedu.com

- பகுதி 4 -

சென்றமாதத் தொடர்...

### நான் *fixed rate mortgage* வைத் திருக்கும் தறுவாயில் எனது வட்டிவீதம் குறைந்தால் என்ன வாகும்?

உங்களுக்கு அளிக்கப்பட்ட வட்டிவீதம் குறைந்தால், நீங்கள் refinancing பற்றி நினைப்பது நல்லது. இதுதான் புத்தியான செயல். ஆனால் refinancing செய்யும் தறுவாயில் அபராதமும், closing cost போன்றவையும் மீண்டும் கட்ட வேண்டி வரும்.

### எனது ஈட்டுக்கடனைப் பாதுகாக்க எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ன?

முதலில் கடன் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். இதற்குப் பின்வரும் ஆவணங்களும் தேவைப்படும்.

- கடந்த 2-3 மாதத்திற்கான paystubs
- கடந்த இரண்டு வருடத்திற்கான T4 பத்திரங்கள்
- நீண்டகால கடனடைப்பு பற்றிய ஆவணங்கள்
- வங்கியிருப்பின் அன்றாடக் கணக்கியல்கள்
- கடந்த 2 ஆண்டிற்கான tax return பத்திரங்கள்
- வேறு உழைப்பு பற்றிய ஆதாரங்கள்
- இதர உடைமைப்பொருள் பற்றிய குறிப்புக்கள்
- முதலீட்டுப் பணம் செலுத்தியதற்கான ஆதாரம்
- நீங்கள் வாங்க விரும்பும் வீட்டின் விலாசமும், அதுபற்றிய குறிப்புக்களும்
- Purchase and sales agreement
- விண்ணப்பம் பூர்த்தி செய்யும் தருணத்தில், உங்கள் credit history மற்றும் வீட்டுக்கான appraisal report போன்ற வற்றை கடன் கொடுக்கும் நிறுவனம் உங்களிடம் கேட்கும்.

### எனக்கான சரியான கடன் கொடுக்கும் நிறுவனத்தை எப்படி நான் தேர்ந்தெடுப்பது?

அவதானமாக உங்கள் நிறுவனத்தைத் தெரிவு செய்யுங்கள். வாடிக்கையாளர் திருப்தி, மற்றும் நல்ல பெயரெடுத்த நிறுவனமா என்று அறிதல் நல்லது. நல்ல அறிவுரை தரும், மற்றும் உங்களுக்கு மனதுக்கு மிகவும் உகந்ததாக இருக்கும் நிறுவனத்தைத் தெரிவு செய்யுங்கள். உள்ளூரிலேயே இருக்கும், உங்கள் விண்ணப்பத்தை அங்கீகரிக்கக் கூடிய நிறுவனமாய் தெரிவு செய்தல் நல்லது. அப்போதுதான், உங்களுக்கு உங்கள் விண்ணப்பம் எந்த அளவில் ஏற்கப்பட்டுள்ளது போன்ற விடயங்களை அடிக்கடி அவர்களை அழைத்துக் கேட்டுக் கொள்ளலாம். அதேநேரம், கடன் கொடுக்கும் அந்த நிறுவனமும், உங்கள் வீட்டுன் அண்ணளவான மதிப்பீட்டை, அக்கம் பக்க வீடுகளைக் கொண்டு ஓரளவு கணித்திருக்கும். நீங்களாகவே ஆராய்ந்து நல்ல நிறுவனங்கள் பற்றி அறிவதுடன், உங்கள் உறவினர், நண்பர்கள் மற்றும் உங்கள் வீட்டு முகவரிடமும், உங்களை அறிமுகப் படுத்தச் செய்யுங்கள்.

### முன்தகுதி, முன் அங்கீகாரம், இவை இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

முன்தகுதியில், உங்களால் எவ்வளவு பணத்தைக் கடனாக வாங்கக்கூடிய தகுதி இருக்கின்றது என்று ஆராயப்படும். ஒரு தொலைபேசி மூலம், உங்கள் வேலை, உங்கள் மற்ற கடன்கள் பற்றிய குறிப்புக்கள், மற்றும் உங்களால் எவ்வளவுக் கடனை வாங்கி அடைக்க முடியும் என்பதை ஒரு கடன் நிறுவனத்திற்குச் சொல்வதே உங்களை முன்தகுதி அடிப்படையில் அக்கடனுக்குத் தெரிவு செய்ய வாய்ப்புண்டு. இந்தக் குறிப்புக்கள், உங்களால் எவ்வளவு பணத்தை உங்கள் வீட்டுக்குச் செலவழிக்க முடியும் என்பதைச் சொல்லிவிடும்.



முன் அங்கீகாரம் ஒரு நிதி நிறுவனத்தின் சரியான தீர்மானம் கொண்டு உங்களுக்குக் கடன் கொடுக்க முன்வரும் ஒரு முறையாகும். இதில் வாங்கும் ஒரு வீட்டின் விடயங்கள் மற்றும் வீடு வாங்கும் விண்ணப்பப் படிவப் பூர்த்தி இன்றியே, உங்கள் வரவு செலவுக் கணக்கை மட்டும் வைத்து எடுக்கப் படும் நிதிநிறுவனத்தின் தீர்மானம் இதில் அடங்கும். இது உங்களால் எவ்வளவு கடன் வாங்கிக் கட்டக் கட்டுப்படியாகும் என்பதைக் காட்டுவதுடன், கடன் கொடுக்கும் நிறுவனங்களுக்கும் உங்கள் முடிவில் நீங்கள் எவ்வளவு உறுதியாய் இருக்கின்றீர்கள் என்பதையும் எடுத்துரைக்கும்.

### எனது *credit history* பற்றிய விபரங்களை நான் எப்படி அறிவது?

Equifax மற்றும் Trans Union என்ற இரண்டு credit reporting நிறுவனங்கள் உள்ளன. தொலைபேசியில் அழைத்து ஒரு பிரதியைக் கேட்டாலே அனுப்பி வைப்பார்கள். அதைப் பெற்றவுடன் கவனமாக ஆராயுங்கள். High credit limit, total loan, past due போன்ற வரிகளை ஒன்றுக்கு இரண்டு தடவையாவது சரிபார்த்துக் கொள்ளுங்கள். இரண்டு நிறுவனங்களிடமிருந்தும், ஒவ்வொரு பிரதி வாங்கி, இரண்டும் சரியாக, ஒரேபோலவே இருக்கின்றன என்பதை சரிபார்த்துக் கொள்ளுங்கள். காரணம், இந்த நிறுவனங்களில் ஒன்றுதான், நீங்கள் கடன் வாங்கும் நிறுவனத்திற்கு உங்கள் credit reportஇனது ஒரு பிரதியை அனுப்பி வைக்கப் போகின்றது.

### எனது *credit history*யில் ஒரு தவறைக் கண்டுபிடித்தால் நான் அடுத்து செய்யக் கூடியது என்ன?

Credit report companyக்கு ஒரு கடிதத்தை அனுப்பி, தவற்றைச் சுட்டிக்காட்டி, அது தவறுதான் என்பதற்கான ஆதாரத்தைக் காட்டுவதன் மூலம் இலகுவான இச்சிறு தவறுகளை அகற்றலாம். நீங்களே உங்கள் சொந்தக் கருத்தையும், விளக்கத்தையும் எழுத்து மூலம் அவர்களுக்குத் தெரியப் படுத்தலாம். ஒரு சுகயீனம் காரணமாக ஒரு மாதாந்தக் கட்டணத்தைச் சரியான நேரத்தில் நீங்கள் கட்டத் தவறியிருந்தால், அவற்றைச் சரியான ஆதாரத்துடன் நிரூபித்தல் நலம். கடனுதவி நிறுவனம் உங்களைப் புரிந்து கொள்ளும்.

### *Closing cost:*

ஒரு வீட்டின் விலையைப் பொறுத்தும், மற்றும் சில காரணங்களைக் காட்டியும் closing cost கட்டணங்கள் மாறுபடும்.

- Resale homes:
- Land transfer tax
- First 55, 000-(.005@sale price)
- Plus 55, 001-250,000-(.01@sale price)
- Plus 250, 001-400,000-(.015@sale price)
- Plus 400, 000-(.02@sale price)
- Lawyers fee
- வீட்டுவரியின் மதிப்பீடு, தண்ணீர், மின்சாரம், இரசாயன வாயு மற்றும் இதர கவனிப்புச் செலவினங்கள்
- புது வீடுகள்:
- Land Transfer tax, Lawyers fee, புதுவீட்டு உத்தரவாதம், connection fee for gas, hydro போன்றவை.

### *Closing*க்கு முன்னர் நான் எனது வக்கீலைப் பார்க்க வேண்டுமா?

ஆமாம், அவர் தான் உங்கள் வீட்டு உறுதிப்பத்திரம், ஈட்டுக்கடன் விபரங்கள், முதலீட்டுத் தொகையில் கட்ட வேண்டிய மிகுதித் தொகை, closing cost மற்றும் settlement sheets போன்றவற்றைப் பற்றி உங்களுக்கு விளக்கங்கள் தருவார். இவற்றையெல்லாம் படித்து நீங்கள் உங்கள் கையொப்பத்தை இடுவதுடன் முதலீட்டின் மிகுதித் தொகையையும் இந்தத் தருணத்தில் செலுத்தியாக வேண்டும்.

### *closing day* அன்று என்ன நடக்கும்?

Certify பண்ணிய உங்கள் காசோலையை உங்கள் வக்கீல் வீடு விற்பவரின் வக்கீலிடம் கையளிப்பார். அவர்கள் வீட்டுப் பத்திரத்தை உங்கள் பெயரில், Land register officeஇல் பதிவு செய்வார்கள். வீட்டுச் சாவி உங்கள் வக்கீலிடம் கையளிக்கப் படும்.

### எனது வீட்டுச் சாவியை நான் எங்கே பெற்றுக் கொள்வது?

உங்கள் வக்கீலின் அலுவலகத்தில் உங்கள் சாவியை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். அதுவே புதிதாகக் கட்டிய வீடாக இருந்தால், சாவி உங்களுக்கு Builders அலுவலகத்திலிருந்து கிடைக்கும். garage key, electric opener இரண்டும் இருந்தால், அதையும் கூட மறந்து விடாதீர்கள்.

பெருமைக்குரிய வீட்டுச் சொந்தக்காரர் நீங்கள்!

■ ■ ■

எலி பூச்சித் தொல்லையா...?

RUBAN PEST CONTROL



- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- தொழிற்சாலைகள்
- வியாபார நிலையங்கள்

ஆகிய அனைத்து இடங்களிலும் எலி, பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!


KANTHAN
416•291•3997



VEEDU REALTY INC. BROKERAGE
1345 Morningside Ave., Unit #8
Toronto, ON, M1B 5K3
Tel: 416.759.6000
Fax: 416.759.6005

- Building permit
- Zoning info.
- Site plan approval
- Rezoning approval

Gop Kalaieswaraan
Master in Architecture
Sales Representative
(Residential, Commercial, Institutional)
Dir: 416.723.7467



# வீட்டினுள் வளரும் பூஞ்சணம்... ஓர் அறிவுறுத்தல்

**உங்கள் வீட்டின் ஈரப்பதனும், அதனால் வளரும் பூஞ்சண பக்ரீரியாக்களால் (Mold), ஏற்படும் விளைவுகளும்.**

அன்று மரியோசெல்வா
- Certified Home Inspector -
andrew@thaiveedu.com



இயற்கைச் சூழலில் பூஞ்சணம் (Mold) முக்கிய பங்கு வகிக்கின்றது. இது எங்கு வளர்கின்றது என்பதைப் பொறுத்து, மனிதனுக்குக் கேடு விழைவிக்கக் கூடியவை, உதவிசெய்ய கூடியவை என இரண்டு வகையில் பிரிக்கப்படுகினறது. இது வெளிப்புறச் சுற்றுச் சூழலில், உதிர்ந்துபோன இலைச் சருகுகளிலும், இறந்து போன மரங்களிலும் வளர்வதைக் காணலாம். ஆனால் வீட்டின் உட்புறத்தில் வளரும் பூஞ்சணத்தைக் கட்டுப்படுத்துவது மிக அவசியமாகும். உணவு பழுதடைவதும்,





ஈரலிப்பான உடைகள், கடதாசி என்பவற்றிலிருந்து வெளியேறும் ஒரு வகையான மணமும் பூஞ்சணத்தினால் ஏற்படுபவையே.

270 வகைக்கும் மேற்பட்ட பூஞ்சண பக்ரீரியாக்கள் கனடாவின் ஒவ்வொரு வீட்டிலும் உள்ளதாக CMHC (Canadian Mortgage and Housing Corporation) வெளியிட்டுள்ள தகவலில் குறிப்பிட்டுள்ளது. பூஞ்சணமானது எமது கண்களால் நேரடியாக பார்க்க முடியாத பக்ரீரியாக்களை (Spores) வெளியேற்றுவதால், இவை காற்றுடன் கலந்து மிதக்கின்றன.

பூஞ்சண பக்ரீரியா (Mold / Mold spores) பற்றி, உலக தொடர்பு சாதனங்கள் (National media) மக்களை எச்சரிக்கைப் படுத்தியுள்ளனர். அதாவது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கக்கூடிய சாத்தியக்கூறுகளைக் கொண்ட, நச்சுத்தன்மை பொருந்திய பூஞ்சணமானது, கண்களுக்குத் தெரியாத வகையில் வளர்ந்து, குடும்பத்தினரின் ஆரோக்கியத்தையும், வீட்டையும் பாதிக்கின்றது.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு நிறுவனத்தின் (Environmental Protection Agency- EPA) கணிப்புப்படி வெளிப்புறக் காற்றுமட்டத்திலுள்ள அசுத்தத்தின் அளவிலும் பார்க்க, இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாக, வீட்டின் உட்புறக் காற்றின் அசுத்த மட்டம் உள்ளது எனக் கூறுகின்றனர்.

பூஞ்சண பக்ரீரியாக்கள், மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது மட்டுமல்லாது, அடிக்கடி தோன்றக்கூடியதும், கண்டு கொள்வதற்குக் கடினமான இடங்களில் வளர்வதும் ஆகும். பெரும்பாலானோர், ஒரு நாளின் 90%மான நேரத்தை வீட்டினுள்ளேயே செலவிடுகின்றனர். அதுவும் குளிர்காலங்களில், எந்த விதமான வெளிப்புறக் காற்றோட்ட வசதியுமின்றி வீட்டினுள்ளேயே இருக்க வேண்டியுள்ளது. அதனால், அவர்களது ஆரோக்கியம் இப்படியான அசுத்தங்களால் கெடுவதை அவர்களால் உணர முடிவதில்லை. உங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதும், பூஞ்சணத்தை வளரவிடாது தடுப்பதும், உட்புறச் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதும், உங்கள் கடமையாகும். எனவே உங்கள் வீட்டைப் பரிசோதித்து பூஞ்சணம் வளரும் இடங்களைக் கண்டறிந்து, அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும்.

### ஒருவர் எவ்வகையான சந்தர்ப்பத்தில் பூங்சணத்தால் பாதிக்கப்படுகின்றார்.

- காற்றுடன் கலபட்டுள்ள பூஞ்சண பக்ரீரியாக்கள் சுவாசத்தின் மூலம் உள்ளெடுக்கப்படுகின்றன.
- பூஞ்சணம் வளரும் இடங்களை நேரடியாகத் தொடுவதன் மூலம்
- பூஞ்சணத்துடனான நேரடித் தொடர்பின் பின், கைகளை நன்கு சுத்தம் செய்யாது உணவருந்துதல்.

### பூஞ்சணத்தினால் உடல் ஆரோக்கியம் கெடுகின்றதா?

ஈரலிப்பான இடங்களில் பூஞ்சணம் வளர்ந்து, அது பக்ரீரியாக்களை வெளியேற்றுவதால் படிப்படியாக ஆராக்கியம் கெடுவதற்கு வாய்ப்புகளுண்டு. இவ் வகை பக்ரீரியாக்கள் ஒவ்வாமையை (Allergies) ஏற்படுத்தக் கூடிய அமிலங்களைக் ( Mycotoxins ) உற்பத்தி செயவதால், ஒவ்வாமை, தோல் சம்பந்தமான நோய்கள் ஏற்படுகின்றன. சாதாரணமாக இலகுவில் நோய் தொற்றக்கூடியவர்களை (sensitive person), இது நோயாளிகளாக்கும் தன்மை கொண்டது. இது உடனடியாகவோ, அல்லது தாமதமாகவோ தோற்றப்படலாம். ஏற்கனவே ஒவ்வாமை (allergic) ஆஸ்துமா (asthma) நோயால் பாதிக்கப்பட்டவர்களை இது அதிகம் பாதிக்கின்றது. இதனால் Asthma atacks வருவதற்கான சந்தர்ப்பங்களுமுண்டு. இவர்களை விடவும் குழந்தைகள், சிறுவர், முதியோர், நோய் எதிர்ப்புச்சக்தி குறைந்தவர்கள், தாய்மையடைந்தவாகள், மூச்சு சம்பந்தமான நோய் உள்ளவர்களை இலகுவில் பாதிக்கின்றது. மேற்கூறப்பட்டவர்கள் உங்கள் குடும்ப வைத்தியரோடு ஆலோசிப்பதும், அதற்கான நடவடிகடகைகளை எடுப்பதும் அவசியம்.

பூஞ்சணம், ஆரோக்கியம் கெடுவதற்கு வழியமைப்பதோடு மட்டுமல்லாது, வீட்டினுள்ளே வாழ முடியாத சூழ்நிலையையும் உருவாக்குகின்றது. ஏப்படியாயினும், ஒவ்வொருவரும் இதனால் பாதிப்படையும் சந்தர்ப்பங்களுண்டு.

### மிகச் சிறிய அளவிலான பூஞ்சணத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள்

- மூக்கு, கண்கள், தொண்டை, தோல் பகுதிகளில் அரிப்பு அல்லது சொறிவு (itching or irritation).
- கண்டுபிடிப்பதற்குக் கடினமான தோல் வருத்தங்கள்.
- மூக்கடைப்பு, மூக்கிலிருந்து நீர் வழிதல்.
- தும்மல், இருமல், சுவாசம் சம்பந்தமான நோய்கள்.
- களைப்பு,

63ம் பக்கம் பார்க்க...

J.R.B Universal Inc.
Almost All Services Available
- கடன் - அடமானக்கடன் - காப்புறுதி

- Loans
- Mortgages
- Insurance Claims
- Traffic Ticket
- Auto/Life Insurance
- Scholarship Plan (RESP)
- Real Estate Related
- Credit Counselling
- Accounting
- Tax Services



R.R. Rajkumar
B.Com (Hons) M.B.A
Dip. In Accy.

Bus; 416 • 752 • 7555 Fax: 416 • 752 • 7556
Cell: 416 • 937 • 9081
2390 Eglinton Ave. East, 206B, Scarborough, Ont. M1K 2P5

S.P ELECTRONICS & COMPUTERS

அனைத்துத் தமிழ் வானொலிகளும் புதிதாக வாங்குவதற்கும், திருத்திக் கொள்வதற்கும்

416 264 6400

2641 Eglinton Ave. Scarborough
(Brimley & Eglinton)

- அடிக்கடி தலைவலி.
- மனதை ஒருநிலைப்படுத்த முடியாமை, ஞாபகமறதி, சரியான முடிவுகள் எடுக்க முடியாமை (confusion ).
- புரபரப்பு, மனத்தளர்ச்சி, மன ஊடாட்டம்.
- தொடர்ந்த வலி, நோவு.
- சமிபாட்டுக் கோளாறு.

## பூஞ்சணம் வீட்டின் எப்பகுதியில் காணப்படும்

பூஞ்சணம் ஈரலிப்பற்ற இடங்களில் காணப்படமாட்டாது. இது வளர்வதற்கு சிறிதளவிலான ஈரலிப்பு இருந்தாலே போதுமானது. நாம் சிறிய அளவிலான ஈரலிப்பைக் கூட அவதானிக்காது விட்ட சந்தர்ப்பங்களில் சாதாரணமாக பூஞ்சணம் வளர்ந்துவிடும். ஈரலிப்பு அதிகமான இடங்களில், கறுப்பு வட்டங்களாகவோ, அல்லது நூல் போன்ற வெள்ளைப் படிவங்களாகவோ, சிவப்பு, மஞ்சள், ஊதா போன்ற நிறங்களிலோ தோன்றக்கூடியது. வீட்டினுள் பூஞ்சணம் வளர்கின்றது என சந்தேகப்பட்டால், சாதாரண bleach கொண்டு சுத்தம் செயயும் போது, இலகுவில் அதன் நிறம் மாறிவிடும் அல்லது நீங்கிவிடும். சாதாரணமாக, ஈரலிப்போடு கூடிய துர்மணம் இதிலிருந்து வெளிப்படும். வீட்டின் ஈரலிப்பான பகுதிகளிலும், நீர்க்கசிவுள்ள இடங்களிலும் அதிகமாகக் காணப்படுவதால், நீர்க்கசிவுள்ள இடங்களை அவதானித்து, 24 - 48 மணித்தியாலங்களுக்குள் அவ்விடத்தை முற்றாக உலரவைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம். வீட்டின் உட்புறக் காற்றோட்டத்தை அதிகளவு ஈரலிப்பின்றி வைத்துக்கௌ்வதற்கு, காற்றின் ஈரலிப்பை பரிசோதிப்பது நன்று. இதன் மூலம் பூஞ்சணம் வளரத் தொடங்குவதை தடுக்கலாம்.

## பூஞ்சணம் வளரக்கூடிய இடங்களாவன

- வீட்டின் கீழ்ப்பகுதி (basement), சமையலறை, குளிர்சாதனப்பெட்டியின் அடிப் பகுதி, குளியலறைத் தொடடிகள், Washer, Dryer உள்ள இடங்கள்.
- Carpetன் அடிப்பபாகம்.
- தளபாடங்களின் பின்னால் உள்ள சுவர் களில் (அதாவது தண்ணீர்க் குழாய்கள் செல்லுமிடங்கள்)
- வீட்டின் மேற்பரப்பு (Ceilings).
- Drywall பக்கங்களின் முன்னும், பின்னும், Wallpaper அல்லது paneling உள்ள இடங்கள்.
- HVAC systems and duct ன் உட்புறம்.
- உடைகள்.
- உணவு

எவ்வாறு இதனைத் தடுக்கலாம் அல்லது நீக்கலாம்

பூஞ்சணம் பரவியுள்ள வீட்டினை முற்றாக சுத்தம் செய்வது முடியாத காரியம். ஏனெனில் இதிலிருந்து வெளியேறிய பக்ரீரியாக்கள் காற்றுடன் எப்பொழுதும் மிதந்த வண்ணமேயிருக்கும் பூஞ்சணம் உள்ள இடங்களை சாதாரணமாக துப்புரவு செய்யும் மருந்து வகைகளை உபயோகித்து, துப்புரவு செய்யும் போது கையுறைகள் (gloves), முக மூடிகள் (mask) அணிதல் அவசியம். ஈரலிப்பான இடங்களைக் கண்டறிந்து, அவற்றைத் துப்புரவு செய்வதன் மூலம் இது மேலும் பரவுவதைத் தடுக்கலாம் அல்லது குறைக்கலாம்.

## அதற்கான சில வழிவகைகள்

- நீர்க்கசிவுகளை சரிசெய்தல்.
- சரியான முறையில் காற்றோட்டமான சூழலை வீட்டினுள்ளே ஏற்படுத்தல்.
- சகல HVAC systems கண்டிப்பாக சிறந்த விசைகொண்ட வடிகள் (filters), இருக்க வேணடும்.
- குளியலறை, சமையலறை, சலவை இயந்திரங்கள் உள்ள இடங்களில் காற்றை வெளியேற்றும் மின்விசிறிகளை (exhaust fan) உபயோகித்தல்.
- Attic பகுதியிலும் Crawl space (மின் இணைப்புகள் உள்ள இடங்கள்) பகுதியிலும் காற்றோட்டத்தை ஏற்படுத்தல்.
- நீர்க் கசிவு ஏற்பட்ட இடங்களை உடனடியாக துப்புரவு செய்து, உலரவைத்தல்.


■ ■ ■


N.K.S

Drapery & Blinds Fabric LTD

திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.



கேதா நடராஜா

416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9



List with Pakeer & Save Money



Century 21 Affiliate Realty Inc. Brokerage 416-290-1200

Pakeer Sahadevan
Sales Representative

416-908-6003

Customized Commission Plan for your Listings. as low as 0%.
some conditions apply


EXCLUSIVE LISTED
Markham & Denison



14 Kruger Rd.
$ 339,000
- 3 Bedrooms
- 4 Washrooms
- Finished Basement

Apex Creations - 416-297-0707

Markham & Steeles




$ 379,000
- 4 Bedrooms
- 3 Washrooms
- Less than 5 years old

Markham & Denison





$ 329,000
- 3 Bedrooms
- 3 Washrooms

Audly & Bayly





$ 399,900
- 4 Bedrooms
- 3 Washrooms
- Less than 5 years old

Midland & Lawrence



$ 169,000
- 2 Bedrooms
- 2 Washrooms
- close to subway

Ellesmere & Morningside




$ 99,000
- 2+1 Bedrooms
- 2 Washrooms
- Low Maintenance

Markham & Finch




109 Crittenden Sqr.
$ 249,000
- 4 Bedrooms
- 2 Washrooms
- Finished bsmt. sept. Ent.

2nd Mortgage @ Prime Rate Call for Details Pakeer 416-908-6003


DIRECT
**416-277-1453**

HOMELIFE HIGHER STANDARDS



**THAVARAJ LOGASUNDARAM**
SALES REPRESENTATIVE

# FREE MARKET EVALUATION PRE- APPROVAL



**$145,990** **Scarborough**
3-bedroom
fully laminate floor
w/o to balcony



**$169,500** **Scarborough**
2-bedroom
Corner unit
Appx 1250 sq ft



**$214,900** **Warden/St.Claire**
2+1- bedroom
Close to TTC



**$287,900** **Scarborough**
Detached house
3+1 bedroom
Clost to 401 & schools



**$364,900** **Denison /Markham**
Detached House
3 bedroom
Fully hardwood floor



**$379,900** **Mississauga**
Semi-Detached House
3 bedroom, close to Hospital
Full hardwood floor



**$419,000** **16th/Mccowan**
Detached House
4 bedroom
Hardwood floor



**$425,000** **Steeles/Stains**
Detached House
4 bedroom
Demand location



**$459,200** **Pickering**
4+1 bedroom
Fully new hardwood floor
Clost to pickering town centre

**HOMELIFE FUTURE REALTY INC.**
262 MARKHAM ROAD, SCARBOROUGH, ON, M1J 3C5 TEL: 416-264-0101 FAX: 416-261-1519
EMAIL: THAVARAJL@YAHOO.CA
*Independently Owned and Operated, Realtor

*Higher Standards Agents... Higher Results*

---

- PENS
- CLOCKS
- CALENDERS
- MEMOS
- MEASURING TAPES
- CELL PHONE STANDS
- FRIDGE MAGNETS
- B. CARD HOLDERS
- CORPORATE GIFTS
- SEASONAL GIFTS
- LASER ENGRAVING
- PAD PRINTING
- AND MORE................

# One Stop for
## TROPHIES, AWARDS AND PROMOTIONAL PRODUCTS

2007ம் ஆண்டுக்கென தமிழ்க் கலை சார்ந்த
தொழில், வியாபார விருத்தி அன்பளிப்புப் பொருட்கள்
(PROMOTIONAL PRODUCTS)
கலை சார்ந்த நிறுவனங்களுக்கும் கலை நிகழ்வுகளுக்கும்
சிறப்பு விலைகளில் கிடைக்கிறது.

புதிய அறிமுகம்

*On high with your thoughts*
உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்





**PRO MAR**
Awards & Promotions Ltd

**www.promarawards.com 416-291 2344**

**585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5**

---

The Big choice
இல்லங்களை அழகுபடுத்த ஓர் பெரிய தெரிவு

மிகப் பெரியதும் மிக வித்தியாசமுமான வீட்டு, அலுவலக
சுவர்களை அலங்கரிக்கும் வர்ணக் கலைப் பொருட்கள்

சிறப்புத் தெரிவுகளாகவும், குறைந்த எண்ணிக்கையிலும்
இறக்குமதி செய்யப்பட்டிருப்பதால் உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்
IN WHOLESALE PRICE FOR RETAIL

**80 Nasdane Rd Unit C-59 416-898 4846**

# வயதான தாய் தந்தையைப் பராமரித்தல்




மஞ்சுளா ராஜலிங்கம்

manju@thaiveedu.com


உங்கள் குடும்பத்தைக் கொஞ்சம் நினைக்கும்போது, உங்கள் மனதில் உங்கள் இரத்த உறவுகளின் நினைவுகள் தான் வரும். கணவன், மனைவி, பிள்ளைகள், தாய்தந்தையர், பாட்டன், பாட்டி, மாமா, மாமி, ஏன் உறவுபோல் நினைக்கும் ஒவ்வொருவரும் நெருக்கமான சொந்தம் தானே? இப்படி பலவிதம்.

இந்த உறவுகள் பல காலம் உயிருடன் வாழ்வதற்கு நல்ல மருத்துவ முன்னேற்றங்களுக்கும், ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளுக்கும் நன்றி சொல்ல வேண்டும். ஒரு ஆரோக்கியமான ஆணினதும் பெண்ணினதும் சராசரி வாழ்நாள் முறையே 72 வயதும் 79 வயதும் ஆகும்.

ஆனால் தனியே வாழும் ஒரு சராசரி வாழ்க்கை முறைகளில் பல மாற்றங்கள் வருவதுண்டு. உங்கள் வயதான தாய் தகப்பன் கூட, தனியாக, சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருந்தாலும், அவர்கள் உடல்நிலை ஒரேமாதிரி தான் இருக்கும் என்ற உத்தரவாதம் நிச்சயம் கிடையாது. ஒரு கால கட்டத்தில் அவர்களைப் பார்த்துக் கொள்ள நீங்கள் சில முடிவுகளை எடுக்க வேண்டி வரும். யாருக்கும் வயதாகிக் கொண்டு போவதைப் பற்றிப் பேசினால், அந்தப் பேச்சு சுவாரசியத்தைத் தராது. எனவே அந்தப் பேச்சைத் தொடக்குவது கொஞ்சம் கஷ்டம் தான். ஆனால் இப்பொழுதே நீங்கள் வயதாகும் உங்கள் பெற்றோரிடம் இதுபற்றிப் பேச்செடுத்தால் தான், பின்னாளில் அவர்களுக்கு எதிர்பாராது ஒரு துயரம் நிகழ்ந்து விட்டால், நீங்கள் குற்றவுணர்ச்சியில் இருந்து விடுபடுவதோடு, சரியான நேரத்தில் அவர்களுக்கான முடிவை எடுத்திருக்கிறீர்கள் என்ற மனநிம்மதியும் உண்டாகும்.

## எதிர்காலத்தைக் கணக்கிடுங்கள்

முதலில், உங்கள் பெற்றோரின் பணநிலைமை எப்படி இருக்கின்றது என்பதை ஒரு முறை அலசிப் பாருங்கள். அவர்களிடம், அவர்கள் சுகமாக வாழுதல் எமக்கு முக்கியமென்றும், அதேநேரம் அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படாமல் இருக்கும் பொருட்டு, அவர்கள் மறைவின் பின்னர் இன்னாரைச் சென்றடைய வேண்டும் என்பதால் சொத்துக்களை உயில் எழுதி வைப்பதைப் பற்றியும் பேசுங்கள். உங்கள் வயதான பெற்றோரின் எண்ணம் என்ன என்பதை அறிந்து கொள்வதோடு, முக்கிய குடும்பநபர்கள் எல்லோரும் அந்த விவாதத்தில் கலந்து கொள்வது நல்லது. பின்னாளில், பெற்றோர் நோய்வாய்ப்பட்டு, இயங்கவே முடியாமல் போனால், நீங்கள் அவர்கள் எடுத்த முடிவுகளைச் செயல் படுத்துகிறீர்கள் என்பதோடு, மற்றவர்களும் இதில் உங்களுடன் துணை நிற்பார்கள் என்பதுமே மனதுக்கு ஆறுதலாக இருக்கும்.

## வசிக்கும் ஏற்பாடுகள்

வயதாகும் தருவாயில் யார் அவர்களைத் தொடர்ச்சியாகப் பார்த்துக் கொள்வது என்றதும் பின்வருவனவற்றை நீங்கள் கருத்தில் கொள்ளலாம்.



## சுதந்திரமாக வாழ்தல்

பெற்றோர் தனியே ஒரு வசிப்பிடத்தை வாடகைக்கு எடுத்து வாழ விரும்பினால் செய்யலாம். ஆனால் நீங்கள் அடிக்கடி அவர்கள் தேவைகளை, அவர்களுக்கு முடியாத பட்சத்தில் செய்யலாம்.

## பிரத்தியேகக் கவனிப்பு

இதுவும் ஒருவிதத்தில் வாடகை வீட்டில் இருப்பது போலத்தான். இதில் பல முதியவர்களும் தனித்தனியாக குடியிருக்கலாம். ஆனால் ஓரளவு உதவியும், உணவுத் திட்டமும் இதில் பணியாளர்களால் செய்யப்படலாம். ஆனால் நோய்வாய்ப்பட்டால், வைத்தியம் செய்வதற்குரிய வசதி அந்தக் கட்டிடத்துக்குள்ளேயே இருக்காது. அதுதான் ஒரு குறை.

## குறிப்பிட்ட நேரப் பிரத்தியேக கவனிப்பு

இது இன்னொரு விதம். இந்த அமைப்பில் உங்கள் முதியோரைச் சேர்ப்பதன் மூலம், அந்த அமைப்பு நீங்கள் வேலைக்கு அல்லது ஒரு குறிப்பிட்ட நேரம் வெளியே சென்றிருக்கும் நேரம், அந்த நேரத்தில் அவர்கள் தேவைக்கென பணியாளர்கள் அமர்த்தப்படும் விதம்.

## உங்களுடன் அவர்கள்

அதாவது, உங்கள் பெற்றோரின் சில தேவைகள் நேரத்திற்கேற்ப நிறைவேற்றப்பட வேண்டும் என்பதால், அவர்களை ஒன்றில், உங்களுடன் வாழ அனுமதிக்கலாம், அல்லது அவர்களுடன் நீங்கள் போய் வாழலாம். இதுவும் இல்லையெனில், பயிற்சிபெற்ற பணிப்பாளர்களை இதற்கென வேலைக்கு அமர்த்தலாம்.

## நர்ஸிங் ஹோம்

நர்ஸிங் ஹோமில் அவர்களை விடும் காரணம், அவர்களுக்குப் பிரத்தியேகமான மருத்துவத் தேவைகளும் கூடுதல் கவனிப்புகளும் தேவைப்படலாம் என்பதால். அங்கு மிகவும் கவனமாக அவர்களைப் பார்த்துக் கொள்வார்கள். உங்கள் பெற்றோரின் மருத்துவர், பொதுச்சேவை அமைப்பு நிலையங்கள், உங்கள் நண்பர்கள், தெரிந்தவர்கள் போன்றவரிடம் இம்மாதிரி அமைப்புக்கள், மற்றும் அவை செயற்படும் விதம், விண்ணப்பிக்கும் தகுதியாவன என்பனவற்றைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

உங்களால் மேலும் அவர்களைக் கவனிக்க முடியாமல் போனால், அடுத்த கட்டம் என்ன என்பதைப் பற்றி கலந்தாலோசியுங்கள். நர்ஸிங்ஹோம் மற்றும் வைத்தியசாலைகளில் வாழ்வதை அவர்கள் விரும்பமாட்டார்கள், ஆனால் சிலவகையான உடற்சுகயீனங்களைக் கருத்தில்கொண்டு இதைச் செய்யத்தான் வேண்டும். அத்துடன் பணரீதியாகப் பார்த்தால், நம்மால் போதியளவு செலவை இதற்கு ஒதுக்க முடியாமலும் போகலாம். ஆகவே உள்ள வழிகள் எல்லாவற்றையும் முதலிலேயே அலசிப் பார்த்து முடிவு செய்வது நலம். அவர்களின் உடல்நலத்தைப் பொறுத்துத்தான் எதையும் முடிவெடுக்க முடியும் என்று சொல்லுங்கள். அவர்கள் ஆசையை முடிந்தளவு நிறைவேற்ற முயற்சிப்போம் என்று சொல்லுங்கள், ஆனால் செய்ய முடியாதவற்றை தப்பித்தவறியும் உங்கள் வாயால் வெளியிட வேண்டாம். அவர்களுக்கு மனத்தாக்கம் ஏற்பட்டு விடும்.

## தனிவீடு தான் சரியான முடிவா

தற்போது உங்கள் பெற்றோர் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தாலும், வயதாகும் காரணத்தை முன்னிட்டு, எந்த உடல்நோய்களும், சொல்லாமலே தாக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. இந்த நேரத்தில் தான் எத்தகைய கவனிப்பு அவர்களுக்குத் தேவை என்பதை அனுமானிக்க முடியும். அவர்களால் சமைப்பது, தோட்டவேலை செய்வது, தங்களைத் தாங்களே பராமரிப்பது, கடைகளுக்குப் போய்வருவது, வீட்டு சராசரி வேலைகளைச் செய்வது போன்றவை சாத்தியமா? அவர்கள் வாயாலேயே பதிலை கேளுங்கள்.

அவர்களிடம் தேவையான பணம் உள்ளதா, இதுபோன்ற சேவைகளுக்குக் கொடுப்பதற்கு? விஷேட கவனிப்பு அவர்களுக்குத் தேவைபடுகிறதா? தேவைக்கு அதிகமாகப் பணம் தேவைப்பட்டால், நீங்கள் கொடுப்பீர்களா? நர்ஸிங்ஹோமில் சேர்த்தாலும், நீங்கள் பிரத்தியேகமாகக் கவனித்துக் கொண்டாலும்,

67ம் பக்கம் பார்க்க...


FOR ALL MORTGAGE NEEDS



Rajmogan Selliah

Mortgage Consultant

TD Canada Trust | Scotiabank

2929 Lawrence Ave. East, Suite 203,
Scarborough, ON M1P 2S8
Head Office: 701 Evans Ave., Suite 600, Toronto, ON M9C 1A3
rajmoganselliah@invis.ca

Dir: 416.569.3200
Bus: 416.430.0111, Fax: 416.430.0222

digi

A1 TOP QUALITY FLORIST




உங்களின் மங்களகரமான வைபவங்களுக்கு
தேவையான பொருட்களுக்கும் நாடுங்கள்

பிள்ளை 416-269-5522

2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8

A1 TOP QUALITY FLORIST
Funeral Services




Floral Arrangement for Funeral Needs

பிள்ளை 416-269-5522

2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8

# வயதான தாய் தந்தையை...

65ம் பக்கத் தொடர்ச்சி...

செலவு கொஞ்சம் அதிகரிக்கத் தான் செய்யும்.

### உங்கள் சொந்தப் பராமரிப்பு

நீங்க் திருமணம் ஆனவராக இருந்தால், உங்கள் பெற்றோரைப் பராமரிக்குமிடத்து உங்கள் வாழ்க்கைத் துணையிடமும் இது பற்றி கலந்தாலோசிப்பது அவசியம். இதில் உங்கள் பிள்ளைகளையும் மறந்துவிட வேண்டாம். கருத்து வேறுபாடுகள் இவற்றில் இருப்பின் இதை முன்னரே பேசித் தீர்த்துக் கொள்வது நல்லது.

### குடும்ப ஒத்துழைப்பு

வேறு குடும்ப நண்பர்கள், அங்கத்துவர்கள் பொருளாதார, இடம் விடயத்தில் உதவி செய்யத் தயாரா? இருப்பின் அவர்கள் செய்யும் உதவியைத் தாராளமாக ஏற்றுக் கொள்ளப் பழகுங்கள். உதவி தேவையாயின் தயங்காமல் கேட்கப் பழகுங்கள்.

### சமூகநல அமைப்புக்கள்

இதுதான் உங்கள் தெரிவாக இருப்பின், சமூகநல அமைப்புக்கள் இவ்விதம் நடத்தும் ஹோம்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள். இவற்றைப் பற்றித் தீர விசாரிக்க முழு மூச்சுடன் இறங்குங்கள்.

### மாற்றங்கள்

மாற்றங்கள் வயதானவர்களுக்கிடையே ஒரு பெரிய தாக்கத்தை உண்டு பண்ணத்தான் செய்யும், ஏனெனில் ஏற்கனவே தம்மால் முடியாத நிலைக்கு வந்துவிட்டோம் என்ற நினைப்பும், இயலாமையும் மனதில் பதிந்திருக்கும். அதுவும் இன்னொரு நகரத்தில் குடும்பத்தாரை விட்டுப் பிரிந்து இவ்வாறு ஹோம்களில் இருக்க வேண்டுமென்று நினைக்கும்போது வேதனைதான். அவற்றில் மிகவும் நல்ல, சிறப்பாகக் கவனிக்கும் பராமரிப்பு நிலையங்களைத் தேர்ந்தெடுப்பது நன்று.

### உங்கள் வீடு

உங்கள் வீட்டிலேயே உங்கள் வயதான பெற்றோரைப் பராமரிப்பதென்று நீங்கள் முடிவெடுத்து விட்டால், முதலில் வீட்டுக்குள்ளேயே சில மாற்றங்களை நீங்கள் கொண்டுவர வேண்டியிருக்கும். இந்த மாற்றங்கள் குளியலறை, தரைமட்டமிருக்கும் ஒரு அறையையே படுக்கையறையாக மாற்றல், தொலைபேசியில் அதிதூரம் கேட்கக் கூடிய கருவிகளைப் பொருத்துதல் போன்ற மாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கும்.

### கருத்தில் கொள்ளவேண்டிய சில குறிப்புக்கள்.

- Help alert system பொருத்துதல்
- கூர்மையான பொருட்கள், தேவையில்லாப் பொருட்கள் மற்றும் கார்ப்பெட் போன்றவற்றை அகற்றுதல்
- வழுக்காத குளியலறைத் தொட்டியைச் சேர்த்தல்
- கட்டில் பக்கத்தில் ஒரு டார்ச் லைட்டை கைக்கெட்டும் தூரத்தில் வைத்தல்
- குளியலறையிலும், ஹாலிலும் சிறிய கண்ணுக்குறுத்தாத மின்விளக்குகளை எரியவிடல்
- மாடிப்படிகள், சிறுபடிகளை அண்டி பிடி மானங்களை அமைத்தல்
- சுடுநீரின் வெப்ப அளவைக் குறைத்து வைத்துக் கொள்ளல்
- முதலுதவிச் சிகிச்சைப் பயிற்சியை நீங்கள் இத்துடன் சேர்த்து எடுத்தல் நலம். அத்துடன் நீங்கள் அவர்களை வரவேற்கிறீர்கள் என்பதைக் காட்ட, அவர்கள் விரும்பும் புகைப்படங்கள், மற்றும் நினைவுப் பொருட்களை அவர்கள் விரும்பும் இடத்தில் கண்ணில் படுமாறு வையுங்கள்.

### இதர தயார்ப்படுத்தல்கள்

நாம் என்றும் போலவே வயதானவர்களை மனதில் இருத்திக் கொள்வோம். நாம் சிறியவர்களாக இருக்கும்போது, அவர்கள் உடம்பாலும், உள்ளத்தாலும் உறுதியாவர்களாக இருந்திருப்பார்கள். அதையே நாம் மனதில் பதிய வைத்துக் கொண்டு, அந்தச்



சிந்தனையிலேயே அவர்களை இப்போதும் நோக்கலாம். உண்மையில்லை. அவர்களைத் தள்ளாமை இப்போது ஆட்கொண்டிருக்கும். அவர்களது போக்கு, மற்றும் உடல் வலுவிற்கேற்றாற்போல், நாமும் வளைந்து கொடுக்க வேண்டியது, இப்போது எமது கடமை. அதை எப்படிப் பின்பற்றுவது?

வழமையான, இலகுவில் தினமும் அவர்களுக்காகச் செய்யும் காரியங்களில் பின் நிற்காதீர்கள்.

சுத்தம் அவசியம். நகம் வெட்டல், தலை முடி வெட்டல், குளித்தல், பற்களின் பராமரிப்பு இவற்றைத் தினமும் கவனித்துச் செய்ய வேண்டும்.

கண்பார்வை சரியாக இல்லாவிடின் அதை உடன் கவனித்துத் தக்க நடவடிக்கை எடுங்கள். மிகுதியான வெளிச்சத்தை அளியுங்கள். குவிவாடி வில்லை பாவித்தல், மற்றும் பெரிய எழுத்துக்களைக் கொண்ட புத்தகங்கள், பத்திரிகைகள் போன்றவற்றைப் பயன்படுத்தக் கொடுத்தல் நலம்.

தினமும் அவர் எப்படி உள்ளார் என்பதை அவரைக் கேட்டறிந்து, அதைக் குறிப்புக்களாக மருத்துவரிடம் செல்லும் நாளில் அறிவித்தல் நலம்.

பல் பாதுகாப்பு வைத்திய நாட்களை சரியான முறையில் கவனித்து ஆவன செய்யுங்கள். மருத்துவரிடம் உணவின் தன்மை பற்றி விவாதியுங்கள். நோய்களும், பலவித மருந்துகளின் வீரியங்களும், சாப்பாட்டு விடயத்தைப் பல விதத்தில் பாதிக்கலாம். உணவை பலவிதச் சுவைகளில் தினம் தினம் அளிப்பதுடன் நின்றுவிடாமல், அவர்களுக்கு எது பிடிக்கும் என்று அறிந்து வைத்திருப்பதும் நலம். மறந்து விடாதீர்கள். கொடுக்கும் உணவு, இலகுவில் மெல்லக் கூடியதாகவும், நீராகாரமாகவும், சிறுசிறு துண்டுகளாகவும் வெட்டப் பட்டிருப்பின் மிகவும் நல்லது.

வயதானவர்களுக்கு என்றொரு மரியாதை உள்ளது. அவர்களின் மனதிலும் அது ஆழமாகப் பதிந்திருக்கும். அவற்றை மதிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

### பொறுமை மற்றும் அமைதியான நடைமுறை

வயதான ஒருவருக்குக் காது கேட்கும் தன்மை குறைவாக இருப்பின் நீங்கள் ஆறுதலாகவும், சுருதி குறைந்த குரலிலும், நிறுத்தி நிதானமாகப் பேசுங்கள். சில வார்த்தைகளிலேயே சொல்லக் கூடியவாறு சொற்றொடர்களைப் பாவியுங்கள். அவர்கள் உங்கள் முகத்தை அந்த நேரத்தில் கூர்ந்து பார்க்குமாறு செய்யுங்கள். ஏனெனில் முகபாவனைகளைப் பார்த்தே அவர்களால் சில சமயங்களில் உங்கள் வார்த்தைகளைப் புரிந்து கொள்ள முடியும். புரிந்து கொள்ளா விட்டால் பொறுமையாக மீண்டும் உங்கள் பேச்சைத் தொடருங்கள். சினம் கொள்ளாதீர்கள்.

சின்னச் சின்ன அலுவல்கள், சந்தோஷங்களை தினமும் செய்வதன் மூலம் அவர்களையும் உங்களுடன் கலந்துகொள்ளச் சொல்லி ஊக்கப் படுத்துங்கள்.

பட்டியலில் உள்ளவற்றைச் செய்து முடித்திருப்பின், அதில் செய்து முடித்ததற்கான குறியீட்டைப் போடுங்கள்.

ஒரு வயதானவரின் தள்ளாமை, முடியாமை எப்படியிருப்பினும் நீங்கள் எப்போதும் உள்ளது போலவே அவர்களுடன் அன்பாக இருங்கள். குழந்தை போன்று அவர்களைக் கடுமையாக நடத்தி முற்படுத்த விளைவது, சமயத்தில் கொஞ்சநஞ்சமுள்ள மனவுறுதியையும், மரியாதையையும் சிதைந்து விடச் செய்து, மனநோயாளியாக்கி, அன்றி கடுமையாக அதைப் பற்றியே நினைக்கச் செய்து நோய்வாய்ப்பட வைத்துவிடும்.

அன்பாக, அமைதியாக அவர்களுடன் சேர்ந்து முடிவுகளை எடுங்கள். சங்கடமான, உணர்ச்சிவசப்பட வைக்கும் நிலையில் அவர்களையும், உங்களையும் தள்ளாதீர்கள். உங்கள் முடிவில் அவர்கள் சம்மதம் மற்றும் ஒத்துழைப்பு அவசியம் என்பதை நிச்சயம் புரிய வைக்க வேண்டும். அதுவும் நிதானமாக. முடிவில் உடன்பாடு ஏற்படவில்லையெனில் இன்னும் ஓரிருவரை வைத்துக் கொண்டு மீண்டும் புரிய வைக்க முயற்சியுங்கள்.

வயதானவர்களின் கடவுள் மற்றும் மத நம்பிக்கைகளை மதியுங்கள்.

அவர்கள் உற்சாகமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்.

நிறைய படிக்கக் கொடுங்கள். அத்துடன் நீங்கள் செய்யும் வேலைகளில் அவர்களுக்கு ஒத்துழைக்க விருப்பமிருப்பின், அத்துடன் அவர்களின் உடலும், மனமும் கூட அதற்குத் துணைநிற்பின், சில வேலைகளைச் செய்யச் சொல்லி சந்தோஷப் படுத்தலாம்.

உறவினர்கள் வந்தால், அவர்களுக்குச் சந்தோஷமாக இருக்கும். அதை ஊக்குவியுங்கள். அத்துடன் குழுக்களாக இயங்கும் கழகங்கள், ஆக்க மன்றங்களில், அவர்கள் உடல் நலமாக இருப்பின், விருப்பமெனில் அவற்றில் சேர்த்து விடலாம்.

வயதானவர்களைப் பராமரிப்பது ஒரு பெரிய வெகுமதிக்குரிய செயல். உங்கள் நன்றியையும், கடமையையும் எடுத்துக் காட்டும் ஓர் அரிய சந்தர்ப்பம். சிலசமயங்களில் உங்கள் முடிவுகள் அவர்களுக்கு ஒத்து வராதிருக்கலாம். இதற்கு இம்மாதிரி விடயங்களில் எக்ஸ்பர்ட்டாக இருக்கும் வேலையில் உள்ளவர்களையும் சமயத்தில் கலந்தாலோசிக்கலாம். உதாரணமாக மருத்துவர், மற்றும் உங்கள் வயதானவர்களுக்கென்று ஒதுக்கப் பட்டிருக்கும் caregivers அல்லது social workers போன்றவர்களின் ஆலோசனையும் நல்லது. வீட்டுப் பராமரிப்பு என்பது ஒரு இலகுவான காரியமல்ல. ஆனால் கடமையுணர்வுடன் அதை எடுத்துக் கொண்டால், ஒரு புதுவித அனுபவம் உங்களுக்குக் கிடைக்கும்.

■ ■ ■

## துயர் பகிர்வோம்



**திரு. கதிரேசு கந்தவனம் சந்திரன்**

நயினாதீவு

நயினாதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் இல: 32, விதானையார் வீதி, சுண்டிக்குளியை வாழ்விடமாகவும் கொண்டு, தற்போது 17, 1/1, கிறகரி வீதி, தெகிவளையில் வசித்து வந்தவருமான திரு. கதிரேசு கந்தவனம் சந்திரன் (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், செயலகம் யாழ்ப்பாணம், கட்டடத் திணைக்களம் வவுனியா) அவர்கள் 16-09-2008 அன்று இறைபதம் அடைந்தார்கள்.

அன்னார் நயினாதீவு, காலஞ்சென்ற கந்தவனம் - சின்னம்மா தம்பதியரின் கனிஸ்ட புத்திரனும், நயினாதீவு, காலஞ்சென்ற சேனாதிராஜா – மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், நாகம்மா சந்திரன் (இளைப்பாறிய உதவித்திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம் யாழ்ப்பாணம், வவுனியா) அவர்களின் ஆருயிர்க் கணவரும், குமுதினி கிருபாகர் (ஆசிரியை), சுதர்சினி சுந்தரமூர்த்தி (ஆசிரியை), மகேந்திரா (மின்பொறியியல் பொறியியலாளர், இங்கிலாந்து ), சாமினி சந்திரன் ( உதவி விரிவுரையாளர், அரசியல் விஞ்ஞானபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்), குலேந்திரா (கிறீன்வீச் பல்கலைக்கழகம், இங்கிலாந்து, முன்னாள் உதவி விரிவுரையாளர், கணனி விஞ்ஞானபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கிருபாகர் (Apex Creations, Canada), சுந்தரமூர்த்தி (மனோன் ரேடரஸ், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், சரணியா, பிரவீணா, பிரவித் ஆகியோரின் ஆசைத் தாத்தாவும், ஸ்ரீகாந்தராசா, காலஞ்சென்ற கனகராசா (முன்னாள் நீர்ப்பாசன இலாகா, மேற்பார்வையாளர்), காலஞ்சென்ற கணேசு (இளைப்பாறிய அதிபர்), கிரிசாம்பாள் நவரெத்தினசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தம்பியாரும், ராக்கி ஸ்ரீகாந்தராசா, இராசம்மா கனகராசா (இளைப்பாறிய ஆசிரியை), லலிதாம்பாள் கணேசு (இளைப்பாறிய ஆசிரியை), நவரெத்தினசிங்கம் (முன்னாள் சுங்க இலாகா உத்தியோகத்தர்), காலஞ்சென்ற சுப்பிரமணியம், பூமகள் நடராஜா (இளைப்பாறிய ஆசிரியை), தங்கம்மா சிவபாதம், லெட்சுமி தியாகராஜா (இளைப்பாறிய ஆசிரியை), Dr. மீனாட்சி சின்னத்தம்பி, சொர்ணம்மா மகேஸ்வரநாதன் (இளைப்பாறிய ஆசிரியை), காலஞ்சென்ற இராமநாதன் (K.R.N. Enterprises), காலஞ்சென்ற பொன்னம்பலம், ஜானகி சுந்தரலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், விஜயராமலிங்கம் - காலஞ்சென்ற கமலேஸ்வரி, காலஞ்சென்ற பொன்னம்பலம் - மனோன்மணி ஆகியோரின் பிரிய சம்பந்தியும் ஆவார்.

| | | |
|---|---|---|
| திருமதி. நாகம்மா சந்திரன் | | |
| (தெகிவளை) | 112 732 918, | 077 796 1182 |
| வி.கிருபாகர் | | |
| (கனடா) | 416 321 6662, | 647 400 2739 |

# வீட்டுச் சோதனை அவசியமானதா?



செக்கலிங்கம் பிரபாகரன்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -
haran@thaiveedu.com


வீடு வாங்கும்போது Home Inspection எனப்படும் வீட்டுச் சோதனையும் அதி முக்கிய இடத்தை வகிக்கின்றது. வீட்டை விற்கும்போதும் வாங்கும்போதும் வீட்டைச் சோதிப்பது அவசியமாகின்றது. மிகச்சிலரே வீட்டை சோதிக்காமல் அசாத்தியத் துணிவோடு வாங்குபவர்களாக உள்ளனர்.



வீட்டை வாங்கவுள்ளவர்களைப் பொறுத்தவரையில் இந்த சோதனையை செய்வதனால் வீட்டில் உள்ள உடன்திருத்த வேலைகளுக்கான செலவை வீட்டை விற்பவரிடம் குறைத்துக் கேட்க முடியும். இல்லாவிடில் திருத்திக் கேட்க முடியும். வீட்டை விற்பவரைப் பொறுத்தவரையில் வீட்டை விற்க சந்தைக்குக் கொண்டு வருமுன்பு வீட்டைச் சோதனை செய்வதனால் வீட்டிலுள்ள பாரிய திருந்த வேலைகள் இருப்பின் கண்டறிந்து செய்து வீட்டின் விலையை சந்தையில் நல்ல நிலையில் பேணலாம். இவ்வாறு செய்வதனால் வீடு விற்பனையானது சிக்கல்கள் ஏதுமின்றி இலகுவாக நடைபெறும். காலமும் வீணாகாது.

வீட்டுச் சோதனை என்கிறோமே அப்படி என்றால் என்ன? என்ற கேள்வி உங்களுள் எழலாம். வீட்டின் கட்டட அமைப்பைச் சோதிப்பது, பிரதானமான கட்டட அமைப்புகளான மின்இணைப்பு, வெப்பமூட்டல் இணைப்புகள், நீர்க்குழாய்கள், வீட்டின் உட்புற அமைப்பு, வெளிப்புற அமைப்பு, வீட்டினைப் பேணிய பாங்கும் செய்யப்பட வேண்டிய திருத்த வேலைகளும் கூரை என பல விடயங்களை வீட்டுப் பரிசோதகர் பரிசோதிப்பார். இதுவே வீட்டுச் சோதனையாகும். இந்தச் சோதனையானது சுமார் 3-4 மணித்தியாலங்கள் எடுக்கும்.

வீட்டை விற்பவரும் வீட்டை வாங்கவுள்ளவரும் இச் சோதனையின்போது அருகிருப்பர். இதன்மூலம் அவர்கள் பல விடயங்களைப் பரிசோதகரிடமிருந்து அறிந்து கொள்ள முடியும். எவ்வாறு வெப்பம் வீட்டிற்கு வருகிறது? Shut Offs எங்கு உள்ளன? மின் இணைப்புப் பற்றிய விடயங்கள் என பலவற்றை பரிசோதகர் மூலம் அறிந்து கொள்ள வாய்ப்பாகும். வீட்டுப் பரிசோதகர் சன்னல்களின் அண்ணளவான ஆயுட்காலம், கூரையின் நிலை, furnace இதர பல விடயங்களையும் ஆராய்வர்.

### வீட்டுச் சோதனையில் அறியப்படும் விடயங்களை 3 வகையாகப் பிரிக்கலாம்

- அறிவதற்கு இனிய விடயங்கள்: எடுத்துக்காட்டு- கார்பெட் தரை என நினைத்து இருக்க சோதனையின்பின் 'கார்ப்பெட்டின்' கீழ் மரத்தரை இருப்பதனை அறிதல்.
- அவசியம் அறியவேண்டிய விடயங்கள்: எடுத்துக்காட்டு- கதவு பூட்டமுடியாதிருத்தல்
- ஆரோக்கியத்தினையும் பாதுகாப்பையும் நிர்ணயிக்கும் விடயங்கள்: எடுத்துக்காட்டு புகை அறிகருவி (Smoke Detected) பழுதாகியிருத்தல், கஞ்சா செடிகள் வளர்த்தல் முதலியன.

வீட்டுப்பரிசோதகர் மேலதிக ஆய்வுகள் செய்ய வேண்டும் என சந்தேகித்தால் அதையும் குறிப்பிடுவார்.

எடுத்துக்காட்டு- UFEIஇன் வீட்டுச் சோதனைகளின் வகைகள் சிலவற்றை வகைபிரித்துப் பார்ப்போம்.

### வீட்டை வாங்குமுன் சோதித்தல் (Pre-Purchase Inspection):

இத்தகைய சோதனைகளை மீளவிக்கும் வீடுகளில் பொதுவாக அவசியம் செய்வது வழமை.

### வீட்டை விற்க அறிவிக்கமுன் சோதித்தல் (Pre Listing Inspection):

வீட்டு உரிமையாளர் தனது வீட்டை விற்க முன்பாக விற்கத் தகைமையுள்ளதா என்பதை உறுதி செய்யவும் பிரதான திருத்த வேலைகளை செய்வதன்மூலம் சந்தையில் விற்கும் வாய்ப்பை அதிகரிக்கச் செய்யவும் இத்தகைய சோதனைகளைச் செய்வர்.

### மேலோட்டமான சோதனை செய்தல்(Walk Through Inspection):

ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளை ஒரே சமயத்தில் சோதிப்பவர்கள் அல்லது சோதனைக்காக சில நூறு டொலர்களை செலவு செய்யாமல் மீதப்படுத்தும் பொருளாதார இறுக்கச் சூழலில் இருப்பவர்கள் இத்தகைய சோதனைகளைச் செய்வர்.

### வீட்டை ஏற்குமுன் செய்கின்ற சோதனை (Pre-Delivery Inspection):

இத்தகைய சோதனைகள் புதுவீடுகளை வாங்குபவர்கள் எல்லாம் சரியாக உள்ளதா என சரிபார்க்க வீட்டிற்கு போகுமுன்பாக சோதித்து பார்ப்பதற்காக செய்வர்.

### ஒரு வருடகால உத்தரவாதம் (One Year Warranty):

இதன் மூலம் ஒருவருட காலத்தில் மீள் பரிசோதனை செய்வதற்கு உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது. வீட்டுப் பரிசோதகராக ஆவதற்கென சில தகைமைகள் இருக்க வேண்டும். வீட்டுப்பரிசோதகராக உள்ளவர் மூன்றாம் நபராக இருக்க வேண்டும், License பெற்றவராக இருக்க வேண்டும். பயிற்சி எடுத்தவராக இருக்கவேண்டும்.

இத்தகைய பயிற்சியளிக்கும் நிறுவனங்களுள் National Association of Home Inspection (NAHI) பிரதானமான ஒன்று. தரமான பயிற்சி, தகுதி வாய்ப்பிற்குரிய கல்வி, அனுபவம் ஆகியவற்றை இந்நிறுவனமானது தம்மிடம் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றவர்களுக்கு வழங்குகின்றது. உங்கள் வீட்டுப் பரிசோதகர் NAHIஇன் அனுமதி பெற்ற சான்றிதழ் பெற்ற நபரா என்பதை உறுதி செய்யுங்கள்.

வீட்டுப்பரிசோதனை என்பது தரவுகளுக்கு உத்தரவாதமளிப்பதோ உறுதி வழங்குவதோ அல்ல எனவே தாராளமாக உங்கள் கேள்விகளை வீட்டுப் பரிசோதகர் முன் வையுங்கள். அவர் தகைமையுள்ளவர்தானா என்பதை நேர்காணலூடாக உறுதிசெய்யுங்கள். வீட்டிலுள்ள திருத்த வேலைகளை தான் செய்து தருவதாக எந்த ஒரு வீட்டுப்பரிசோதகரும் கூறமுடியாது. இது அறத்திற்கு முரணானது. நிறுவன நிபந்தனையை மீறும் ஒரு செயல். எனவே இவ்விடயத்தில் வீட்டுப்பரிசோதகர்களை நிதானமாக அறிந்து தெரிவு செய்வது நன்று.

வீட்டுப்பரிசோதகர் வீட்டை சோதித்து முடித்தபின் உங்களுக்கு ஒரு அறிக்கையை தருவார். இந்தப் பத்திரங்களை மேலோட்டமாகவோ விளக்கமாகவோ விளக்கும் கடப்பாடு அவருக்கு உண்டு. சாதாரண அளவு வீடொன்றில் 400க்கும் மேற்பட்ட விடயங்கள் தரமறிந்து அறிக்கையில் குறிப்பிட உள்ளன. மேலதிக ஆய்வுகள் செய்யப்பட வேண்டுமானால் அவையாவும் குறிப்பிடப்பட வேண்டும். அவ்வறிக்கையில் வருடாந்தம் செய்ய வேண்டியவை, எதிர்நோக்குபவை, வழமையாக செய்ய வேண்டிய பாவனை யுக்திகள் போன்ற பல விடயங்களும் குறிப்பிடப்படும்.

தெளிவானதாகவும் விபரங்கள் பலவற்றையும் உள்ளடக்கியதாகவும் வீட்டுப்பரிசோதகரின் அறிக்கை இருக்க வேண்டும். வீட்டுப் பரிசோதகரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் குறித்த மேலதிக ஆலோசனையைப் பெற வீட்டுப் பரிசோதகர் தன் தொடர்பிலக்கத்தை கட்டாயம் வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் மேலதிக ஆலோசனைகளுக்கு அவர் ஒரு சதமேனும் அறவிடமுடியாது. அது சட்ட விரோதமானது. அறிக்கையில் வீட்டுச் சோதனையின் நோக்கம் கரு என்பன நிறுவப்பட்டிருக்க வேண்டும். தற்காலத்தில் பல வீட்டுப்பரிசோதகர்கள் கணினியூடாக தயாரிக்கப்பட்ட அறிக்கையின் கணிணிப் பிரதிகளை சோதனை செய்யும் இடங்களில் வைத்தே வழங்குமளவுக்கு சேவையின் தரமும் தொழில் நுட்பமும் முன்னேறியுள்ளது.

அதுசரி, வீட்டுச் சோதனை அவசியமில்லை என புது வீடு வாங்குபவராக நீங்கள் இருந்து எண்ணுவீர்களாயின் நீண்டகால நோக்கில் எதிர்பாராத அதிர்ச்சிகளை சந்திக்காமலிருக்க உங்கள் முடிவை மாற்றிக் கொள்வது நன்றென்பேன் நான். $250 - $400 வரை பரவலாக வீட்டுச் சோதனைக்காக வீட்டுப்பரிசோதகர்கள் அறவிடுவர். பணத்தைப் பார்க்காமல் வீட்டுச் சோதனை செய்வது நன்மையும், அவசியமானதுமாகும்.

■ ■ ■


KESAVAN LAW OFFICE

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும்
சந்திக்கலாம்

- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits



சட்டம் சம்பந்தமான சகல
தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)

Tel: 416-754-9843
Fax: 416-754-2362

5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
Web: www.lawyers.com/kesavanlaw
E-Mail: kesavanlawoffice@bellnet.ca

# CTR தகவல் பலகை

## House For Sale

**Rough River / Sheppard**
4 bedroom updrage 2600 sq feet
Rasalingam: 905-509-7493, 416-388-1549

**Mccowan / Finch**
2 bedroom condo for sale
Thavam: 416-293-5176, 416-903-5176

## ROOMS / BASEMENT RENT

**Morningside / old finch**
2 Basements
Thurai : 647-282-7689, 647-200-4112

**Birchmount / St.clair**
2 bedroom basement for rent
2/3 people $650, Rani: 416-269-8264

**Eglinton / Kennedy**
Basement – 2 bedroom / தனிவழி
Kumar: 416-820-3116

**Brampton Airport/Queen**
2 bedroom வீட்டின் மேல் தளத்தில்
Mathy: 905-915-1678

**McCowan / Lawrence**
2 bedroom basement near all the facilities
தனிவழி, Selvy: 416-439-6987

**Morningside / Sheppard**
Basement
Anusha: 416-724-7874

**Morningside / Mclevin**
1 bedroom basement தனிவழி
Selvy: 416-287-1236

**McCowan / Lawrence**
2 bedroom basement near all the facilities
தனிவழி, Selvy: 416-439-6987

**Morningside / Sheppard**
Basement
Anusha: 416-724-7874

**Mccowan / Finch**
2 bedroom condo for sale
Thavam: 416-293-5176, 416-903-5176

**Morningside / Mclevin**
1 bedroom basement தனிவழி
Selvy: 416-287-1236

**Sc.Golf / Lawrence**
1 bedroom basement 647-284-8494

**Jane / Finch**
1 room for rent in a house
Helen: 416-745-0283

**Markham / ellesmere**
2 bedroom basement rent
416-430-0455

**Lawrence / mccowan**
1 bedroom for rent
(பெண்கள், முதியோர்)
Sutha: 416-901-7151

## Others

**Plants for sale**
கறிவேப்பிலை , பப்பாமரம்
647-405-9116, 905-201-9116

**Tutour**
Islington / Finch
Math, Science, English
Grade 1 – Grade 12
Leela: 647-343-4223

**Bunk bed**
1 Single bed
Rohini: 647-341-5564
416-720-8709

**Day care**
Thursday / Friday (Markham / Burok)
2.45 – 5.00 Day care
Ranjan: 647-801-5501

**Day care**
Painting, tables, hardwood
Tharan: 416-994-9612

**தையல் machine**
Tution – Morningside and Oldfinch
Grade SK to Grade 5 647-219-6841
தையல் machine (new)
647-302-6734

மூடப்பட்ட Restaurant பொருட்கள்
விற்பனைக்குண்டு
Saroja: 416-286-4928

**Pizza Store**
Islington and Finch
Pizza Store needs delivery people
Karthik: 416-744-3025

**Pizza Store**
Pizza Hut 1 person needs
416-917-8336

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

**Pizza Store**
Danforth & Pharmacy பகுதியில்
இயங்கிவரும்
Pizza நிறுவனம் ஒன்றில் வேலை
செய்வதற்கு
ஆட்கள் தேவை

416.875.6869

## AUTO

**1997 Toyata Corolla**
160 KM Green ,
Rajan: 416-716-2975

**95 Honda Accord**
Auto, Mp3, A/C 220 Km, $2250
யோகராஜா: 416-451-6895

**2004 4 Runner Toyata**
60Km Jeep
Kumar: 416-707-0851, 905-471-9631

**Brimley /Lawrence**

2 B/R Basement,
Separate entrance (தனிவழி)
Near all facilities

Jeya
416 439 6987



2008 மார்கழியில் வெளிவருகிறது

## நாடோடிகளின் துயர் செறிந்த பாடல்

| | |
|---|---|
| அ.முத்துலிங்கம் | சுமதிரூபன் |
| செழியன் | டானியல் ஜீவா |
| நிரூபா | ர.ஃபேல் |
| வெங்கட் ரமணன் | திருமாவளவன் |
| பிரதீபா | கௌசலா |
| சேரன் | பொன்.அருந்தவநாதன் |
| மகிந்தன் | பா.அ.ஜயகரன் |
| தான்யா | டி.சே.தமிழன் |
| குருஅரவிந்தன் | தேவகாந்தன் |

## கூர் 2008

கனடா தமிழிலக்கிய கலை மலர்

பீல் முது தமிழர் சங்கத் தலைவரும்
குவியம் ஆசிரியருமான

## பொன் குலேந்திரனின்
## இரு நூல்கள் வெளியீடு

### "அறிவுக்கோர் ஆவணம்"
(கட்டுரைத் தொகுப்பு)

### "அழகு"
(சிறுகதைத் தொகுப்பு)

24.10.2008
(வெள்ளிக்கிழமை)

நேரம் : மாலை 5.00 மணி முதல் 9.00 மணிவரை
இடம்: **Scarborough Civic Centre**

உங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கிறோம்

வாழ்க தமிழ் ! வளர்க தமிழ் இலக்கியம் !!

# National Driving Institute

**Male & Female Experience Instructors**
will Teach For **G1, G2** Road Test

Early Appointment For G1, G2 Road Test

**Please Call:**

**Mrs. Saththi 416-816-1500 / 905-653-3878**

விஜயதசமியை முன்னிட்டு

**Manon Music academy யின்**

# பதிய Keyboard வகுப்புக்கள் ஆரம்பம்



**பிரபல இசையமைப்பாளர் ஏ. அஜித் அவர்களின் பயிற்சியில்**
**புதிய Keyboard வகுப்புக்கள் October மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளன.**
**சிறுவர்களுக்கான விசேஷட தனி நபர் வகுப்புக்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.**

Manon MUSIC ACADEMY

தொடர்புகளக்கு:

**ஏ. அஜித்**

**647 204 0251**

**www.manonmusic.com**



ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

(கனடா கிளை)

## வருடாந்த கலைநிகழ்ச்சிகளும்

## இராப்போசன விருந்தும் - 2008

எமது பதினேழாவது வருடாந்த இராப்போசன விருந்தும், கலைநிகழ்ச்சிகளும் எதிர்வரும் ஒக்டோபர் 18-ஆம் நாள் சனிக்கிழமை (Saturday, October 18, 2008) மாலை 6:30 மணிக்குப் பின்வரும் மண்டபத்தில் வழமை போல் மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளது.

**Church of St. Lawrence the Martyr Hall**

**2210 St. Lawrence Ave., E**

**(St. Lawrence Ave., E/Kennedy)**

**Scarborough, ON M1P 2P9**

கல்லூரியின் அனைத்துப் பழைய மாணவர்களும் குடும்ப சமேதராக இவ் வருடாந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

**416-269-3731, 416-617-8751**

**416-496-1636, 416-849-0594**



# ABC Abacus




* சிறுவர்களை புத்தி நுட்பம் மிக்கவர்களாக வளர்க்கும் பயிற்சிமுறை.

* உலகரீதியாக எற்றுக் கொள்ளப்பட்டு வேகமாக உலகெங்கும் பரவிவரும் கற்கைநெறி.

* கனடிய சூழலுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டத்தை உடையது, இதன் சிறப்பம்சம்.

* இக் கல்விமுறை உங்கள் பிள்ளைகளை பேரறிவாளராக்கக் கூடியது.

**மேலதிகத் தொடர்புகளுக்கு: Active Brain Center**

| Head Office: | Brampton | Newmarket | Scarborough N. |
|---|---|---|---|
| 416-615-2520 | 647-476-2532 | 647-890-2768 | 416-754-1141 |
| 2163 Lawrence Ave. E. (Birchmount & Lawrence) | 230 Sandalwood Parkway E. | 905-775-0395 | 80 Nashbene Rd. (Middlefield) |

Web:- www.activebraincenter.com | E-mail:- mail@activebraincenter.com

# நீரிழிவைக் கட்டுப்படுத்தக்கூடிய “டயபினா”

- எஸ். பிள்ளை -

ஆயுள்வேத மூலிகைத் தயாரிப்பான ‘டயபினா’ நீரிழிவைக் குணமாக்கச் சிறந்த பானம்.

‘சறக்சன்கித்த’ என்ற ஆயுள்வேத மூல நூலின் பிரகாரம் அலட்சியப்படுத்தப்பட்டோ அல்லது சிகிச்சை அளிக்காமல் விடப்பட்டு 20 உபநோய்கள் நீரிழிவாக மாறுவதற்கு வாய்ப்புண்டு. நீரிழிவைப் பற்றிய தகவல்கள் பலநூற்றாண்டுகளுக்கு முன்னே கிரேக்க மற்றும் சீன சரித்திர வரலாறுகளில் பதியப்பட்டுள்ளது.

நீரிழிவு வயது வித்தியாசமின்றி முதியோரையும் இளையோரையும் தாக்கக்கூடியது. சர்க்கரை மற்றும் மாவுப் பண்டங்கள் உடம்புடன் கலந்து கொள்ளாது விட்டால் நீரிழிவு ஏற்படலாம். ஒருவர் நீரிழிவினால் பாதிக்கப்பட்டிருப்பதை அறிவதற்கு இரண்டு வித அறிகுறிகள் உண்டு. முதலாவது அவர் அடிக்கடி சிறுநீர் கழிப்பது. இரண்டாவது அவருடைய சிறுநீரில் சர்க்கரை போன்ற பதார்த்தங்கள் கலந்திருப்பது. சரியாகச் சீரணிக்கப்படாத மாவுப்பண்டங்கள் இரத்தத்தின் சர்க்கரை அளவைக் கூட்டலாம். அதனால் வெளியேற்றப்படும் சிறுநீரில் சர்க்கரையின் அளவு அதிகரிக்கலாம். மற்றயது சரியாகச் சமிக்காத புரதம் (Protein) கொழுப்பு போன்றவை பொலியூறியா என்ற ஒருவித உப்பை சிறுநீருடன் அகற்றும். இதன் காரணமாக சிலநேரங்களில் மரணமும் ஏற்படக்கூடும்.

பருமனான உடம்பு உள்ளவர்கட்கு நீரிழிவு ஏற்படுவது சர்வ சாதாரணம். அதனால் மெலிந்த அல்லது குறைந்த பருமனுள்ளவர்கள் அதனால் பாதிக்கப்படமாட்டார்கள் என்று சொல்வதற்கில்லை.

அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவக் குறிப்புக்கள் நீரிழிவு ஏற்படுவதற்கான மூன்று காரணிகளை இனம்கண்டுள்ளனர். அவை :

- வம்சாவழியாக (Hereditary)
- பருமையான உடம்பு (Obesity)
- சரியாக இயங்காத உட்சுரபிகள். (Defective functions of hormone Glands)

அளவுக்கு அதிகமாக உண்பதும், அதன் விளைவாகக் கூடுதலான சிறுநீர் கழித்தல், மெதுமையான, குளிர்ந்த, இனிப்பான உணவை உட்கொள்ளுதல், கொழுப்பு நிறைந்த ஆட்டிறைச்சி, பண்டி இறைச்சி முதலியவற்றை உண்பதும், இனிப்பு, கரும்பு, வெல்லம் மற்றும் காலம் கழிந்த உணவுகளை உண்பதும், நீரிழிவுக்கான காரணிகளென ஆயுள்வேத விற்பன்னர்கள் கூறுகின்றனர். இவற்றைவிட தேகப்பியாசக்குறைவு, நித்திரைக் குறைவு, மதிய நேர உறக்கம், சோம்பல், அடிக்கடி ஓய்வெடுத்தல், அதிகமாக மதுபானம் அருந்துதல், மன அழுத்தம், தேவையற்ற பயம் போன்றவையும் நீரிழிவு உண்டாவதற்கான காரணிகளாகும். ஆயுள்வேத நெறிகளில் குறிப்பிடப்பட்ட 20 உப நோய்களுக்கான சிகிச்சைகளைச் செய்யாது அலட்சியப்படுத்துவதும் நீரிழிவுக்கு எடுத்துச் செல்லக்கூடும்.

மேல் குறிப்பிடப்பட்ட உணவுகளை மிதமாக உண்பதாலும் தேகாரோக்கியத்திற்கு ஒவ்வாத நடைமுறைகளினாலும் நல்வாழ்வுக்கு அத்தியாவசியமான பித்த நீர், வாய்வு, சளி போன்றவை மாசுபடுத்தப்பட்டு சிறுநீருடன் வெளியேற்றப்படுகின்றன. இதனால் சிறுநீர் கழிக்கும் அவயவமும் பாதிப்படைய நேரிடும்.



அடிக்கடியும், அதிகமாகவும் சிறுநீர் கழித்தல், உணர்ச்சி இன்மை, பார்வைக் குறைபாடு, சோர்வு நிலை போன்ற அறிகுறிகள் இரத்தத்தில் அளவுக்குக் கூடுதலான சர்க்கரை இருப்பதை உறுதிப்படுத்துவது மட்டுமல்ல அவை நீரிழிவுக்குப் பிரதான காரணிகளுமாகும்.

நீரிழிவினால் பாதிப்படைந்த ஒருவர் நடப்பதைவிட இருப்பதையும் படுக்கையில் சாய்ந்தவுடன் துயில்வதையும் விரும்புவர். சிறுநீரில் கூடுதலான சர்க்கரை இருப்பதன் காரணத்தால் நீரிழிவு உள்ளவர் அடிக்கடி சிறுநீர் கழிப்பர். இது சிறுநீரில் உள்ள அதிகப்படியான சர்க்கரை சிறுநீரகத்தை (kidney) சரியாக இயங்கவிடுவதில்லை.

கருத்தரித்த பெண்களின் சிறுநீரில் சர்க்கரை அளவு அதிகமாகக் காணப்படுவது வழக்கம். ஆனால், இந்நிலை மகப்பேற்றுடன் மாறுவது சகஜம். சில நேரங்களில் அந்நிலை தொடர முடியும். காரணம் வேறுபட்ட தேகசம்பந்தமான காரணங்களாயிருக்கலாம்.

அஜீரணம், பசியின்மை, பெண்தன்மை, தூக்கம், இருமல், இனவிருத்தி அவயவங்களில் ஏற்படும் பாரிய வலி, காய்ச்சல், பயம், தொண்டை நோ, நெஞ்செரிவு, முழங்கால் வலி, தூக்கக் குறைவு, சுவாசிக்கும்போது ஏற்படும் கஷ்டங்கள் ஆகியவை நீரிவுக்கான பிரதான அறிகுறிகளாகக் கூறப்படுகின்றன. நீரிழிவினால் பாதிக்கப்பட்ட ஒருவரின் உடம்பின் சதைப்பிடிப்பான பகுதிகளில் ஏற்படும் புண் நீண்ட காலம் குணப்படாமல் ஆயுள்வரை நீடிக்கவும் செய்கின்றது.

நீரிழிவினால் பாதிப்படைந்தவர்கள் அனுபவிக்கும் அசௌகரியங்கள், Cal aril என்ற கண்வருத்தம், குறைவாக இயங்கும் நீரகம் (Kidney) விறைப்பு வலி, அவயங்களில் ஏற்படும் நோ, சோர்வு மற்றும் அபாயகரமான இருதயத்தாக்கம், நரம்புத் தளர்ச்சி நீரிழிவினால் பாதிப்படைவோர்க்கு ஏற்படும் தேகநிலைகளாகும்.

மேற்கூறப்பட்ட நோய்கள் எல்லாவற்றையும் தகுந்த சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும். அப்படி அவற்றைக் குணப்படுத்துங்கால் நீரிழிவின் தாக்கத்தை வெகுவாகக் குறைக்கலாம். நீரிழிவு நோயை முற்றாகக் குணப்படுத்துவதற்கு தீர்க்கமான சிகிச்சை முறைகள் இல்லை. எனினும் அந்நோயினால் பாதிக்கப்பட்டோர் தங்கள் உணவு, வாழ்க்கை முறைகளைக் கட்டுப்பாடாக வைத்திருந்தால் கூடிய காலம் சீவிக்க முடியும். தகுந்த நுண் அறிவு தற்பாதுகாப்பானவை. நீரிழிவினால் பாதிப்படைந்தவர் கடைப்பிடிக்க வேண்டியவை கட்டுப்பாடான உணவும் தகுந்த மருந்தும் அவர்களுக்கு அவசியம். மன அமைதி இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அத்தியாவசியமானது.

ஆயுள்வேத மூலிகைப் பானமான டயபினா நீரிழிவைக் கட்டுப்படுத்தக்கூடிய இயற்கையோடு இணைந்த ஔஷதம்.

மெடிகேப் என்ற நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் “டயபினா” ஆயுள்வேத மூலிகைப் பானம். இலங்கை ஆயுள்வேதப் பகுதியின் கீழ் இயங்கும் சிறந்த மருத்துவரைக்கொண்ட தரப்படுத்தும் குழுவினரால் உத்தரவாதம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

■ ■ ■

## வேலைவய்ப்பு

காப்புறுதிப் பிரிவில், டெலிமார்க்கட்டர்களாக (Telemarketer) வேலை செய்வதற்கு, பகுதிநேரமாகவோ அல்லது முழுநேரமாகவோ விண்ணப்பிக்கலாம்.

சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.
அழையுங்கள்.

**தனா (416) 728-5772**



mediherbs.ca

சலரோகமா...?
சலரோக உபாதைகளிலிருந்து நீங்குவதற்கான மூலிகைப் பானம்!

உடலின் கெடுதியான மிகைக் கொழுப்பைக் குறைத்து உடல் தென்பை பேணுவதற்கு!




**டயபீனா** தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் சுளுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.

**க்லூட்டியலா** பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊளைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.

Amazon Health Care
BBB ACCREDITED BUSINESS
SABONA & Gift

Montreal: 514 823 0462 Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)

# S.P. IMPORTERS
## Furniture



அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்

NO PAYMENT INTEREST for 1 YEAR 416-266-3077

கொள்வனவு விலையில்
மலிவு விற்பனை



Sealy Posturepedic
Special Sealy Mattress on SALE

ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...
2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8
(Brimley & Lawrence சந்திப்பில்)

# நலம் காப்போம்


of

## International Medical Health Organization (IMHO)



வட-கிழக்கு மக்கள் இடப்பெயர்வு அவல நிவாரணம்

**Medical Assistance For Internally Displaced People of North & East**



ஒருங்கிணைந்த இருதய சிகிச்சை மையம்
(யாழ். போதனா வைத்தியசாலை)

**Comprehensive Cardiac Centre**
**(Jaffna Teaching Hospital)**



East & West Fusion by:
**Shivani Thakkar**

INTERNATIONAL MEDICAL HEALTH ORGANIZATION

www.imhousa.org

**OCTOBER**
**10**
**7:00PM**

**2800 Hwy #7, Concord, Ontario**
**(Jane & Hwy #7)**

*Donation: $100.*
*Higher donations welcome.*
*(Dinner Served.)*

*Co-ordinators:*
Dr. R. Lambotharan: 416-299-8100
S. Jayanthi 416-918-5872
Dr. S. Raguraj: 443-417-8510
Tam Sivathasan: 416-804-3443
S. Sivarajan: 416-712-4648
S. Ratheeshan: 647-400-2427
K.Thuraisingham: 416-299-4492
S. Kulasingam: 416-565-3000

# எது பரிகாரம்?

ஜெனிபர் இராஜசேகர்
- Settlement counsellor -
jennifer@thaiveedu.com



செல்வங்களிலேயே சிறந்த செல்வம் செவி வழியாகக் கேட்பது என்று திருவள்ளுவர் கூறியிருக்கின்றார்.

‘செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்
அச் செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை’

காது நன்கு கேட்கும் திறன் இருந்தும், செவி வழியாக கேட்டு அனுபவிக்கும் இன்பத்தைப் பெறாத மக்களை, வள்ளுவர் எப்படி இகழ்கின்றார் தெரியுமா? அவர்கள் வாழ்ந்தால் என்ன – வாழாவிட்டால் என்ன?

“செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் ஏன்”

மனிதனின் ஐம்புலன்களில் செவிக்கு மிகத் தலையாய சிறப்பை வள்ளுவர் கொடுக்கின்றார். பிறவியிலேயே செவித்திறன் இல்லாத மற்றும் வாய் பேச முடியாத மக்களைப் பற்றி நினைத்தால், நமது நெஞ்சம் பதறுகிறதல்லவா.

இப்படி ஒரு பதற்றத்துடன் என்னிடம் சில கேள்விகளை முன்வைத்தவர் தான் ‘தாய்வீடு’ பத்திரிகையின் ஆசிரியர். அவரைப் போன்றே அனேகக் கேள்விகளைத் தாங்கி நிற்கும் தமிழ் நெஞ்சங்களுக்கு இச் சிறிய தொகுப்பு பயனளிக்கும் என்று நம்புகின்றேன்.

(Bob – Rumbell) பாப் ரம்பால் என்ற தொண்டு நிறுவனம், காது கேளாதவர்களுக்கென்றே ஆரம்பிக்கப்பட்டது. (Bay View/ Lawrence) பேவியூ மற்றும் லோரன்ஸ் சந்திப்பில் அமைந்துள்ள இந் நிறுவனத்தின் சேவை பல தரப்பட்டது.

காது கேளாத கைக்குழந்தைகள், சிறுவர்கள், பெரியவர்கள், முதியவர்கள் என்று நான்கு தரப்பினருக்கு முப்பது வகையான பயிற்சி திட்டங்களை நடத்தி வருகின்றனர். காது கேளாத – வாய் பேச முடியாத மனிதர்கள் தங்களை வாழ்வில் உயர்த்திக் கொள்ள சக மனிதர்களுக்கிணையான வாழ்க்கை தரத்தைப் பெற, போட்டி நிறைந்த இந்த உலகில் தனித்தியங்க நல்வழி காட்டும் இந்த நிறுவனத்தின் சேவை நம்மை வியக்க வைக்கின்றது.

இது தவிர காது கேட்கும் குழந்தைகளுக்கான பராமரிப்பு நிலையமும் இங்கு உண்டு. இங்கு கற்பிக்கப்படும் பாடத் திட்டங்களில் ‘அமெரிக்கன் சைகை மொழி’–‘American Sign Language’ என்பது மிக முக்கியமானது. இதனைக் கற்றுக் கொள்ள ஆங்கிலம் தெரிய வேண்டிய அவசியமில்லை. ‘உலகமெங்கும் ஒரே மொழி’ என்ற சொற்றொடர்தான் நமக்கு ஞாபகத்திற்கு வரும். இந்த சைகை மொழி நான்கு பிரிவுகளாக நடத்தப்படுகின்றது. யார் வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம்.

இங்குள்ள வகுப்பறைகள் (Class room), ஒன்று கூடல் அறைகள் (Meeting room), உடற்பயிற்சி அறை (Gymnasium) இவைகளை யார் வேண்டுமென்றாலும் வாடகைக்கு எடுத்து பாவிக்கலாம். இதன் மூலமாக நாமும் பயன்பெற்று நல்ல ஒரு தொண்டு நிறுவனம் வருவாய் ஈட்டவும் உதவ முடிகின்றதல்லவா? முக்கியமான விடயம், இங்கு வாகன தரிப்பிடம் தாராளமாக உண்டு.

எனது தோழி ஒருத்தி ஜோதிடரிடம் சென்று பரிகாரம் அறிந்து வந்தாள். ஜோதிடர் சொன்னது இதுதான், ‘கை, கால் இழந்தவர்கள், வாய்பேச முடியாத, காது கேளாதவர்களுக்கு உதவி செய்வது தான் சிறந்த பரிகாரம்’!

## நீங்களும் உதவலாம்!

“பாப் ரம்பால்” நிறுவனத்தில் கைவினைப் பொருட்கள் தயாரிக்கவும் பயிற்சி அளிக்கப் படுகின்றது. இங்கு தயாராகும் கைவினைப் பொருட்கள் உள்ளம் கவருபவை – பயன் மிக்கவை. காது கேளாதவர்கள் கவனமாக உருவாக்கிய இந்த கைவினைப் பொருட்களை நீங்கள் வாங்கி உபயோகிக்கலாம் அல்லது மற்றவர்க்கு பரிசளிக்கலாம்.

நீங்கள், பலவகையிலும் உங்கள் பங்களிப்பை நல்கி இந்த நிறுவனத்தின் சேவையில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம். இவர்களுக்கு செய்யும் தொண்டு - இறைவனுக்கு செய்யும் சேவை. மேலும் நீங்கள் விபரமறிய விரும்பினால் www.bobrumball.org என்ற இணைய தள முகவரியை நாடவும்.

## நிறுவனத்தின் குழந்தைகளுக்கான நிகழ்வுகளும் திட்டங்களும்

**BRAD Children's program**
இந்த திட்டம், காது கேளாத – மன வளர்ச்சி குறைந்த அல்லது சிறப்புச் தேவைகளுடைய குழந்தைகளுக்கானது. அவர்கள் எப்படி தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது, எப்படி மற்றவர்களோடு தொடர்பு கொள்வது போன்ற பயிற்சிகளைக் கொண்டது.

**BRAD Case Management**
தனிப்பட்டவர்களுக்கும், குடும்பத்தினருக்குமான நிகழ்வு இது. திட்டமிடுதல், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டது.

**BRAD FOSTER / RESPITE CARE**
குடும்பம் இல்லாத குழந்தைகளுக்கு நல்ல சூழலை அல்லது குடும்பத்தை உருவாக்கிக் கொடுக்கும் திட்டம்தான் இது.

**BRAD PARENT RELIEF**
தினந்தோறும் சவாலான வேலைகளை இப்படிப்பட்ட குழந்தைகளுக்காக செய்து வரும் பெற்றோர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம். சிறிது காலம் தமது குழந்தைகளை இங்கு விடுவதன் மூலம் அவர்களுக்கு ஒரு இடைக்கால தீர்வு கிடைக்கின்றது. குழந்தைகளும் நல்ல பராமரிப்பு மற்றும் பயிற்சியை பெறுகின்றனர்.

**PAH**
இது பாப்பரம்பால் மற்றும் ஹால்ட்டன் (Halton) நிறுவனங்கள் இணைந்து நடத்தும் சேவை. காதுகேளாதோரின் மன வளத்திற்கான பயிற்சி.

**Happy Hands pre school program**
இரண்டரை முதல் ஐந்து வயதிற்குட்பட்ட காது கேளாத சிறுவர்களுக்கான திட்டம் இது. அமெரிக்கன் சைகை மொழி மற்றும் அடிப்படை ஆங்கிலக் கல்வி கற்பிக்கப்படும்.

**BCD Ontario early years Drop in**
இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கு செவ்வாய்கிழமை காலை 9.30 மணியிலிருந்து 11.30 மணி வரையும் புதுமையான கற்றுக் கொடுத்தல் நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். அதேபோன்று வியாழக்கிழமை காலை 9.30 மணியிலிருந்து 11.30 மணிவரை 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கான பயிற்சி பட்டறை நடத்தி வருகின்றது.

**BRCD Specialized parent / infant program**
இது ஒரு அருமையான பயிற்சித்திட்டம். காது கேளாத குழந்தைகளைப் புரிந்து கொள்வதற்கு பெற்றோர்களுக்கும், பெற்றோரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் பேச வேண்டும் என்று குழந்தைகளுக்கும் புதுப்புது தொடர்பு வித்தைகளை இந்நிகழ்வில் கற்றுக் கொடுக்கின்றார்கள். 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான சிறப்புத் தேவைகள் மற்றும் அவர்களுடைய உணர்திறன் இவைகளை கணக்கீடு செய்து அதன்பின் தேவையான திட்ட வரையறை தருகின்றனர்.

மேலும் பல திட்டங்கள் உள்ளன. அவையாவன...

## வயது வந்த காது கேளாதோருக்கான திட்டங்கள்

BRAD ADULT Program
BRAD DAY Program
BRAD ADULT EDUCATION Program
BRED ADULT RESIDENTIAL Program
BRED DAY PROGRAM
BRCD Supportive Independent Living
BRCD Progressive independent living
BRCD Seniors Supportive Housing
BRED Toronto Deaf Seniors Centre
BRED Day program
Ontario Camp of the Deaf
The Ontario Long term care Home for the Deaf

## காது கேட்கும் திறனுடைய குழந்தைகளுக்கான திட்டங்கள்

BRCD Ontario Early ears Drop in
BRCD Happy Hands pre school
BRCD ‘Sign out’ camps
BRCD Wee Hands

வயது வந்த செவித்திறனுள்ளவர்களுக்கான திட்டங்கள்.

BRCD Sign Language classes
BRAD Sign Language Classes
BRCD Summer ASL immersion program

■ ■ ■

## ஒரே நாளில் Saree Blouse


Saree Blouse ஒரே நாளில் (Indian Cutting) முழுமையாக வெட்டி தைத்துப் பழகுவதற்கு அழையுங்கள்.
Mississauga, Scarborough ஆகிய இரு இடங்களில் வகுப்புகள் நடைபெறுகின்றன. உங்கள் வீடுகளுக்கு அருகாமையிலே வந்தும் சொல்லித்தரப்படும்.
தொடர்புகளுக்கு
905 - 712 9721

பயன்தரும் ஆக்கங்களை பார்ப்பதற்கு
www.keetru.com

RAVI
INCOME TAX
SERVICE
• LAST 14 YEARS IN TAX SERVICES
• PERSONAL INCOME TAX
• CORPORATE INCOME TAX
• SMALL BUSINESS TAX
• GST/PST AND PAYROLL REMITTANCE
• E.FILE SERVICES
• YEAR ROUND SERVICES
MORE INFO PLEASE CALL
RAVI PARAMU
416-262-4176

HOMELIFE HIGHER STANDARDS

Ravi Paramu
Sales Representative
416•262•4176
rparamu@hotmail.com
www.raviparamu.com
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6



# சமையலறைக் காற்று அகற்றி

என். தயாபரன்
- Certified Home Inspector -
thayaparan@thaiveedu.com

சமைக்கும்போது வெளிவரும் மணம், அதீத ஈரம், எண்ணெய் போன்றவற்றை வீட்டினுள் பரவாது சமையலறையிலிருந்து நேரடியாக வீட்டிற்கு வெளியே அனுப்புவதற்கு சமையலறைக் காற்றகற்றிகள் (Exhaust Fans) பயன் படுத்தப்படுகின்றன.

வீடுகளை புதிதாக நிர்மாணிக்கும்போது









நிமிடத்திற்கு சுமார் 200அடி காற்றை வெளி யகற்றக்கூடிய காற்றகற்றிகள் பொருத்தப் படுகின்றன. சமையலறைக் காற்றகற்றிகளின் காற்றாடிகளிலும் வலுவானது காற்றகற்றும் குழாய் (Vent)களின் வகை, அளவுகள் (விட்டம், நீளம்), வளைவுகள், வாயில் பலகணி (Vent Hood Louvers) மற்றும் காற்றகற்றியிலுள்ள வடிகட்டி (Filter) போன்றவற்றில் தங்கியுள்ளது. சமையலறை காற்றகற்றிகளின் காற்றகற்றும் குழாய்களாக சரியான விட்டமுடைய உலோகத்திலாலான குழாய் களையே பயன்படுத்தி முடிந்தளவு நீளம் குறைவாகவும் வளைவுகளற்றதாகவும் அமைப்பது காற்றகற்றிகள் போதியளவு காற்றை வெளியகற்ற உறுதுணையாக அமையும். அத்துடன் குழாய்களை திருகாணிகொண்டு சரியான முறையில் பூட்டுவதோடு, குழாய்கள் பொருந்தும் இடங்களில் அதற்கென பாவிக்கப்படும் நாடாக்களால் (Foil Tape)இறுக்கமாக சுற்றவும் வேண்டும்.

சமையலறை காற்றகற்றிகள் சமையலடுப்பின் அகலமாகவாவது இருக்க வேண்டும். அத்துடன் அடுப்பிலிருந்து 30 அங்குலத்திற்கு கூடாது உயரத்தில் பூட்டப்படவேண்டும். 17 அங்குல காற்றகற்றிகளைவிட 20 அங்குல காற்றகற்றிகள் அடுப்பின் முன்புறத்திலிருந்து காற்றை நன்கு அகற்றக்கூடியவை. அழகுக் காக அமைக்கப்பட்ட சில காற்றகற்றிகள் மற்றும் நுண்ணலை வெதுப்பக அடுப்புகளுடன் (Microwave Oven) கூடிய காற்றகற்றிகளால் மிகவும் நன்றாக அடுப்பின் எல்லா பகுதிகளிலிருந்தும் காற்றை வெளியகற்று வது கடினம். அத்தகைய காற்றகற்றிகளால் அடுப்பிலிருந்து 15 அங்குல உயரத்தில் இருந்தால் கூட அடுப்பின் அனைத்து பகுதிகளிலிருந்தும் காற்றை சரியாக வெளியகற்ற முடிவதில்லை.

நகர்ப்புறவாசிகள் தற்போது குறைந்த மின் சக்தி மற்றும் குறைந்தளவு நீரை உபயோகிக்கும் வீட்டுப்பாவனை உபகரணங்களை விரும்பும் அதே வேளை சமையலறையில் பெரிய குளிர்ச்சாதனப்பெட்டியையும் பெரிய காற்றகற்றியையும் விரும்புகிறார்கள். அநேகமான பெரிய சமையலறை காற்றகற்றிகள் நிமிடத்திற்கு 600 கனஅடிக்கு மேற்காற்றை வெளியகற்றக் கூடியவை.

ஒரு வீட்டிலிருந்து எவ்வளவு காற்று வெளியேறுகின்றதோ அதேயளவு காற்று உள்ளே வரவேண்டும் என்பது சாதாரண பௌதீகவிதியாகும். பெரும்பாலான வீட்டு உரிமையாளர்களுக்கு பெரிய காற்றகற்றிகள் வீட்டினுள் அமுக்கக் குறைவை ஏற்படுத்தி, குளிர் காயும் அடுப்பு (Fire Place) எரிபொருட்களில் இயங்கும் சூளை (Furnace) வெந்நீர் அடுப்பு (Water Heater) போன்றவற்றிலிருந்து வெளியேறும் எரிபொருட்கள் எரிவதால் உருவாகும் விளைவுப் பொருட்களை வீட்டுக்குள் இழுத்துவிடுவது (Back Drafting) தெரியாது. இது வீட்டில் வசிப்பவர்கட்கு ஆபத்தை விளைவிக்கலாம்.

இரண்டு தளங்களை (2 Storey) கொண்ட 1600 சதுரஅடி வீட்டில் ஒவ்வொருதளமும் 800 சதுரஅடியாக இருக்கும். ஒவ்வொருதளமும் 8அடி உயரமாக இருப்பின், நிலக்கீழ்ப்பகுதியையும் சேர்த்து வீட்டின் கனவளவு 19,200 கனஅடி (800 X 8 X 3) ஆகும். நிமிடத்திற்கு 700 கனஅடியை வெளியகற்றும் காற்றகற்றியினால் 28 நிமிடத்திற்குள் ( 700 X 28 = 19,600) வீட்டின் கனவளவு காற்றை அது வெளியகற்றிவிடும்.

இப்பெரிய காற்றகற்றிகள் வீட்டினுள்ளிலிருந்து பெருமளவு காற்றை வெளியகற்றுவதால் எரிவாயு (Natural gas) மற்றும் மின்சக்தி செலவு பெருமளவில் அதிகரிக்கின்றன.

அடுப்பிலிருந்து காற்றை இழுத்து வடிகட்டி மீண்டும் வீட்டுக்குள் விடும் காற்றகற்றிகளால் பிரச்சனைகள் ஏற்படுவதில்லை. அதே வேளை இத்தகைய காற்றகற்றிகளினால் திருப்திகரமாக சமையலறையிலிருந்து மணத்தையோ அல்லது எண்ணெய், அதீத ஈரம் போன்றவற்றையோ அகற்றமுடிவதில்லை.

சமையலறைக்கு பெரிய காற்றகற்றிகளைப் பொருத்தியவுடன் அது இயங்கும் போது வீட்டில் உள்ள எரிபொருட்களில் இயங்கும் உபகரணங்களின் எரிந்த வாயுக்களை வெளியே அகற்றும் குழாய்களிலிருந்து அவ் வாயுக்கள் வீட்டுக்குள் வருகின்றதா என பரிசோதிக்கவேண்டும். இதனை இலகுவாக ஒரு புகைத்தடியை (Smoke Stick ) எல்லா எரிந்த வாயுக்களை வெளியகற்றும் குழாய் களின் ஆரம்பத்தில் வைப்பதன்மூலம் அறிய லாம். வீட்டிற்குள் இருக்கும் எல்லா காற்ற கற்றிகளும் (சமையலறை காற்றகற்றி, குளிய லறை காற்றகற்றி உடுப்புலர்த்தி Dryer, துப்புரவாக்கும் உள்வாங்கி Central Vacuum) இயங்கும்போது, புகைத்தடியின் புகை வீட்டுக்குள் வந்தால் வீட்டுக்குள் எரிந்த வாயுக்கள் இழுத்துவரப்படுவது உறுதியாகும்.

இப்பரிசோதனையின்போது ஒரு யன்னலை, புகைத்தடியின் புகைவீட்டுக்குள் வராது எரிந்தவாயுக்களை வெளியகற்றும் குழாயினூடாக செல்ல ஆரம்பிக்கும் வரை, மெதுவாக திறப்பதன் மூலம், வீட்டுக்குள் காற்றுச் சம நிலையைப் பேண எவ்வளவு காற்று வெளியிலிருந்து உள்ளே வரவேண்டும் என அறிந்து கொள்ளலாம். திறக்கப்பட்ட யன்னலின் துவாரப்பகுதி 10 -20 சதுர அங்குலம் வரையில் இருப்பின் ஒரு தானியங்கித் தடை (Automatic Damper)யுடன் கூடிய குழாய் மூலம், வீட்டுக்குள் காற்று சமநிலையை பேண, வெளியிலிருந்து காற்றினைக் கொண்டுவரமுடியும்.

கனடாவில் வீடுகளை நிர்மாணிப்பதற்கான வழிகாட்டியில், காற்றகற்றிகளால் ஏற்படும் பிரச்சனைகளை நிவர்த்தி செய்ய வெளியிலிருந்து வீட்டுக்குள் காற்றைக் கொண்டுவரத் தேவையான குழாயின் அளவு பட்டியலிடப் பட்டுள்ளது. இப்பட்டியலின்படி நிமிடத்திற்கு 200கனஅடி காற்றகற்றிக்கு 12அங்குலவிட்ட முள்ள குழாய் மூலமும் வெளியிலிருந்து வீட்டுக்குள் காற்றைக் கொண்டுவர வேண்டும்.

மேற்கூறிய பரிசோதனையில் திறக்கப்படும் யன்னலின் அளவு 20 சதுர அங்குலத்திற்கு மேலிருந்தால், வெளியிலிருந்து காற்றை உள்ளே கொண்டு வருவதற்கு அதற்கான உபகரணங்கள் (Make Up air Ventilators) மூலம் வசதி செய்யப்படவேண்டும். எரி பொருட்களில் இயங்கும் உபகரணங்களின் எரிந்த வாயுக்களை காற்றகற்றிகள் வீட்டிற் குள் இழுத்துவிடாதவாறு வீடுகள் வடிவமைக்கப்பட வேண்டுமென கனடிய கட்டிட நிர்மாண விதிமுறைகள் தெரிவிக்கின்றன.

பல வீடுகளில் சமையலறை காற்றகற்றிகளை இயக்கியவுடன் எரிந்தவாயுக்கள் வீட்டுக்குள் இழுத்து வரப்படுவதை அவதானிக்குள்ளேன். எரிந்த வாயுக்கள் வீட்டுக்குள் வருவதால் உயிராபத்து விளைவிக்கும் காபனீரொட்சைட்டு (CO2) மற்றும் குளிர்காயும் அடுப்பு களிலிருந்து வெளியேறும் புற்றுநோயை உருவாக்கக்கூடிய பென்சீன் போன்றவற்றால் வீட்டில் வசிப்பவர்கட்கு ஆபத்துக்கள் ஏற்படலாம்.

வீட்டினுள் விறகை எரித்து குளிர்காய்பவர்கள் ஒருபோதும் சமையலறையில் பெரிய காற்றகற்றிகளை பொருத்தக்கூடாது. சில வீடுகளில் வெளியிலிருந்து வீட்டுக்குள் காற்றுவரும் குழாய்களில் குளிர் வருகிற தென்று துணிகாளல் மூடி வைத்திருப்பதையும் கண்டிருக்கின்றேன். சமையலறை காற்றகற்றிகள் வீட்டிலிருப்பவர்களையும் வீட்டையும் பாதிக்காதவாறு சரியாக வடிவமைக்கப்பட்டு பொருத்தப்படுவது மிகவும் முக்கியமானதும் அவசியமாதுமாகும்.

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail:thaiveedu@gmail.com
Fax: 416-849-0594
Tel: 416-646-3422

EXPERT BUILDING INSPECTIONS LTD
"Dedicated to Expert, Honest & Independent Inspections"
Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315
- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

www.expertinspector.com
- Tough and Thorough Inspections by University of Toronto educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of ASHI and CAHPI-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER
CAHPI Ontario

செக்கான திரைப்பட மொழியை உருவாக்குவோம்

Seventh International

# Tamil Film Festival




November
01
2008
Saturday

SCARBOROUGH CIVIC CENTRE,
150 BOROUGH DR.,
McCowan / Ellesmere

Our Sponsors

RBC
VEEDU REALTY INC. BROKERAGE

தொடர்புகளுக்கு:
416.450.6833
www.iafstamil.com

Smile Business Solutions

24 hrs 366 days

Corporation Tax, Business Plan, T2, GST, PST
Personal tax – e-file

Business loss claims (fire, theft or other)
Revenue Canada issues will be resolved

Please Call for a Smile
416-450-6833 or 905-887-7457

digi Media

# 'உணர்ச்சிகளும் உளநோய்களும்'

சிவவதனி பிரபாகரன்
vathani@thaiveedu.com



மனித வாழ்வை வழிநடத்துவது மனம். மனதை வழிநடத்துபவை உணர்ச்சிகள். 'உணர்ச்சிகள் கடவுளின் கொடைகள்' என்பர். உணர்வுகளே இல்லாதவனை 'சடம்' என்பர். உண்மையில் மண்ணில் பிறந்த மானுடர் எல்லோருள்ளும் உணர்ச்சிகள் உள்ளன. ஆனால், மனிதர்க்கு மனிதர் தத்தம் உணர்ச்சிகளின் வகை தொகையில் வேறுபடுகின்றனர்.

மனிதனை மனிதனாக்குபவை உணர்ச்சிகள். மனிதனை மிருகமாக்குபவையும் உணர்ச்சிகளே. மனித வாழ்வை அழகுபடுத்துபவை உணர்ச்சிகள். மனிதவாழ்வை இழிவுபடுத்துபவையும் உணர்ச்சிகளே. மனித வாழ்வினை வழிநடத்தும் அல்லது இழிவுபடுத்தும் ஆற்றல் மிகும் சக்தியாக உணர்ச்சி திகழ்கின்றது.

அன்பு, இரக்கம், பக்தி, கோபம், பயம், அச்சம், விருப்பு, வெறுப்பு என பலவகையாக உணர்ச்சிகளின் மனித மனங்களுள் ஆர்ப்பரித்து எழுகின்றன. நேரத்திற்கு நேரம் நிலை மாறி நிலையற்று வேறுபடுகின்றன. உணர்ச்சிகளை வர்ண ஜாலம் காட்டி மறையும் வானவில்லிற்கு ஒப்பிட முடியும். உணர்ச்சிகள் கலைகளின் பிறப்பிடமாகவும் பண்பாட்டின் உறைவிடமாகவும் திகழ்பவை என்றால் அதில் மிகையில்லை.

சிந்தனைகளும் உணர்ச்சிகளும் ஒன்றொடொன்று கலந்திருக்கின்றன. இன்றைய இயந்திர உலகில் சிந்தனைகள் உணர்ச்சிகளை ஆதிக்கம் செய்து அழிக்க முயல்கின்றன. சிந்திக்கத் தொடங்கியதால் மனிதர்கள் உணர்ச்சிகளிற்கு இடம் கொடுப்பதில்லை. வெளிக்காட்டப் படாத உணர்ச்சிகள் மனதுள் தேங்கி நோயாக உருமாறுகின்றன.

உணர்ச்சிகள் உடல் உள்ள மேம்பாட்டுக்கு உறுதுணையாக திகழ்பவை. எனினும் உணர்ச்சிகள் தனித்தியங்காமல் சிந்தனைகளோடு தொடர்பு கொண்டுள்ளன. அதனால் உணர்ச்சிகள் பெரும்பாலும் மறைக்கப்பட்டு சாயம் பூசி சிந்தனைகளால் முலாமிடப்படுகின்றன.

> "சிந்திக்கத் தொடங்கியதால் மனிதர்கள் உணர்ச்சிகளிற்கு இடம் கொடுப்பதில்லை. வெளிக்காட்டப்படாத உணர்ச்சிகள் மனதுள் தேங்கி நோயாக உருமாறுகின்றன."

சிந்தனைகள் மனித பரிணாம வளர்ச்சியில் (Evolutionary Processஇல்) பிந்தித் தாமதமாக வளர்ச்சி எய்தியவை. ஆனால், மனித உணர்ச்சிகளோ மனித பரிணாம வளர்ச்சியின் தோற்றக்காலத்திலிருந்தே மனிதனிடம் திகழ்ந்தவை.

உணர்ச்சிகள் ஓயாமல் ஆர்ப்பரித்தெழுந்து கரைவந்து மீளும் அலைகளைப் போல் வந்து வந்து அலைமோதிச் செல்பவை. நீடித்து நிலைத்து நிற்பவையல்ல.

உணர்ச்சிகள் தோன்றப்பட வேண்டியவை எனினும் 'மிகினும் குறையினும் நோய் செய்யும்' என்கின்ற வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப அளவோடு கட்டுக்குள் வைத்திருப்பது அவசியம். நூலில் ஆட்டப்படும் பட்டம் போல் சுதந்திரமும் கட்டுப்பாடும் உணர்ச்சிகளை சமப்படுத்தும் போது தான் அவை நெறிப்படுத்தப்படுகின்றன.

மனித வாழ்வை உருவாக்குவதும் உருக்குலைப்பதும் உணர்ச்சிகளேயாகும். உணர்ச்சி மாற்றம் (disturbance in mood) மன நோயின் ஓர் அடையாளம் என்கின்றனர் மனநோய் மருத்துவர்கள்.

சூழ்நிலைக்கு ஒவ்வாத உணர்வு வெளிப்பாடுகள் மனிதர்களை அசாதாரணர்களாக மற்றவர்களால் பார்க்க வைக்கும். செத்த வீட்டில் போய் சிரித்துப் பேசுவதும் திருமண வீட்டில் போய் ஒப்பாரி வைப்பதும் சூழ்நிலைக்கு பொருந்தாத உணர்வு வெளிப்பாடுகளிற்கு சிறு உதாரணங்களாகும்.

மனநோய்களின் பல அறிகுறிகள் இவ்வாறான மாறுபட்ட உணர்ச்சி வெளிப்பாடு மாற்றங்களூடாக வெளிப்படுகின்றன.

## மனநோய் தோன்றுகின்றன காரணங்களில் சில:

உடற்கூறு: குறிப்பாக மூளையும் நரம்புத் தொகுதி.

- பரம்பரைக் குறைபாடுகள் (Heredity)
- குடும்பத்திலுள்ள குறைபாடுகள்
- சமூக பொருளாதார குறைபாடுகள்
- ஆளுமை வளர்ச்சியிலுள்ள குறைபாடுகள் (Faulty Personality development)
- அதிர்ச்சியூட்டும் நிகழ்வுகள்
- உடலில் சுரக்கும் ஓமோனில் ஏற்படும் மாற்றம்

மனநோய் தோன்றுவதற்கான காரணங்கள் இன்னோரன்ன இருந்தாலும் அவற்றில் ஆளுமை வளர்ச்சியிலுள்ள குறைபாடுகள் எம்மால் ஓரளவுக்கு மாற்றியமைக்கக் கூடியவை எனலாம். எனவே அதுபற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.

## ஆளுமை வளர்ச்சியிலுள்ள குறைபாடுகள்:

பல மனநிலை குறைபாடுகளை ஆளுமை வளர்ச்சி பற்றி அறிந்து கொள்வதன் மூலம் அறிந்து குணமாக்க முயலலாம். மனிதர்களின் ஆளுமை வளர்ச்சியில் பாலுணர்வுடன் இணைந்த மனவளர்ச்சியானது மிக முக்கியமானதாகும். இம்மன வளர்ச்சியானது வெவ்வேறு பருவங்களூடாக வளர்ச்சியடைபவை. இதனை Psychosexual Development stages என ஆங்கிலத்தில் கூறுவர்.

ஃபிராய்ட் என்ற அறிஞர் மனிதர்களின் பாலுணர்வுடன் இணைந்த மன வளர்ச்சிப் பருவங்களை 5 பருவங்களாகப் பிரித்துள்ளார். அவையாவன:

- வாய் இன்பப் பருவம்: (Oral Stage)
- ஆசன வாய் இன்பப் பருவம் (Anal Stage)
- குறி இன்பப் பருவம் (Phallic Stage)
- உள்ளுறை இன்பப் பருவம் (Latent Stage)
- பால் இன்பப் பருவம் (Genital Stage)

இவற்றை இனி தனித்தனியே பார்ப்போம்.

## வாய் இன்பப் பருவம் (Oral Stage):

குழந்தை பிறந்து அதன் ஒரு வயது வரையான வளர்ச்சிக்குரிய பருவமிதுவாகும்.


தாயின் அணைப்பிலும், பாலருந்துவதிலும், விரல் சூப்புவதிலும், உணவைச் சுவைப்பதிலும் எதையும் வாயில் நக்கிப் பார்ப்பதிலும் இன்பம் காணும் பருவமிது. உதடுகளும் வாயும் இன்பத்தை சுவைக்கும் உறுப்புகளாக இப்பருவத்தில் இருப்பதால் அதற்கு இடையூறு இன்றி அனுமதிப்பது அவசியமாகும்.

தாயின் அரவணைப்பிலும் அன்பிலும் தன்னம்பிக்கையும் ஆளுமையும் வளர்கிறது. இக்காலகட்டத்தில் தாய் காட்டும் அளவற்ற அன்பானது குழந்தையின் மனித வாழ்வுப் பயணம் முழுவதற்கும் தேவையான ஆளுமைக்கு வித்திடுவதால் தாயின் அன்பும் அரவணைப்பும் இப்பருவத்தில் பிரதானமானவையாகும்.

80ம் பக்கம் பார்க்க...

தமிழ் வகுப்பு

(McCowan & Dennison சந்திப்பிற்கருகில்)



இளமழலை முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தமிழ் கற்பிக்கப்படுகின்றது.

- உங்கள் பிள்ளைகளும் தமிழில் பேசி, எழுதி, வாசித்து தேர்ச்சி பெற வேண்டுமா?
- பேச்சுப் போட்டிகள், சிறுவர் நாடகங்கள், பட்டிமன்றங்கள், சிறுவர் அபிநயப் பாடல்கள் போன்ற கலைநிகழ்ச்சிகளில் பங்குபற்றி தமது திறன்களை வெளிப்படுத்த வேண்டுமா?
- தொலைக்காட்சி, வானொலி சிறுவர் நிகழ்ச்சிகளில் பங்கேற்று தமது திறன்களை ஆளுமையுடன் வெளிக்கொண்டுவர வேண்டுமா?

அழையுங்கள்: 905-554-2496

"தமிழின் மேன்மை அதன் தொன்மையில் இல்லை அதன் தொடர்ச்சியில் உள்ளது."
நாளைய எமது தமிழ்ச் சந்ததியினர் தமிழ் பேசும் நல்ல தமிழ்ப் பிள்ளைகளாக வளர்வது எமது கரங்களிலேயே உள்ளது.

எலி பூச்சித் தொல்லையா...?

RUBAN PEST CONTROL



- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- தொழிற்சாலைகள்
- வியாபார நிலையங்கள்

ஆகிய அனைத்து இடங்களிலும் எலி, பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!

KANTHAN
416•291•3997

# HONESTY & PROFESSIONAL EXPERIENCE TO SERVE YOUR REAL ESTATE NEEDS

## Residential and Commercial
## Buying / Selling & Leasing



# Raja V.S. Rajagopal

Sales Representative

# Dir : 416.727.8647

Email : sinnarajagopal@hotmail.com

## மோட்கேஜ் வசதிகளும் செய்து தரப்படும்




9th Lane / 16th Ave, 4 BR, 3 WR




Morningside & Sheppard
3 Bed Rooms, 2 Washrooms,





Medowvale & Sheppard
3+1 Bed Rooms, 2 Wash Rooms




Duffren & Eglinton
$5,600 Rental Income Commercail Sale




Morningside & Nightstar
3+1 Bed Rooms, 4 Washrooms,




Warden & Finch
2 Bed Rooms, 1 Washrooms,





Finch & Markham
3 Bed Rooms, 2 Wash Rooms
Finished Basement




Midland & Lawrence
1+1 Bed Room, Low Maintenance




Middlefield & Finch
2+1 Bed Rooms, 1 Washrooms,




Victoria Pk & Eglinton
2 Bed Rooms, 2 Washrooms,

## Total Selling Commission As low as

# 3%*

(நேரடியாக தொடர்பு கொள்பவர்களுக்கு மாத்திரமே)

Apex 416-297-0707

HOMELIFE
HIGHER STANDARDS

## HomeLife/Future Realty Inc.,

**Brokerage***
262 Markham Road, Scarborough, Ontario M1J 3C5
**Bus.: 416.264.0101 Fax : 416.261.1519**
*Independently Owned and Operated, REALTOR

MLS MULTIPLE LISTING SERVICE




- ☑ Legal Fee
- ☑ Home Inspection

Our gift to you on closing to use as you wish*

(நேரடியாக தொடர்பு கொள்பவர்களுக்கு மாத்திரமே)

* some conditions apply




# உணர்ச்சிகளும் உள..

25ம் பக்கத் தொடர்ச்சி...

வாயின்பப் பருவத்து உணர்ச்சிகள் அடுத்த பருவத்துள் நுழையும் பொழுது மறையா விடின் இதனால் வாய்நிலை மனவளர்ச்சி தடை (Oral Fixation) ஏற்படும். இது மன நோய்க்கு வழிவகுக்கும். ஆதலால் குழந்தைகள் தானே என கவனிக்காது விடாமல் அவதானமாகச் செயல்ப்பட்டு ஊக்குவிக்க வேண்டும்.

## ஆசன வாய் நிலைப் பருவம் (Anal Stage):

ஆசனவாய் உணர்ச்சிகள் தெரிய ஆரம்பிக்கும் இப்பருவம் 1இலிருந்து 3வயது வரை தொடரும் பருவமாகும். மலசலம் கழிக்கும் உணர்வு, அதை அறிவிக்கும் திறன், அடக்கி வைக்கும் திறன் என்பன இப்பருவத்தில் உருவாகின்றன. மலசலம் கழிக்கும் பழக்கங்களை ஒழுங்குபடுத்துவதற்காக சில பெற்றோர் பிள்ளைகளை கண்டித்து தண்டித்து பயமுறுத்துவர். இது சரியல்ல. இதனால் ஏற்படும் மனவுணர்வுகள் ஆழ்மனதில் பதிந்து போகின்றன. இவை பொதுவாக இப்பருவம் கடக்கு முன்பாகவே மறைந்து போகும். அவ்வண்ணம் மறையாவிடில் ஆசன வாய் நிலை மனவளர்ச்சித் தடை (Anal Fixation) ஏற்படும். ஓரளவுக்கு குழந்தைகளை இயன்றமட்டும் மலசல கழிப்பு விடயத்தில் சுதந்திர உணர்வோடு ஒழுங்கு முறைப்படுத்தி வளர்ப்பது அவசியமாகும்.

## குறிநிலைப் பருவம் (Phallic Stage):

3 வயதிலிருந்து 6 வயதுவரையுள்ள பருவமிது. இப்பருவத்தில் குழந்தை தன் பாலியல் வேறுபாட்டை உணர்கின்றது. தனது பாலுறுப்புக்களையும் கண்டறிகிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வேறுபாட்டை உணரும் பிள்ளை தன்னைத்தான் ஆராய விளைகிறது. அதனைத் தவறு எனத் தடுத்தல் கூடாது. ஆண்குழந்தை தாயின் கவனத்தையும் பெண் குழந்தை தந்தையின் கவனத்தையும் தன் பால் ஈர்த்து அவர்களை தன்னுடையவர்கள், தனக்கு மட்டுமே உரியவர்கள் என உரிமைப்படுத்தி எண்ண விளைகின்றன. இதனை ஃபிராய்டு Oedipus Complex என்கின்றார். இந்த உரிமை கொண்டாடும் தன்மையை கவனத்தில் எடுக்காமல் உணர்ச்சிகளை புறக்கணிப்போமாயின் அது உளவியல் தாக்கத்தை உண்டு பண்ணுகின்றது.

## உள்ளுறை இன்பப் பருவம் (Latent stage):

6 இலிருந்து 11 வயது வரையான பருவம். இப்பருவத்தில் குழந்தைகள் ஆண் பெண் பேதமின்றி ஒருவரோடு ஒருவர் நட்புரீதியாக பழகி வளர்வர். பாலுணர்வு மிதமாக உள்ள பருவம் இதுவாகும். இப்பருவத்து குழந்தைகள் குடும்பம் என்ற உறவிலிருந்து சமூகம் என்ற உறவை நோக்கி தம் பார்வையை திருப்புகின்றனர். சமூகத்திலிருந்தும் புறச் சூழலிலிருந்தும் புதியவற்றைக் கற்கின்றனர். இவர்களுக்கு வெற்றியில் பெருமிதமும் தோல்வியில் தாழ்வு மனப்பான்மையும் உருவாகின்றது. ஏமாற்றம், கோபம், கவலை போன்ற உணர்ச்சிகள் இயல்பாக சாதரணமாக அடிக்கடி வந்து போகலாம். எனினும் நிலைக்காமல் பார்க்க வேண்டும். இப் பருவத்தின் பிற்பகுதியில் உள்ளோருக்கு வாழ்க்கையைப் பற்றி புரியும் வகையில் எடுத்துக் கூறி மனக்கட்டுப்பாட்டை பயிற்றுவிக்க வேண்டும்.


## பாலுணர்வு பருவம் (Genital Stage):

உண்மையான பாலுணர்வுப் பருவம் 12 அல்லது 13 வயதின் பின் ஆரம்பமாகின்றது. வாலிபப் பருவம் முடியும் வரை தொடரும் பருவமிது. உடலாலும் உள்ளத்தாலும் வேகமாக வளர்ச்சியெய்தும் பருவம்.

ஃபிராய்ட்டின் கொள்கைப்படி மனிதர்கள் இந்த ஐவகைப்பருவத்தையும் கடந்து வரும் போது அந்தந்த பருவ உணர்ச்சிகளையும் செயல்களையும் விட்டுச் செல்ல வேண்டும். அங்ஙனம் உணர்ச்சிகள் மறையாவிடில் அவை உள்ளத்தில் பதிந்து ஆளுமை வளர்ச்சியில் (Personality development இல்) பாதிப்புகளை உருவாக்குகின்றன.

உள்ளமும் உடலும் ஒருங்கிணைந்து வாழ்வதே வளர்ச்சியாகும். உள்ளம் வளராமல் உடல் மட்டும் வளருமாயின் அது உளவியல் பாதிப்பின் அறிகுறியாக இருக்கும்.

Dr. Sigmund Freud மனித மனதை 3 பிரிவுகளாகப் பிரிக்கின்றார்:




### வெளிமனம் (Conscious mind)

இது புற உலகுடன் தொடர்புடையது. எம் செய்கைகளைக் கட்டுப்படுத்துவது.

### இடைமனம் (pre-conscious mind)

குழந்தைப்பருவத்திலேயே உருவாகும் இது ஆழ்மனதுடன் தொடர்புடையது. இப்பகுதியில் பதிந்திருக்கும் தகவல்கள் உணர்ச்சிகளை மீள நினைவூட்டிக் கொண்டு வரமுடியும்.

### ஆழ்மனம் (Unconscious mind)

மனித மனதில் ஆழ்மனத்தில் நிறைவேறாத ஆசைகள், பயன்கள், வெறுப்புகள், விருப்புக்கள், கோபங்கள், வெட்கம், தோல்விகள் என்பன யாவும் இவ் ஆழ்மனத்தில் பதிந்து விடுகின்றன. இவை எம்மை ஆட்டிப்படைக்கின்ற போதும், இவற்றை எம்மால் இனம்காண முடிவதில்லை. பல உளவியல் தாக்கங்களுக்கு இந்த ஆழ்மனதில் பதிந்துள்ள உணர்ச்சிகளே காணமாக திகழ்கின்றன.

ஆழ்மனதில் பதிந்திருக்கும் நிறைவேறாத ஆசைகள் போன்ற பாதிப்புக்களால் உருவாகும் உளநோய்களின் காரணத்தை நோயுற்றவரே பல சமயங்களில் அறிவதில்லை. வளர்ச்சியடைந்த மருத்துவ விஞ்ஞானத்தின் உதவியோடு அவற்றை மருத்துவர் கண்டறிவர்.

அடுத்தவரின் உணர்ச்சிகளை மட்டுமன்றி எமது உணர்ச்சிகளையும் நாம் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். காட்டாற்று வெள்ளத்தை அணைகட்டி பயிர்களுக்கு வாய்க்காலிட்டு மெல்லெனப்பாய வழிவகுத்துக் கொடுப்பது போல் உணர்ச்சிகளை சரிவரக் கையாளப்பழகினோமேயாயின் அவை நமக்கு நன்மையை மட்டுமே ஏற்படுத்த வல்லனவாக இருக்கும். எங்ஙனம் காட்டாற்று வெள்ளத்தை பயிருக்கு நேரடியாக பாய்ச்ச முடியாதோ அதேபோன்றே உணர்ச்சிகளும் சிந்தனைகளால் வடிகாலிடப்படுவது நன்றாகும். சிந்தனைகள் நல்ல உணர்ச்சிகளுக்கு நல்ல நண்பனாக செயல்ப்பட வேண்டுமேயொழிய உணர்ச்சிகளைக் கட்டிப் போடும் முதலாளியாக ஒருபோதுமே தொழிற்படக் கூடாது.

மனித மனம் பற்றியும் அதிலெழும் உணர்ச்சிகள் பற்றியும் அதை நெறியாழும் வழிமுறைபற்றியும் அறிந்தவனுக்கு மனநோய்கள் வரும் வாய்ப்புகள் அற்றுப் போகின்றது. உள்ளம் என்ற கண்ணாடியை உடைந்து போகாமல் பேணுவது எம் தலையாய கடனாகும். எனின் மனம் என்றும் அமைதியாக இன்புற்றிருக்குமென்பது உறுதியாகும்.

■ ■ ■

# Just make a phone call

## A Bright Financial Future is waiting for you!

## NOW Hiring! Agents.

Free Class

- Best Compensation in the industry
- Step-by-step Personal Training
- Guartanteed Leads Provided

You can make **50 to 100** Thousands dollars

## Join hands with Canada's #1 RBC Life Broker (2006-2007)

A state-of-the-art web site, that will make you
• More Productive • More Efficient • More Money

ROYAL BROKERS
Tel: 416•315•8100

பல்வேறு நிறுவனங்களிடமிருந்து குறைந்த விலையில் உங்கள் காப்புறுதியை தெரிவு செய்துகொள்ள

மருத்துவ பரிசோதனையற்ற ஆயுட் காப்புறுதி

Insuring your life. Ensuring your trust.



Canada
Top Life Insurance
Sales Award Winner
2006-2007
RBC Insurance

**Siva Kandiah**
*Managing General Agent, RBC*
416•992•1259

ROYAL BROKERS
Corporation

80 Nashdene Ave., Unit B26 Toronto ON. M1V 5E4
Tel: 416•298•4722 Fax: 416•298•4664

மிகக் குறைந்த கட்டணமாக
**$15ல் இருந்து!**

வயோதிபர்களுக்கு
அதிகுறைந்த விலையில் காப்புறுதி

**100% Cash Back**
**Mortgage Insurance**

சிறுவர்களுக்கான
சிறந்த RESP திட்டங்கள்

RBC Insurance
Managing General Agent
Industrial Alliance
Canada Life
Unity Life of Canada

• Life Insurance/ Income Protection • Disability/ Critical Illness • Mortgage & Mortgage Insurance • Registered Education Saving Plans
• Travel Coverage • RRSP's, Annuities, RIF's GIS's • Tax Sheltered Savings & Investments

# ரூடோ, பெற்றோ கனடா, அமெரிக்கா சிறு குறிப்பு

கனடிய தேர்தல் களைகட்டி விட்டது. பிரதான அரசியல் கட்சிகள் தேர்தல் பிரச்சாரத்திற்காக வாக்குறுதிகளை அள்ளி வழங்குகின்றார்கள். தேர்தலின் பின் என்னநடக்கும்? எதுவும் தெரியாமல் மக்கள் முழிக்கின்றார்கள்.

அண்மைக் கால பொருளாதார வீழ்ச்சிகள் பயத்தை உண்டு பண்ணுகின்றன. உலக மயமாதல் வேலைகளை இந்தியா, சீனா அள்ளிச் செல்கின்றன. அமெரிக்க பொருளாதார வீழ்ச்சி கனடிய ஏற்றுமதியை பாதிக்கின்றது. பெற்றோல் விலைகள் தாறுமாறாக ஏறுகின்றன. திடீரென 15 சதம் அதிகரிக்கும், திடீரென 6 சதம் குறையும். ஏன்? ரெக்சஸில் புயல், கச்சாய் எண்ணெய் 25 டொலர் ஒரு பரலுக்கு அதிகம். இவை ஏன்? இது வரை எந்த சரியான விடையும் இல்லை.

இந்த தேர்தலில் லிபரல் கட்சியும், என்.டி.பிக் கட்சியும் கூட்டமைக்கலாம். இல்லையேல் லிபரல் கட்சிக்கு ஆதரவு வழங்கி என்.டி.பி கட்சி நாட்டின் பொருளாதார கொள்கைகளை தீர்மானிக்கும் சக்தியாக திகழும். முன்னாள் பிரதமர் ரூடோவின் ஆட்சியில் இவ்விரு கட்சிகளும் இணைந்தே பெற்றோ கனடா என்ற அரச கூட்டுத்தாபனத்தை அமைத்தார்கள். இப்பொழுது இருப்பது போலவே அப்பொழுதும் இருந்தது. எனவே இத்தருணத்தில் ரூடோவை நினைவு கொள்வது நல்லது.

1973ல் எண்ணெய் வழங்கும் அரேபிய நாடுகளான Organization of Arab Petroleum Exporting Countries (OAPEC, consisting of the Arab members of OPEC plus Egypt and Syria)) இஸ்ரேலுக்கு போரில் ஆதரவு வழங்கும் அமெரிக்க, யப்பான், மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்ய முடியாது என கூறிவிட்டது.

இதே சமயம் ஒபெக் ஏழு சகோதரிகள் என அழைக்கப்படும் நாடுகள் பின்வரும் அமெரிக்க நிறுவனங்களுக்கு அதிக விலையில் எண்ணெய் வழங்கத் தீர்மானித்தது. வளாந்த நாடுகளில் உள்ள எண்ணெய் தேவை காரணமாக இது ஒபெக்கிற்கு சாதகமாக அமைந்தது.

- Standard Oil of New Jersey (Esso), which merged with Mobil to form ExxonMobil.
- Royal Dutch Shell (Dutch / British)
- Anglo-Persian Oil Company (APOC) (British). பின்னாளில் BP – British Petroleum ஆக மாறியது.
- Standard Oil Co. of New York ("Socony"). பின்னாளில் ExxonMobil ஆக மாறியது
- Standard Oil of California ("Socal"). பின்னர் Chevron. ஆக மாறியது
- Gulf Oil..
- Texaco. பின்னர் Chevron. ஆக மாறியது

இந்த நிறுவனங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து புதிய பெயர்களில் உள்ளன.

அன்று ஆதிக்கம் பெற்றிருந்த இந்த நிறுவனங்கள் இன்று தரகு நிறுவனங்களாக செயற்படுகின்றன. இன்றைய ஏழு சகோதரிகள் இவர்களாவார்


- Saudi Aramco (Saudi Arabia)
- JSC Gazprom (Russia)
- CNPC (China)
- NIOC (Iran)
- PDVSA (Venezuela)
- Petrobras (Brazil)
- Petronas (Malaysia)

### 11 March 2007, the Financial Times

இந்த எண்ணெய் விலை மாற்றம் ஒரு கலனுக்கு 1973 வைகாசியில் 38.5 சதமாக இருந்து 1974 ஆனியில் 55.1 சதமாக அதிகரித்தது. 1974ல் ஆறு கிழமைகளில் நியு யோர்க் பங்குச் சந்தை 97 பில்லியனை இழந்தது. பிரான்ஸில் 30 வருட தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சி முடிவுக்கு வந்தது,

ஒரு பரல் கச்சாய் எண்ணெயின் விலை மாற்றத்தை பின்வரும் அட்டவணையூடாக காணலாம்


| ஆண்டு | மாதம் | அமெரிக்க டொலர் |
|---|---|---|
| 1946 | தை | 1.17 |
| 1946 | மார்கழி | 1.62 |
| 1950 | தை | 2.57 |
| 1950 | மார்கழி | 2.57 |
| 1953 | தை | 2.57 |
| 1953 | மார்கழி | 2.82 |
| 1968 | தை | 3.07 |
| 1968 | மார்கழி | 3.07 |
| 1970 | தை | 3.35 |
| 1970 | மார்கழி | 3.56 |
| 1973 | தை | 3.56 |
| 1973 | மார்கழி | 4.31 |
| 1974 | தை | 10.11 |
| 1974 | மார்கழி | 11.16 |
| 1979 | தை | 14.85 |
| 1979 | மார்கழி | 32.5 |
| 1999 | தை | 12.47 |
| 1999 | மார்கழி | 26.08 |
| 2007 | தை | 54.57 |
| 2007 | மார்கழி | 91.73 |





Price of West Texas Intermediate Crude; Monthly NSA, Dollars Per Barrel

1979ல் ஏற்பட்ட அதிகரிப்புக்கு ஈராக், குவைத்தை கைப்பற்றியமை காரணமாக கூறப்பட்டது. இது மொத்த எண்ணெய் உற்பத்தியில் வெறும் 9 வீதத்தை பாதித்தது. தற்போதைய எண்ணெய் விலைக்கான வரி விகிதத்தை, கனடிய அரசு இணையத்தளம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது. அத்துடன் மற்றொரு அட்டவணை மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது கனடிய நிலைப்பாட்டையும் குறிப்பிட்டுள்ளது.

Approximate Price Components of Gasoline at $1 per Litre (in cents)




1975ல் ரூடோ பெற்றோல் விலையை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும், அல்பேட்டா மாநில எண்ணெய் வளத்தை பிரயோசனமான முறையில் பயன்படுத்துவதற்காகவும் பெற்றோ கனடாவை ஆரம்பித்தார். இதன்




http://www.fin.gc.ca/toce/2006/gas_tax-e.html

சூத்திரதாரியாக என்.டி.பிக் கட்சியிருந்தது. 1984ல் மல்றோனி ஆட்சிக்கு வரும் வரையும் பெற்றோ கனடா லாபத்தை எதிர்பார்க்கவில்லை. British Petroleum, Gulf and Fina ஆகிய பெற்றோல் நிலையங்களை வாங்கி பெற்றோ கனடா தொடங்கப்பட்டது. அல்பேட்டா மாநில எண்ணெய் வளத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த அமெரிக்க நிறுவனங்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது. "உனக்கு பக்கத்தில் இருப்பது யானையுடன் அருகில் தூங்குவது போன்றது. எவ்வளவு தான் நட்பாக இருந்தாலும், ஒவ்வொரு அசைவும் பாதிக்கும்" என ரூடோ குறிப்பிட்டார். ("Living next to you is in some ways like sleeping with an elephant. No matter how friendly and even-tempered is the beast…one is affected by every twitch and grunt,") ரூடோ கனடா அமெரிக்காவில் தங்கியிருக்கமால் சுதந்திரமாக இருக்க வேண்டும் என விரும்பினார். இவரது கால கட்டத்தில் இதனை ஓரளவிற்கு சாதித்து காட்டியுள்ளார்.

1919 ஒக்ரோபர் 19ல் மொன்றியலில் பிறந்த இவர் 1944ல் வழக்கறிஞர் பட்டத்தை பெற்றார். ஹவாட் பல்கலைக் கழகத்தில் அரசியல் பொருளாதாரத்தில் பட்டம் பெற்றார். பின்னர் பிரபல London School of Economics இல் பொருளாதாரத்தில் கலாநி-



- ரதன் -

rathan@thaiveedu.com


திப் படிப்பை மேற்கொண்ட போதும் அதனை முடிக்கவில்லை. 1961ல் மொன்றியல் பல்கலைக்கழகத்தில் சட்ட பேராசிரியராக பதவியேற்றார். 1965ல் பிரபல தேவாலயம் அமைந்துள்ள மௌன்ட் றோயல் தொகுதியில் வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்றார். 1967ல் சட்ட அமைச்சரானார். 1968ல் லிபரல் கட்சித் தலைவரானார். 1968 யூனில் பிரதமரானார்.

இவரது காலகட்டத்தில் முதன் முறையாக பிரென்ச் அரச மொழியாக்கப்பட்டு, அரச ஆவணங்கள் இரு மொழியிலும் பிரசுரிக்கப்பட்டன. கியூபெக் பிரிவினைவாதிகளின் ஆயுத போராட்டத்தை முறியடித்தார். கனடாவில் சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதிப்படுத்தினார். ஒரு பால் திருமண முறைச் சட்டங்களுக்கு ஆதரவு வழங்கினார். கனடாவின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டார். இவர் மாணவனாக இருந்த காலகட்டத்தில் Asbestos சுரங்கத் தொழிலாளர்கள் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கினார். பிரதமராக இருந்த பொழுது தொழிலாளர்கள் நலன் பேணினார்.

இவர் சீனா, கியுபா போன்ற நாடுகளுடன் நட்பை பேணினார். 1950ல் இவர் சோவியத் யூனியன் சென்றிருந்த பொழுது ஸ்ராலின் சிலைக்கு ஐஸ் பந்து வீசியமைக்காக கைது செய்யப்பட்டார்.

இவர் அறிமுகப்படுத்திய பொருளதார தேசியமயமாக்கலினால் தான் இன்றும் கனடா ஓரளவிற்கு தலை நிமிர்ந்து நிற்கின்றது. இவர் இளைஞர்களை உற்சாகப்படுத்தி அரசியலுக்கு வரவழைத்தார். இவரது கொள்கைகளுக்கு பெருமளவு பல்கலைக் கழக மாணவர்கள் ஆதரவு தெரிவித்தனர்.)

■ ■ ■



**Pierre Trudeau**

**Joseph Philippe Pierre Yves Elliott Trudeau (18 October 1919–28 September 2000), Prime Minister of Canada from 20 April 1968 to 4 June 1979, and from 3 March 1980 to 30 June 1984.**



# வீடு வாங்க, விற்க அழையுங்கள்...

## Vasanthy Niranjan

*Real Estate Broker*

**416-845-8272**

**Kennedy & Hwy 07**



**$339,900**

**2 Bedroom , 2 Washroom**
Luxurious Tridel Condo Penthouse Suite,
Well Kept, 9-Foot Ceiling
24Hrs Security, Close to Park
Indoor Pool, Party Room

**MajorMajor Mackenzie/Woodbine/404**



**$424,900**

Priced To Sell!! Cachet Fairways Like Detached
* Corner Lot By Aspen Ridge * $$$
9Ft Ceilings, Gas Fireplace, Solid Oak
& Rod Iron Staircase, W/O From Kitchen To
Interlock Deck, Gas Bbq Pipe In B/Yard,
Master Ensuite W Jacuzzi Tub & Sep Shower
Prof Fin Bsmt W/ Fireplace & Washrm

**Steeles & Staines**



**$419,900**

Stunning 5Yrs. New Approx.2000 Sq.Ft.
Mattamy Built Stone Front Home
On A Beautifully Landscaped Lot.
4 Bdrm Plan Converted To 3 Large Bedrooms.
(Sep. Shower & Soaker Tub)& His&Hers Walk-In Closet.
Fin. Bsmt. W/Huge Bedroom
& 3 Piece Bath (In-Law Pot.)Shows 10+.

**Markham & Passmore**



**$309,900**

**3+1 Bedroom, 3 Washroom**
Newly Built Townhouse.
Approx. 1900 Sq. Ft.,
Luminous Hardwood Flrs.
Finished Walk-Out Bsmt.,
Oak Rails & Spindles, Porch Enclosure.
Neutral Decor.

**Warden & Steeles**



**$449,900**

**4+1 Bedroom, 4 Washroom**
Super Clean And Beautiful Home
Near Markham Village. Approximately 2000 Sq Ft.
200V Power Or Kitchen And Basement.
9' Ceiling On Main Level.
Natural Gas Connection For Bbq.
Extra Long Kitchen Cabintes.
Insulated And Dry-Walled Garage.

**Birchmount & Ellesmere**



**$249,900**

Luxury Condo By Tridel. Mondeo Springs 2,
Approx. 965 Sq. Ft. Facing Sunny
South Exposure With Balcony,
Laminate Floors Throughout, 24 Hr.
Concierge, Indoor Pool, Exercise & Aerobics
Centre, Sauna, Hot Tub, Guest Suites,
Party Room & More.

**Old Homstead & Weir**



**$159,900**

Gorgeous Unspoiled Approx 25 Acres
In Georgina. Part Cleared.
Great Place To Build Your Dream Home.
Convenient Location,
Close To Hwy 48(5 Min)On The East Side.

**Hwy 12 & Hwy 7 East**



**$219,000**

Corner Parcel Of Vacant Land Hwy #7 And
18th Sideroad Twp. Of Brock. Some Open Land Cedars,
Two Acre Pond, Spring-Fed-Concrete Dam.
Garage And Workshop With 100 Amp Electrical Service.
Total Acres Is 16.77 Acres With Driveway
Entrance Installed Into The Said Property.

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife Today Realty Inc.,**
**Brokerage***
31 Progress Ave. Suite 210
Toronto, ON M1P 4S6

*Independently Owned and Operated, REALTOR

**Connectiong tutors & students in the GTA**

# BRILLIANT TUTOR @ YOUR HOME INC.

**தமிழ் மாணவர்களின் நலன் கருதி அவர்களின் வீடுகளுக்கு சென்று**
**பாடங்களை ஒன்ராரியோ பாடத்திட்டத்திற்கு அமைய கற்பித்து வருகின்றோம்.**

- SCIENCE
- CHEMISTRY
- PHYSICS
- BIOLOGY
- MATH
- CALCULUS
- ALGEBRA & GEOMETRY
- DATA MANAGEMENT
- ENGLISH
- FRENCH

**EQAO Preparation**

## Call Kuna Today

Tel: **416-291-4684, 905-507-8470, 647-295-5862,** Fax: **416.264.6306**

E-mail: info@brillianttutor.com

**Over 100 Tutors**

W e   w i l l   v i s i t   y o u r   h o m e

| JK to GRADE 8 | 1 ON 1 OR GROUP | 9 to University 2nd Year |
|---|---|---|
| $85^{00}/MONTH | | $90^{00}/MONTH |

79 Eastvale Drive, Markham, ON, L35 4R9


Markham, Scarborough, Mississauga, Toronto, Etobicoke, Brampton, North York, East York, Richmond Hill, Ajax, Malton, New Market, Vaughan



**Over 1500 Students**

digi Media - 416-467-4952

# ஆயுட்காப்புறுதியும் சேமிப்புத் திட்டங்களும்



## Life Insurance & RESP

**ஆயுடகாப்புறுதி,
அடமானக் கடன் காப்புறுதி,
கொடிய நோய்களுக்கான
காப்புறுதி, சேமிப்புத்திட்டம்
அனைத்தும் ஒரே திட்டத்தில்
பெற்றுக் கொள்ள...**

- நிரந்தர ஆயுட்காப்புறுதி (சேமிப்புடன் கூடியது)
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி (2 மில்லியன் வரை)
- அடமானக் கடன் காப்புறுதி
- குழந்தைகளின் கல்விக்கான சேமிப்புத் திட்டம்
- வயோதிபர்களுக்கான காப்புறுதி (மருத்துவ பரிசோதனை அவசியமில்லை)

digi Media

RBC Insurance

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

Assumption Life

LILAND INSURANCE INC.

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



## மில்லியன் டொலர் பெறுமதி மிக்க இலவச ஆலோசனை

# HOW SAFE IS YOUR LIFE INSURANCE POLICY

# உங்கள் ஆயுட் காப்புறுதி திட்டம் பாதுகாப்பானதா?




**சிறீதரன் துரைராஜா**
- ஆயுட் காப்புறுதி முகவர் -
sritharan@thaiveedu.com


அண்மையில் அமெரிக்க அரசினால் தத்தெடுக்கப்பட்டு காப்பாற்றப்பட்ட மிகப் பெரிய காப்புறுதி நிறுவனம் AIG இந்த நிறுவனத்தில் நீங்கள் காப்புறுதி செய்திருந்தால் உங்கள் காப்புறுதித் திட்டத்தை பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. அமெரிக்க அரசிடம் இருந்து 85 மில்லியன் டொலர்கள் கடன் வாங்கி தொடர்ந்தும் செயல்படுகின்றது.

அடமானக் கடன்கள் பலவற்றிற்கு உத்தரவாதம் செய்தல் அடமானக் கடனுக்கான பாதுகாப்பு உத்தரவாதம் போன்ற திட்டங்களை கொள்வனவு செய்து பாதுகாப்பு கொடுத்ததனால் AIG நிறுவனம் இந்த நிலைக்கு தள்ளப்பட்டது.

Assuris
Protecting your life insurance
Protection de votre assurance vie

ஆனால், AIG நிறுவனமானது தனது சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் அமெரிக்க அரசிடம் பெற்ற கடனை திருப்பிக் கொடுக்க திட்டமிட்டுள்ளது. அதாவது AIG நிறுவனத்தை வேறு ஒரு நிறுவனம் வாங்குவதற்கான சாத்தியம் உள்ளது.

AIG நிறுவனம் அதிகளவு எல்லாவிதமான காப்புறுதித்திட்டங்களையும் விற்பனை செய்யும் ஒரு நிறுவனமாகும். (HOME, AUTO, LIFE AND HEALTH) ஆயுட் காப்புறுதி, வீட்டுக் காப்புறுதி வாகனக் காப்புறுதி மற்றும் மருத்துவக் காப்புறுதி போன்ற அனைத்துக் காப்புறுதித் திட்டங்களும் AIG நிறுவனத்தால் விற்பனை செய்யப்படுகின்றது.

ஆயுட் காப்பறுதி நிறுவனம் வங்குரோத்து நிலைமைக்கு தள்ளப்பட்டால் அல்லது மூடப்பட்டால் உங்கள் காப்புறுதித் திட்டங்களுக்கு என்ன செய்வது என்பதைப் பற்றி தெரிந்திருக்க வேண்டும்.

கொடுப்பனவு சமயங்களில் ஒரு ஆயுட் காப்புறுதி நிறுவனம் இலாபத்தில் குறைந்து இயங்கும் போது அதை வேறு காப்புறுதி நிறுவனம் வாங்குவது வழக்கம். அல்லது இரு காப்புறுதி நிறுவனங்கள் சேர்ந்து செயல்படுவது வழக்கம்.

### அண்மைக்காலங்களில் நடைபெற்றுள்ள சில மாற்றங்கள்.

- CLARICA நிறுவனம் SUNLIFE நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்டது.
- CANADA LIFE நிறுவனம் GREAT WEST LIFE எனப்படும் நிறுவனத்துடன் இணைந்தது.
- NATIONAL LIFE நிறுவனத்தை INDUSTRIAL LIFE நிறுவனம் வாங்கியது.
- மிக அண்மைக்காலத்தில் UNITY LIFE OF CANADA எனப்படும் நிறுவனம் FORESTERS என்னும் நிறுவனம் வாங்கியுள்ளது. இப்படியாக காலத்துக்கு காலம் சிறிய நிறுவனங்கள் பெரிய காப்புறுதி நிறுவனங்களால் வாங்கப்படுவது வழக்கம்.

நீங்கள் NATIONAL LIFE, CANADA LIFE, UNITY LIFE OF CANADA அல்லது CLARICA போன்ற நிறுவனங்களில் காப்புறுதி திட்டம் வைத்திருந்தால் உங்களுக்கு வேறு நிறுவனங்களின் பெயருடன் கடிதங்கள் வருவதை அவதானித்திருப்பீர்கள். சில நிறுவனங்கள் இரண்டு நிறுவனங்களின் பெயர்களையும் சிறிது காலத்திற்கு உபயோகிப்பார்கள். கனடாவில் உள்ள ஆயுட் காப்புறுதி நிறவனங்களையும் அதன் காப்புறுதி திட்ட உரிமையாளர்களையும் பாது காப்பதற்கு CLHLA எனப்படும் (CANADIAN LIFE AND HEALTH INSURANCE ASSOCIATION /NC) அமைப்பு இயங்கி வருகிறது. இந்த அமைப்பு கனடாவில் உள்ள 82 ஆயுட்காப்புறுதி நிறுவனங்களுக்கும் அதன் 20 மில்லியனுக்கும் அதிகமான (Policy Holders) காப்புறுதி உரிமையாளர்களுக்கும் சேவையாற்றுகிறது. இந்த நிறுவனத்தின் முக்கிய செயற்பாடு ஆயுட் காப்புறுதி நிறுவனங்களின் செயற்பாடுகள், சேவைகள், காப்புறுதித்திட்டங்கள் போன்றவற்றை அரசின் சட்டவிதிகளுக்கு அமைய சரியாக தொழில்படுவதைக் கண்காணிப்பது கனடாவில் ஆயுட்காப்புறுதி செய்தவர்களில் பாதுகாப்புக்காக 1990ம் ஆண்டில் இருந்து Comp corp. எனப்படும் நிறுவனம் 2005ம் ஆண்டில் இருந்து Assuris என அழைக்கப் படுகின்றது.

Assures நிறுவனத்தின் பிரதான செயற்பாடானது ஆயுட்காப்புறுதி நிறுவனங்கள் ஒரு ஆயுட் காப்புறுதித்திட்டம் அல்லது சேமிப்பு முதலீட்டுத்திட்டத்திற்கு பணம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டால் அந்தத்திட்டததிற்கான பணத்தை பெற்றுக் கொடுக்கிறது.

கனடாவில் உள்ள காப்புறுதி நிறுவனங்கள் அனைத்தும் இந்த Assuris நிறுவனத்தில் ஒரு அங்கத்துவராக இருந்தால் மட்டுமே காப்புறுதித் திட்டங்களையும் முதலீட்டு சேமிப்புத்திட்டங்களையும் விற்பனை செய்வதற்கு கனடிய மத்திய மற்றும் மாகாண அரசினால் அனுமதிக்கப்படுவார்கள்.

September-01-2008 வரையில் Assuris நிறுவனத்தில் அங்கத்துவம் வகிக்கும் ஆயுட்காப்புறுதி நிறுவனங்கள்.

- Acadia Life
- Ace Ina life insurance
- AIG Assurance Canada
- A Etna Life
- Alli anz Life
- All stats Life
- The Alternate Life
- American Bankers Life Assurance
- Amex Insurance Company
- Assumption Mutual Life
- AXA Insurance INC
- Blue Cross
- BMO Life
- British Columbia life
- The Canada Life
- Canadian Premier Life
- La Capitale
- Cardif Assurance
- CIBC Life
- CIGNA Life
- Combine Insurance Company of America
- Compacory Life
- Connect Cut General Life
- Co-operators Life
- Crown Life
- CT Financial
- CUMIS Life
- CUNA Mutual
- DES Jardins Financial
- The Empire Life
- L Entraide Assurance
- L Excellence
- Fidelity Investments
- First All America Financial
- First Canadian Insurance Corporation
- Forethought Life
- Gan Assurances
- Vie Mixte
- General American Life
- Gerber Life
- Green Shield Canada
- Ha2rrrtford Life
- Heritage General
- Household Life
- Industrial Alliance
- Industrial Alliance Pacific
- L International
- John Hancock Life
- Liberty Life
- Life Insurance Company of North America
- Life Investors Insurance
- London Life
- The Manufactures Life
- Manu Life Canada LTD
- Massachusetts Mutual Life
- MD Life
- Medavie INC
- MET Life Canada
- Metro Politon Life
- Mine sota Life
- National Bank Life
- The National Life
- New York Life
- Penn corp. Life
- Pensylvania Life
- Phoenix Life
- Primerica Life
- Principal Life
- Promutuel VIE Inc
- The Prudential Insurance
- RBC Life
- Re Assure America Life
- Reliable Life
- Scotia Life
- Swerbrooke Life
- SSQ Life
- The Standard Life
- Standard Life Assurance LTD
- State Farm
- Stonebridge Life
- Sun Life
- Superior Life
- LA Survivance
- TD Life
- Trans Global Life
- Tran America Life
- Trent Health
- The Union life
- Union of Canada Life
- United American
- Unity Life of Canada
- Washington National
- The Wawanesa
- Western Life

மேற்குறிப்பிட்ட எந்த நிறுவனத்திலாவது உங்கள் காப்புறுதி இருந்தால் அத்திட்டம் Assuris நிறுவனத்தால் பாதுகாக்கப்பட்டுள்ளது.

நீங்கள் காப்புறுதித் திட்டத்தின் நிறுவனம் மூடப்பட்டால் அல்லது வங்குரோத்து நிலைக்கு போனால் உங்கள் காப்புறுதித் தொகையின் 85% விகிதம் Assuris நிறுவனத்தால் வழங்கப்படும்.

உங்களுக்கு கிடைக்க வேண்டிய தொகை $100,000க்கு உட்பட்டிருந்தால் அதன் 100 விகிதமும் வழங்கப்படும். அதற்கு மேற்பட்ட தொகையின் 85% மட்டுமே Assuris நிறுவனம் உங்களுக்கு வழங்கும்.

■ ■ ■


**கனடாவில் நடைபெறும் நிகழ்வுகளைப் பார்ப்பதற்கும், உங்கள் நிகழ்வுகளைப் பதிவதற்கும்.**

**www.inayam.net**

info@inayam.net 416 400 6406

# பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த கற்பனை வணிகம்: என்ன நடக்கிறது?



மாமூலன்
maamulan@thaiveedu.com

ஒரு ஆட்டின் தற்போதைய விலை 300 டொலர்கள் என்று வைத்துக்கொள்வோம். இந்த ஆட்டை 1000 டொலருக்கு விற்க முடியுமா? ஆயிரம் டொலருக்கு என்ன 3000 டொலருக்குக்கூட விற்கலாம். பங்குச் சந்தை என்பது சுருக்கமாகச் சொன்னால் இதுதான். இப்படிப் பொய்யான வியாபாரம்தான் பங்குச் சந்தை. ஆட்டைப் பங்கு போடாமல் ஒரு கதைக்ககாக ஆட்டின் விலையைப் பிரித்து வைத்துக்கொண்டு பேசுவோம்.

பத்துப் பங்காகப்போட்டால் ஒரு பங்கின் விலை 30டொலர். இன்னும் ஆடு வெட்டப்படவில்லை. ஆளுக்கு பங்குகளை எடுக்க வெளிக்கிடுகிறார்கள். 5 பேர் பத்துப் பங்குகளை எடுத்து வைத்திருக்கிறார்க்ள.

அதில் ஒருவரிடம் மட்டும் 4 பங்கு இருக்கிறது. வேறு ஒருவர் ஓடிவருகிறார்.

‘அங்க ஒரு கலியாண வீட்டுக்கு ஆட்டுறைச்சி தேவை. வேற ஆடுகளும் தட்டுப்பாடாக்கிடக்கு இந்தப் பங்கை எனக்கு தாறிங்களா?”

4பங்கு வைச்சிருப்பவர் சொல்கிறார் ‘எனக்கும் கடைக்கு கொத்துரொட்டி போட தேவை தரமாட்டடேன்.” மற்ற ஆட்களிடம் போகிறார் பிந்தி வந்தவர்.

‘நீங்கள் வைச்சிருக்கும் பங்குகளை எனக்கு தருவீங்களா? நல்ல விலை தருவேன்.” ‘எவ்வளவு தருவீங்கள்.?” ?’ஒரு பங்குக்கு 50 டொலர் தருவேன்.” அனைவரும் அவரிடம் விற்று விட்டு கோழி வாங்கப் போய் விடுகின்றனர்.

இப்ப 6 பங்குகளையும் வைத்திருப்பவரிடம் நாலாவது ஒருவர் ஓடி வாறார். ’எனக்கு தெரிஞ்ச ஒராளுக்கு காசு நிறைய இருக்கு. கொஞ்ச ஆட்டுப்பங்கு வாங்கவேணுமாம். உங்கட பங்கைத் தருவீங்களோ.?” ‘எவ்வளவு தருவீங்கள்.?” ’ஒரு பங்குக்கு 100 டொலர் வரைக்கும் கொடுக்கலாம் என்று அவர் சொன்னவர். ம்.. சரி.”

பங்கு கைமாறுகிறது.

ஆறு பங்குகள் மட்டும் 600 டொலராகிறது. மற்றவரிடம் 4 பங்குகள் இருக்கிறது. கொத்து ரொட்டி போட்டு வாற லாபத்தவிட இது நல்லாயிருக்கே எண்டு அவரும் பங்குகளை விற்கிறார். அதுவும் நாலு பங்குக்கு 400 டொலர் கொடுக்க கைமாறுகிறது பங்கு.

இப்ப ஆட்டின்ரை மொத்த விலை 1000 டொலர் ஆகிவிட்டது. இன்னும் ஆடு வெட்டப்படவில்லை. இருக்கிறது ஒரு ஆடு. எல்லாப் பங்கும் ஒரு ஆளிட்ட. இவர் என்ன முழு ஆட்டையும் சாப்பிடவா போகிறார்? அவர் செய்வதைப் பாருங்கள் ’வெளியில ஒரு இடத்திலயும் ஆடு இல்லை. என்னட்ட ஆட்டுப்பங்கு பத்து இருக்கு. ஆட்டுப்பங்கு கிடைக்கிறுதுக்கு இப்போதைக்கு வழியே இல்லை.

ஆட்டுப்பங்கு வேணுமா? ஆட்டுப்பங்கு.?”

இல்லாத பொருளுக்கு மவுசுதானே?

‘பங்கு என்னவிலை.?” ‘200 டெலர்.” இதுகொஞ்சம் கூடவாயிருக்கே.” ’வெளியில எங்கியாவது ஆட்டுப்பங்கு இருக்கோ? இப் போதைக்கு வேற பங்கு ஆடு வரும் சாதிய மிருக்கோ? அதுவுமில்லை.” ’சரி..கொஞ்சம் குறைச்சு கொடுங்கள். 180எண்டால் வாங்கலாம். 190க்கு தாருங்கள்.”



பங்கு கைமாறுகிறது. 10டொலர் பங்கு 190டொலராகி 1900 டொலராகிவிட்டது ஆட்டுப்பங்கின் மொத்தவிலை.

என்ன? பங்குச் சந்தை என்ற இடத்தில் உங்களிடமிருக்கும் ஆட்டையோ மாட்டையோ தெருநாயையோ கொண்டு போய் விற்பனைக்கு விடவேண்டியதுதான் பாக்கி. மிச்சமெல்லாம் அங்கிருக்கும் தரகர்களும் அவர்களை வழிநடத்தும் நாடுகளும் அவற்றின் கொம்பனிகளும் பாத்துக்கொள்ளும்.

எண்ணைப் பங்கு மட்டும் விலை குறைஞ்சு கொண்டு போகிறதா? என்ன செய்யலாம். எண்ணை தோண்டி எடுப்பதை குறைக்கலாம். அப்ப எண்ணை தட்டுப்பாடு வரும் என்பதனால் எண்ணைப் பங்கு விலை கூடும். பங்குகளை வைச்சிருப்பவர் அதிக விலைக்கு விற்கலாம். எண்ணை தோண்டி எடுப்பதை ஈராக் நிறுத்தவில்லையா? ஏதாவது ஒரு சாட்டைச் சொல்லி ஈராக்குடன் போரைத் தொடுக்கலாம். இப்ப என்ன நடந்திச்சு? ஈராக்கில் எண்ணை உற்பத்தியே நிண்டு போச்சு. பிறகு சதாமையும் மற்றவரையும் சாக்காட்டிப்போட்டு இப்ப ஈராக்கின் எண்ணைக் கொம்பனியை அமெரிக்க நிறுவனங்களே எடுத்தாச்சு. இப்ப என்ன செய்யலாம். விருப்பின நேரம் எண்ணைத் தட்டுப்பாட்டை வரவவைக்கலாம். விருப்பின நேரம் பங்குகளின்ர விலையைக் கூட்டலாம். குறைக்கலாம்.

எண்ணை விலை - எண்ணைப் பங்கின் விலை கூடினால் மற்றதுகளும் தானாகக் கூடும்தானே. கூடினால் இவையெல்லாம் எப்பவாவது குறையுமா ..இல்லவே இல்லை.

பொருளாதாரம் எண்ட பெரிய சொல்லால் தற்போது குறிக்கப்படுவது சுத்துமாத்திறது எப்பிடி எண்டதுதான்.

பங்குச் சந்தையில் தாங்கள் அதிகச் சம்பளத்துக்கு வேலை செய்த காசுகளைப் போட்டவர்கள் பலருக்கும் பிறசர் எகிறியிருக்கிறது. நிம்மதியில்லாமல் இருக்கினம். தற்போது பேசப்படும் பங்குச் சந்தைச் சரிவு என்பதனால் தங்களிடம் இருக்கும் பங்குகளை விற்க முடியாமல் இருக்கினம். ஒரேயடியாக விழுந்தால் நிலை என்ன.

ஒரு ஆடு இருந்த ஊரிலை ஒரு பட்டி ஆடுகளைக் கொண்டு வந்து அவுத்து விட்டால் எப்பிடி ஆட்டுறைச்சிப் பங்கு 5 டொலர் 3 டொலர் எண்டு மாறிப்போகுமோ இந்த நிலை வரும். முதலுக்கே மோசம்.

நினைவில் வைச்சுக் கொள்ளவேணும் முதலில் சொன் ஆடே இன்னும் வெட்டிப் பங்குபோடவில்லை. ஆனால் பங்கின்ற விலை மட்டும்தான் மாறி மாறி விக்கப்பட்டிருக்கு.

ஒரு ஆட்டிலையே இவ்வளவு காசு சுத்து மாத்துப் படுகிறது எண்டால் 100 லட்சம் பெறுமதியான ஒரு கொம்பனியை பங்கு போட்டு வித்தால் எவ்வளவு சுத்துமாத்து நடக்கும். 100 லட்சம் கொம்பனி பங்கின் விலையில் 1000 லட்சமாக இருக்கும்.

இதைத்தான் தற்போதைய பொருளாதாரம் என்கிறார்க்கள். வளர்ந்த முதலாளித்துவம் என்கிறார். போலியாகவும் பெய்யாகவும் அனைத்தும் தென்படும் வகையில் வைத்து உண்மையை மறைத்துக் கொண்டிருப்பார்கள்.

மக்களை ஏமாற்றி பங்குகளை விற்று மக்கள் காசிலேயே வாழ்ந்து அப்படியே தொடர்ந்து போகிறது கதை.

அமெரிக்காவில் வங்கி நட்டத்தில் விற்கப் படுகிறது என்றால் என்ன பொருள்.

முதலுக்கு மோசம் வருமுன்னர் 10 டெலர் பங்கு 5 டொலர் ஆகுமுன்னர் ஆற்றையேன் தலையில் கட்டுவது அல்லது நட்டம் எண்டு இருக்கிறதைச் சுருட்டிக்கொண்டு ஒடுறது எண்டுதான் அதற்கு பொருள்.

இப்ப அதையேன் அமெரிக்க அரசு 700 பில்லின் (7000லட்சம்) கடனானக் கொடுத்து காப்பாற இருக்கிறது? அமெரிக்க அரசுதான் பெரிய கற்பனை வங்கி. சின்ன சின்னதாக பல வங்கிகள் விழுந்தால் கடைசியாக (வளை விழுந்து விழுந்து கோப்பிசம் கடைசியா விழுகிறமாதிரி) பெரிய வங்கியான அமெரிக்கா விழுந்துபோகும்.

எங்க போனது அமெரிக்காவின்ற அவ்வளவு காசும். சுருக்கமாகச் சொன்னால் எங்க இருந்தது அமெரிக்காவிட்ட காசு? அமெரிக்கா கடந்த பல வரவு செலவுத் திட்டங்களில் மறைமுகமாக (3,00,000 லட்சம் டொலர் அளவுக்கு) கடன் கணக்கெல்லோ காட்டிக்கொண்டிருக்கு.

கற்பனையா இருக்கிற காசை எடுத்து கற்பனையா இருக்கிற வங்கிகளைக் காப்பாற்ற அமெரிக்கா கொடுக்கபோகுது.

முந்தி பெருசுகள் தத்துவம் சொல்லுமே! “எல்லாம் பொய். எல்லாம் மாயை எண்டு” அதுதான்.

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

**Uthayan Alex Sivasambu** B.Sc. (Hons), M.B.A
Broker

**Ottawa: 613.276.SALE (7253)**
**Toronto: 416.659.SELL (7355)**
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER




வீடு வாங்கவும், விற்கவும்...
Bathurst/Mulock
$224,900
3 Bedrooms, 2 Washrooms Tastefully Decorated & Maintained. Bright & Spacious Rooms. Money Spent In Renovation. New Ceramic In The Entrance & Kitchen
Morningside/Sheppard
$229,000
4+1 Bedrooms, 3 Washrooms Freehold Townhouse On Child Safe Court, Spacious And Bright, Convenient Location Close To School And Hwy 401
Manse/Lawrence
$389,900
4+2 Bedrooms, 3 Washrooms Great All Brick Family Home On A Quiet Cul-De-Sac In West Hill,Master Has 4Pc Ensuite With Walk-In Closet
Brimorton/Orton Park
$260,000
3 Bedrooms, 2 Washrooms Beautiful Design For Split Level Home, Spacious Bedrooms, Seperate Family Room, Walk Out To A Two Teired Deck & Private 130 Ft Lot.
Mccowan/16th
$505,000
4 Bedrooms, 3 Washrooms One And Half Years Old. Bright Well Kept Detached Home By Rosehaven Development In Markham. Demand Location, Quiet Street,Calm Neighbourhood
Midland/Lawerence
$129,900
2 Bedrooms, 1 Washrooms Spacious, Bright, Clean, Well Kept Unit, And Well Maintained Building With Indoor Pool, Exercise Room, Party Room, Private Play Ground For Kids
Islington/Finch
$157,000
3 Bedrooms, 2 Washrooms Unobstructed View, Conveniently Located Close To Ttc, 400, 407, School And Worship Places.
Finch/Keele
$259,900
tunning 3 Bedroom Townhouse W/ Rooftop Terrace & Balconies. Brand New Paint & Carpet. One Of The Largest Townhomes In Development.
16th Ave/9th Line
$539,900
5 Bedrooms, 4 Washrooms Gorgeous & Immaculate Exeutive 5 Brs Hm Loaded W/Upgds, Approx.3000 Sqft, Over $80K Upgrades
Middlefield/Denison
$359,900
4+4 Bedrooms, 2 Washrooms Absolutely Well Maintained Detached House, Recently Renovalid Kitchen & Main Floor. Walk To Schools
Middlefield / Finch
$179,900
2 Bedrooms, 1 Washrooms Clean, Bright, Beautiful (0-5) Years Low Rise Condo, Close To Woodside Square Mall, Gta Square, Temple, Worship Places. 24 hrs TTC
Kennedy/Kingston
PICTURE NOT AVAILABLE
$169,900
Best Priced Bungalow In The Area
Call for More Info
RAJ Ariyanayagam Pathmarajah
Real Estate Broker
Cell: 416-930-4663
Kirew Kanagasabai
Real Estate Broker
Cell: 416-903-4663
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Today Realty Inc., Brokerage*
Independently Owned And Operated
31 Progress Avenue, Suite 210
Toronto, ON M1P 4S6
Office: 416-298-3200

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770


Kantha Property Management Group Inc.
Personal and Business Loans
Investment Properties
Line of Credits
Property Management Services
Business Setup Consultancy
Bad Credit Solutions
1st and 2nd Mortgages
Bankruptcy
Residential and Commercial Leasing
Consumer Proposals
KPM Group Inc.
T: 416-214-6161
F: 416-465-3535


WIN
BUY AND SELL through Pat Pushpakanthan And enter to win Brand new Toyota FJ Cruiser
Quick Sale!!
commission solution*
2.5%
Also available
PAT
PUSHPAKANTHAN
416 490- 7653
Century 21
வீடு, வியாபாரம், காணி வாங்க விற்க அழையுங்கள்!
அனுபவம்! திறமை! நேர்மை!
YOUR SOLE AGENT

அற்லான்ரிக் கடல் நீர் வற்றுதலின் போது



அற்லான்ரிக் கனடா "Hopewell Rocks"





இம்மாதப் புகைப்படக் கலைஞர்
**செல்லையா சந்திரசேகரி**
Scarborough கனடாவில் வசிக்கும் இளைப்பாறிய ஆசிரியரும் கட்டுரையாளருமான இவர் ஓய்வு நேரங்களில் புகைப்படத்துறையிலும் ஆர்வம்காட்டி வருகின்றார்.

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**
புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416-579-7533
Fax: 416-579-9433
ragavan.ramanathan@scotiabank.com

PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Insurance Ocean
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi